ரவீந்திரர்

கதைத் திரட்டு

2

617
UG
26/7

சாகித்திய அக்காதெமி

ரவீந்திரர் கதைத் திரட்டு

இரண்டாம் தொகுதி

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனனுக்கு நிமித்தகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து இந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச் சிற்பம்—கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. பட உதவி: நேஷனல் மியூஸியம், புது தில்லி.)

ரவீந்திரர் கதைத் திரட்டு

இரண்டாம் தொகுதி

தமிழாக்கம் :

த. நா. குமாரஸ்வாமி

சாகித்திய அக்காதெமி

Ravindirar Kathai Thirattu : Vol. II. 15 Short Stories by Rabindranath Tagore. Translated from Bengali into Tamil by T. N. Kumaraswami. Sahitya Akademi, New Delhi. First Edition 1968, Reprint 1986. Rs. 20.

© சாகித்திய அக்காதெமி.

முதல் பதிப்பு : 1968,
இரண்டாம் பதிப்பு : 1986

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம் :
ரவீந்தரபவன், 35, பெரோஸ்ஷா சாலை, புது தில்லி-110 001.

கிளை **அலுவலகங்கள்** :
29, எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018.
பிளாக் **V-B.** ரவீந்திர சரோபர் ஸ்டேடியம், கல்கத்தா-700 029.
172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய்-400 014.

விலை : ரூ. 20.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :
ஆர். கே. எல். பிரிண்டர்ஸ், சென்னை-600 005.

ஒரு சில வார்த்தை ....

இப் பதினைந்து கதைகளுடன், ரவீந்திரரின் 'கல்பகுச்ச'வில் அடங்கிய சிறுகதைகள் வங்க மூலத்தினின்று தமிழாக்கம் பெற்று முற்றுப் பெறுகின்றன. இத் தொகுதியில் வராத மற்றக் கதைக் கோப்புக்கள் பல நிறுவனத்தாரின் வெளியீடுகளாக வெவ்வேறு தனித் தலைப்புக்களுடன் பிரசுரமாகி உள்ளன. சாகித்திய அக்காதெமியார் எனது இம் முயற்சிக்கு ஆதரவு தந்து இத் தொகுதியை வெளியிட வந்துள்ளனர். அவர்களுக்கு என் நன்றி. முன்னரே ரவீந்திரரின் இருபது கதைகளின் தொகுதி ஒன்றை 1961-இல் மகாகவியின் பிறந்த் நூற்றுண்டு வைபவத்தின் போது சாகித்திய அக்காதெமியார் கொண்டுவந்தனர்.

ரவீந்திரரின் சிறுகதைகளைப்பற்றி அறியாதவர்களே இருக்க மாட்டார்கள். அவர் விட்டுச்சென்ற அழியா இலக்கியச் செல்வங்கள் இவை. பல்வேறு சுருதிகளில் பேசுவன; விவிதச்சுவை பயப்பன. குருதேவர் தம் சிறுகதைகளைப்பற்றித் தாமே கூறியுள்ளவற்றை அவருடைய பக்தை ராணீ சந்த அம்மையார் தமது 'ஆலாபசாரீ ரவீந்த்ரநாத்' எனும் வங்க நூலில் குறித்துள்ளார். அதை இங்குத் தருவது சாலப் பொருத்தமானது.

''நான் இத்தனை நாட்களுக்குப் பிறகு பெருமகிழ்ச்சியடைந்தேன். 'பரிசய' என்ற பத்திரிகை ஒரு accurate மதிப்புரையை என் சிறுகதைகளுக்கு வழங்கியது. ஆனால், அவற்றிற்கு ஒரு இலக்கியச் சிறப்பு (Literary value) இருப்பதாக என் நாட்டவர் ஒப்புக்கொள்ளாமலேயே இருந்தனர். எட்வர்டு தாம்ஸன் (Edward Thompson) என்னிடம் ஒரு சமயம், 'உயர்ந்த சிறுகதைகளுக்குரிய உண்மைச்சுவை தங்கள் கதைகளில் ஊடுருவியுள்ளது' என்று மொழிந்துள்ளார்.

''பூரண நோக்குடன் இவைபோன்று நான் படைத்த இலக்கியங்கள் மிகச் சிலவே. வங்க மண்ணிற்கும், நீருக்கும், வானத்திற்கும் தனிப்பட்ட மகிமையொன்று உண்டு. எனக்கு முன்னே எழுத்தாளர் எவருமே இக் கண்கொண்டு வாழ்வினை நோக்கவில்லை. நான் ஏழை எளிய நாட்டுப்புறத்தவரின் எழுச்சி வீழ்ச்சி, இன்பதுன்பம் இவற்றை உணராதவனெனப் பலர் என்னைபற்றி எடை போட்டிருந்தனர். அதையெல்லாம் நான்

பொறுத்துக்கொண்டேன். ஆனால், இப்போது 'பரிசய' பத்திரிகை யில் வெளியான என் கதைகளைப்பற்றிய விமரிசனம் நான் போற் றும் உயரிய சம்மானமாகும்.

''இந்த 'கல்பகுச்ச' என்மட்டில் எத்தனை மதிப்புடையது என்பதை எவருமே அறியார். அந் நடுவயதில் வங்க நாட்டுப் புறங்களில் வசித்து, அங்குக் கண்ட காட்சிகள், அவ்வெளிய மக்களின் வாழ்க்கைச் சித்திரங்கள் என்னுள் கதைகளில் ஊடுபாவாக இழைந்து விளங்குவன.

''அக் காலத்தில் 'ஹிதவாதி' பத்திரிகைக்கு நான் ஐந்து வாரங்கள் ஐந்து கதைகளை எழுதி வழங்கினேன். ஆசிரியர் கிருஷ்ணகமல் பாபு என்னிடம் சொன்னதாவது: 'ரவி, நீ எழுதுவது எல்லோருக்குமா புரியும்? என் பத்திரிகையின் வாசகர்கள் இப் புதுமைக் கதைகளைத் துளிக்கூட ரசிக்கமாட் டார்கள். ஆனால், இவை உயர்வகை இலக்கியமென்பதில் ஐயமே இல்லை.' அது பங்கிமின் யுகம். அவருடைய எழுத்துப் பாணி யையே வாசகர்கள் வெகுவாய் வரவேற்றனர். அன்றைய அளவுகோல்படி எனது ரசனையில் 'ரொமான்ஸ்'ஸின் விறுவிறுப் பில்லை. 'ஹிதவாதி' ஆசிரியர் அவ்வாறு சொல்லிவிடவே, நான் சிறுகதை எழுதுவதை நிறுத்திக்கொண்டேன். பின்பு 'ஸாதநா' பத்திரிகை வந்தது. கதையெழுதும் உணர்வு மீண்டும் மடைவிண் டெழுந்தது எனக்கு. இவ் வாய்ப்பு வராது போயிருந்தால் கதை எழுதும் ஆர்வம் எனக்கு என்றென்றுமே மழுங்கிப் போயிருக் கும். வறுமைச் சூழ்நிலையில் பலர் பிறக்கின்றனர். அவர்களுந் தான் வாழ்க்கையை நோக்குகின்றனர். ஆனால், என் கண்கொண்டு நோக்கவில்லை. வங்க மக்களின் சுகதுக்கத்தைப்பற்றி என்னைப் போல் முன்பு எவருமே வருணிக்கவில்லையெனத் திடமாகக் கூறுவேன். வங்கத்தின் இதயத்திலிருந்தே நான் எனக்கு வேண்டி யதைத் திரட்டிக்கொண்டேன்; உண்மைக்கும் மேலானதைப் பெற்று மகிழ்ச்சியுற்றேன்.''

திருவலிதாயம்
ஆயில்யம் நாள்
மார்கழி 6,
1967.

தண்டலம் நா. குமாரஸ்வாமி
மொழிபெயர்த்தோன்

ரவீந்திரர் கதைத் திரட்டு

1. பொன் மான் (ஸ்வர்ண ம்ருக) ... 1

2. ஒரு குட்டிப் பழங்கதை (ஏகடி க்ஷுத்ர புராதந கல்ப) ... 13

3. பாலேடு (யக்ஞேச்வரேர் யக்ஞ) ... 16

4. சொத்துக்குரியவன் (ஸம்பத்தி ஸமர்ப்பண) ... 25

5. கழுவாய் (ப்ராயச்சித்த) ... 35

6. கொடை பரிமாற்றம் (தாந ப்ரதிதாந) ... 51

7. அக்காள் (திதி) ... 59

8. படித்துறையின் கதை (காடேர் கதா) ... 70

9. இடைவெளி (வ்யவதாந) ... 82

10. மறுவஞ்சம் (ப்ரதிஹிம்ஸா) ... 87

11. கொடுக்கல் வாங்கல் (தேநா பாவ்நா) ... 104

12. தாராபிரசன்னரின் புகழ் (தாராப்ரஸந்நேர் கீர்த்தி) ... 112

13. அணிகலமிழந்தாள் (மணிஹாரா) ... 120

14. பிள்ளை வேள்வி (புத்ரயக்ஞ) ... 140

15. நிகழாத கதை (அஸம்பவ கதா) ... 146

பொன் மான்

ஆத்யாநாதர், வைத்யநாதர் இருவரும் பங்காளிகள். இருவருள் வைத்யநாதரின் நிலை சற்று மோசமானது. அவருடைய தகப்பனார் மஹேசசந்திரருக்குச் சொத்து சுதந்திரம் பற்றிய ஞானம் இல்லையென்றே சொல்லலாம். அவர் தமையனாரான சிவநாதரின்மேல் பொறுப்பெல்லாம் தள்ளிவிட்டு நிம்மதியாக இருந்துவிட்டார். சிவநாதரோ தம்பியிடம் அன்பொழுகப் பேசினார். பதிலுக்குத் தம்பியின் சொத்துக்களை யெல்லாம் தம் வசமாக்கிக் கொண்டார். சில கம்பெனிப் பத்திரங்கள் மட்டுமே மிகுந்து நின்றன. வாழ்வுப்பெருங்கடலில் அந்தப் பத்திரங்களே வைத்யநாதருக்குத் துணை நின்றன.

சிவநாதர் வெகுவாகத் தேடி அலைந்து ஒரு பணக்காரனின் ஒரே பெண்ணைத் தம் மகன் ஆத்யாநாதருக்கு மணம் செய்வித்து, சொத்துக்கள் மேலும் வளர வழிகோலினார். மஹேசசந்திரரோ ஏழு பெண்களைப் பெற்ற வறியவர் ஒருத்தருடைய மூத்தபெண்ணை ஒரு சல்லிக் காசுகூட வரதக்ஷிணை இராமல் தம் மகனுக்கு மணம் செய்துவைத்தார். ஏழு பெண்களையுமே கல்யாணம் செய்துகொள்ள முடியவில்லை. ஏனென்றால், இருப்பது ஒரே மகன்தானே! அந்த வறியவரும் அவ்வாறு வேண்டவில்லை. இருந்தாலும், அந்தப் பெண்களின் விவாகத்துக்குத் தம் சக்தியை மீறும் அளவுக்குப் பண உதவி செய்தார்.

தகப்பனார் காலமான பின்னர் வைத்யநாதர் கம்பெனிப் பத்திரங்களுடன் நிம்மதியாக மகிழ்ச்சியுடன் காலம் கழித்தார். வேலை பார்க்கவோ சம்பாதிக்கவோ ஒருவித எண்ணமும் அவருக்குத் தோன்றவில்லை. மரக்கிளையை ஒடித்துப் பல விதமாக அக்கறையுடன் கைத்தடிகள் செய்வதுதான் அவருடைய வேலை. ஊரிலிருந்த பிள்ளைகளும், இளைஞர்களும் அவரிடம் கைத் தடிக்காக வந்து நிற்பார்கள். அவரும் அன்பளிப்பாகத் தருவது வழக்கம். இதைத்தவிர, மீன் தூண்டில், பம்பரம் முதலியன செய்வதில் பாதிநேரம் கழியும். மூங்கில் கழியைச் சீவுவதிலும் மழுமழுப்பாக்குவதிலும் நேரம் செலவிட அவர் சந்தோஷமா-

ஈடுபடுவார். ஆனால், குடும்பத்தில் ஒத்தாசையாக உழைக்கவோ அவருக்குப் பொழுதே இருக்காது.

ஊரில் கலவரமும், சண்டைசச்சரவுமாகச் சண்டமண்டபம் அமளி துமளிப்படும்; அந்த வேளையில் வைத்யநாதர் நிம்மதியாகத் தம் வீட்டுத் தாழ்வாரத்தில் உட்கார்ந்து மரக்கிளையும் பேனாக்கத்தியுமாகக் காலைமுதல் மத்தியான்னம் வரையிலும் உட்கார்ந்திருப்பார். பிற்பகல் உண்டு உறங்கிய பின்னர் மீண்டும் அதே வேலையில் அந்தி மங்கும் வரையில் ஈடுபடுவதைக் காணலாம். ஷஷ்டிதேவியின் வரப்பிரஸாதத்தினால் அவருக்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்தனர்.

அவருடைய மனைவி மோக்ஷதாசுந்தரிக்கு நாளுக்கு நாள் எரிச்சல் அதிகமாகியது. ஆத்யாநாதரின் வீட்டில் எவ்வளவு ஆடம்பரம்! வைத்யநாதரின் வீட்டில்மட்டும் ஏன் இப்படி? அந்த வீட்டு விந்தியவாஸினிக்கு எவ்வளவு நகைகள், பட்டுப் புடைவைகள்! அவள் பேச்சும் நடை உடை பாவனைகளுந்தாம் எவ்வளவு பெருமையைத் தருகின்றன! மோக்ஷதாவுக்குமட்டும் ஏன் அவ்வளவு பெருமை இல்லை? குடும்பம் என்னவோ ஒன்று தான். அண்ணன் சொத்துக்களை மோசம் செய்துதானே அவர்கள் இவ்வளவு தூரம் கொழுத்திருக்கிறார்கள்! கேட்கக் கேட்க மோக்ஷதாவுக்கு மாமனார் மேலும், அவருடைய ஒரே மகனான தன் கணவர் பேரிலும் எரிச்சலும் அவமதிப்பும் அதிகரித்தன. தன் வீடே அவளுக்குப் பிடிக்காமல் போயிற்று. எதைக் கண்டாலும் அவளுக்கு அவமானமாகவே பட்டது; எதிலும் அவளுக்குத் திருப்தியே இல்லை. கட்டிலோ பிணம் தூக்கிச் செல்லக்கூட யோக்யதை இல்லை; ஏழு தலைமுறைகளாக உறவு என்று சொல்ல யாருமே இராத நிலை; சிறு கரப்புக்கூட வீட்டுச்சுவரில் தங்க விரும்பாது; வீட்டின் அழகைக் கண்டாலோ பிரம்மசாரி, பரமஹம்ஸருக்குக்கூடக் கண்களில் நீர் வற்றிவிடும் என்றெல்லாம் அவள் முணுமுணுப்பாள். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் பதில் சொல்வது ஆண் பிள்ளைகளைப் போன்ற கோழைகளால் இயலாத செயல். ஆகவே, வைத்யநாதர் வெளித் தாழ்வாரத்தில் உட்கார்ந்து இருமடங்கு அக்கறையுடன் மூங்கிலைச் சீவுவார். ஆனால் மௌன விரதம் எப்போதுமே ஆபத்திலிருந்து காத்துவிடுமா? ஒரோரு நாள் கணவருடைய சிற்பத்திறனில் குறுக்கிட்டு மோக்ஷதா அவரை வீட்டினுள் இழுத்து வருவாள். மிகவும் நிதானமாக வேறு பக்கம் பார்த்தவண்ணம், ''பால்காரனை நிறுத்திவிடுங்கள்'' என்பாள்.

வைத்யநாதர் கொஞ்ச நேரம் பொறுத்துப் பணிவாக, ''பாலை நிறுத்திவிட்டால் எப்படி? குழந்தைகளுக்கு எதைக் கொடுப்பது?'' என்பார்.

''அரிசிக் கஞ்சி'' என்பாள் மோக்ஷதா.

சில நாட்கள் இதற்கு நேரிடையாக நடப்பதும் உண்டு. மோக்ஷதா தன் புருஷரைக் கூப்பிடுவாள். ''எனக்கு ஒன்றும் தெரியாது. என்ன செய்யவேண்டுமோ நீங்களே செய்யுங்கள்'' என்பாள்.

வாடிய முகத்துடன் வைத்யநாதர், ''என்ன செய்ய வேண்டும்?'' என்பார்.

''இந்த மாசம் கடைச் சாமான்களை வாங்கி வாருங்கள்'' என்று அவள் ஒரு பெரிய பட்டியலைக் கொடுப்பாள். அதைக் கொண்டு ஒரு ராஜசூய யாகமே ஆடம்பரமாக நடத்திவிடலாம் போலிருக்கும்.

வைத்யநாதர் சற்றுத் துணிந்து, ''இவ்வளவுக்குத் தேவை இருக்கிறதா?'' என்று கேட்பார்.

''சரிதான். உங்கள் பிள்ளைகள் சாப்பிடாமல் சாகட்டும். நானும் போய்விட்டால், உங்கள் ஒருத்தருக்குச் செலவே அதிகமிராது.''

இப்படி மெள்ள மெள்ள வைத்யநாதருக்கு விஷயம் வெளிச்சமாயிற்று. மூங்கில் சீவினால்மட்டும் போதாது; ஏதாவது வழி தேடியாக வேண்டும். குமாஸ்தா வேலை பார்ப்பதோ, வியாபாரம் செய்வதோ வைத்யநாதருக்கு ஏற்றதல்ல. ஆகவே, குபேரனுடைய கஜானாவில் நுழையக் குறுக்கு வழிதான் தேட வேண்டும். அவர் ஒரு நாள் இரவு படுக்கையில் படுத்துப் பரிதாபமான குரலில் வேண்டிக்கொண்டார்: ''தாயே, ஜகதம்பா! கடுமையான நோயைத் தீர்க்கும் மருந்து ஏதாவது கனவில் எனக்குச் சொல்லிக்கொடேன். தினசரியில் விளம்பரம் செய்யும் பொறுப்பு என்னுடையது.''

அன்றிரவு கனவில் அவருடைய மனைவி அவர்மேல் அதிருப்தியுற்று 'விதவா விவாகம்' செய்துகொள்வதாகச் சபதம் செய்வதைக் கண்டார். பணமில்லாத குறை. கல்யாணத்துக்குத் தேவையான நகைகளுக்கு எங்கே போவது என்று வைத்யநாதர் தடை கூறினார். விதவைக்கு நகைகள் தேவையில்லை என்று அதற்கு மறுப்பு விடுத்தாள் மனைவி. அதற்கு ஏதோ தகுதியான பதில் கூறச் சட்டென்று தோன்றாமல் அவர் திணறும்போது உறக்கம் கலைந்துவிட்டது. விழித்தால், பொழுது விடிந்துவிட்டது. அவருடைய மனைவிக்கு ஏன் விதவாவிவாகம் நடக்க முடியாது என்று அவருக்கு நினைவு வந்தது. அதற்காக அவர் கொஞ்சம் வருத்தம் அடைந்தும் இருக்கலாம்.

மறுநாள் காலை, அவர் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு தனிமையில் காற்றாடிக்காக மூங்கில் பத்தையைச் சீவிக்கொண்டிருந்த சமயம் ஒரு சாமியார் ஜயகோஷம் செய்தவாறு வாசலில்

வந்து நின்றார். அந்தக் கணமே வைத்யநாதரின் கண்ணெதிரே செல்வக்குவியலின் பிரகாசம் தோன்றியது. சாமியாரை ஆதரவுடன் வரவேற்று, பெருமளவில் உணவும் அளித்தார். பல விதமாகக் கெஞ்சி வேண்டிய பின்னர், சாமியாருக்கு ரசவாதம் (பொன்னாக்கும் வித்தை) தெரியும் என்பது வெளியாயிற்று. அந்த வித்தையைச் சாமியார் வைத்யநாதருக்குத் தானம் செய்யவும் இசைந்தார்.

மோக்ஷதாவுக்கும் மகிழ்ச்சி பொங்கியது. மஞ்சள் காமாலைக் காரனுக்குக் கண்டது எல்லாம் மஞ்சளாகத் தெரியும். அதே போல் அவள் கண்களுக்கு உலகம் எங்கும் பொன் மயமாகத் தெரிந்தது. படுக்கும் கட்டில், வீட்டுச் சாமான்கள், வீட்டுச் சுவர் முதற்கொண்டு யாவும் கற்பனையில் பொன்னாகத் தோன்றவும் அவள் தன் மனத்தினுள் விந்தியாவாஸினியை அழைத்து வந்து காட்டினாள்.

சாமியார் தினமும் இரண்டு சேர் பாலும் ஒன்றரைச் சேர் 'மோஹன் போகு'ம்[1] சாப்பிடலானார். வைத்யநாதர் கம்பெனிப் பத்திரங்களை விற்று விற்று வெள்ளிப் பணமாக்க வேண்டியிருந்தது.

கைத்தடி, தூண்டில், காற்றாடிக்காக வைத்யநாதரின் வீட்டுக் கதவைத் தட்டிப் பார்த்துவிட்டு ஏமாந்து திரும்பினார்கள் சிறுவர்கள். வீட்டில் குழந்தைகளுக்குச் சோறு கிடைப்பதில்லை; கீழே விழுந்து தலை வீங்க உரத்த குரலில் அழுது ஊரைக் கூட்டின. ஆனால் வீட்டுக்காரரும் அவர் மனைவியும் அந்தப் பக்கங் கூடத் திரும்பவில்லை. கம்மென்று தீக்குண்டத்தின் எதிரே கண் இமை கொட்டாமல் வாய் பேசாமல் உட்கார்ந்து கிடந்தார்கள் இருவரும். ஆவலுடன் இமை கொட்டாமல் இருந்த விழிகளில் தீயின் ஒளி பட்டுப்பட்டுக் கண்ணின் கருமணி பரிச மணியின் தன்மையை அடைந்தது போல் தோன்றியது. அந்திச் சூரியனின் செக்கச் சிவந்த பொன்னிறத்தைப்போல் இருந்தது அவர்கள் பார்க்கும் இடமெல்லாம்.

இரண்டு கம்பெனிப் பத்திரங்களைப் பொன் தீயில் ஆகுதி அளித்த பின்னர் ஒருநாள் சாமியார், ''நாளைக்குப் பொன் நிறம் பிடிக்கும்'' என்றார்.

அன்றிரவு எவரும் கண் மூடவில்லை. கணவனும் மனைவியுமாகக் கூடி தங்கத்தால் ஒரு நகரமே கட்டத் தொடங்கினார்கள். இதுபற்றி இருவரிடையே கருத்து வேறுபாடும், சச்சரவுங்கூட எழுந்தன என்றாலும் களிப்பு மிகுதியால் சச்சரவுகளுக்கு உடனே ஒரு முடிவும் ஏற்பட்டது. பரஸ்பரம் விட்டுக் கொடுக்க அவர்கள்

[1] ஓர் இனிப்புப் பண்டம்

தயங்கவில்லை. இருவரும் ஒரே மனமாக அன்று நெருங்கி இருந்தார்கள்.

மறுநாள் காலை சாமியாரைக் காணவில்லை. பொன் கிரணங்கள் மறைந்தது போக, சூரியனின் கதிர்கள்கூட அவர்களுக்கு இருண்டுபோய்த் தோன்றியது. வீட்டின் சுவர்கள், கட்டில் யாவும் முன்பு இருந்ததைவிடப் பன்மடங்கு வறுமையை எடுத்துக் காட்டின.

வீட்டு விஷயமாக வைத்யநாதர் தமக்குத் தோன்றியதை எடுத்துச் சொன்னால், ''போதுமே, உங்கள் புத்தி எவ்வளவு என்று காட்டியாயிற்று! கொஞ்ச நாள் பேசாமல் இருங்கள்'' என்று கரித்துக் கொட்டுவாள் மோக்ஷதா. அவரும் பேசாமல் போய் விடுவார். இந்தப் பொன் வேட்டையில் தான் ஒரு நிமிஷங்கூட மயங்கவில்லை என்று தன் உயர்வைக் காட்டிக்கொண்டாள் அவள்.

குற்றவாளியான வைத்யநாதர், மனைவியைத் திருப்தி செய்யும் வழிகளைப்பற்றி யோசிக்கலானார். ஒரு நாள் ஒரு சதுரப் பொட்டலத்துடன் அவர் மனைவியை அணுகினார். வாயெல்லாம் புன்னகையுடன், ''என்ன கொண்டு வந்திருக்கிறேன் சொல்'' என்று ஒரு மந்திரவாதியின் தந்திரத்துடன் சொன்னார்.

மனைவியும் தனது ஆவலை மறைத்துக்கொண்டு அலட்சியமாக, ''எனக்கென்ன தெரியும்! நான் என்ன பிசாசா?'' என்றாள்.

வைத்யநாதர் வேண்டுமென்றே நிதானமாக முதல் முடிச்சை அவிழ்த்தார். வாயினால் ஊதித் தூசுகளை அகற்றினார். பிறகு ஜாக்கிரதையாகப் பொட்டலத்தைப் பிரித்து, 'தச மஹா வித்யா'வின் வர்ணப் படம் ஒன்றை வெளிச்சம் படும்படியாக விரித்துக் காட்டினார்.

அதைக் கண்டதும் மோக்ஷதாவுக்கு, விந்தியாவாஸினியின் படுக்கை அறையில் தொங்கிய மேல்நாட்டு ஓவியம் நினைவுக்கு வந்தது. அளவுக்கு மீறிய அருவருப்புடன் அவள், ''வாழ்ந்தது போங்கள். உங்கள் அறையில் மாட்டி அழகு பார்த்துக் கொள்ளுங்கள். எனக்கு வேண்டாம்'' என்று சொல்லிவிட்டாள்; மற்ற விஷயங்களில்தான் தன்னை ஏமாற்றிவிட்டான் பிரம்மதேவன், மனைவியை வசப்படுத்தும் வித்தையைக் கூடத் தனக்கு அளிக்காமல் போய் விட்டானென்று அவர் புரிந்து கொண்டார்.

மோக்ஷதா ஊரிலிருந்த ஜோதிடர்களிடமெல்லாம் கையைக் காட்டினாள். ஜாதகத்தைக் காண்பித்தாள். எல்லோரும் அவள் சுமங்கலியாகவே காலமாவாள் என்றனர். ஆனால், அவள் அதற்காக ஏங்கவில்லையே; அதனால் அவளுக்குத் திருப்தி உண்டாகவில்லை. பிள்ளைப் பேறு உண்டென்றனர் சிலர்; வீடு நிரம்பப்

பிள்ளை குட்டிகள் நடமாடுவார்கள் என்றனர் சிலர். அதுவும் அவளுக்கு மகிழ்ச்சி யளிக்கவில்லை.

கடைசியில் ஒருவன் ஓராண்டில் வைத்யநாதருக்குப் புதையல் கிடைக்காவிட்டால் தன் புத்தகங்களை யெல்லாம் எரித்து விடுவதாகச் சபதம் செய்தான். ஜோதிடன் இவ்வாறு சூளுரைக்கவே மோக்ஷதாவின் மனத்தில் அவநம்பிக்கை எழக் காரணமிராது போயிற்று. ஜோதிடன் கைநிறையத் தக்ஷிணையைப் பெற்றுக்கொண்டு சென்றான். ஆனால், வைத்யநாதருக்கோ மேன்மேலும் சங்கடங்கள் வளர்ந்துகொண்டே போயின. பணம் சம்பாதிக்க விவசாயம், குமாஸ்தா உத்தியோகம், வியாபாரம், ஏமாற்றுவித்தை, திருட்டு இப்படியெல்லாம் பல சாதாரண வழிகள் உண்டு. ஆனால் புதையல் எடுக்க வழியேதும் தெரிய வில்லையே! மோக்ஷதா விரட்ட விரட்ட வைத்யநாதரோ வழி யொன்றும் புரியாமல் விழிக்கலானார். எந்த இடத்தில் தோண் டுவது, எந்தக் குளத்து நீரில் முழுகச் சொல்லுவது, வீட்டின் எந்தச் சுவரை இடிப்பது - இப்படி ஒன்றுமே விளங்காமல் அவர் விழித்தார். மோக்ஷதாவுக்கு வெறுப்பு மேலிட்டது. ஆண் பிள்ளை களின் தலையில் மூளைக்குப் பதிலாக இவ்வளவு சாணம் இருக்கு மென்று தான் எண்ணவே இல்லை என்று பளிச்சென்று சொன்னாள்.

''கொஞ்சம் அசைந்து கொடுங்கள். வெறுமனே உட்கார்ந் தால் வானத்திலிருந்து பணமழை கொட்டுமா?'' என்றாள் அவள்.

அவள் சொல்வதும் சரிதான். அவரும் அதைத்தான் நினைத்தார். ஆனால் எப்படி அசைவது, எதன்மேல் ஏறுவது என்றுதான் அவருக்குப் புரியவில்லை. அதனால் தம்பாட்டில் அவர் மூங்கில் பத்தை சீவலானார்.

புரட்டாசி மாதம் துர்க்கா பூஜை நெருங்கியது. சதுர்த்தி யன்று முதல் படகுகள் துறையில் வந்து நின்றன. வெளியூர் சென்றவர்கள் சொந்த ஊருக்கு வரத் தொடங்கினார்கள். ஒவ்வொருவர் கையிலும் கூடைகளில் பழங்கள், கறி காய்கள், தேங்காய், தகரப் பெட்டிகளில் சிறுவர்களுக்குப் புதுச் செருப் புக்கள், துணிமணிகள், குடை, மனைவிக்குப் புது வாசனைச் சோப்பு, கதைப் புத்தகம், வாசனைத் தைலம் எல்லாம் இருந்தன.

மேகங்கள் இராத வானத்தில் சூரிய கிரணங்கள் விழாக் கொண்டாட்டத்தின் களிப்புப் போல் பரவியது. வயல்கள் தோறும் கதிர்கள் முற்றிப் பயிர்கள் காற்றில் அசைந்தாடின. மழையில் நனைந்த தளிர்கள் குளிர்காற்றில் சலசலத்தன. வழி நெடுகிலும் பட்டுக் கோட்டும், மேல் துண்டுமாகக் குடை பிடித்துக்

கொண்டு வயலினூடே வெளியூர்வாசிகள் சொந்த வீடுநோக்கி நடந்தனர்.

வைத்யநாதர் வீட்டில் உட்கார்ந்து அவர்களைக் கண்டு பெரு மூச்சு விடுவார். தம் வீட்டில் நிலவும் வறுமையை, மற்றவர்கள் வீட்டுக் கொண்டாட்டத்துடன் ஒப்பு நோக்கி மறுகுவார்— ''ஆண்டவன் ஏன் என்னை இவ்வளவு உதவாக்கரையாகப் படைத்துவிட்டான்?''

விடிந்ததுமே குழந்தைகள் ஆத்யாநாதரின் வீட்டு முற்றத்தில் துர்க்கா பிரதிமை செய்வதைப் பார்க்கச் சென்றுவிட்டார்கள். சாப்பாட்டுக்காக வேலைக்காரி அவர்களை இழுத்து வந்தாள். அப்போதும் அவர் நாடு முழுவதும் கொண்டாடும் பண்டிகையின் நடுவிலும் தமது கையாகாலாத தன்மையை நினைந்து வருந்திக் கொண் டிருந்தார். வேலைக்காரியின் வசமிருந்து அவர் பிள்ளைகளைத் தம்பால் இழுத்துக்கொண்டு பெரியவனை நோக்கி, ''ஏனடா அபு, விஜயதசமிக்கு உனக்கு என்ன வேண்டும், சொல்?'' என்றார்.

அவிநாசன் சட்டென்று, ''எனக்கு ஒரு படகு வேண்டும்'' என்றான்.

சின்னவன் பெரியவனுக்குத் தான் இளைத்தவனாகக் கூடாது என்று எண்ணினான். ''எனக்குக்கூட ஒரு படகு வேண்டும்'' என்றான் அவன்.

அப்பனுக்கு ஏற்ற பிள்ளை. உபயோகமற்ற ஒரு பொம்மை அவர்களுக்குப் போதும்! ''சரிதான்'' என்றார் அவர்.

மோக்ஷதாவுக்கு ஒரு சிற்றப்பா காசியில் வக்கீலாக இருந்தார். அவர் பூஜையின் சமயம் வந்து சேர்ந்தார். மோக்ஷதா சில நாட்களாக அவர் வீட்டுக்கு அடிக்கடி சென்று வந்தாள். கடைசியில் ஒரு நாள் அவள் வைத்யநாதரிடம், ''நீங்கள் காசிக்குப் போகவேண்டும்'' என்றாள்.

தமது வாழ்நாள் முடியும் காலம் வந்துவிட்டது போலும்; ஜோசியம் கேட்டு மனைவி, தாம் நல்ல கதி அடைய வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறாள் என்றே வைத்யநாதருக்குச் சட்டென்று தோன்றியது. பிறகுதான் விஷயம் அவருக்குத் தெரிந்தது. காசியில் ஒரு வீட்டில் புதையல் கிடைக்குமாம். அந்த வீட்டை வாங்க ஏற்பாடு செய்யத்தான் காசி யாத்திரை என்று தெரிய வந்தது.

''நன்றாக இருக்கிறது! நான் காசிக்குப் போகமாட்டேன்'' என்றார் அவர். ஒரு நாள்கூட அவர் வீட்டை விட்டுச் சென்றதில்லை. இல்வாழ்வான் வீட்டைத் துறந்து எவ்வாறு செல்ல வேண்டுமென்பதைச் சாத்திரங்கள் கூறுகின்றன. இது விஷயத்தில் பெண்கள் 'படிக்காத மேதைகள்' என்றே குறிப்பிடலாம். மோக்ஷதா வாய் வீச்சினால் மிளகாய் நெடியை

வீட்டில் பரப்பினுள். பாவம், வைத்யநாதர் கண்ணீர் வடித்தாரே தவிர, காசிக்குப் போகும் பேச்சைக்கூட எடுக்க வில்லை.

இரண்டு மூன்று நாட்கள் கழிந்தன. வைத்யநாதர் இரண்டு மரத் துண்டுகளைச் செதுக்கி, ஒட்ட வைத்துப் பெரிய படகுகள் இரண்டு செய்தார். பாய்மரம் வைத்தார்; துணித் துண்டுகளால் பாய்களும் கட்டினுர். சிவப்புக் கொடி கட்டி, சுக்கான், நங்கூரம் எல்லாம் அமைத்தார். பொம்மைப் படகோட்டி சில பிரயாணிகள் எல்லாம் திறம்படச் செய்தார். அந்தப் படகுகளைக் கண்டு அதை அடைய வேண்டுமென்று ஆசைப்படாத பிள்ளைகளே இல்லை என்று கூறலாம். ஆகவே, ஸப்தமியன்றிரவு வைத்யநாதர் தம் பிள்ளைகளிடம் படகுகளைத் தந்தபோது அவர்கள் மட்டற்ற மகிழ்வெய்தினர். பொம்மைப் படகு விளையாட்டுக்குப் போதும். இதில் சுக்கான், நங்கூரம், பாய்மரம், பாய்ச் சீலைகள், படகோட்டி எல்லாம் இருக்கவே அவர்கள் கொண்டாட்டம் பிடி கொள்ளவில்லை. பிள்ளைகள் சந்தோஷத்தால் குதிப்பது கண்ட மோக்ஷதா வறிய தந்தையின் பூஜைப் பரிசு என்னவென்று பார்க்க வந்தாள். பொம்மைகளைக் கண்டதுமே அவளுக்குக் கோபமும், அழுகையும் பொத்துக்கொண்டு வந்தன. பொம்மை களைப் பிடுங்கி ஜன்னல் வழியாக வெளியே வீசி எறிந்தாள். தங்கச் சங்கிலி, பட்டுச் சொக்காய், ஜரிகைத் தொப்பி ஒன்று மில்லை; கடைசியில் பொம்மையைக் கொடுத்துப் பிள்ளைகளை ஏமாற்றுகிருரே இந்த மனுஷ்யன்; அதுவும் இரண்டு காசு செலவில்லாமல் இவரே செய்தது!

சின்னவன் உரக்க அழவும், மோக்ஷதா, ''முட்டாள் பயலே!'' என்று அவன் முதுகில் பளாரென்று ஓர் அடி வைத்தாள்.

பெரியவனே தந்தையின் முகத்தை ஏறிட்டு நோக்கித் தன் துயரை மறந்தான். ''நாளைக்குக் காலையில் நான் எடுத்துக் கொண்டு வருகிறேன்'' என்றும் சொன்னுன்.

வைத்யநாதர் மறுநாள் காசிக்குச் செல்ல இசைந்தார். ஆனுல், பணத்துக்கு எங்கே போவது? மோக்ஷதா தன் நகைகளை விற்றுப் பணம் சேகரித்தாள். அந்த நகைகள் வைத்யநாத ருடைய பாட்டி காலத்தவை: அவைகளைப்போல் சுத்தமான பொன்னே, பளுவான நகைகளோ இந்தக் காலத்தில் கிடைக்கா.

வைத்யநாதருக்குத் தமது கடைசிப் பிரயாணமோ இது என்று இருந்தது. அவர் குழந்தைகளைத் தூக்கி முத்தமிட்டார்; கண்ணீருடன் அவர் வீட்டைவிட்டுக் கிளம்பியதும் மோக்ஷதாவும் அழத் தொடங்கினுள்.

காசியில் வீட்டின் சொந்தக்காரன் அவருடைய சிறிய மாமனுரின் கட்சிக்காரன். அதனுல்தானே என்னவோ, வீட்டை அதிகமான விலேக்கே அவன் விற்ருன். வைத்யநாதர் வீட்டை வாங்கி ஒன்றியாக அங்கே தங்கினுர். ஆற்றங் கரையிலேயே வீடு. வீட்டின் சுவரைத் தொட்டுக்கொண்டு ஓடியது ஆற்றின் பெருக்கு. அன்றிரவு வைத்யநாதருக்கு உடல் சிலிர்த்தது. தலே மாட்டில் விளக்கேற்றி வைத்துக்கொண்டு போர்வையுடன் அவர் தனியாகப் படுத்தார். தூக்கமோ வரவில்லே. நள்ளிரவில் ஊரோசையெல்லாம் அடங்கியது. அப்போது ஜன்ஜன் என்ற ஓசை கேட்டு அவர் திடுக்கிட்டு எழுந்தார். மிகவும் மெதுவாகவே வந்தாலும் ஓசை தெளிவாகவே கேட்டது. ஒருவேளே பாதாளத் தில் பலிராஜாவின் கஜானுவில் பணம் எண்ணிக்கொண்டிருப் பார்களோ!

வைத்யநாதருக்குப் பயம், ஆவல் இவற்றுடன் அடக்க முடியாத ஆசையும் ஏற்பட்டன. கைகள் நடுங்கியவாறு, விளக்குடன் வீடெங்கும் சுற்றினுர். ஓர் அறைக்குள் சென்ருல் ஓசை, இன்னேர் அறையிலிருந்து கேட்டது. அப்படியே இரவெல்லாம் மாறி மாறி அலேந்தார் அவர். பகலில் மற்ற ஓசைகளுடன் அதுவும் கலந்து மறைந்தது. எங்கேயிருந்து அந்த ஓசை கேட்டது என்று கண்டுபிடிக்க முடியவில்லே.

நள்ளிரவில் மூன்ரும் ஜாமத்தில் உலகு உறங்கும் வேளேயில் மீண்டும் அந்த ஒலி எழுந்தது. அவருடைய மனம் அலே பாய்ந்தது. ஒலியைக் கொண்டு எந்தப் பக்கம் போவது என்று புரியாமல் திகைத்தார். மாலேயின் நடுவில் ஆற்றின் அலேயோசை கேட்கிறது; எங்கேயென்று புரியாமல் விழிக்கிருன்; தவருன பாதையில் சென்றுவிட்டால் கைக்கு எட்டாமல் போய்விடுமே என்று தாகத்தால் தவிக்கும் வழிப்போக்கன் திகைத்து நிற்கிருன்; தாகமோ அதிகரித்துக்கொண்டே போகிறது...அந்த மாதிரியான நிலேயில் இருந்தார் வைத்யநாதர்.

இப்படி நிலேயற்ற விதமாகவே பல நாட்கள் சென்றன. எப்போதும் புன்னகை மலர்ந்திருக்கும் அவர் முகத்தில், உறக்க மின்மையும், வீண் ஆசையும் ஒரு கவலேயின் குறியை எழுப்பி விட்டன. குழி விழுந்த கண்களில் பகல் வேளேயில் பாலேயின் மணல்போல் எரிச்சல் ஆரம்பித்தது.

கடைசியில் ஒரு நாள் மத்தியான்னம் கதவுகளே அடைத்துக் கொண்டு வீட்டின் தரையைக் கடப்பாரையினுல் இடித்தார். பக்கத்திலிருந்த சிறு அறையில் தரை ஒரு விதமான ஒலியை எழுப் பியது. நள்ளிரவில் அவர் அங்குத் தனியே உட்கார்ந்து தரையைத் தோண்டினுர். இரவு விடியும் தருவாயில் பள்ளம் தோண்டி யாயிற்று. கீழே ஓர் அறைபோலத் தோன்றியது. ஆனுல் இரவில்

அந்தப் பள்ளத்தினுள் இறங்க அவருக்கு துணிவில்லை. பள்ளத்தின் மேல் பாயைப் போட்டுக்கொண்டு படுத்தார். ஓசை பலமாகவே அவருக்குக் கிலி பிடித்துக்கொண்டது. அங்கிருந்து எழுந்து வந்தார். ஆனல் வெளியே சென்றுவிடவும் அவருக்கு இஷ்டமில்லை. ஆசை, பயம் இரண்டும் அவரை இருபுறமும் இழுத்தன. இரவு கழிந்தது.

அன்று பகலிலும் அந்த ஒலி கேட்டது. வேலைக்காரனைக்கூட உள்ளே வரவிடாமல் அவர் வெளியிலேயே சாப்பிட்டார். பின்னர் உள்ளே வந்து வீட்டின் கதவைப் பூட்டிக்கொண்டார். துர்க்கா நாமத்தைச் சொல்லியவாறு அவர் படுக்கையை ஒதுக்கிவிட்டுப் பார்த்தார். உள்ளே சலசலவென்று ஆற்றுப் பெருக்கின் ஒலி ஏதோ உலோகத்தின்மீது பட்டு டன் டன் என்று ஒலிப்பதுகூடக் கேட்டது. இருளில் அதற்குமேல் ஒன்றும் அவர் கண்களில் படவில்லை. ஒரு பெரிய கொம்பை உள்ளே விட்டுப் பார்த்தபோது ஆழம் முழங்காலுக்கு மேல் இல்லை என்று தெரிந்தது. ஒரு மெழுகுவர்த்தி, தீப்பெட்டி சகிதத்துடன் அவர் அதனுள் இறங்கினர். ஒரு கணத்தில் தமது ஆசை எங்கே அழிந்துவிடுமோ என்ற அச்சத்தில் விளக்கை ஏற்றவும் அவர் கைகள் நடுங்கின. பல குச்சிகளை வீணடித்த பின்னர் விளக்கும் எரியத் தொடங்கியது. பருத்த இரும்புச் சங்கிலியில் ஒரு செப்புச் செம்பு கட்டியிருந்தது. அது ஆற்றுவெள்ளத்தினுல் ஆடிச் சங்கிலியுடன் மோதி ஓசையை எழுப்பியது. அவர் நீரில் துழாவியவாறு செம்பை அணுகினர். அது காலியாகிக் கிடந்தது.

அவரால் தம் கண்களை நம்ப முடியவில்லை. இரு கரங்களாலும் செம்பைத் தூக்கிக் குலுக்கிப் பார்த்தார். உள்ளே ஒன்றும் இல்லை. கவிழ்த்தபோதும் உள்ளிருந்து கீழே ஒன்றும் விழவில்லை. செம்பை எவரோ உடைத்திருப்பது தெரிந்தது. அவர் அதைக் கண்டதும் பித்தன்போல் நீரினுள் துழாவினர். சேற்றின் நடுவே அவர் கைகளுக்கு ஒரு மனிதனின் மண்டையோடு கிடைத்தது. அதையும் எடுத்துக் காதருகில் குலுக்கிப் பார்த்தார். பிறகு தூர எறிந்தார். வெகுநேரம் தேடியும் மனித எலும்புகளைத் தவிர வேறெதுவும் கைகளில் தட்டுப்படவில்லை. ஆற்றின் கரைப் பக்கம் சுவர் சற்று உடைந்திருந்தது. அதன் வழியே ஆற்று நீர் உள்ளே வந்தது. இன்னும் எவனுடைய ஜாதகத்தில் புதையல் கிடைக்குமென்று எழுதியிருந்ததோ, அவன்தான் அவ்வழியே உள்ளே வந்திருக்கவேண்டும்.

கடைசியில் முழு ஏமாற்றத்துடன், 'அம்மா!' என்று ஒரு பெருமூச்செறிந்தார். இன்னும் எத்தனையோ ஏமாந்த பேர்வழிகளின் பெருமூச்சுகளையும் சேர்த்து எதிரொலியும் மறு குரல் எழுப்பியது. உடலெங்கும் சேற்றைப் பூசிக்கொண்டு அவர் மேலேறி

வந்தார். வெளியே ஜனத்திரளின் கோலாகலம் மண்டிய உலகம் அவருக்கு மாயை என்னும் சங்கிலியில் கட்டிய செம்பைப்போல் சூனியமாகவே பட்டது.

மீண்டும் படுக்கையைச் சுற்றி, டிக்கட் வாங்கி வண்டியிலேறி வீடு செல்ல வேண்டும்; மனைவியுடன் வாய்ச் சண்டை போட வேண்டும்; வாழ்வெல்லாம் இந்தச் சுமையைச் சுமந்தாக வேண்டும். இது அவருக்குப் பொறுக்கமுடியாமல் இருந்தது. ஆற்றங் கரை சரிவது போலத் தொப்பென ஆற்றில் விழுந்துவிடலாம் போல் இருந்தது அவருக்கு. இருந்தாலும் அவர் படுக்கையைச் சுற்றி எடுத்துக்கொண்டு வண்டியிலேறி வீட்டுக்குக் கிளம்பினார்.

குளிர்ந்த காலத்தில் ஒரு நாள் சாயங்காலம் அவர் வீட்டின் வாசலில் போய் நின்றார். புரட்டாசி மாதம் காலையில் பலர் வீடு திரும்புவதை வைத்யநாதர் வீட்டுவாசலில் உட்கார்ந்து பார்த்ததுண்டு. அவ்வாறு தாமும் வெளியூரிலிருந்து திரும்ப வேண்டும் என்று உள்ளூறப் பெருமூச்சு விட்டதாறு ஏங்கியது உண்டு. அப்போது இப்படியும் ஒரு சாயங்காலம் வரும் என்று அவர் கனவுகூடக் காணவில்லை.

வீட்டு வாசல் திண்ணையில் பிரமித்து உட்கார்ந் திருந்தார். உள்ளே செல்லக்கூட அவருக்குத் தெம்பில்லை. முதலில் வீட்டு வேலைக்காரிதான் அவரைக் கண்டு உள்ளே களிப் புடன் செய்தியைப் பரப்பினாள். உடனே பிள்ளைகள் வந்தார்கள். மனைவியும் உள்ளே கூப்பிட்டனுப்பினாள். ஒரு மயக்கம் தெளிந்தது போல் அவர் தமது பழைய வீட்டினுள் நுழைந்தார். வாடிய முகமும் மங்கிய சிரிப்புமாக அவர் சின்னப் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு அந்தப்புரத்தினுள் சென்றார். உள்ளே விளக்கேற்றி யிருந்தது. இருட்டி விடவில்லை என்றாலும், குளிர்காலம் ஆதலால் இரவைப்போல் தோன்றியது.

வைத்யநாதர் கம்மென்றிருந்தார்; பிறகு மெல்ல, "எப்படி இருக்கிறீர்கள்?" என்று மனைவியைக் கேட்டார்.

மோக்ஷதா அதற்குப் பதில் சொல்லவில்லை. "போன காரியம் என்ன ஆயிற்று?" என்று கேட்டாள்.

வைத்யநாதர் பதில் கூறாமல் தலையில் அடித்துக்கொண் டார். மோக்ஷதாவின் முகம் கல்லாகியது.

பிள்ளைகளுக்கு ஏதோ ஒரு பெரிய பிரளயம் தோன்றுவதாக இருக்கவே, அவர்கள் மெல்ல வேலைக்காரியிடம் போய், "அந்த நாவிதன் கதை சொல்" என்று உட்கார்ந்துகொண் டார்கள்.

இரவு கனத்தது. இருவரும் ஒன்றும் பேசவில்லை. வீட்டினுள் நிச்சப்தம் நிலவியது. மோக்ஷதாவும் அழுத்தமாக உதட்டைக் கடித்துக்கொண்டாள். வெகுநேரம் பொறுத்து அவள் ஒன்றும்

பேசாமல் எழுந்து தன் அறைக்குள் போய்க் கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

வைத்யநாதர் கம்மென்று வெளியே நின்றிருந்தார். வெளியே காவல்காரன் கூவியவாறு சென்றான். உலகம் களைத்து உறங்கியது. சொந்த உறவினர்முதல் வானத்தின் எண்ணிறந்த தாரகைகள் வரை எவருமே உறங்காமல் தவிக்கும் வைத்ய நாதரை ஏனென்றுகூடக் கேட்கவில்லை.

இரவு வெகு நேரமாகியிருக்கும். ஏதோ சனவு கண்டு எழுந்த பெரிய பிள்ளை படுக்கையிலிருந்து மெல்ல எழுந்து வராந்தாவுக்கு வந்து, ''அப்பா'' என்று கூப்பிட்டான். ஆனால் அப்போது அவனுடைய தகப்பனார் அங்கில்லை. பிறகு பின்னும் உரக்க, ''அப்பா'' என்று தாழிட்ட கதவுக்கு வெளியே யிருந்து கூவினான். ஆனால் பதில் ஒன்றும் வரவில்லை. பிறகு மெள்ளப் பயத்துடன் படுக்கையில் போய்ப் படுத்தான்.

பழைய வழக்கப்படி வேலைக்காரி ஹுக்காவைத் தயார் செய்து எடுத்துக்கொண்டு அவரைத் தேடினாள். அவரை எங்குமே காணவில்லை. அக்கம்பக்கத்தவர்கள் வீடு திரும்பிய வைத்ய நாதரைக் காணவந்தபோது அவர் எங்கிருந்தாரோ!

ஒரு குட்டிப் பழங்கதை

கதையா சொல்லவேண்டும்? அப்பன்மார்களே! இனிமேல் என்ளுல் ஆகாது. மூளை வறண்டுபோன இந்த ஆளை இனிமேல் விட்டுவிட வேண்டியதுதான்.

எனக்கு இந்தப் பதவியை யார் கொடுத்தார்களோ, எனக்கே தெரியாது. என்னை எதற்காக நீங்கள் சூழ்ந்து கொண்டாடு கிறீர்கள்? என்னை இவ்வளவு தூரம் தூக்கி வைப்பானேன்? என் னிடம் இவ்வளவு எதிர்பார்ப்பானேன்? எனக்கு ஒன்றும் தெரியாது; எல்லாம் உங்கள் இஷ்டம். என் அதிர்ஷ்டமோ, துரதிருஷ்டமோ, என்னை நீங்கள் பொறுக்கி எடுத்துவிட்டீர்கள். அதற்கு ஓரளவாவது தகுதி உள்ளவளுக வேண்டுமென்றுதான் நானும் முயன்று பார்க்கிறேன்.

ஏதோ நான்கு பேராகக் கூடி ஒரு பொறுப்பை என் தலையில் ஒரே குரலாகச் சுமத்திவிட்டீர்கள். ஆளுல் அதற்கு நான் சிறிதும் தகுந்தவனல்ல. எனக்குத் தகுதி இருக்கிறதா இல்லையா என்று நான் ஒரு கர்வமோ, பணிவோ காட்டிக்கொள்ள விரும்ப வில்லை. என்னைப் பிரம்மதேவன் தனியாக ஒதுங்கி வாழ்வதற் கென்றே படைத்துவிட்டான். நான்கு பேர் நடுவில் புகழைத் தாங்கி உலாவும் சக்தியை என் உடம்புக்கு அவன் தரவில்லை. அதாவது, ''ஒதுங்கி வாழ்ந்தால்தான் நீ உருப்படியாக வாழ முடியும்'' என்று என் தலையில் எழுதிவிட்டான். ஆளுல் பிரம்ம தேவனுடைய பிழையினுலோ, அல்லது என்னைக் கண்டு எள்ளி நகையாடும் விருப்பத்தினுலோ, தெரியாது; இந்தப் பெரும் ஜனத் திரளின் நடுவில் வந்து பிறந்துவிட்டேன். என் தவிப்பைக் கண்டு வாயைத் துணியினுல் மூடிக்கொண்டு அவர் சிரிக்கிருரோ என்னவோ! நானும் அவருடன் சேர்ந்துகொண்டு சிரிக்கத்தான் பார்க்கிறேன். ஆளுல் முடியவில்லையே!

அதுதான் முடியவில்லையே! எங்காவது ஓடிவிடலாம் என்ருலும் இயலவில்லை. போர்க்களத்தில் முன்னணியில் நிற் பவர்களிலும் சமாதானப் பிரியர்கள் பலர் இருக்கத்தான் செய் கிருர்கள். ஆளுல் பிறருடைய தவறுதல் காரணமாகவோ, அல்லது தங்களுடைய பிழையினுலோ, களத்திற்கு வந்தபின் சேனைகளை விலக்கிக்கொண்டு ஓடுவது அவர்களுக்கு அழகாக

இராது. முன்யோசனையுடன் பிரம்மன் எல்லா உயிர்களுக்குமே பொருத்தமான வேலைகளைத் தந்து விடுவதில்லை. ஆனாலும் தனக்கென்று இட்ட பணியை மன உறுதி தளராமல் நிறைவேற்றுவது மனிதனின் கடமையாகிறது.

உங்களுக்குத் தேவைப்பட்டால் என்னிடம் வருகிறீர்கள். ஓரளவு மரியாதையையும் காட்டத் தவறுவதில்லை. தேவை தீர்ந்துவிட்டாலோ, இந்த ஏழையிடம் அவமதிப்பைக் காட்டி அசட்டை செய்கிறீர்கள். அதன்மூலம் உங்கள் சுயமரியாதையை நிலை நாட்டவும் முயற்சிப்பதுண்டு. இது உலகில் சாதாரணமாக நடப்பதுதான். இதனால்தான் நன்றிகெட்ட அரசனின் நிலையற்ற தன்மையை உணர்ந்த பரிவாரங்கள் அவனையே முற்றிலும் நம்பி வாழ்வதில்லை. ஆனால் இப்படிப் பிறர் கையை எதிர்பார்த்தாலோ, அல்லது பழிக்கு அஞ்சினாலோ வேலைகள் எப்படி நடக்கும்! பற்றுதல் இராமலே ஒரு காரியத்தைத் தொடங்கி விட்டால், அதை முடித்தாலுங்கூட மதிப்பிராது போய்விடும்.

இது கிடக்கிறது. இன்று என்னிடம் ஏதோ கேட்கவேண்டுமென்று வந்துவிட்டீர்கள். சொல்லுகிறேன்: ஆனால் இது உங்களுக்குப் பிடிக்கிறதா, இல்லையா என்பதுபற்றி நான் கவனிக்கத் தயாராக இல்லை.

இந்தக் கதை உலகிலேயே மிகவும் சிறியது. அதே சமயம் மிகப் புராதனமானதுங்கூட. உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் கதை மிகச் சிறியது. உங்கள் பொறுமையை அதிகமாகச் சோதனை செய்யாது என்றே நம்பலாம்.

ஓர் ஆற்றங்கரை. அங்குப் பெரிய காட்டகமும் ஓங்கி வளர்ந்து கிடந்தது. காட்டில் ஒரு மரங்கொத்தி; ஆற்றங்கரையில் ஒரு நீர்க்கோழி - இரண்டும் வசித்தன. உலகத்தில் பூச்சி புழுக்கள் கிடைத்தவரை இரண்டும் களிப்புடன் வயிறார உண்டு, திருப்தியுடன் பூமியின் புகழைப் பாடி வந்தன. நாளடைவில் உலகில், தெய்வச் செயலாகவோ என்னவோ, பூச்சி புழுக்களுக்குப் பஞ்சமாகிவிட்டது.

நீர்க்கோழி மரங்கொத்தியைப் பார்த்தது. ''அப்பனே! இந்தப் பூமியைச் செழிப்பும், பொலிவும், சாரமும் கொண்டதென்று புகழுகிறார்களே, எல்லாம் வெளிப் பார்வைக்குத்தான். என்னைக் கேட்டால், பூமி சத்தே இல்லாத இடம் என்றுதான் சொல்லுவேன்'' என்றது.

மரங்கொத்தியும், ''ஆமாம் தம்பி, இந்தக் காட்டை அழகும் உறுதியும் கொண்டது என்று எல்லாரும் பாடுகிறார்கள். ஆனால் எனக்கோ இதெல்லாம் உளுத்துப்போன வறண்ட் கட்டையென்றே தோன்றுகிறது'' என்று குறைப்பட்டுக்கொண்டது.

இரண்டும் கூடித் தாங்கள் முடிவு செய்ததுதான் சரி என்று காட்ட நினைத்தன. நீர்க்கோழி ஆற்றங்கரையில் சேற்றைக் குத்திக் கிளறி உலகம் வறண்டுவிட்டதைக் காட்ட முயன்றது. மரங்கொத்தியோ 'டொக்டொக்'கென்று மரங்களைக் கொத்திக் கொத்தி, சாரம் ஏதுமில்லை என்று காட்டத் தொடங்கியது.

இதில் ஒரு வேடிக்கையைப் பாருங்கள்: இந்த உழைப் பாளிகள் இரண்டுக்குமே கவி உள்ளம் கிடையாது. ஆகவே உலகத்தில் புதுத் தென்றலை வரவேற்றுக் குயில் பாடும் இன்னிசையையோ, காட்டகத்தில் தளிர்க்கும் இளம் இலை களையோ அவை கவனிக்கவில்லை. இரண்டும் பசியோடும், அதிருப் தியோடும் தாங்கள் மேற்கொண்ட காரியத்தை நிரூபித்துக் காட்டுவதிலேயே முழுமுயற்சியுடன் ஈடுபட்டிருந்தன.

கதை உங்களுக்குப் பிடிக்கவில்லையல்லவா? பிடிக்காதுதான். ஆனல் இந்தக் கதையிலுள்ள உயர்வான விஷயம் என்ன தெரி யுமோ? ஐந்தாறு பாராக்களிலேயே முடிந்துவிடுகிறது பாருங்கள்.

இது பழங்கதைதான் என்றும் உங்களுக்குத் தோன்றவில்லை: அதற்கும் ஒரு காரணம் உண்டு. இது பழசுதான், ஆனல் அதே சமயத்தில் என்றும் புதுமை மங்காத கருத்து இந்தக் கதையில் இருக்கிறது. நன்றிகெட்ட மரங்கொத்திப் பறவைகள் பல காலமாகவே உலகில் உறுதியும் சாகாத தன்மையும் கொண்ட பேருண்மையைக் கொத்துகின்றன. நீர்க்கோழியோ, சாரமும், மென்மையும் கொண்ட உலகைக் கொத்திக் கிளறுகிறது. இன்றைக்கும் இதற்கு ஒரு முடிவில்லை; அவற்றின் ஆத்திரம் இன்னும் தீரவில்லை.

சரிதான். ''இந்தக் கதையில் மகிழ்ச்சியோ. வேதனையோ எங்கு உள்ளது?'' என்று நீங்கள் கேட்கலாம். இதில் இரண்டுமே இருக்கின்றன. பூமி எவ்வளவு பெருந்தன்மை வாய்ந்தது! காட்டகம் எவ்வளவு பெருமைகொண்டது! இருந்தாலும் தங் களுக்குத் திருப்தியாக உணவு கிடைக்கவில்லை என்ற அற்ப சுபாவம் படைத்தவை சில, அவற்றைத் தாக்குகின்றன. இது கதையிலுள்ள வேதனைச் சுவை. இதற்கும் மாருகப் பல்லாயிரம் ஆண்டுகளாக உலகம் புதுமையாகவும் காட்டகம் பசுமையாகவும் இருக்கிறதே; அது இதிலுள்ள மகிழ்ச்சிச் சுவை. இதனல் மனம் வருந்துபவை பகையுணர்ச்சி புரையோடித் தவிக்கும் புள்ளினம் இரண்டே. பாவம், உலகில் இவற்றைக் கவனிப்பார் எவரும் இல்லை.

இந்தக் கதையின் உட்பொருள் என்ன என்று தெரிய வில்லையா? அப்படி ஒன்றும் பெரிய புதிர் ஏதும். இதில் இல்லை. வயதானல் புரியும். ஆனல் ஒன்றுமட்டும் நிச்சயம்: நீங்கள் கேட்கத் தகுதியான கதையல்ல இது.

பாலேடு

ஒரு சமயம் யக்ஞேசுவரர் நல்ல நிலையில்தான் இருந்தார். இப்போது பாவம், இடிந்துபோன பழைய மாடி வீட்டைப் பாம்பும் தவளையும் நடமாட விட்டுவிட்டு, ஒரு குடிசை வீட்டில் பகவத்கீதை பாராயணம் செய்துகொண்டு காலங்கடத்தி வந்தார்.

பதினேராண்டுகளுக்கு முன் அவருக்கு ஒரு மகள் பிறந்தாள். அவள் பிறந்த உடனேயே தாய் இறந்துவிட்டாள். அப்போது அவருடைய குடும்பத்தின் பாக்கிய தசை தேய்பிறையின் கடைசி இரவில் காணும் சந்திரனைப் போன்று மங்கிக் கிடந்தது. மிகவும் யோசித்து மகளுக்குக் கமலா என்று அருமையாகப் பெயரிட்டார். ‘எப்படியோ மகாலட்சுமியை நம் மகளின் வடிவத்திலே வீட்டிலே கொண்டு வைத்துவிட்டோம். இவளைக் கட்டிக் காப்போம்; இனியேனும் நல்ல காலம் வராதா?’ என்றுதான் அவர் எண்ணினர். ஆனல் திருமகள் அவருடைய வலையில் சிக்கவில்லை. ஒரு விஷயத்தில்மட்டும் அவள் கடைக்கண் நோக்கினள். கமலாவின் முகத்தில் அழகுச் செல்வத்தை அளவின்றி வழங்கி விட்டுப் போய்விட்டாள். அழகி என்ருல் சாமானியமான அழகி அல்ல; பேரழகி கமலா!

யக்ஞேசுவரருக்குத் தம் மகளை நல்ல இடமாகப் பார்த்துக் கொடுக்கவேண்டும் என்றுதான் ஆசை; அருகிலேயே அப்படி யாரேனும் ஒரு வரன் கிடைக்கமாட்டான என்றும் பார்த்துக் கொண்டேதான் இருந்தார். ஆனல், வேளை வரவேண்டாமா?

அவருடைய பெரியம்மாவோ தான் அருமையாகச் சீராட்டி வளர்த்த கமலாவைப் ‘பெரிய இடம் பார்த்துக் கொடுப்பது’ என்று கங்கணம் கட்டிக்கொண் டிருந்தாள். அவளிடம் ஓரளவுக்குச் சொத்து இருந்தது. சிறந்த இடமாகக் குதிர்ந்தால் கையிருப் பைக்கொண்டு கல்யாணத்தை நடத்திவிடுவது என்று திட்டம் போட்டு இருந்தாள். கடைசியில் அவளுடைய தொணதொணப்பு தாங்காமல் யக்ஞேசுவரர், இனிய வேத அத்தியயன ஒலி கேட்கும் அமைதியான கிராமக் குடிலைவிட்டு, வரன் தேட வெளியூருக்குக் கிளம்ப வேண்டியதாயிற்று. ராஜஷாஹி என்ற ஊரில் தம் உறவினரான ஒரு வக்கீலின் வீட்டில் போய்த் தங்கினர்.

அந்த வக்கீல், ஒரு பெரிய ஜமீன்தாரரின் வழக்குகளைக் கவனித்து வந்தார். ஜமீன்தாரரின் பெயர் கௌரசுந்தர சௌதுரி. சௌதுரிக்கு ஒரே மகன்; பெயர் விபூதிபூஷணன். அந்த வாலிபன் வக்கீலின் மேற்பார்வையில் ராஜஷாஹிக் கல்லூரியில் படித்து வந்தான். அவன் கமலாவை எப்போது வந்து பார்த்தானே, பிரம்மதேவனுக்குத்தான் தெரியும், அந்த ரகசியம்! எப்படியோ பையனுக்கு அவளை மணந்துகொள்ளவேண்டும் என்று பட்டு விட்டது.

பிரம்மதேவரின் சூழ்ச்சி யக்ஞேசுவரருக்கு எப்படித் தெரியும்? அந்த ஏழைப் பிராம்மணர், விபூதிபூஷணனைப்பற்றி எண்ணி வீணாக மண்டையைக் குழப்பிக்கொள்ளவில்லை. அவர் பாவம், பரமசாது; ஓரளவுதான் அவர் ஆசைப்பட முடியும்; துணிச்சலும் அவருக்குப் போதாது. விபூதியைப்போல் ஒரு வாலிபன் தமக்கு மாப்பிள்ளையாவான் என்று அவர் கற்பனையில்கூட எண்ணிப் பார்த்ததில்லை!

கடைசியில் வக்கீலின் முயற்சியால் சுமாரான ஒரு வரன் கிடைத்தான்; பையன் அப்படியொன்றும் கெட்டிக்காரனாக இரா விட்டாலும், கொஞ்சம் சொத்துக்காரன். எந்தப் பரீட்சையிலும் தேறத்தான் இல்லை; ஆனால், ஆண்டு ஒன்றுக்கு அரசாங்கத்திற்கு ரூபாய் மூவாயிரத்து இருநூற்று எழுபத்தைந்தைக் கிஸ்தியாகச் செலுத்தினான். அதற்குமேல் கேட்பானேன்!

ஒரு நாள் பெண்ணைப் பார்க்கப் பிள்ளை வீட்டார் வந்தனர். பெண் பிடித்துவிட்டாள். பால் கோவா, தேங்காய்த் துருவிப் போட்டுக் கிண்டிய சர்க்கரைப் பொங்கல், நாட்டோரில் தயாரான பூந்தி லட்டு எல்லாம் சாப்பிட்டுவிட்டு அவர்கள் கிளம்பிப் போனார்கள். அதற்குச் சற்று நேரத்திற்கெல்லாம் விபூதி அங்கே வந்தான். விஷயம் அவனுக்குத் தெரிந்தது. புது வரன் நிச்சயமாகிவிட்ட மகிழ்ச்சியில் யக்ஞேசுவரர் தம் உறவினருக்குப் பழக்கமான இந்த ஜமீன்தாரரின் மகனைத் தடபுடலாக வரவேற்று உபசரித்தார். அவனுக்கும் லட்டு அளிக்கவந்தார். ஆனால் அவன், ''எனக்குப் பசியே இல்லை; வயிறு மந்தமாய் இருக்கிறது'' என்று கூறிவிட்டான். ஒன்றும் சாப்பிடவில்லை; யாரோடும் சரியாய்ப் பேசவுமில்லை. சற்று நேரத்திற்கெல்லாம் கிளம்பி வெளியே போய்விட்டான்.

அன்று மாலை, வக்கீலுக்கு விபூதியிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது: ''யக்ஞேசுவரருடைய பெண் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறாள். அவளைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும் என்று ஆசையாய் இருக்கிறது.''— இதுதான் அதில் கண்ட விஷயம்.

இதைப் படித்ததும் வக்கீல், 'இதென்னடா, சங்கடம்! நான்தான் ஏதோ உறவுக்காரருடைய பெண்ணுக்குத் தம் பையனை ஏற்பாடு பண்ணிச் சூழ்ச்சி செய்துவிட்டதாகக் கௌரசுந்தரர் எண்ணித் தொலைக்கப் போகிருரே!' என்ற கவலையில் ஆழ்ந்தார்.

உடனே அவர் யக்ஞேசுவரரை எப்படியாவது அந்த இடத்தை விட்டு அனுப்பிவிட்டால் போதும் என்று முடிவு செய்தார்; முன் சொன்ன வரனுக்கும் கமலாவுக்கும் விரைவிலேயே விவாக முகூர்த்தம் வைக்கும்படி ஏற்பாடு செய்தார். பிறகு விபூதி பூஷணனை அழைத்து, "தம்பி, படிப்பிலே கவனம் செலுத்து; வேறு விஷயங்களில் மனசு அலை பாயவேண்டாம்'' என்று புத்தி சொன்னுர்.

விபூதிக்கு அவர்மேல் கோபங் கோபமாக வந்தது. அவனுடைய பிடிவாதம் இதனுல் முன்னைவிட நாலுமடங்காகி விட்டது. கமலாவை மணம் செய்துகொண்டே தீருவதென்று அந்த விஷயத்திலே மும்முரமாக ஈடுபட்டான்.

கிராமத்திலே கமலாவின் கலியாணத்திற்கான ஏற்பாடு களெல்லாம் நடந்து வந்தன. திடீரென்று ஒருநாள் விபூதி பூஷணன் அங்கே வந்து சேர்ந்தான். யக்ஞேசுவரருடைய குடிலில் நுழைந்து அவரை வணங்கி நின்ருன். அவர் பரபரப்புடன் எழுந்து, ''வா அப்பா, வா'' என்று அவனை வரவேற்ருர். ஆனுல் அவனை எங்கே அமரச் சொல்வது, எதைக் கொடுத்து உபசரிப்பது என்று புரியாமல் திண்டாடினுர். இந்தப் பட்டிக்காட்டில் போய் நாட்டோர் பூந்திலட்டு எங்கிருந்து கிடைக்கும்? சாப்பிடுகிற நேரமானதால் அவர், ''குளித்துவிட்டு வா அப்பா, சாப்பிடலாம்'' என்ருர்.

விபூதிபூஷணன் முற்றத்தில் குளிப்பதற்குமுன் கடு கெண்ணெயை உடம்பில் தேய்த்துக்கொண் டிருந்தான். வெள்ளி மலை போன்ற அவனது அழகிய உடற்கட்டைப் பார்த்த பெரியம்மா வைத்தகண் எடுக்காமல் மெய்ம்மறந்து நின்ருள். யக்ஞேசுவரரைத் தனிமையில் அழைத்து, ''இந்தப் பிள்ளைக்கு ஏன் நம் கமலாவைக் கொடுக்கக்கூடாது?'' என்று கேட்டாள்.

திகிலினுல் கண்கள் அகல விரிய அவர், ''அதெப்படி முடியும்?'' என்ருர்.

பெரியம்மா, ''ஏன் முடியாது? முயற்சி செய்தால் நடக்கிறது'' என்ருள். பிறகு அருகிலே மந்தைவெளியில் உள்ள ஆயர்பாடியிலிருந்து பாலேடும் பாலும் வாங்கிவந்து பலவித இனிப்புப் பண்டங்களைச் செய்யலானுள்.

குளித்துவிட்டுச் சாப்பிட்டதும் விபூதிபூஷணன் கூச்சத்தோடு தன் விருப்பத்தை யக்ஞேசுவரரிடம் தெரிவித்தான். அவருக்குத்

தலைகால் புரியவில்லை; ஒரே மகிழ்ச்சி. உடனே பெரியம்மாவிடம் ஓடிவந்து இதைத் தெரிவித்தார்.

அவள் அமைதியாகவே, ''சரி, நல்லதாய்ப் போச்சு!...... இருந்தாலும், சற்றே பொறுமையாக இருந்து காரியத்தைக் கவனி'' என்றாள். இது அவள் எதிர்பார்த்ததுதான். ராஜாத்தி மாதிரி இருக்கும்போது கமலாவுக்கு என்ன குறைச்சல்? ஆகவே, கமலாவைத் தேடிக்கொண்டு ஒரு பக்கம், காந்தார நாட்டு ராஜாவும் சரி, மற்றொரு பக்கம் சீனச் சக்கரவர்த்தியேதான் சரி இங்கே வந்திருந்தாலும் அவள் வியப்புற்றிருக்க மாட்டாள்.

யக்ஞேசுவரர் விபூதிபூஷணனின் கையைப் பற்றி மெதுவாக, ''இதோ பார், அப்பா! நீ பெரிய இடத்துப் பிள்ளை; நானோ மிக ஏழை. என்னால் முடிந்ததைச் செய்கிறேன்; அவ்வளவுதான். அதற்குமேல் என்ன சொல்வது?'' என்றார் கெஞ்சும் பாவனையில்.

விபூதிபூஷணன் கூச்சத்தால் தலைகுனிந்தவாறு, ''அது போதும்; உங்களுக்கு எந்த மாதிரி சிரமமும் வராதபடி நான் கவனித்துக்கொள்கிறேன்'' என்று உறுதி கொடுத்துவிட்டான். ஆனாலும் உள்ளுக்குள் அவனுக்கு இதை எப்படித்தான் தந்தையிடம் வெளியிடுவது என்று ஒரே கலக்கமாக இருந்தது.

கௌரசுந்தரர் பெரிய செல்வச்சீமான்தான். ஆனால் அவருக்குக் கல்வியறிவு சுன்னமாயிற்றே! பையனோ பரீட்சைகளில் தவறாமல் தேர்வு பெற்றுவந்தான். அவனிடத்தில் அவருக்குப் பெருமதிப்பு உண்டு. தாம் நடந்துகொள்ளும் விதம் ஒழுங்காக இராவிட்டால் தம்மைக் குறித்து அவன் என்ன நினைப்பானோ என்று அவருக்கு உண்மையில் திகிலே. உயிரினும் சிறந்த ஒரே மகன் அவன்; அவனுக்கு இழுக்கு வரும்படி தவறாகவோ, அசட்டுத்தனமாகவோ நடந்துகொள்ளக் கூடாதென எப்போதும் கண்ணும் கருத்துமாய் இருந்தார். ஆனால் இப்போது விபூதிபூஷணன் யாரோ எளிய பிராம்மணனுடைய மகளை மணந்துகொள்ளப் போவதாகச் சொல்லவே, அவருக்குப் பொல்லாத கோபம் மூண்டது. அன்று தான் முதன்முதலாக அவர் அவனைக் கடிந்து பேசினார். விபூதி தலை தாழ்த்தி உம்மென்று இருந்தான். சில கணத்திற்கெல்லாம் அவரே சற்றுத் தணிந்துபோய், ''ஏனடாப்பா, நான் வரதட்சிணைக்கு ஆசைப்பட்டா இந்தச் சம்பந்தம் வேண்டா மென்றேன்? ஒருகாலும் இல்லை. அப்படி நினைக்கவே நினைக்காதே! சம்பந்தியுடன் சொந்த மகனை விலைக்கு விற்க நான் ஏதோ பேரமாடுவதாகவும் எண்ணாதே! அவ்வளவு இழிமனம் படைத்தவன் அல்ல. பெரிய இடத்துச் சம்பந்தம் வேண்டுமென்றுதான் சொல்லுகிறேன்'' என்றார்.

விபூதிபூஷணன், ''அவர்களும் நல்ல வாழ்வினைப் பார்த்தவர்கள்தான்; மாசற்ற குலம். இப்போது சற்றுச்

சிரமதசை; பாவம்'' என்று யக்ஞேசுவரரைப்பற்றி எடுத்துக் கூறினன்.

கௌரசுந்தரர் நீண்டநேரம் சிந்தித்தபின் பிள்ளையின் மனம் நோவக் கூடாதென, ''சரி'' என்று திருமணத்துக்குத் தம் இணக்கத்தைத் தெரிவித்தார். ஆனல் உண்மையில் யக்ஞேசுவரர் மீது அவருக்குக் கோபமே.

இரு பக்கத்தாரும் ஒருவிதமாகப் பேசி நிச்சயம் செய்தார்கள். எல்லாம் ஒத்துப்போனலும், திருமணச்சடங்கு எங்கே வைத்துக்கொள்வதென்ற விஷயத்தில் இரு சாராரும் ஒரே முடிவுக்கு வந்தபாடில்லை. தம் ஒரே மகனின் கல்யாணமாயிற்றே; விமரிசையாக நடத்த வேண்டுமென்று கௌரசுந்தரருக்கு ஆசை. அந்தச் சிவதலா குக்கிராமத்திலா அதை நடத்துவது? 'இங்கே நகரில் சொந்த இல்லத்தில்தான் கல்யாணம் நடத்தவேண்டும்' என்று பிடிவாதம் பிடித்தார் கௌரசுந்தரர்.

இதைக் கேட்டதும் தாயற்ற கமலாவின் பாட்டி - யக்ஞேசுவரரின் பெரியம்மா - கண்கலங்கி நின்ருள். ''நாமும் ஒரு காலத்தில் நன்ருக வாழ்ந்தவர்களே; இன்று சற்றுச் சறுக்கிவிட்டோம் என்று எல்லா வழக்கத்தையும் கைவிடுவதா? மானத்தைவிட்டு பிள்ளைவீட்டிலா இதை நடத்துவது? நம் வீடு குடிசையாக இருந்தாலும் இங்கேதான் நடத்தவேண்டும்'' என்ருள்.

இதனல் மகா சாதுவான யக்ஞேசுவரரின் பாடுதான் திண்டாட்டமாகியது. கடைசியில் விபூதிபூஷணன் தந்தையிடம் வற்புறுத்திக் கூறவே பெண் வீட்டிலேயே மணச்சடங்கு நடத்துவதென முடிவாயிற்று.

கௌரசுந்தரருக்கும் அவருடைய உறவினருக்கும் இதனல் சம்பந்திமீது பின்னும் ஆத்திரம் மூண்டது. எல்லோரும் சேர்ந்து, ''அந்தத் திமிர்பிடித்த சம்பந்திப் பயலைப் பல்லைப் பிடித்துப் பார்த்துவிடுவோம். ஒரே பட்டாளமாக அங்கே திரண்டு போகவேண்டும்'' என்று தீர்மானித்தார்கள். விபூதியிடம் கௌரசுந்தரர் இதைப்பற்றிச் சொல்லவே இல்லை.

வைகாசி மாதத்தில் முகூர்த்தம் வைத்திருந்தார்கள். யக்ஞேசுவரர் தம்மிடம் கொஞ்ச நஞ்சமிருந்த பணத்தைக் கொண்டு எப்படியோ சமாளித்துக் கல்யாண ஏற்பாடுகளை செய்துமுடித்தார். மணப்பந்தல் எல்லாம் ஒழுங்காக ஜோடித்து வைத்தார். பாப்னவிலிருந்து புத்துருக்கு நெய், மைதா, சர்க்கரை, கட்டித்தயிர் யாவும் வரவழைத்தார். தாம் சேர்த்து வைத்திருந்த தொகையை நம்பிப் பெண் வீட்டிலேயே கலியாணம் நடத்த வேண்டுமென்று பெரியம்மா பிடிவாதம் பிடித்தாள் அல்லவா? அந்தப் பணமும் கிட்டத்தட்டக் கரைந்து விட்டது.

அப்போது யக்ஞேசுவரரின் துரதிர்ஷ்டம், விவாகத்துக்கு இரண்டு நாள் முன்பே கடும்புயல் தோன்றிப் பெருமழை கொட்டத் தொடங்கியது. இடையே சற்று ஓய்ந்தாலும் மீண்டும் முன்னைவிட இருமடங்காகக் கொட்டியது. அந்தப் பக்கத்தில் இப்படி ஒரு பாட்டம் மழை பெய்து பலவாண்டுகள் ஆகியிருக்கும். இதைப்போல ஒரு பெருமாரியை எவரும் எதிர் பார்க்கவில்லை.

கௌரசுந்தரர் முன்னேற்பாடாக இரண்டு யானைகளும் பல்லக்குகளும் கொண்டுவந்து ரெயிலடியில் நிறுத்தி இருந்தார். அண்டை அயல் ஊர்களிலிருந்து யக்ஞேசுவரரின் ஆட்கள் மாட்டு வண்டிகளை அழைத்துவரச் சென்றனர். இந்தச் சோனை மழையில் வண்டிக்காரர்கள் வர மறுத்தனர். அவர்களுடைய கால்களில் விழாத குறையாய் இரு மடங்கு வாடகை தருவதாகச் சொல்லி அவர்களை ஒப்புக்கொள்ளச் செய்தார் யக்ஞேசுவரர். பிள்ளை வீட்டாரில், மாட்டுவண்டியில் ஏறி வந்தவர்களுக்கு ஒரே எரிச்சல். அவர்கள் சீறிவிழுந்தார்கள்.

ஊர்ப்பாதைகளில் நீர் ஏறிக் கிடந்தது. யானைகளின் கால்கள் சேற்றில் புதைந்தன. உளையிலிருந்து வண்டிச் சக்கரத்தைத் தள்ள வேண்டி வந்தது. மழையோ விட்ட பாடாக இல்லை. பிள்ளைவீட்டார் மழையில் நனைந்தபடி துணியெல்லாம் சேறு படிய வந்தார்கள். விதி செய்த இந்தச் சதிக்காகப் பெண்ணின் தந்தைமீது பழி தீர்த்துக்கொள்வதென்று தீர்மானித்தனர். பின் என்ன? இப்படி மழை தங்களை அலங் கோலமாக்கியதற்கு அவர்தானே ஜவாபு சொல்ல வேண்டியவர்! பிள்ளைவீட்டார் மொத்தமாக யக்ஞேசுவரருடைய குடிலுக்குள் குழுமினர். எதிர்பார்த்ததற்குமேல் ஜனங்கள் திரண்டு வரவே, யக்ஞேசுவரர் பாடு திண்டாட்டமாகிவிட்டது. யாரை எங்கு இருக்கச் செய்வது என்று புரியாமல் அவர் தம் தலையிலே அடித் துக்கொண்டு, ''உங்களுக்கு ரொம்பச் சிரமம் தந்துவிட்டேன்; மன்னித்தருள வேண்டும்'' என்றார்.

கல்யாண பந்தலைச் சுற்றிலும் ஒரே குளம்போல் இருந்தது நீர்த்திரள். வைகாசி மாதத்தில் போயும் போயும் இப்படிப் பேய் மழை கொட்டுமென யாருமே கனவுகூடக் கண்டிருக்கமாட் டார்கள். ஆனால் அவ்வூரின் பெரிய குடிகள், சின்னக் குடிகள் எவருமே யக்ஞேசுவரருக்கு உதவி புரிய முன் வந்தனர். ஏற்கனவே, குறுகலான அந்தக் கொட்டகையில் இப்படிப் பலர் நிற்கக்கூட இடமில்லை. மழையின் ஓசை ஒரு பக்கம்; ஜனங்களின் ஆரவாரம் ஒரு பக்கம். இரண்டும் இணைந்து தேவாசுரர் பாற்கடலைக் கடைவது போன்ற இரைச்சலாகவே இருந்தது. கிராமத்திலுள்ள பணக்கார விருந்தினரை உபசரிக்க

முடியாதபடி அவர்களை ஒவ்வொருவராக வெளியேற்ற வேண்டியதாயிற்று.

பணமனைக்குள் பிள்ளை நுழைந்ததும் அவனைச் சேர்ந்தவர்கள், ''எங்களுக்கெல்லாம் ஒரே பசி; எங்கே சிற்றுண்டி?'' என்று கூவினார்கள். யக்ஞேசுவரருடைய முகம் வெளுத்துத் தோன்றியது. அவர் அவமானம் தாங்காமல் கழுத்தில் துணியைப்போட்டு இறுக்கியபடி, ''என்னால் முடிந்தமட்டும் ஏதோ கொஞ்சம் ஏற்பாடு செய்து வைத்திருந்தேன். எல்லாம் இந்தத் தண்ணீரில் அடித்துக்கொண்டு போய்விட்டது'' என்று குரல் தழுதழுக்கச் சொன்னார்.

பாப்னாவிலிருந்து வந்த சாமான் வண்டிகளிலே இருந்த சில பண்டங்களும், சமையலறையில் மழைநீரால் அடுப்பு அவிந்து போய்ப் பாழாகிய சில பொருள்களும் ஒன்றாகக் குழம்பிக் கிடந்தன. நினைத்தவுடனேயே வேண்டிய அளவுக்கு உணவுப் பொருளைச் சேர்க்கவும் முடியாது; அப்படிப்பட்ட கிராமம் சிவதலா.

கௌரசுந்தரருக்கோ யக்ஞேசுவரர் இப்படிச் சங்கடப் படுவதைக் காணக் கண் குளிர்ச்சியாகவே இருந்தது. ''இத்தனை பேரையும் இப்படி விட்டுவைக்க முடியுமா? சிற்றுண்டிக்கு ஏதாவது வழிசெய்யுங்கள், சம்பந்தி'' என்றார்.

பிள்ளை வீட்டார் சினந்து குழப்பம் விளைவிக்கலாயினர். ''நாங்கள் இதோ ரெயில் ஏறிவிடுகிறோம்; எங்கள் இடத்துக்குப் போய்ச் சேர்ந்தால் போதும்'' என்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

யக்ஞேசுவரர் கைகளைக் கூப்பித் தண்டனிட்டு, ''அப்படிப் பட்டினி இருக்க விடமாட்டேன். சிவதலா பாலேடென்றால் பிரசித்தம். வேண்டிய அளவுக்குப் பாலேடும் சர்க்கரையும் சேர்த்து வைத்திருக்கிறேன். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நான் படும் வேதனை அந்தப் பகவானுக்குத்தான் தெரியும்!'' என்று கண்கலங்கச் சொன்னார்.

அவர் படும் சிரமத்தைக் கண்ட அவ்வூர் ஆயர்கள், ''கவலைப் படாதீர்கள், சுவாமி! பாலேடும் சர்க்கரையும் எவ்வளவு தேவையானாலும் நாங்கள் சமாளிக்கிறோம்'' என்றனர். வெளியூரிலிருந்து விவாகத்தில் கலந்துகொள்ள வந்திருக்கும் பிள்ளை வீட்டு விருந்தினர் ரெயிலில் திரும்பிச் செல்வதென்றால் சிவதலா கிராமத்துக்கே அவமானம் அல்லவா? அதனால் அவ்வூர் ஆயர்கள் முன் எச்சரிக்கையாகவே வேண்டிய அளவு பாலேடு சேகரித்து வைத்திருந்தனர்.

பிள்ளையைச் சேர்ந்தவர்கள் தமக்குள் ஏதோ பேசிக்கொண்டு, ''நாங்கள் கேட்கிற அளவு பாலேடு கொண்டு வந்து தர முடியுமா?'' என்றனர்.

யக்ஞேசுவரருக்கு அப்போதுதான் வாயில் பல்லில் சற்று ஈரம் வந்தது; ''அப்படியே தருகிறேன்'' என்றார்.

''சரி, கொண்டு வாருங்கள்!'' என்று சொல்லிப் பிள்ளை வீட்டார் கீழே அமர்ந்தனர். கௌரசுந்தரர்மட்டும் அமர வில்லை. மௌனமாக ஒருபுறம் நின்றபடி என்ன நடக்கிறதென்று வேடிக்கை பார்க்கலானார்.

சாப்பாட்டு விடுதியைச் சுற்றி நீர் ததும்பிச் சேறும் சகதியு மாக இருந்தது. யக்ஞேசுவரர் ஒவ்வோர் இலையாகப் பாலேடு வைத்து ஒவ்வொருவருக்கும் பரிமாறிக்கொண்டே போனார். உடனுக்குடன் பிள்ளைவீட்டார் பாலேட்டைத் தோளுக்குமேல் பின்னால் சேற்றில் 'டப்' 'டப்' என விட்டெறிந்துகொண் டிருந் தனர்.

என்ன செய்வதென்றே தெரியாமல் யக்ஞேசுவரர் தவித் தார். அவர் கண்ணீர் விட்டார். திரும்பத் திரும்பத் தம் கைகளைக் கூப்பி, ''நான் நாயினும் கடையினேன்; பரம ஏழை; என்னை இப்படித் துன்புறுத்துவது தகுமா? இதைத் தாங்க எனக் குத் திராணி இல்லை'' என்று விண்ணப்பித்துக்கொண்டார்.

பிள்ளை வீட்டாரில் ஒருவன் இடி இடியென்று நகைத்து, ''பெண்ணுக்குத் தகப்பனாகப் பிறந்த குற்றம் எங்கே போச்சு ஐயா! அநுபவியும்!'' என்றான்.

யக்ஞேசுவரருடைய கிராமத்தைச் சேர்ந்த பெரியவர்கள் அவரைத்தான் திரும்பத் திரும்பக் கண்டித்தார்கள். ''உன் னுடைய தகுதிக்கு ஏற்ற இடமாகப் பார்த்துப் பெண் கொடுத் திருந்தால் இப்படியெல்லாம் அவமானம் நேர்ந்திருக்குமா?'' என்றனர்.

அப்போது வீட்டுக்குள் பெண்ணின் பாட்டி யக்ஞேசுவரரின் பெரியம்மா, அமங்கலமாக இருந்தும் கண்ணீரை அடக்க முடியாமல் அழலானாள். இதைப் பார்த்ததும் மணமகளின் விழியிலிருந்தும் நீர் வார்ந்தது. பெரியம்மா விபூதியிடம், ''அப்பனே, எங்கள்மீது தவறு; ஒப்புக்கொள்கிறோம். மன்னி யுங்கள்; முகூர்த்த நேரம் தப்பாமல் சுபகாரியம் நடந்தேறு வதைப் பார்!'' என்றாள்.

வெளியே பாலேட்டைப் பிள்ளைவீட்டார் அநியாயமாகப் பாழாக்குவதைப் பொறாமல் ஆயர்கள் ஆத்திரங்கொண்டனர். எங்கே பிள்ளைவீட்டாருக்கும் இவர்களுக்கும் சச்சரவு மூண்டு விடுமோவென்று யக்ஞேசுவரருக்கு ஒரே திகில். சும்மா இருக் குமாறு ஆயர்களை அவர் கேட்டுக்கொண்டார். அதே சமயம் சாப்பாட்டு விடுதியில் எதிர்பாராதபடி மணமகன் வந்து சேர்ந் தான். பிள்ளைவீட்டார், 'நம் பிள்ளையாண்டானுக்குக் கோபம் வந்துவிட்டதுபோலும்; அதனால்தான் உள்ளேயிருந்து வந்து

விட்டான். என்று நினைத்துக்கொண்டனர். அவர்களுக்கு உற்சாகம் மேலும் மூண்டது.

அப்போது விபூதி, தொண்டை அடைக்க, ''அப்பா! இதென்ன! நாமா இப்படி நடந்துகொள்வது?'' என்று சொல்லிப் பாலேடு வைத்திருந்த தட்டைக் கையில் எடுத்துக் கொண்டு அதிலிருந்து பாலேட்டைத் தானே எல்லோருக்கும் தந்தான். ஆயர்களைப் பார்த்து, ''நீங்கள் அவர்களுக்குப் பின்னால் நில்லுங்கள். அப்படிச் சேற்றில் எந்த இலையாவது பாலேட்டுடன் விழுந்தால் அதை உடனே யெடுத்து, அதைப் போட்டவர்களிடம் அப்படியே திருப்பவேண்டும்? தெரிந்ததா?'' என்றான்.

கௌரசுந்தரரின் முகத்தையே இரண்டொருவர் கவனித் தார்கள். எழுந்து போவதா, வேண்டாமா என்று விளங்காமல் அவர்கள் இப்படித் தயங்கினார்கள். அப்போது விபூதி, ''அப்பா, இராத்திரி வெகு நேரம் ஆகிறது. நீங்களும் சாப்பிட உட்காருங்கள்'' என்றான்.

கௌரசுந்தரர் தலை குனிந்தபடி கீழே அமர்ந்தார். அப்புறம் ஓர் இலை ஏன் சேற்றில் விழுகிறது? பாலேடு உரிய இடத் தில் போய்ச் சேர்ந்தது.

சொத்துக்குரியவன்

பிருந்தாவன குண்டுவுக்கு அடக்கமுடியாத கோபம் வந்தது. நேராக அவன் தந்தையிடம் வந்தான். ''நான் இப்போதே கிளம்புகிறேன்'' என்ருன்.

தகப்பஞர் யக்ஞநாத குண்டு சற்றும் அசைந்து கொடுக்க வில்லே. ''நன்றி கெட்ட பயலே! பெற்றெடுத்ததுமுதல் உனக்குச் சோறுபோட்டுத் துணி தந்து வளர்த்தேனே, அந்தக் கடனேத் தீர்த்து வைக்கிற வழியாகக் காணும். போடா போ. உன் வீருப்பெல்லாம் இங்கே செல்லாது'' என்ருர்.

யக்ஞநாதரின் வீட்டில் அப்படிச் சோற்றுக்கும் துணிக்கும் பஞ்சம் இல்லேதான். பண்டைக்காலத்தில் முனிவர்கள் ஊண் உடைக்காகச் சொற்பமே செலவு செய்து வாழ்க்கை நடத்திஞர்கள். ஊண் உடை விஷயத்தில் யக்ஞநாதர்கூட அந்த உயர்ந்த லட்சியத்தைக் கடைப்பிடித்தார். ஆனுல் அவரால் முற்றும் துறந்த முனிவர்களேப்போல் ஆகிவிட முடியவில்லே. நாகரிக சமுதாயம் அந்த இலக்கிற்குக் குறுக்கே நிற்பது ஓரளவு அதற்குக் காரணமெனலாம். இயற்கையின் விதிகளே முன்னிட்டு உடலேக் காத்துக்கொள்ள வேண்டிய தேவையும் வேறு இருந்தது.

இதையெல்லாம் அவர் மகன் திருமணம் ஆகுமட்டும் பொறுத்துக்கொண் டிருந்தான். மணமான பின்னர் இது விஷயமாக மகனுக்கும் தந்தைக்கும் வேறுபாடுகள் தோன்றலாயின. மகனுடைய லட்சியம் நாகரிகமான சமூகத்தின் பின் சென்றது. தந்தையின் உயர்ந்த கொள்கை அவனுக்குப் பிடிக்கவில்லே. காலப்போக்கில் மாறிவரும் உலகைப் பின்பற்றி நாளுக்கு நாள் அவனுடைய செலவுகளும் பெருகத் தொடங்கின.

மகனுக்கும் தந்தைக்கும் தினமும் இது விஷயமாகச் சச்சரவுகள் மூண்டன. பிருந்தாவனனுடைய மனேவி கடுமையான நோய் வாய்ப்பட்டபொழுது, வைத்தியர் விலே உயர்ந்த மருந்தொன்றைக் குறிப்பிட்டுச் சொன்ஞர். இதைக் கண்டதும், யக்ஞநாதர் வைத்தியருக்கு அநுபவம் போதாது என்று அவரை நிறுத்தி விட்டார். முதலில் பிருந்தாவனன் காலேப்பிடித்துக் கெஞ்சிஞன். பின்னர் மிரட்டி உருட்டிப் பார்த்தான். பயன் எதுவும் கிடைக்க

வில்லை. கடைசியில் மனைவி காலமாகிவிடவே, அவன் தகப்பனைப் பெண்கொலை செய்தவன் என்று திட்டினுன்.

''ஏனடா, மருந்து சாப்பிட்ட பின்னருங்கூட எத்தனை பேர் சாகவில்லை? விலை உயர்ந்த மருந்துகள் சாப்பிட்டால் சாகாமல் இருக்கலாம் என்ருல், ராஜா பாதுஷாக்கள் எல்லாரும் ஏனடா சாகிருர்கள்? உன் தாயார், பாட்டி எல்லாம் செத்தார்களே, அவர்களையெல்லாம்விடத் தடபுடலாகச் செலவு பண்ணிவிட்டுத் தான் உன் பெண்டாட்டி சாகவேண்டுமோ!'' என்ருர் தந்தை.

வேதனையால் குருட்டுத்தனமாக ஆத்திரம் எழும். ஆனுல் சற்று நிதானமாக யோசித்தால் இந்த வார்த்தைகள் அவனுக்கு ஓரளவு ஆறுதலையே அளித்திருக்கும். அவனுடைய தாயாரோ, பாட்டியோ சாகுமுன்னர் மருந்து சாப்பிட்டதே இல்லை. இந்தக் குடும்பத்தின் பழைய வழக்கம் இதுவே. ஆனுல், நாகரிகம் முற்றியதன் விளைவாகப் பழைய வழக்கப்படி மனிதர்கள் சாக விரும்புவதில்லை. வெள்ளைக்காரர்கள் வந்த புதிது. ஆனுல் அந்தக் காலத்தில் 'பழைய' மனிதர்கள் 'புது நாகரிக' மனிதர்களின் நடவடிக்கைகளைக் கண்டு வாயடைத்துப்போய் அதிகமாக ஹுக்கா குடிப்பதுடன் நின்ருர்கள்.

பிருந்தாவனன் 'புதுநாகரிக'க் கும்பலைச் சேர்ந்தவன். யக்ஞநாதர் 'பழைய காலத்தவர்'. ''நான் போகிறேன்'' என்ருன் பிள்ளை.

தகப்பனுர் எல்லாருடைய முன்னிலையிலும் தெளிவாகச் சொல்லிவிட்டார். ''நீ போகலாம். ஆனுல் உனக்கு ஒரு பைசா கொடுத்தால்கூடப் பசுவதை செய்த பாவம் என்னைச் சேரட்டும்.'' பிள்ளையோ ஒரு படி மேலாகச் சென்ருன்: ''ஒரு பைசா தகப்பனிடம் வாங்கினுல்கூடத் தாயைக் கொன்றதுபோல'' என்று நாலு பேர் எதிரே கூறினுன். தந்தையும் மகனும் பிரிந்துவிட்டனர்.

ஊரில் எத்தனையோ காலமாகச் சச்சரவே இராமல் இருந்தது. இப்படிச் சிறியதொரு புரட்சி மூளவே, ஊரார் அகமகிழ்ந்தார்கள். பிருந்தாவனனுக்குச் சொத்துக் கிடையாது என்று தீர்மானமாகிவிடவே, பிள்ளையின் பிரிவினுல் மூண்ட துயரைப் போக்க யாவரும் தம்மால் ஆனவரை முயன்றனர். 'வெறும் ஒரு பெண்டாட்டிக்காகத் தகப்பனைப் பகைத்துக்கொள்வதா?', 'காலம் கெட்டுப் போயிற்று' என்று எல்லோரும் ஒரு குரலாய் சொன்னுர்கள். 'ஒரு பெண்டாட்டி செத்தால் இன்னெரு பெண்டாட்டி கிடைப்பாள். தகப்பனுர் செத்துப் போனுல் இரண்டாவது தகப்பனுர் கிடைப்பாரா! மண்டையை உடைத்துக் கொண்டாலும் கிடைக்கமாட்டார்' என்று அவர்கள் எடுத்துக்காட்டியது சரிதான். ஆனுல் பிருந்தாவனனைப்போன்ற ஆள் இதைக் கேட்டால் அநுதாபம் கொள்ளாமல் ஓரளவு ஆறுதலடையலாம்.

பிருந்தாவனனுடைய பிரிவு தந்தைக்கு அவ்வளவாக வேதனையை உண்டாக்கவில்லை. மகன் சென்றதில் செலவு குறைந்தது ஒரு பக்கம் இருக்க, அவருக்கிருந்த ஒரு பெரிய பயமும் விலகியது. எங்கே தமக்கு விஷம் கொடுத்துக் கொன்றுவிடுவானே என்ற அச்சமே அவருக்கு எப்பொழுதும் இருந்தது. சாப்பிடும் துளி உணவிலும் விஷம் கலந்திருக்குமோ என்ற எண்ணமே அவரை அலைக்கும். மாட்டுப் பெண் இறந்த பிறகு அந்தக் கவலை ஓரளவு குறைந்தது. பிள்ளையும் பிரிந்துபோகவே முற்றும் நிம்மதியுடன் பெருமூச்சு விட்டார் அவர்.

உள்ளூற வேதனையும் அவருக்கு இருந்தது. யக்ஞநாதரின் நான்கு வயதுப் பேரன் கோகுலசந்திரனைப் பிருந்தாவனன் தன்னுடன் அழைத்துச் சென்றுவிட்டான். பேரனுடைய சோற்றுக்கும் துணிக்கும் செலவு அப்படி அதிகமாக ஆகிவிடவில்லை; அதனால் தாத்தாவுக்குப் பேரன்பால் தடையற்ற பாசம் இருந்தது. இருந்தாலும் பிருந்தாவனன் பிள்ளையையும் தன்னுடன் பிடிவாதமாக அழைத்துச் சென்றபோது கண நேரம் அவருடைய மனம் வரவு செலவுக் கணக்கைப் புரட்டிப் பார்த்தது. இரண்டு பேருமே போய்விட்டால் மாசம் செலவு எவ்வளவு குறையும்; வருஷத்துக்கு எத்தனை மிச்சமாகும்; அதை வட்டிக்கு விட்டால் எவ்வளவு கிடைக்கும் என்றெல்லாம் கணக்குப் போட்டது அவர் மனம்.

ஆனால், வீட்டில் பேரனுடைய தொந்தரை இராமல் வெறிச்சென்று ஆகிவிடவே, அவருக்கு அங்கு இருக்கவே பிடிக்காமல் போயிற்று. பூஜையின்போது தொந்தரை செய்ய ஒரு சிறு பிள்ளை இல்லையே! சாப்பிடும்போது பிடுங்கித் தின்ன ஒரு கிறுக்கன் இல்லையே! எழுதும்போது மசிப் புட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடிவிடும் ஒரு துஷ்டன் வேறு எவன் இருக்கிறான் அவருக்கு? நச்சரிப்பு எதுவுமே இல்லாமல், குளிப்பதும் சாப்பிடுவதும் அவருக்கு வெறுப்பை மூட்டின; உள்ளத்தை அலைக்கழித்தன. எவர்க்கும் மரணத்துக்குப் பின்னரே வேதனைச்சுழல் இராத அமைதி கிடைக்கக் கூடும். போர்வையில் பேரன் கிழித்த இடம், உட்காரும் ஜமுக்காளத்தில் அவன் கொட்டிய மசியின் கறை இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது அவர் மனம் நெக்காடும். கட்டிக்கொள்ளும் வேஷ்டியை இரண்டே வருஷத்துக்குள் உடுத்திக்கொள்ள முடியாதபடி செய்துவிட்டான் என்று அந்தத் தறிதலைப் பிள்ளையை அவர் எவ்வளவோ கடிந்துகொண்டார். இப்போதோ நூறு கந்தலாகப் படுக்கையின்மேல் கிடந்த அந்தத் துணி அவர் கண்களில் நீரை வரவழைத்துவிட்டது. அதைத் தைக்கவோ, வேறு வேலைக்கு உபயோகப்படுத்தவோ அவருக்குப் பிடிக்கவில்லை. அதை அக்கறையாக மடித்துப் பெட்டியினுள்

வைத்தார். கோகுலசந்திரன் திரும்பி வந்தால் வருஷத்துக்கு ஒரு துணியை அவன் கிழித்தால்கூடக் கடிந்துக்கொள்ளக் கூடாது என்றும் உறுதி செய்துகொண்டார்.

ஆனல் கோகுலன் வரவில்லையே! யக்ஞநாதருக்கோ முன்னை விட வயது விரைவாகக் கழிவதுபோல் தோன்றியது. வீடும் நாளுக்கு நாள் அவருக்கு வெறிச்சென்ருகியது.

அவரால் வீட்டில் அமைதியுடன் இருக்க முடியவில்லை. பகலில் பெரிய மனிதர்கள் சாப்பிட்டபின் பகல் உறக்கம் கொள்ளும் நேரத்தில் அவர் கையில் ஹுக்காவுடன் ஒவ்வொரு பேட்டை யாகத் திரிவார். அவர் இப்படித் திரியும்போது வழியில் விளை யாடிக்கொண் டிருக்கும் பிள்ளைகள் விளையாட்டை நிறுத்திவிட்டு, கைக்கெட்டாத தொலைவு ஓடிப்போய் அவருடைய கஞ்சத்தனம் பற்றி உள்ளூர்ப் புலவர்கள் புனைந்த பாடல்களை உரத்த குரலில் காது புளிக்கும்படி பாடுவார்கள். அவர் பேரைச் சொன்னல் சோறு கிடைக்காமல் போய்விடுமோ என்று எவரும் அவருடைய பெயரைச் சொல்வதில்லை. தங்கள் இஷ்டம்போல் எல்லோரும் அவருக்கு ஒரு புதுப் பெயரையே சூட்டியிருந்தனர். ஊர் முதிய வர்கள் 'யக்ஞ நாசன்' என்றனர். ஆனல், சிறுவர்கள் ஏன் அவரைக் 'கரப்பான் பூச்சி' என்று அழைத்தார்கள் என்ப தற்குக் காரணம் விளங்கவில்லை.

ஒரு நாள் யக்ஞநாதர் மாமரத்து நிழல் கவிந்த கிராமப் பாட்டையில் நடந்துகொண் டிருந்தபோது அறிமுகமிராத சிறுவன் ஒருத்தன் ஊர்ப் பிள்ளைகளுக்குத் தலைவனுகிப் புதுவித விஷமங்களைபற்றிச் சொல்லிக்கொண் டிருந்தான். மற்றச் சிறு வர்கள் அவனுடைய மனஉறுதி, கற்பனையின் திறமை இவற்றைக் கண்டு அவனுக்கு அடங்கி நடந்தனர்.

சிறுவர்கள் முன்னெல்லாம்போலக் கிழவரைக் கண்டு ஓட வில்லை. அவர் அருகில் சட்டென்று வந்து ஒரு துண்டை உதறி ஞர்கள். துண்டிலிருந்து ஓர் ஓணன் துள்ளி அவர்மேல் விழுந்து மரங்களை நோக்கி ஓடியது. எதிர்பாராத பயத்தினல் கிழவரின் உடம்பு சிலிர்த்தது. பிள்ளைகள் அதைக் கண்டு களிப்பு மேலீட் டால் ஆரவாரம் செய்தனர். இன்னும் சிறிது தொலைவு செல் வதற்குள்ளாகவே யக்ஞநாதரின் தோளின் மேலிருந்த துவாலை மறைந்தது. அதுவே புதுப் பையனுடைய தலைப்பாகையாக மாறிக் காட்சியளித்தது.

அறிமுகமே இராத இந்தப் பிள்ளை இப்படிப் புதுவிதமாக விஷ மங்கள் செய்வது யக்ஞநாதருக்கு மகிழ்ச்சியை ஊட்டியது. இது வரை எவருமே அவரிடம் இவ்வளவு நெருங்கிப் பழகியதில்லை. வெகு நேரம் கூப்பிட்டார். எவ்வளவோ கொஞ்சலாகப் பேசி அவர் அவனைத் தம் வசப்படுத்திக்கொண்டார்.

''உன் பெயரென்னப்பா?

''நிதாயி பால்.''

''உன் வீடு எங்கே?''

''சொல்லமாட்டேன் போ!''

''உங்கப்பா பேர்?''

''சொல்ல முடியாது.''

''ஏனடா சொல்ல மாட்டாய்?''

''நான்தான் வீட்டை விட்டு ஓடி வந்துவிட்டேனே!''

''ஏன்?''

''எங்கப்பா என்னைப் பள்ளிக்கூடம் போகச் சொன்னர். அதனல்தான் ஓடி வந்துவிட்டேன்.''

இந்த மாதிரி ஒரு பிள்ளையைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதே ஒரு குற்றம்; அவனுடைய அப்பனுக்கு ஒரு வேளை உலக வழக்குப் பற்றிய அறிவே இல்லையோ என்று யக்ஞநாதருக்குத் தோன்றியது.

''என் வீட்டுக்கு வந்து இருக்கிருயா?'' என்ருர் யக்ஞநாதர். சட்டென்று அவன் அவருடைய வீட்டுக்குப் போக இணக்கம் தெரிவித்தான். அதில் அவனுக்கு யாதொரு தயக்கமும் ஏற்பட வில்லை. பாட்டையோரத்து மர நிழலில் தங்குவதற்கு நாடோ டிக்குக் கூச்சம் எதற்கு? அதுமட்டுமா? சாப்பாடு, துணி மணி விஷயத்திலும் ஏதோ கொடுத்து வைத்தவன்போல் தன்னுடைய இஷ்டம் போலக் கட்டளைகள் பிறப்பித்தான். அச்சிறுவன் வீட்டு யஜமானருடன் இது விஷயமாகச் சண்டை போடவும் பின் வாங்கவில்லை. பெற்ற பிள்ளையை ஒதுக்கிவிட முடிந்தது; ஆனல், பிறத்தியார் மகனிடம் அவர் பணிந்து போக வேண்டியதாயிற்று!

யக்ஞநாதருடைய வீட்டில் நிதாயி பால் இப்படிச் செல்வ மாக வளருவது கண்டு ஊரார் வியப்படைந்தார்கள். கிழவர் அதிக நாட்கள் வாழமாட்டார்; எங்கிருந்தோ வந்த அநாதைப் பிள்ளைக்குச் சொத்துப் போய்ச் சேரப்போகிறது என்று அவர் களுக்குப் புரிந்தது. ஆகவே, அந்தச் சிறுவன்மேல் பொருமை கொண்டு அவனுக்குத் தீங்கு விளைவிக்க அவர்கள் முடிவு செய் தார்கள். ஆனல் கிழவரோ அவனைத் தம் உள்ளத்தினுள் ஒளித்து வைத்திருந்தார்.

நிதாயி அடிக்கடி 'ஓடிப்போய் விடுவேன்' என்று பயமுறுத்து வான். 'என் சொத்தெல்லாம் உனக்குத்தானடா' என்று யக்ஞநாதர் அவனுக்கு ஆசை காட்டுவார். பையன் வயதில் சிறியவன் என்ருலும் இந்த வார்த்தைகளின் முழு மதிப்பும் அவனுக்குப் புரிந்தது.

ஊரார் அவனுடைய தகப்பனைத் தேடலானர்கள். ''பாவம்! தாயார் தகப்பனர் எவ்வளவு கஷ்டப்படுவார்கள்! இந்தப்

பிள்ளைதான் எவ்வளவு கல் நெஞ்சக்காரன்!" என்று ஒரே குரலாக அவர்கள் சொல்லிக்கொண்டார்கள்; அவனைத் திட்டவும் செய்தார்கள். அவர்கள் குரலில் அநுதாபத்தைவிட ஆற்றாமையே அதிகமாகத் தலை தூக்கியது.

ஒரு நாள் எவனோ தாமோதர் பால் என்பவன், காணாமல் போன பிள்ளையைத் தேடிக்கொண்டு இந்த ஊர்ப் பக்கம் வந்திருக்கும் செய்தியைக் கிழவர் காதில் ஒருத்தர் போட்டார். நிதாயி உள்ளூறப் பரபரப்பை அடைந்தான். வரப்போகும் சொத்து சுகத்தையெல்லாம் மறந்து அவன் ஓடிப் போகத் தீர்மானித்தான்.

''நீ ஏனடா கவலைப்படுகிறாய்! யாருமே கண்டு பிடிக்க முடியாதபடி நான் உன்னை மறைத்துவைக்கிறேன். ஊரார்கூட உன்னைத் தேடிப் பிடிக்க முடியாது'' என்று யக்ஞநாதர் அவனுக்கு ஆறுதல் கூறினார்.

''எங்கே ஒளித்து வைப்பாய்? காட்டு, பார்க்கலாம்'' என்று பையன் ஆவலுடன் கேட்டான்.

''இப்போது காட்டினால் அது தெரிந்துவிடுமே! ராத்திரி வரட்டும், காட்டுகிறேன்'' என்றார் கிழவர்.

பையனுக்கு இந்த ரகசியத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற ஆவல் அதிகரித்தது. தகப்பனார் தேடிவிட்டு ஏமாந்து போய் ஊருக்குப் போனதும், ஊர்ப்பிள்ளைகளுடன் பந்தயம் கட்டிக்கொண்டு கண்ணாமூச்சி ஆடலாமல்லவா! யாராலுமே கண்டுபிடிக்க முடியாது. அப்பாவும் ஊரெல்லாம் தேடி ஏமாந்து போவார் அல்லவா? இதைவிட வேறு என்ன வேடிக்கை வேண்டும்?

பகலில் பையனை வீட்டில் அடைத்து வைத்துவிட்டு யக்ஞநாதர் வெளியே சென்றார். அவர் திரும்பி வந்ததும் நிதாயி அவரைக் கேள்விகள் போட்டுத் துளைத்தான். விளக்கு வைத்ததுமே, அவன், ''வா; போகலாம்'' என்றான்.

''இன்னும் இருட்டவில்லையேடா.''

''இருட்டியாச்சே, தாத்தா வா.''

''ஊரார் இன்னும் தூங்கவில்லையேடா.''

சற்று நேரம் பொறுத்து, நிதாயி, ''இப்போ தூங்கியிருப்பா, வா'' என்றான்.

இரவு நேரம் ஏறிக்கொண்டே வந்தது. நிதாயி எவ்வளவோ தடுத்தும் தூக்கம் அவனுடைய கண்களைச் சுழற்றியது. இரவு இரண்டாம் யாமத்தில் யக்ஞநாதர், தூங்கி வழியும் நிதாயியின் கையைப் பிடித்துக்கொண்டு ஓசையடங்கித் துயிலும் ஊரின் தெரு வழியே நடந்தார். எங்கோ இரண்டொரு நாய்களின் குரைப்புத் தவிர வேறு சத்தமே இல்லை. ஆந்தைகள் மனிதர் நடமாடும் ஒலி கேட்டுச் சிறகடித்துக்கொண்டு தோப்பினுள்

பறந்து மறைந்தன. நிதாயி அச்சத்துடன் கிழவர் கையை அழுத்திப் பிடித்துக்கொண்டான்.

வயல்களினூடே நடந்து அவர்கள் காட்டினுள் ஒரு சிதைந்த கோயிலை அடைந்தனர். ''இங்கேயா இருக்கு, தாத்தா!'' என்று ஏமாற்றத்துடன் கேட்டான் நிதாயி. அவன் நினைத்தது போல் இல்லையே! இதற்கா இவ்வளவு ரகசியம்? தகப்பனை விட்டு ஓடி வந்த பிறகு இப்படி எத்தனையோ பாழடைந்த கோயில்களில் அவன் இரவு நேரங்களைக் கழித்ததுண்டு; கண்ணுமூச்சி ஆட நல்ல இடம்தான்; ஆனால் இங்கு மறைந்துகொண்டால் தேடிப் பிடிப்பதும் அப்படிக் கஷ்டமான காரியமில்லையே!

யக்ஞநாதர் கோயிலினுள்ளே ஒரு பாறையை அகற்றினர். அதன் கீழே ஓர் அறையில் விளக்கு எரிவதை நிதாயி கண்டான். அவனுக்கு ஆவல், வியப்பு, அச்சம் யாவும் ஒருங்கே மூண்டன. ஓர் ஏணியின்மூலம் யக்ஞநாதர் கீழே இறங்கினர். நிதாயியும் அவரைப் பின்தொடர்ந்து திகிலுடன் இறங்கினன்.

கீழே அறையின் நான்கு புறங்களிலும் பித்தளைப் பாத்திரங் களின் நடுவே ஒரு மணை. எதிரே குங்குமம், சந்தனம், மாலை போன்ற பூஜைப்பொருள்கள் இருந்தன. ஆவலை அடக்கிக் கொள்ள அவன் ஒரு பித்தளைக் கடாரத்தைப் பார்த்தான். அதன் உள்ளே பொன், வெள்ளி நாணயங்கள் இருந்தன.

''நிதாயி, என் சொத்து முழுவதும் உனக்குத் தருவதாகச் சொன்னேன், இல்லையா ! என்னிடம் அதிகமாக இல்லை ; இதோ இந்தத் தவலைகளில் இருப்பதுதான். இன்றைக்கே இதை உன் னிடம் கொடுத்துவிடுகிறேன்'' என்றார் கிழவர்.

''முழுவதுமா ! உனக்கு ஒரு ரூபாய்கூட வேண்டாமா ?'' என்று துள்ளினன் நிதாயி.

''நான் அப்படி எடுத்துக்கொண்டால் என் கையில் குஷ்ட ரோகம் அல்லவா வரும்? ஆனால் ஒரு விஷயம்: ஊரைவிட்டுப் போன என் பேரன் கோகுலசந்திரனே, அவனுடைய வம்சத்தில் வந்தவர்களோ வந்து கேட்டால் இந்தப் பணத்தையெல்லாம் அவர்களிடம் எண்ணிக் கொடுத்து விடவேண்டும், தெரியுமா?''

யக்ஞநாதருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று எண்ணிய நிதாயி, ''சரி'' என்று ஒப்புக்கொண்டான்.

''சரி, இதில் உட்கார்.''

''ஏன் ?''

''உனக்குப் பூஜை செய்யப் போகிறேன்.''

''எதற்கு ?''

''இதுதான் வழக்கம்.''

பையன் மணையில் உட்கார்ந்தான். கிழவர் அவனுடைய நெற்றியில் சந்தன குங்குமப் பொட்டு வைத்து, கழுத்தில்

மாலையை அணிவித்தார். எதிரே உட்கார்ந்து ஏதோ மந்திரம் முணுமுணுக்கத் தொடங்கினுர்.

தான் தெய்வம்போல் உட்கார்ந்து மந்திரங்களைக் கேட்பது நிதாயிக்குப் பயத்தை மூட்டியது. ''தாத்தா'' என்று அவன் கூப்பிட்டான். கிழவர் பதில் சொல்லாமல் மந்திர உச்சாடனம் செய்தார். கடைசியில், ஒவ்வொரு தவலையாகச் சிரமப்பட்டு இழுத்து வந்து பையனுடைய முன்னிலையில் வைத்து நிவேதனம் செய்தார்; ஒவ்வொரு முறையும் பையனிடம், ''யுதிஷ்டிர குண்டுவின் பிள்ளை கதாதர் குண்டுவின் மகன் பிராணகிருஷ்ண குண்டு; அவன் பிள்ளை பரமானந்த குண்டு; அவனுக்குப்பின் யக்ஞநாத குண்டு; அவனுடைய பிள்ளை பிருந்தாவனன்; அவன் மகன் கோகுலசந்திரனே அல்லது அவனுடைய வாரிசோ யாராவது வந்து கேட்டால் இதையெல்லாம் எண்ணிக் கொடுத்து விடவேண்டும்'' என்ற வாக்குறுதியும் அவனிடமிருந்து வாங்கிக் கொண்டார். இப்படிப் பலதடவை சொல்லவே பையன் மருண்டு போய் நின்றுன். நாக்குக் குழறத்தொடங்கியது. பூஜை முடிந்த போது, விளக்கின் புகை, அவர்களுடைய மூச்சு இரண்டும் சேர்ந்து அறையெங்கும் கப்பிக் கிடந்தன. பையனுக்கு நெஞ்சு உலர்ந்துவிட்டது. கைகால்கள் தளர்ச்சியுற்றன. மூச்சுத் திணறியது. விளக்கு மெல்ல மங்கி அணைந்துவிட்டது. இருளில், கிழவர் ஏணியில் ஏறி மேலே செல்வதைப் பையன் உணர்ந்துகொண்டான். ''எங்கே தாத்தா போகிறுய்?'' என்று அவன் பயந்துபோய் கேட்டான்.

''நான் போகிறேனடா. நீ இங்கேயே இரு. இங்கே யாரும் உன்னைத் தேடிவர முடியாது. ஆனுல், மறந்துவிடாதே! யக்ஞநாதனின் பேரன், பிருந்தாவனனுடைய பிள்ளை கோகுலசந்திரன்'' என்றவாறு மேலே ஏறிய கிழவர் ஏணியை மேலே இழுத்துக்கொண்டார். மூச்சடைக்கச் சிறுவன், ''தாத்தா, நான் எங்கப்பாவிடமே போய்விடுகிறேன்'' என்று அலறுவது கேட்டது.

கிழவர் பாறையை எடுத்து அந்தத் துவாரத்தை அடைத்தார். மறுபடியும், 'அப்பா' என்று அச் சிறுவன் திணறும் குரலில் அழைப்பது கேட்டது. பிறகு கீழே விழும் ஓசை; அதன் பின்னர் யாதொரு சத்தமும் வரவில்லை.

யக்ஞநாதர் இவ்வாறு தம் சொத்துக்களைப் பத்திரம் செய்த பின்னர் பாறையின்மேல் மண்ணைப் பரப்பிவிட்டார். இடிந்த கோயிலின் செங்கற்களை அதற்கும் மேல் குவித்தார். செடிகளைப் பிடுங்கி அதன் மேல் மூடினுர்; காட்டுச் செடிகளை நட்டு வைத்தார். இரவு கழியும் தறுவாயிலும் அவரால் அங்கிருந்து நகரவே முடியவில்லை. சற்றைக்கொருதரம் தரையில் காதை வைத்துக் கேட்டார். எங்கோ தொலைவிலிருந்து, பூமியின்

அடிப்பகுதியிலிருந்து அழுகுரல் கேட்பது போலவே இருந்தது. இருளுடன் கலந்து ஒலிக்கிறதோ அந்த ஓலம்? எல்லோரும் விழித்து எழுந்து தரையில் காதை வைத்துக் கேட்கிறார்களோ அந்த உருக்கமான குரலை?

கிழவர் பரபரப்புடன் மேலும் மண்ணை அதன்மேல் குவிக்க லானார். நிலமகளின் வாயை மூடிவிட முயன்றார். ''அப்பா'' என்று ஒரு குரல் கூப்பிடுவது போலவே தோன்றியது.

''மூடு வாயை! எல்லாருக்கும் கேட்கப் போகிறது'' என்று கிழவர் தரையை ஓங்கி அடிக்கலானார்.

''அப்பா!'' - மீண்டும் அந்தக் குரல். உதயமாகி வெயில் ஏறத் தொடங்கியது. கிழவர் பேயறைந்தவர் போல் வெளியே வயல் களின் நடுவே வந்துகொண்டிருந்தார்.

''அப்பா'' - அங்கு யாரோ அழைத்தார்கள். யக்ஞநாதர் திடுக்கிட்டுத் திரும்பினார். அவருடைய மகன் பிருந்தாவனன் தான் அப்படிக் கூப்பிட்டவன்.

''அப்பா, என் பிள்ளை உன் வீட்டில் ஒளிந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவனைக் கொடு'' என்றான் அவன்.

யக்ஞநாதரின் முகம் வெளுத்துவிட்டது. மகனுடைய முகத்தை உற்று நோக்கினார்; ''உன் பிள்ளையா?'' என்றார்.

''ஆமாம்; கோகுலன்தான். இப்போது அவன் பேர் நிதாயி பால். இப்போது என் பேர் தாமோதரன். போன இடமெல்லாம் உன் புகழ்தான். எனக்கு அவமானம் தாங்காமல் பேரை மாற்றிக் கொண்டேன். இராவிட்டால் என் பேரைக்கூட அவர்கள் சொல்ல மாட்டார்களே!''

கிழவர் பத்து விரல்களையும் தலைக்குமேலே வானைநோக்கி எதையோ தேடுவது போலத் தடவினார்; காற்றைப் பிடிக்க முயற்சி செய்தாரோ, என்னவோ! பின்னர்ச் சட்டென்று கீழே தரையில் விழுந்தார்.

பிரக்ஞை வந்ததும் யக்ஞநாதர் மகனைக் கோயிலினுள் அழைத்துச் சென்று, ''அழுகுரல் கேட்கிறதா?'' என்றார்.

''இல்லையே!'' என்றான் மகன்.

''காதை வைத்துக் கூர்ந்து கேள்... அப்பா என்று யாரோ அழவில்லை?''

''இல்லையே!'' என்று பிருந்தாவனன் சொன்னதும் யக்ஞ நாதர் நிம்மதி அடைந்தார்.

அதுமுதல் கிழவர் எதிர்ப்பட்டவரையெல்லாம், ''அழுகுரல் கேட்கிறதா?'' என்று கேட்கலானார். ''சித்தப்பிரமையோ இவருக்கு!'' என்று எல்லோரும் சிரிப்பார்கள்.

கடைசியில் நான்கு ஆண்டுகள் கழித்துக் கிழவரின் மரணம் குறுகி வந்தது. கண் இருளடைந்து சுவாசம் வாங்கும்தறுவாயில்

சன்னிவேசத்தில் கிழவர் எழுந்து உட்கார்ந்தார். இரண்டு கைகளாலும் நாற்புறமும் தடவியபடி, ''நிதாயி! என் ஏணியை யாரடா தூக்கிக்கொண்டு விட்டார்கள்?'' என்று அலறினர்.

காற்று, வெளிச்சம் இராத அந்தக் குகையிலிருந்து வெளியேற ஏணி கிடைக்காமல் தொப்பென்று மீண்டும் அவர் படுக்கையில் விழுந்தார். வாழ்வின் கண்ணாமூச்சி ஆட்டத்தில் எவராலுமே கண்டுபிடிக்க முடியாத இடத்திற்குச் சென்று மறைந்துவிட்டார் யக்ஞநாதர்!

கழுவாய்

பொன்னுலகிற்கும் மண்ணுலகிற்குமிடையே தெளிவுபடாத ஓர் இடம் உள்ளது. அங்குத் திரிசங்கு மன்னன் அந்தரத்தில் தொடங்கிக்கொண் டிருக்கிறன். மனக்கோட்டை கட்டுவதற்கு அது ஒரு வாகான இடமுங்கூட. வெற்றிடம் சூழ்ந்த அவ் விந்தை நாடு, 'இப்படியும் நேரிடலாம்' என்ற நம்பிக்கைமீது நிற்ப தாகும். பெருஞ் செயல்கள் புரிந்து அமரநிலை எய்தியவர் போற்றற் குரியவர்; தமக்குள்ள சிறு ஆற்றலைக் கொண்டு உலகத்தவரிடையே சாதாரணமாகப் பழகி, அன்றுடம் கடமைகளை முடிப்பவர், இவர் களும் போற்றற்குரியரே. ஆனால், ஊழ்வினையின் தவற்றினல் இவ்விரு நிலைகளுக்கிடையே சிக்கிய பேருக்கு உய்ய வழி ஏதுமில்லை. அவர்கள், உலகில் மற்றவரைப்போல் ஏதாவது செய்து காலம் கடத்தலாம்; ஆனல் இக் காரணத்தாலேயே நிரந்தரமான தொரு சாதனை அவர்களால் ஆகும் என்பது நடக்காத காரியம்.

நம்முடைய அநாதபந்து அந்த நடுவாந்தர நிலையில் தடு மாறும், விதியின் கேலிக்கூத்துக்குப் பாத்திரமான இளைஞன். அவன் மனம் வைத்தால் எந்த விஷயத்தையும் வெற்றியுடன் முடிப்பானென்று எல்லோரும் நம்பினர். ஆனல் அவன் ஒரு நாளும் மனம் வைத்து எந்தக் காரியத்தையும் சாதிக்கவே இல்லை. இருப் பினும், அவன்பால் எல்லோரும் வைத்திருந்த நம்பிக்கை சிறிதும் அசையவில்லை. அவன் பரீட்சையில் முதலாவதாகத் தேறுவா னென்று எல்லோரும் சொன்னர்கள்; ஆனல் அவன் பரீட் சைக்கே உட்காரவில்லை. ஒரு வேலை கிடைத்து அதில் அவன் அமர்ந்துவிட்டால் மடமடவென்று உயர்ந்த பதவிக்கு வந்து விடுவானெனக் கணக்குப் போட்டனர். ஆனல் அவன் எந்த வேலையிலும் அமரவில்லையே! சாதாரண மனிதரென்றல் அவனுக்கு அசட்டை. காரணம், அவர்கள் உலகத்தில் இறைபடும் பேர் வழிகள்தானே? அசாதாரணமான பேர்களிடம் அவனுக்குத் துளி கூட மதிப்புக் கிடையாது. காரணம், மனம் வைத்தால் அவர் களைவிட அவன் அசாதாரணமான ஆளாக முடியும்.

அநாதபந்துவின் புகழ், பெயர், சுகவாழ்வு, நற்பாக்கியம் யாவும் காலம், இடம் இவற்றிற்கு அப்பாற்பட்டவை; அசம்பா விதமான நிலையில் உள்ளவை. ஆனல் கடவுள் இரு விஷயங்களில்

மட்டும் அவனுக்குக் கணிசமானதை அளித்திருந்தார். பணக்காரரான மாமனாரும், நற்பண்புடைய மனைவியாளும் அவனுக்கு வாய்த்திருந்தனர். மனைவியின் பெயர், விந்தியவாஸினி.

அநாதபந்துவுக்குப் பிடிக்கவில்லை, அவளுடைய பெயர். அவளுக்கிருந்த அழகும், குணமும், தனக்கேற்றவையென அவன் நினைக்கவில்லை. ஆனால் விந்தியவாஸினிக்கோ, இப்பேர்ப்பட்ட கணவன் தனக்குக் கிடைத்தானே என்ற பெருமையே எல்லை மீறிச் சென்றது. மற்றப் பெண்களுக்கு வாய்த்த கணவன்மாரை விட, தன் கொழுநனே மிகச் சிறந்தவனென்பதில் அவள் சிறிதும் சந்தேகம் கொள்ளவில்லை.

கணவனைப்பற்றிய இப் பெருமை எங்கே குறைந்து போகுமோ என்று விந்தியவாஸினி எப்போதும் திகில் பட்டுக்கொண்டே இருப்பாள். உள்ளத்திலே உயர்ந்த பதிபக்தியின் மலையுச்சியில் தன் தெய்வமான கணவனுக்குக் கோயில் எழுப்பி, மதிகெட்ட இவ் வுலகத்தவர் கண்ணுக்குப் படும்படி நிறுத்த வேண்டுமென்ற அவாவினால், பதிசேவைக்குத் தன்னை முழுவதும் அர்ப்பணம் செய்துகொண்டாள். ஆனால் ஜடமான இவ் வுலகில் பக்தியின் வாயிலாகப் பர்த்தாவை உயர்ந்த சிகரத்தில் தூக்கி வைத்தால் மட்டும் போதுமா? அநாதபந்துவை ஒரு சாதாரணப் பயலென எடை போடுவோரும் இவ் வுலகில் இருக்கின்றனர் அல்லவா? இதனால் விந்தியவாஸினி பட்ட வேதனைக்கு அளவேயில்லை.

அநாதபந்து கல்லூரியில் படிக்கும் சமயம், மாமனாரின் வீட்டிலேயே இருந்தான். பரீட்சை நாட்கள் வந்தன; ஆனால் பரீட்சையில் எழுதவில்லை. அதற்கு மறு ஆண்டே படிப்பையும் ஏறக் கட்டி விட்டான்.

நாலுபேர் எதிரே இப்படி ஒரு விஷயம் நிகழவே விந்தி மிகவும் குன்றிப் போனாள். பள்ளியறையில் இரவில் அநாதபந்துவை விளித்து, அவள் மெதுவாகவே, ''ஏன்னா! பரீட்சையை முடித்துவிடுங்களேன்?'' என்றாள். அநாதபந்து அலட்சியச் சிரிப்புடன், ''பரீட்சையில் தேறிவிட்டால்மட்டும் என்ன சாதித்து விடமுடியும்? பார், கேதாரன்கூடப் பரீட்சைக்கு உட்கார்ந்து தேறிவிட்டான்'' என்றான். விந்தியவாஸினி சற்று ஆறுதல் அடைந்தாள். இந்தக் காலத்தில் பரீட்சைக்கு மாடு, கழுதை யெல்லாங்கூட உட்கார்ந்து அதில் தேறி விடுகின்றன; இது போன்ற பரீட்சையில் தேறுவதனால், அநாதபந்துவின் உண்மை யோக்கியதை பன்மடங்காகப் போவதில்லை.

அண்டை வீட்டுக்காரியான கமலா - விந்தியின் இளவயதுத் தோழி - ஒரு சந்தோஷ சமாசாரம் கொண்டுவந்தாள். அவளுடைய தம்பி ரமேஷுக்கு இந்தத் தரம் பரீட்சையில் தேர்ந்து, உபகாரச் சம்பளங்கூட கிடைத்ததாம். 'கமலா இப்படி

மகிழ்ச்சி கொள்வது மகிழ்ச்சியேயன்று; தன் கணவனைச் சுட்டியே மறைமுகமாக ஏளனம் புரிகிருள்' எனக் காரணமின்றி நினைக்கலானுள் விந்தி. தோழியுடன் உல்லாசமாக உரையாடாமல், வலுச் சண்டைக்கு வழிசெய்து, ''பெரிய விஷயந்தான் போ! இந்த எம்.ஏ. பரீட்சை ஒரு பரீட்சையா என்ன? சீமையில் பி.ஏ. வகுப்பிற்குக் கீழே பரீட்சை எதுவும் இல்லையே? தெரியுமா உனக்கு?'' என்று அவள் வாயை அடக்கிவிட்டாள். இச் செய்தி யாவும், அவள் கணவனிடமிருந்து திரட்டிக்கொண்டதெனக் கூறுவது மிகையாகும்.

நல்ல செய்தி கொண்டுவந்தபோது திடுமெனத் தன் உயிர்ப் பாங்கி முகம் கடுத்துச் சொன்னது கமலாவுக்குச் சற்று வியப்பை எழுப்பியது. ஆனுல் அவளும் பெண்ணினமானதால் கணத்தில் விந்தியவாஸினியின் மனப்போக்கைப் புரிந்துகொண்டாள். தன் தம்பியை அவ்வளவு இழிவாக விந்தி கருதியதால், கமலாவின் நாவிலும் தீவிர நச்சுச் சுரந்தது. ''அடியம்மா, நாங்களெல்லாம் சீமைக்குப் போனவர்களா என்ன, துரையை மணந்து துரைசானி யாகிவிடவில்லை... எங்களுக்கு என்ன தெரியும், சீமையில் நடப்பது? மடச்சிகள் நாங்கள். இதுமட்டும் தெரியும்: வங்காளியாகப் பிறந்த பையன் கல்லூரியில் சேர்ந்து எம்.ஏ. பரீட்சைக்கு உட்காரத்தானே வேண்டும்?... ஆனுல் அப்படி யாரோ ஒரு சிலருக்குத்தான் தேறும் வாய்ப்புக் கிடைக்கிறது'' என்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல், சிநேக பாவமாகவே தன் வயிற்றெரிச்சலைத் தீர்த்துக்கொண்டு கமலா எழுந்து சென்ருள். சண்டையை மேலும் அதிகமாக்க விரும்பாமல் வாய் பொத்தி இப் பேச்சை வாங்கிக்கொண்டதும் விந்தி தன் அறைக்குள் சென்று அழத் தொடங்கினுள்.

சில நாட்களுக்கெல்லாம், ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அவர்களுக்குத் தூர உறவினர்களான பணக்காரக் குடும்பத்தினர் ஊரிலிருந்து கல்கத்தாவுக்கு விந்தியவாஸினியின் பிறந்தகத்தில் தங்குவதற்காக வந்தனர். அதன் நிமித்தம், அவளுடைய தந்தையான ராஜ்குமார் பாபுவின் வீட்டில் தடபுடலான ஏற்பாடுகள் நடக்கலாயின. மாப்பிள்ளை அநாதபந்து, உபயோகிக்கும் வாசல்புறத்துப் பெரிய அறையைப் புதிதாக வந்தவர்கள் இருப்பதற்காக ஒழித்துவிட நேர்ந்தது. மாமனுர் தம் அறையிலேயே சில நாட்கள் வரை இருக்குமாறு மாப்பிள்ளையைக் கேட்டுக்கொண்டார்.

இதனுல் அநாதபந்துவிற்கு மானம் பொத்துக்கொண்டு வந்தது. முதலில் மனைவியை அணுகி ஒரு பாட்டம் அவள் தகப்பனைத் தூற்றி அவளை அழவைத்து மாமனுர்மீதுள்ள தன் ஆத்திரத்தைத் தணித்துக்கொண்டான். அதன்பின், உண்ணு

விரதம் போன்ற வழிகளைக் கடைப்பிடித்துத் தன்னுடைய கோபத்தை வெளிப்படுத்தினான். இதனால் விந்திக்கு மிகவும் தலை யிறக்கமாகவே இருந்தது. அவளுக்கு இயல்பாகவே காலத்தை அநுசரித்துப் போகும் பொறுமை உணர்வு உண்டு. இப்படிக் கணவன் நடந்துகொள்வது அவளுக்குப் பின்னும் மானம் சிந்திவிடும்போல் ஆயிற்று. அவன் கால்களில் விழுந்து கெஞ்சி அவனுடைய கோபத்தை ஒருவாறு தணிக்க முயன்றாள்.

விந்தி அப்படி யொன்றும் உலகமே அறியாதவளல்ல; இதற்காகத் தன் பெற்றோர்மீது அவள் குற்றஞ் சாட்டவில்லை. இது சாதாரண விஷயம்; எங்கேயும் உள்ளதுதான். ஆனால், தன் கணவன் மாமனார் வீட்டில் இருப்பதால் அவனுக்குரிய மரியாதையை அவன் பெறாமல் இருப்பது அவள் நெஞ்சுள் உறுத்தாமல் போகவில்லை.

அன்றுமுதல் ஒவ்வொரு நாளும் கணவனிடம் விந்தி, ''இந்த இடத்தில் நான் இருக்கமாட்டேன்; என்னை உங்களிடத்துக்கே அழைத்துச் செல்லுங்கள்'' என்று தொணதொணக்க ஆரம்பித்து விட்டாள்.

அநாதபந்துவிடம் தற்பெருமை நிரம்ப இருந்தது. ஆனால் பொறுமை யுணர்வுமட்டும் இல்லை. வறுமை தாண்டவமாடும் தன் சொந்த வீட்டிற்குப் போக அவன் விரும்பவில்லை. ''எதற்கு, விந்தி?'' என்று அவன் தடுத்தபோது, அவள் உறுதியுடன், ''நீங்கள் வராதுபோனால் போங்கள், நான் போகிறேன் தனியாக'' என்றாள்.

அநாதபந்து உள்ளூற வெறுப்புற்றவனாய், தன் மனைவியைக் கல்கத்தாவை விட்டுத் தொலைவிலுள்ள தன் நாட்டுப்புறக் குடிசை வீட்டிற்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தான். புறப்படுமுன் ராஜகுமார் பாபுவும் அவருடைய இல்லாளும், அவர்களை இன்னும் சில நாட்கள் இருந்துவிட்டுப் போகுமாறு எவ்வளவோ வேண்டிக் கொண்டனர். ஆனால் மகள், தாழ்ந்த தலையும் தொங்கிய முகமுமாக, ''அது நடக்காது இனி'' என்று மௌனமொழிமூலம் தெரிவித்துவிட்டாள்.

அவள் இப்படிப் பிடிவாதமாக இருப்பதைக் கவனித்துப் பெற்றோர்க்கு ஐயம் தோன்றியது, அவள் மனம் நோவ ஏதாவது செய்துவிட்டோமோ என்று. ராஜகுமார் பாபு வேதனை தோய்ந்த குரலில், ''அம்மா, நான் ஏதாவது தப்பித் தவறி உன் மனம் நோவும்படியாகக் காரியம் செய்துவிட்டேனா?'' என்றார்.

விந்தியவாஸினி தந்தையின் முகத்தையே இரக்கம் கனிய நோக்கி, ''அப்படியொன்றுமில்லை, அப்பா; உன்னிடம் இத்தனை நாட்கள் நாங்கள் சுகமாகவே இருந்தோம்!'' என்றதும் அவளுக்கு

அழுகை வெடித்து வந்தது. ஆனால், அவள் முன்வைத்த காலைப் பின்வைக்கவில்லை.

அன்னையும் பிதாவும் பெருமூச்செறிந்து, 'ஆதரவெல்லாம் தந்து, எவ்வளவு சுகத்தில் வைத்தபோதிலும் ஒருத்தனுக்குக் கட்டிக்கொடுத்த பிறகு வயிற்றிற் பிறந்த பெண் வேறாகி விடுகிறாள்' என்று நினைந்து கலுழ்ந்தனர்.

கடைசியில் கண்ணீர்ப் பெருக்கிடையே விடைபெற்ற விந்தி, இதுவரை அன்பின் சூழ்நிலையில் தான் வளர்ந்து பெரியவளான பிறந்தகத்தையும், ஆருயிர்த் தோழியரையும் துறந்து புக்ககம் போகப் பல்லக்கில் அமர்ந்தாள்.

கல்கத்தாவின் பணக்காரர் வீட்டிற்கும், பட்டிக்காட்டு ஓலைக் குடிசைக்கும் இடையே ஏராள வித்தியாசம் இருந்தது. ஆனால் ஒரு நாளேனும் விந்தியவாஸினி மனத்தாலோ செயலாலோ தன் சூழ்நிலையில் வெறுப்பைக் காட்டியதே இல்லை. இன்முகமாகவே, உள்ளக் களிப்புடனே தன் மாமியாருக்குத் துணையாக வீட்டு வேலைகளைச் செய்வாள். சம்பந்திகளின் வறுமை நிலையை உன்னி, விந்தியின் தந்தை அவளுக்குத் துணையாக இருக்க ஒரு பணிப் பெண்ணையும் அனுப்பியிருந்தார். விந்தி தன் கணவனின் அகத்தை அடைந்ததுமே அப் பணிப்பெண்ணைத் திருப்பியனுப்பி விட்டாள். புக்ககத்தின் தரித்திர நிலையைப் பார்த்து, தன்னுடன் வந்த அந்தப் பணிப்பெண் ஏதாவது இகழ்வாக நினைத்து விடுவாளோ என்ற சங்கையினால் இவ்வாறு செய்தாள்.

மாமியார் விந்தியின்மீது பரிவு மேலீட்டால், கடினமான வேலை எதனையும் அவளுக்கு இடுவதில்லை. ஆனால், விந்தி சற்றும் சளைக்காது மாமியாருக்கு உறுதுணையாக நின்று வீட்டு அலுவல் களை நடத்தி, அவளுடைய அன்பையும் பெற்றாள். ஊர்ப் பெண் களும் அவளுடைய சிறந்த பண்புகளை மெச்சினர்.

ஆனால் இதன் விளைவு மகிழ்ச்சியைத் தருவதாக இல்லை. காரணம், உலக நியதி 'நீதிநெறி விளக்கம்' போன்ற இலக்கியங் களில் வரும் அறவுரைகளுக்கு ஒத்துப்போகவில்லை. ஆட்டிவிட்டு எள்ளி நகைக்கும் சாத்தான் இதற்கிடையில் புகுந்து எல்லா அறநெறிச் சாரங்களையும் குழப்பிக் குட்டையாக்கிவிட்டான். நல்ல காரியம் செய்யப்போய் அதன் விளைவு நன்மையாக இருப்பதில்லை; எதனாலோ ஒரு விபரீதம் ஏற்பட்டுவிடுகிறது.

அநாதபந்துவுக்கு, சிறுவர்களான இரு தம்பியரும், பெரியவனான ஓர் அண்ணனும் இருந்தனர். பெரியவன் எங்கோ மேற்கில் வேலை பார்த்து, ஐம்பது ரூபாய் ஊதியம் பெறுகிறான். அதை வைத்துக்கொண்டு ஒருவாறு குடித்தனத்தை ஓட்டி வந்தான். இரு சிறு தம்பிமாரும் படிக்கவும் உதவி செய்து வந்தான்.

ஆனால் சொல்ல வேண்டியதே யில்லை, இந்த ஐம்பது ரூபாயில் இக் காலத்தில் குடும்பம் நடத்துவது அவ்வளவு எளிதன்று. அண்ணனின் மனைவி சியாமாசங்கரிக்குமட்டும் தலை நெட்டுத்தான். அவள் கணவன் ஒரு வருட காலமாக வேலை பார்க்கிறான்; வீட்டில் அவள் உழைக்க வேண்டுமென்று தலையெழுத்தா? அவள் எந்த வேலையையும் செய்வதில்லை; ஓய்வு எடுத்துக்கொண்டு நிம்மதியாக இருந்தாள்.

விந்தியவாஸினி புக்ககம் வந்து அடக்கம் ஒடுக்கமாக மாமியாருடன் கட்டிக் கலந்து வேலை செய்வதை நோக்கி, சியாமாசங்கரியின் குறுகிய உள்ளம் பொச்சரிப்பால் துடித்தது. ஒரு வேளை பெரிய நாட்டுப்பெண், நாலு பேர் பார்த்து மெச்சுவதற்கே பணக்காரக் குடும்பத்தில் பிறந்த இவள் இட்ட வீட்டு வேலைகளைச் செய்து தன்னை அவமானத்திற்கு உட்படுத்து கிறாள் என நினைத்திருக்கலாம். காரணம் எதுவாயினும் மாதம் ஐம்பது ரூபாய் சம்பளம் பெறும் ஒருவனுடைய மனைவிக்கு இந்தச் செல்வக் குடிமகளைச் சற்றும் பிடிக்கவில்லை. அவள் இப்படி வளைந்து கொடுப்பது மண்டைத் திமிரென்றே முடிவு கட்டினாள் சியாமாசங்கரி.

இந்தப் பக்கம், அநாதபந்து தன் கிராமத்தில் ஒரு நூல்நிலையம் நிறுவினான். பத்துப் பதினைந்து பள்ளி மாணவர்களைக் கொண்ட ஒரு சபை கூட்டி அவர்களுக்குத் தலைவனாகி ஊர்ச் செய்திகளை யனுப்பும் பத்திரிகை நிருபனாகிவிட்டான். ஆனால் குடும்பத்தின் வறுமையைப் போக்க இதனால் ஒரு காலணாக்கூட வருமானம் கிடைக்கவில்லை. செய்திகளைத் திரட்டி அனுப்பத் தபால் செலவு தான் அதிகமாயிற்று.

ஏதாவது ஒரு வேலையில் அமரச் சொல்லி விந்தி நாள் தவறாது கணவனை நச்சரித்து வந்தாள். அவன் காது கொடுத்தால்தானே? அவளைச் சமாதானப்படுத்த, ''இதோ பார், வேலையா இல்லை எனக்கு? இந்த ஆங்கிலேய அரசாங்கம், உதவாக்கரையான தம் இனத்தவருக்கே உத்தியோக வாய்ப்பை அளிக்கின்றது. மேதை களான எத்தனை வங்காளிகள் இதனால் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள் தெரியுமா?'' என்பான்.

சியாமாசங்கரி, தன் மைத்துனன், ஓரகத்தி இவர்களைச் சாக்கிட்டு எப்போதும் ஏதாவது குற்றம் குறை சொல்லாது இருக்கவே மாட்டாள். தன்னுடைய ஏழைமையைப்பற்றிப் பெருமையாகவே அவள், ''நாங்களோ ஏழை...பெரிய இடத்துப் பெண்ணோ பெரிய இடத்து மாப்பிள்ளையோ எப்படி இந்தப் பிச்சைக் குடுவையில் சுகம் காணமுடியும்? ஹாய்யாக அங்கேயே இருந்தால் பருப்பும் சாதத்திற்கும் குறைவே இல்லை. ஏன் இங்குக்

கஷ்டப்பட வேண்டுமோ?'' என்பாள். மாமியாருக்கு இந்தப் பெரிய மாட்டுப் பெண் என்றால் அச்சம். அதனால், பலவீனக் கட்சியின் சார்பாகப் பேச அவளுக்குத் துணிவில்லை. நடு மாட்டுபெண் (விந்தி), ஐம்பது ரூபாய்ச் சம்பளக்காரன் போடும் சோற்றுடன், அவன் மனைவி பரிமாறும் காரச் சொற்களையும் ஏற்று அவற்றை ஜீரணித்து வந்தாள்.

இதற்குள் அண்ணன் சில நாட்களுக்கு ஓய்வு எடுத்துக் கொள்ள ஊருக்கு வந்தான். வந்த நாள் தொடங்கி, அவன் கருத்தாழமான சுவை மிளிரும் மனைவியின் சொற்பொழிவுகளைக் கேட்க வேண்டியதாயிற்று. அவனுடைய இன்துயிலுக்கு இதனால் ஊறு ஏற்படவே, ஒருநாள் அண்ணன், அநாதபந்துவை அழைத்து, இதமாகவே, ''அநாத், நீ ஏதாவது வேலை தேடிக்கொள்ளேன்; என் ஒருத்தனால்மட்டும் இந்தக் குடித்தனத்தை எப்படியடா நடத்த முடியும்?'' என்று சொன்னான்.

அநாதபந்து காலில் மிதிபட்ட பாம்பெனச் சீறி, ''என்னவோ, இரண்டு வேளை உன் ஊசைச் சோற்றைத் தின்கிறேனே, அதற்காக என்னை இப்படிக் குத்திக் காட்டுகிறாயா?'' என்றான். அக் கணமே மனைவியை இட்டுக்கொண்டு மாமனார் வீட்டிற்குப் புறப்பட முடிவு செய்துவிட்டான். ஆனால் அவனுடைய மனைவி இதற்குத் துளியேனும் இடம் தரவில்லை. 'அண்ணன் இடும் சோற்றையும், அண்ணி விடும் சொல்லம்பையும் ஏற்றாலும், சொந்தக் குடும்பத்தில் இளையவனுக்கு ஒரு கௌரவமும் உண்டு; ஆனால் மாமனார் நிழலை அண்டுவது ஒரு மாப்பிள்ளைக்கு இழுக்கைத் தரும் விஷயம்' என்பது அவளுடைய தீர்ப்பாகும். புக்ககத்தில், தலைகுனிய இட்ட வேலை எதுவானாலும், மனஞ் சலிக்காமல் செய்துவிட்டு, மீண்டும் பிறந்தகம் சென்று பழைய உரிமையுடன் தலைதூக்கி நடமாட முடியுமா?

அச் சமயம், ஊரில் ஆரம்பப் பள்ளியில் மூன்றாவது வகுப்பிற்கு உபாத்தியாயர். தேவைப்பட்டது. அநாதபந்துவின் தமையனும், விந்தியும் அவனை அவ் வேலையில் அமரச் சொல்லி வற்புறுத்தினர். இதமாகச் சொன்னது விபரீதமாயிற்று. தன் அண்ணன், கட்டின மனைவி இருவருமாகப் போயும் போயும் தன்னை இந்த அற்ப வேலைக்குத்தான் தகுதியுள்ளவனென்று நினைத்துவிட்டார்களே என்று அவன் அடக்கொணா ரோஷத்திற்குள்ளானான். முன்பு இருந்ததைவிட உலகத்தின்மீது, எந்த வேலையின்மீதும் அவனுக்கு பன்மடங்கான வெறுப்பே மூண்டது.

அப்போது மீண்டும் அண்ணன், அவன் கையைப் பற்றி எவ்வளவோ சொல்லிச் சமாதானப்படுத்தினான். 'என்ன நல்லது சொன்னாலும் இவன் கேட்கமாட்டான்; ஏதோ

வீட்டோடு இருக்கிருனே அதுவே, நல்லகாலம்' என்று எல்லோரும் நினைத்தனர்.

ஒய்வு நாள் முடிந்ததும் தமையன் வேலையில் சேரக் கிளம்பிப் போனுன். சியாமாசங்கரி ஆத்திரம் பொத்துக்கொள்ள முகத்தைத் தோண்டி மாதிரி ஆக்கிக் கொண்டு பெரிய சுதர்சன சக்கரத்தை எழுப்பிவிட்டாள். அநாதபந்து விந்தியை அணுகி, "இந்தக் காலத்தில் சீமைக்குச் சென்று திரும்பினுல்தான் நல்ல உத்தியோகம் கிடைக்க வழி ஏற்படும். என்ன... உன் அப்பாவிடம் எந்தச் சாக்குச் சொல்லியாவது பணத்துக்கு வழி செய்யப் பாரேன்!" என்ருன். கணவன் சீமைக்குச் செல்ல வேண்டுமென்ற பேச்சைக் கேட்டதுமே விந்தியவாஸினிக்கு இடிவிழுந்தாற்போலாகியது. தந்தையிடம் சென்று இப் பெருந்தொகையை எப்படிக் கேட்பதென்றே அவளுக்கு விளங்கவில்லை. அதைப்பற்றி நினைக்கும் போது அவள் மனத்துள் புழுங்கிப் போனுள்.

மாமஞரிடம் தானே சென்று பணம் கேட்கவோ, அநாதபந்துவுக்குப் பிகு அதிகமாக இருந்தது. தகப்பனிடம் சென்று பெண் எந்த வழியில் கேட்ட தொகையைக் கொண்டுவருவாள்? இதைப் பற்றியெல்லாம் அநாதன் யோசனை பண்ணவே இல்லை. ஆனுல் இதுகுறித்து அவன் மனைவியுடன் பிணங்கி, அவளை அழப்படுத்தி விட்டான்.

இப்படிச் சின்னுள் குடும்பத்தில் இல்லாமையும், மனத்தாங்கலுமாய் இருந்தன.

கடைசியில் சரத்காலம் பூஜை விழா நெருங்கிவிட்டது. மகளையும், மருகனையும் இந்த விழாவில் கலந்துகொள்ள மாமனர் ராஜகுமார் பாபு, ஊருக்கு வண்டியும் ஆளும் அனுப்பி வைத்து அழைத்தார். ஓர் ஆண்டுக்குப் பிறகு மகள் கணவனுடன் மீண்டும் அவள் பிறந்தகத்தில் கால் எடுத்து வைத்தாள். முன்னைவிட அவனுக்கு அதிக மரியாதையும் உபசரணையும் செய்தார் மாமஞர். விந்தியும் வெகு நாட்களுக்குப் பிறகு, மீண்டும் தன் இஷ்டம் போல் முட்டாக்கு முசுக்கிராமல், பெற்ரோரின் ஆதரவின் நிழலையடைந்து பூஜைவிழாவின் உவகை அலையில் மிதக்கலானுள்.

அன்று ஷஷ்டி. மறுநாள் ஸப்தமி பூஜை தொடங்குகிறது. குதூகலத்திற்கும் பரபரப்பிற்கும் ஒரு முடிவில்லை. தூரத்தும் நெருக்கத்துமான உறவோர், உற்ருர் இவர்கள் நிரம்பி, கடல் போன்ற அம்மாளிகை கொந்தளிப்புடன் விளங்கியது.

அன்றிரவு மிகவும் களைத்துப்போய் விந்தி படுக்கச் சென்ருள். முன்பு அவள் படுக்கும் அறை அல்ல அது. அம்மா தன்னுடைய பெரிய அறையைப் பலவிதமாக அலங்கரித்து மாப்பிள்ளைக்கென்றே ஒதுக்கியிருந்தாள். அநாதன் எப்போது படுக்க

வந்தானே அது விந்திக்குத் தெரியாது. அச் சமயம் அவள் ஆழ்ந்து தூங்கிக்கொண் டிருந்தாள்.

விடியற்காலையிலே இருள் பிரிவதன் முன்னரே மங்கள வாத்தியம் முழங்கத் தொடங்கியது. ஆனால் அயர்ந்து தூங்கும் விந்தி விழித்துக்கொள்ளவில்லை. கமல், புவன் என்ற விந்தியின் இரு தோழியரும் அவள் பள்ளியறைக்கு வெளியே கதவில் காது வைத்து உள்ளே தம்பதிகள் பேசுவதைக் கேட்க ஆவலாக நின்றனர். பிறகு ஏதோ பரிகாசமாகச் சிரித்தனர். அப்போது விந்தி தூக்கி வாரிப் போட்டுக்கொண்டு எழுந்தாள். அவளுடைய கணவன் எப்போது வெளியே சென்றானே அதை அவள் அறியாள். அவள் வெட்கத்தினால் கண்களைப் பிசைந்துகொண்டு எழுந்து பார்க்கையில், தலைப்புறமாக இருந்த இரும்புப் பெட்டி திறந்து கிடந்தது. அதில்தான் அப்பாவின் பணப்பேழையும் இருக்கும். ஆனால் அதைக் காணவில்லை.

அவளுக்குச் சட்டென நினைவு வந்தது; முன்னாள் மாலை நேரம் அம்மாவின் கொத்துச்சாவி காணாமற்போனதால் வீடெங்கும் ஒரே அமர்க்களப்பட்டது. அந்தச் சாவியைத்தான் யாரோ களவாடி இந்தக் காரியம் செய்தனர். இதில் சந்தேகமே இல்லை. திடுமென அவளுக்குத் திக்கென்றது. அந்தக் கள்ளன் வந்து தன் கணவனை என்னவாவது செய்துவிட்டானே யென்றும், அவளுடைய இதயம் அடித்துக்கொண்டது. கட்டிலின் கீழே குனிந்து தேடினாள். அதன் கால்கள் ஒன்றின் மறைவில் காணாமற்போன சாவிக் கொத்தும் ஒரு கடிதமும் தென்பட்டன.

கடிதம், அவளுடைய கணவன் கையெழுத்தில் இருந்தது; பிரித்துப் படித்தாள். ஒரு நண்பனின் உதவியால் அவளுடைய கணவன் சீமைக்குச் செல்வதற்கான பணம் திரட்டியது; அங்கே தங்கும் காலத்தில் வாழ்க்கை நடத்துவதற்குப் போதிய பணம் இராததால் இரவு, மாமனாரின் பணத்தைக் களவாடி வராந்தா பக்கத்திலுள்ள மரப்படிகள் வழியாக உள் தோட்டத்துமூலம் வீட்டு வெளிமதில் ஏறிக் குதித்து ஓடியது; அன்று விடிகாலையில் கிளம்பும் கப்பலில் புறப்பட்டுப் போவது - யாவும் வெளிச்ச மாயின.

கடிதத்தைப் படித்தவுடன் விந்தியின் உடலில் இரத்தம் உறைந்தே போயிற்று. தலை கிறுகிறுத்துக் கட்டிலின் பிடி தாங்க, சாய்ந்துவிட்டாள். அவள் உடலின் ஒவ்வொரு நரம்புப் புரையிலும், காதினுள்ளும் 'சிவ் சிவ்' என்று நமனின் சிள்வண்டின் ரீங்காரம் தொனித்தது. இதையெல்லாம் மழுங்கச் செய்து அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து, காது புளித்துப் போகும்படி பல சானாயிகளின் (நாகசுரம்) குழம்பிய இசை ஒலிக்கத் தொடங்கியது. தெரு, வீடு வாசல் முற்றமெங்கும் ஆனந்தக் களிப்பு.

சரத் காலத்து விழாவின் சிரிப்பும் குதூகலமுமான மாலை வெயில் விந்தியின் பள்ளியறையுள்ளும் புகுந்தது. இத்தனை நேரம், ஊரே விழாக்கோலம் பூண்டிருக்கையில் அவளுடைய அறை உட்புறம் தாழிடப்பட் டிருப்பதைக் கவனித்து, புவனும் கமலும் (தோழியர்) உரக்கச் சிரித்து, ஏளனம் செய்து அறைக் கதவைத் 'தும்தும்' என்று தட்டினர். இப்படிச் செய்தும் குரல் வராது போகவே, பயந்து போய்ச் சற்று ஓங்கியே 'விந்தீ! விந்தீ' என்று அலறினர்.

விந்தியவாஸினி, உடைந்து போன குரலில், ''வரேனடீ; நீங்கள் போங்கள்'' என்றாள்.

அவளுடைய தோழியர் விந்தியின் தாயிடம் சென்று மகளுக்கு என்னவோ நேர்ந்துள்ளதென அறிவிக்கவே, அவள் ஓடி வந்து, ''அம்மா விந்து... என்னம்மா உனக்கு...? ஏன் உள்ளேயே கதவை மூடிக்கொண் டிருக்கே?'' என்று கேட்டாள்.

விம்மி வரும் அழுகையை அடக்கி விந்தி, ''அப்பாவையும் அழைத்துக்கொண்டு இங்கே வா, அம்மா'' என்றாள். அன்னை மிகவும் திகிலடைந்து, அக் கணமே ராஜகுமார் பாபுவைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு அறையண்டை வந்தாள். விந்தி கதவைத் திறந்து அவர்களை உள்ளே அழைத்துக்கொண்டு தாழிட்டுவிட்டாள்.

அப்போது விந்தி தரையில் படியத் தந்தையின் காலில் விழுந்து கெட்டியாகப் பற்றி மார்பு வெடித்து விடுவதுபோல் விம்மி விம்மி அழுதுகொண்டே, ''அப்பா! என்னை மன்னித்து விடுங்கள்; நான் உங்கள் இரும்புப் பெட்டியிலிருந்து பணத்தைத் திருடிவிட்டேன், அப்பா'' என்றாள்.

தாயும் தந்தையும் அப்படியே படுக்கைமீது சாய்ந்தனர். தன் கணவனைச் சீமைக்கு அனுப்பத் தானே, இவ்விழிவான காரியத்தைச் செய்ததாக விந்தி கூறினாள். அவளுடைய தந்தை கேட்டார்: ''இந்தப் பணம் தேவையென்று எங்களை ஒரு வார்த்தை கேட்கக் கூடாதா, அம்மா?'' அதற்கு விந்தி, ''நீங்கள் ஒருவேளை அவரைப் போக வேண்டாமென்று தடுப்பீர்களோ என்றுதான் இந்தக் காரியம் செய்துவிட்டேன்'' என்றாள்.

ராஜகுமார் பாபுவுக்குக் கோபம் தலைக்கேறியது. விந்தியின் தாயார் குலுங்கக் குலுங்க அழுதாள்; விந்தியும் அழுவதை நிறுத்தவில்லை. அவர்களைச் சுற்றிக் கல்கத்தா எங்கிலும் பல்வேறு இன்னொலிகளை எழுப்பிப் பூஜை உற்சவம் நிகழ்ந்துகொண் டிருந்தது.

வயிற்றில் பிறந்த மகளான விந்தி தன்னை இதுகுறித்து ஒரு வார்த்தை கேட்கவில்லை; மனைவியோ, மகளைக் காட்டிக் கொடுக்கக் கூடாதென்று உருகி அழுதாள். இவை யாவும் மங்கள

கரமான இந்தப் பூஜை விழாவின்போது நிகழ்ந்துள்ளன. மனைவியின்பால் அன்பு, மகளிடம் பாசம், தன்மானம் யாவும் துகள் துகளாகிப் போயின, அவர் வரைக்கும். விருப்பு, வெறுப்பு, தமர் பிறர் இவை யெல்லாம் ஒன்ருகக் குழம்பிப் போய் மண்ணேடு கவ்வுவது போல் அவருடைய நிலை ஆயிற்று. ஆ, இவ்வீனமான காரியம் நடைபெறுவதற்கு எவ்வளவு சாமர்த்திய மாக முற்கூட்டியே சூழ்ச்சி செய்திருக்கின்றனர்! சாவி திருட்டுப் போனது! ...மனைவியின் உதவி கொண்டு இரவோடு இரவாகப் பெட்டியைத் திறந்து பணத்தைச் சுருட்டிக்கொண்டு அநாதன் சீமைக்குப் போய்விட்டான். ஊரார், உறவினர் இதைப்பற்றிக் கேள்விப்பட்டால் கேலிக்கும் சிரிப்புக்குந்தானே இடம் ஏற் படும்? - இவ்வாறு ராஜகுமார் பாபு பொருமினர். அறைக்கு வெளியே நின்று விந்தியின் இரு தோழியரும் வீட்டிலுள்ள அத்தனை வேலையாட்களும் கம்மென்று கேட்கலாயினர். மூடிக்கிடக்கும் மாப்பிள்ளையின் அறைக்குள் பெரியவர்கள் நுழைவதைக் கவ னித்து எல்லோரும் ஆவலும் திகிலும் தூண்டக் கும்பு கூடி விட்டனர்.

விந்தியவாஸினி யாரிடமும் முகத்தையே காட்டவில்லை. கதவை அடைத்துக்கொண்டு, சோறு தண்ணீர் பருகாமல் படுக் கையில் விழுந்து கிடந்தாள். அவள் படும் துயரில் சிலர் அநுதாபம் காட்டவே இல்லை. 'பாவி, என்ன சூழ்ச்சி யெல்லாம் அவளுடைய கெட்ட புத்தி புனைந்தது பார்! இத்தனை நாள் அவளுடைய உண்மையான குணம் வெளிப்பட்டதா?' என்று யாவரும் நினைக் கும்படி ஆயிற்று அவளது நிலை. ஊரெங்கும் ஆனந்தம் பொங்க, விந்தியின் பிறந்தகம் அழுது வடிந்தது.

அவமானமும், மனத் தளர்வும் ஒருங்கு சேர விந்தி புக்ககத்துக்கே திரும்பி வந்துவிட்டாள். அங்கு மகனைப் பிரிந்து துடிக்கும் விதவை மாமியாருடன், மணாளனைப் பிரிந்து நிற்கும் மருமகள் நெருங்கி, உள்ளத்துடன் ஒன்றினாள். இருவரும் ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக்கொண்டு, பொறுமையுடன் வாழ்க்கையின் கடமைகளை ஆற்றிக் காலம் கடத்தலாயினர். மாமியார் அணித்தாகத் தன் இதயத்துடன் தொடர்பு கொள்ளக் கொள்ளத் தாய் தந்தையரின் பாசம் தூர விலகிச் சென்றது விந்தியவாஸினிக்கு. அவள் இவ்வாறு எண்ணினாள்: 'மாமியாரும் வறுமைக்காளானவள்; நானும் வறுமையில் உழல்பவள். இதனால் நாங்கள் இருவரும் ஒரே வகைத் துன்பத்தால் பிணைபட்ட வராவோம்; என்னை ஈன்றவர்கள ஐசுவரியம் மிக்கவர்; எனது நிலைக்கும் அவர்களது நிலைக்கும் வெகுதூரம்.' தரித்திரம் பிடுங்கித் தின்னும் இடத்தில் வாழ்க்கைப்பட்டதால் விந்தி அவர்களை விட்டு விலகியவள்; அவள் தன் திருட்டை ஒப்புக்கொண்டதனால்

இன்னும் அவர்களிடமிருந்து ஒதுங்கிப் போய்விட்டாள்! நட்பின் பிணைப்பு இதைப்போல் வேற்றுமையைக் கொண்டிருக்குமோ இருக்காதோ, யார் அறிவார் அதனை?

அநாதபந்து சீமைக்குச் சென்ற புதிதில் மனைவிக்கு வழக்க மாகக் கடிதங்கள் எழுதிவந்தான். ஆனால் வரவர அக் கடிதங்கள் வருவதும் குறைந்தது. பின்னர் வந்த கடிதங்களில் ஓர் அலட்சிய பாவம் வெளிப்படத் தொடங்கியது. படிக்காமல், வீட்டு வேலையே செய்யும் தன் மனைவியைவிடப் பல விதங்களில் சிறந்தவரான ஆங்கிலப் பெண்மணிகள் அநாதனை ஆற்றலுடையவனென்றும், அறிவாளி யென்றும், அழகனென்றும் புகழ்வதும் இவற்றின் வாயிலாக வெளியாயிற்று. இந்நிலைக்கு வந்த அநாதன், ஒரே சேலை அணிபவளும், முசுக்கிட்டவளும், சிவப்பு மேனி இராதவளு மான மனைவி விந்தியைத் தனக்கு ஏற்றவள் அல்லள் என நினைப்பதில் வியப்பு ஏதுமில்லை.

ஆனால், பண முடை ஏற்படும்போதெல்லாம், அந்தப் பட்டிக்காட்டு, மாமை நிற வங்க மகளுக்குத் தந்தி கொடுத்துக் காரியத்தைச் சாதித்துக்கொள்ளமட்டும் அவன் வெட்கப்படவே இல்லை. கணவனைத் தொழும் அந்தப் பேதைப் பெண்ணும், கையில் சுமங்கலி லட்சணத்திற்குச் சங்கு வளையைப் பூண்டு, பொன் வளையல்களை விற்றுப் பணம் அனுப்பி வந்தாள்! பட்டிக் காட்டில் தன் நகைநட்டுக்களைப் பத்திரமாக வைக்க இடம் இல்லை யென்று அவள் பிறந்தகத்திலேயே அவற்றை இதுகாறும் வைத்திருந்தாள். அவள் புக்ககம் வரும் சாக்கில் இவற்றை ஒவ்வொன்றுகக் கொண்டுவந்து விட்டாள். கடைசியாக மிஞ்சி யவை கை வளையல் ஒரு ஜோடி, வெள்ளி கொலுசு, பனரஸ் பட்டுப் புடைவை, உயர்ந்த சால்வை இவையே. இவற்றையும் விற்று வந்த தொகையைச் சீமைக்கு அனுப்பி, கடிதத்தில் கண் துளியின் கறைபடியக் கணவனைச் சீக்கிரமே திரும்பி வந்துவிடுமாறு அசடி தன் ஆசையெல்லாம் கொட்டி எழுதியிருந்தாள்.

அவளுடைய கணவன் அநாதன் கிராப்புத் தலையும், மழுங்க க்ஷவரம் செய்த முகமும், கோட்டும் 'பான்ட்'டுமாக ஒரு பாரிஸ்ட ராகத் திரும்பி வந்து, கல்கத்தாவிலுள்ள பெரிய ஹோட்டலில் இறங்கினன். தன் நாட்டுப்புற இல்லத்திற்குப் போவது அவனுடைய அந்தஸ்துக்கு ஏற்றதன்று. சீமைப் பழக்க வழக்கங் களுடன் ஆசார மிக்க தன் குடும்பத்தவருடன் இருப்பதைச் சமூகம் ஒப்பாது. சீமைக்குச் சென்றவனைச் சாதிப்பிரஷ்டம் செய்வார்களே.

கையிலுள்ள பணம் கரைந்துவிட்டது. அப்புறம் என்ன? ஹோட்டலை விட்டுத் தனி இடம் பார்த்துக்கொள்ளத்தானே வேண்டும்? மனைவியை அழைத்துக்கொள்ள அவன் விரும்பவில்லை,

சீமையிலிருந்து திரும்பியவன் ஓர் இரு முறையோ என்னவோ பெற்ற தாயையும், காத்திருந்த மனேவியையும் பார்க்கச் சென்ருன். அதற்குமேல் அவர்களே அவன் சந்திக்கவே இல்லே.

துயரால் வெம்பிய அவ்விரு ஜீவன்களுக்கும் ஓர் ஆறுதல், தாய் நாட்டுக்குத் திரும்பிய அநாதன், அவர்களுக்கு அருகிலேயே இருக்கிருன் என்பதேயாகும். அவன் சீமைக்குப் போய்ப் பாரிஸ்டர் பரீட்சையில் தேறி, வெற்றியுடன் நாடு திரும்பியதைக் குறித்து இருவருக்கும் பூரிப்பு. இத்தகைய கணவனுக்குத் தான் முற்றும் ஏற்றவளல்லள் என்பது அவளது எண்ணம். ஒரு பக்கம் துயர் துளேக்க, மறு புறம் மகிழ்ச்சியில் அவள் திளேப்பாள். மிலேச்ச ஆசாரங்களே அவள் வெறுப்பவள்; ஆனுல் கணவனேக் கண்டபோது, 'இப்போ எல்லோருந்தான் துரைபோல் ஆகி விடுகிருர்கள். என் கணவனே, அசல் சீமையிலிருந்து வந்து இறங்கிய துரையாயிற்றே; பார்த்தால் அவரை யாரும் வங்காளி என்றே சொல்லமாட்டார்கள்' எனத் தனக்குள் பெருமிதம் கொள்வாள்.

புதிதாக அமர்த்திக்கொண்ட வீட்டுச் செலவுகளே அநாதனுல் சமாளிக்க முடியவில்லே. இதனுல் அவன் கசந்து போய், 'இந்தச் சாபக் கேடான பாரத நாட்டில் எவன் உருப்பட்டான்? தனக்கு ஈடானவர்கள் இங்கே தான் முன்னேற முடியாதபடி என்ன முட்டுக்கட்டையெல்லாம் போடுகிருர்கள்!' என்றெல்லாம் புழுங்கினுன். வரவர அவனுடைய 'கானு' (சாப்பாட்டில்) இறைச்சிப் பொருள்களுக்கு மாருகக் காய்கறி வகைகளே அதிகமாயின. கோழிக் கறியின் இடத்தை மீன் பொறியல் பிடித்துக்கொண்டது. உடுப்புக்களின் பகட்டு மங்கத் தலேப் பட்டது. க்ஷவரம் செய்து வழுவழுப்பாக இருந்த முகத்தின் களேயே பாழாகி வந்தது. தீவிரமாக நிற்கும் நிஷாத சுருதியி லிருந்து மிகவும் உருக்கமான பிரதிமத்திமத்திற்கு அநாதனுடைய வாழ்க்கையின் யாழ் நாம்பு இறங்கிவிட்டது. இப்படி எல்லாம் அவலமாகப் போகும் சமயத்தில், ராஜகுமார் பாபுவின் குடும்பத்தில் மூண்ட ஒரு பேரதிர்ச்சி சங்கடச் சுழலில் சிக்குண் டிருக்கும் அநாதனுடைய வாழ்க்கையில் எதிர்பாராத மாறுதலேத் தோற்றுவித்தது. கங்கைக் கரையோரமாக உள்ள மாமாவின் ஊரிலிருந்து ராஜகுமார் பாபுவின் ஒரே புதல்வன் ஹரகுமாரும். அவன் தாயும் திரும்பி வருகையில் அவர்களுடைய படகுமீது ஸ்டீமர் ஒன்று மோதி அவர்கள் நீருள் மூழ்கி இறந்துபோனுர்கள். அம் மகனுக்குப் பிறகு ராஜகுமார் பாபுவின் வம்சத்தில் விந்தியவாஸினியைத் தவிர வேறு எவருமே இல்லே.

சொல்லொணு இத் துயரம் சற்று ஆறியதும், ராஜகுமார் பாபு அநாதனே அணுகி வேண்டிக்கொண்டார்: ''அப்பனே! நீ

பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும். உங்களைத் தவிர எனக்கு வேறு யார்?''

அநாதனும் இதற்கு உடனேயே இணங்கினன். 'இந்த பார்-லைப்ரரியில் (வழக்கறிஞரின் நூல்நிலையம்) அலைந்து திரியும் சுதேசி வக்கீல்கள் என்னைப் பார்த்துப் பொருமைப்படுகிறுர்கள்; என்னுடைய அறிவுக்கு உகந்த மதிப்புத் தராமல் இருக்கிறுர்கள்; இப்போது இந்தப் பயல்களின் மூஞ்சியில் கரி பூசுகிறேனு இல்லையா பார்' என்று தனக்குள்ளேயே வீருப்பு அடித்துக்கொண்டான்.

ராஜகுமார் பாபு சாஸ்திரம் தெரிந்த பண்டிதர்களை அழைத்து இதுபற்றி அவர்களுடன் ஆலோசனை செய்தார். அவர்கள் கூறியதாவது: ''அநாதன், கோமாமிசம் புசிக்காமல் இருந்திருப்பானுயின் ஸம்ஸ்காரம் செய்து அவனைச் சாதியில் சேர்த்துக்கொள்ள முடியும்.'' சீமையில், குறிப்பிட்ட நாலுகால் பிராணியின் மாமிசத்தை அவன் விரும்பி ருசித்திருக்கலாம்; ஆனுல் அவ்வாறு செய்யவில்லையென்று பொய் கூறவும் அவன் சிறிதும் தயங்கவில்லை. நெருங்கிய நண்பர்களிடம்மட்டும், ''சமூகம், நம் இஷ்டத்திற்கு ஏற்றுற்போல் ஒரு பொய்யை ஏற்றுக்கொள்ளும் போது, அதில் ஒரு தோஷமும் இல்லை. கோமாமிசத்தை ருசித்த நாக்கை, பஞ்சகவ்யத்தாலும், பொய்யுரையாலும் புனித மாக்குவது நமது இன்றைய சமூகத்தின் நியமமாகும். இந்த நியமத்தை மீறிச் செல்ல நான் விரும்பவில்லை'' என்றுன்.

கழுவாய்க்கான ஒரு நன்னுள் குறிக்கப்பட்டது.இதற்கிடையே அநாதபந்து, வேஷ்டியும் அங்கவஸ்திரமும் அணிந்து கொள்ளலானுன். தருக்க வாதங்களால் சீமைச் சமூகத்தின் மூஞ்சியில் கரியைப் பூசி, நம் ஹிந்து சமாஜத்தின் முகத்தில் வெள்ளையடித்தான். அவனுடைய யுக்தி - தர்க்கங்களைக் கேட்டவர்கள் அகமகிழ்ந்தனர்.

தெம்பும், பெருமையும், விந்தியவாஸினியின் மென்மை மிகு உள்ளத்தில் பரவிப் பரிமளித்தன. அவள் தனக்குள்ளேயே, 'சீமைக்குப் போய்விட்டுத் திரும்புவோர் தலைகீழாகிச் சீமைத் துரைகளாக மாறுகின்றனர் ; அவர்களை வங்காளி என்றே சொல்ல முடியாது. ஆனுல் என் அகத்துக்காரரோ அப்பு அழுக்கிராது, ஹிந்து தர்மத்தில் இருமடங்கு பற்றுதலுடன் விளங்குகிறுர்' என நினைத்துக்கொண்டாள்.

குறித்த நாளில் பிராம்மண புரோகிதர்கள், சாஸ்திரிகள் ராஜ்குமார் பாபு வீட்டில் கூடிவிட்டனர். பணம் தண்ணீர்பாடு பட்டது. போஜனம், பூரிதக்ஷிணை ஏராளமாக வழங்கப்பட்டன.

உட்புறம் பலத்த ஏற்பாடுகள். கூடம், தாழ்வாரம், நடை, முற்றம் எங்கிலும் விருந்து உண்போரின் பெருந்திரள். இந்தப் பேரிரைச்சலுக்கிடையே விந்தி காலைக்காற்று மெல்ல உந்த,

வானிடை மிதக்கும் வெண்முகிற்கண்டமென ஊர்ந்தாள். இன்று இந்த வைபவத்தில் நடுநாயகமாக விளங்குபவன் அவளுடைய கணவன் அல்லவா? அன்று வங்கமே, ஓர் இன்னரங்கமாகக் காட்சி தந்தது. அதன் எழினி விலகி அநாதபந்து எல்லோர் கண்ணுக்கும் புலனுகும் முக்கிய பாத்திரமாக விளங்கினுன். கழுவாய் சமூகத்திற்குச் செலுத்தும் வெறும் தண்டனையன்று; அதுவே ஓர் அநுக்கிரகமாகும். அநாதன் சீமைக்குச் சென்று திரும்பியதும் ஹிந்து சமூகத்தின் கௌரவத்தை உயர்த்தி விட்டவன்; அந்த மாண்பின் ஒளி நாற்றிசையிலும் பரவிவிட்டது; அதுவே விந்தியின் முகத்தில் காதலின் உவகையால் எழும் பொலிவென உருப்பெற்றது. இதுவரை அவள் வாழ்வில் தோன்றிய துயர், அவமானம் யாவும் இப் பேற்றிற்கு எதிரே மிகவும் அற்பமானவை. அன்று தன்னைக் கடிந்த தந்தையின் முன்பே இன்று அவள் தலைநிமிர்ந்து உயர்ந்த பீடத்தில் நிலைகொண்டுள்ளாள். கணவனுக்குரிய மகிமை, அவனுக்கு முற்றும் தகுதியிராத அவளை இவ் வுலகத்தவர் கண்முன்பு மதிப்பிற்குரியவளாக்கிவிட்டது.

சடங்குகள் யாவும் முடிவுற்றன. அநாதபந்து சாதியில் இடம் பெற்றுவிட்டான். பெரியோர், நண்பர், அழைக்கப்பட்டோர் அவனை நெருங்கித் தம் ஆசியையும் அன்பையும் அள்ளித் தந்தனர்.

இத்தகைய மாப்பிள்ளை சந்தனப் பூச்சுடன், தாம்பூலம் போட்டுக்கொண்டு, உள்ளம் ஆனந்தக் கடலாட, உடம்பில் அணிந்திருக்கும் 'சாதர்' தரையில் புரள உள்ளே சென்ருர்!

பிராம்மண போஜனம் முடிந்து தக்ஷிணை வழங்கும் சமயமாயிற்று. பெரிய கூடத்தில், பண்டித புரோகிதர்களிடையே ஒரே சாஸ்திர சருச்சை. ராஜ்குமார்பாபு சிறிது நேரம் அவர்களிடையே நின்று சுவாரசியமாகக் கேட்டுவிட்டுத் திரும்பும் போது வேலைக்காரன் அவரிடம் ஒரு சீட்டைத் தந்து, ''ஒரு தொரசானி அம்மா வந்திருக்காங்கோ, யசமான்'' என்ருன்.

ராஜகுமார் பாபு தம்மை ஒழுங்குபடுத்திக்கொண்டு வெளியே வந்தார். கையிலுள்ள சீட்டிலிருக்கும் பெயரைப் படித்தார். 'மிஸஸ் அநாதபந்து ஸர்க்கார்' என்று எழுதியிருந்தது; அதாவது, அநாதபந்து ஸர்க்காரின் இல்லாள்!

எவ்வளவோ சிந்தனை செய்தும், இதன் பொருள் அவருக்கு விளங்கவே இல்லை. அச் சமயம் சீமையிலிருந்து அப்போதுதான் வந்த செவேலென்ற கன்னங்களும், தாமிரவண்ணமான கூந்தலும், நீலமலர் விழிகளும், பால்புரை மேனியளுமான ஓர் ஆங்கில அணங்கு நவ்வியின் அழகு நடையுடன், எல்லோரும் கூடியுள்ள அந்த இடத்தில் காட்சி தந்தாள். யாரையோ தேடி அவளுடைய

கண்கள் கூர்ந்து சுற்றுமுற்றும் நோக்கின. ஆனல் அவளுக்குப் பழக்கமான அந்த முகம் அங்குத் தென்படவில்லை. திடுமென ஒரு வெள்ளைக்காரி வரவே, பண்டிதர்களின் தருக்க சம்பாஷணை யெல்லாம் பொட்டென ஓய்ந்தது.

அதே சமயம், பின்னல் தரையில் வேட்டிக் கொய்சுவம் புரள அசைந்து வரும் அநாதபந்து அவ் வரங்கின் மத்தியில் வந்து நின்ருன். இமைப்பொழுதில் அந்த வெள்ளைக்காரி விரைந்தோடி வந்து, அவனை மார்புறத் தழுவி, தாம்பூலம் ஊறும் அவன் உதடு களில் தன் காதலின் முத்திரையான முத்தம் தந்தாள்.

அன்று அந்தப் பண்டிதர்கள் குழுமியிருந்த மன்றத்தில் சுசி சுத்தம்பற்றிய விஷயங்களை எவருமே எடுத்து விவாதிக்கவில்லை.

கொடை பரிமாற்றம்

வீட்டுக்குப் பெரியவள் வாயை விட்டுவிட்டாள். அச் சுடுசொற்கள் கூர்மையுடன் நச்சையும் கொண்டிருந்தன. யாரை நோக்கி அச் சொல்லம்புகளை எய்தாளோ, அப் பேதையின் சித்தம் கதி கலங்கியே போய்விட்டது.

அவ் வசைமொழிகள், முக்கியமாக அப் பேதையின் கணவன் மீதே தொடுத்தனவாகும். அவளுடைய கணவன் ராதாமுகுந்தன் இரவு உணவை முடித்துக்கொண்டு, தன் அறையில் மனைவிக்கு அருகிலேயே அமர்ந்து தாம்பூலம் மென்றுகொண்டே உண்டது சரிப்பதற்குத் தூமபானமும் செய்துகொண் டிருந்தான். பெரிய வள் பேசியது அவனுடைய செவியிலும் விழாமல் போகவில்லை. ஆனால், அவனுடைய ஜீரணத்துக்கானமுயற்சிக்குக் குறுக்கே அவை ஒன்றும் செய்யவில்லை. சிறிதும் கலக்கமடையாமல் புகையிழுத் தானதும் வழக்கத்தையொட்டிப் படுக்கச் சென்றான்.

ஆனால், இப்படி எதையும் வாங்கிக்கொண்டு ஜீரணிக்கும் ஆற்றலைச் சில பேரிடத்தில்தான் காணமுடியும். ராஸமணி அன்று படுக்கையறையில் நடந்துகொண்ட விதம் முன்பு என்றுமே நிகழ்ந்ததில்லை. அமைதியாகவே கணவன் பக்கத்தையடைந்து கணவன் பாதங்களைத் தடவிப் பிடிப்பது வழக்கம். அன்றோ கைவளையல்கள் சிணுங்கி ஒலிப்ப, கணவனுக்குச் செய்யும் அன்றாடத் தொண்டினையும் மறந்து, பஞ்சணைமீது மறுபுறமாக முகம் வைத்துப் படுத்தாள். அவளது அழுகையின் விசும்பலினால் கட்டிலே குலுங்கத் தொடங்கியது.

ராதாமுகுந்தன் இதைப் பொருட்படுத்தாமல் பக்கத்திலுள்ள நீளத் திண்டை அணைத்துக்கொண்டு கொட்டாவி பெருக்கித் நித்திராதேவியை அழைத்தான். தான் இப்படி எதையும் பொருட்படுத்தாமல் இருப்பது மனைவியின் ஆத்திரத்தை மேலும் கிளப்புவதைக் கவனித்துக் கடைசியில், அவன், ''நாளை விடியற் காலை நான் முக்கிய காரியமாகப் போகவேண்டும்... என்னைச் சற்று நிம்மதியாகத் தூங்கவிடமாட்டாயா?'' என்றான். புருஷன் குரலைக் கேட்டதும் ராஸமணியின் விசும்பல், பெருத்த அழுகை யாக மாறியது.

ராதாமுகுந்தன், ''என்ன நடந்தது?'' என்றான்.

ராஸமணி விசும்பலுக்கிடையே, ''அவள் சொன்னதெல்லாம் உங்கள் காதில் விழவில்லையா?'' என்ருள்.

''ஆமாம், விழுந்தது. மதனி சொன்னதில் தப்பு எதுவுமே இல்லையே. நாம் அண்ணுவை நம்பித்தானே வாழ்கிரேம்? நீ உடுத்திருக்கும் புடைவை, போட்டிருக்கும் நகை நட்டெல்லாம் நாஞ உனக்குப் பண்ணிப் போட்டேன்? எனக்கு ஏது அவ்வளவு யோக்கியதை? நாம் அவர் வீட்டுச் சோற்றைத் தின்கிரேம். இப்படி மதனி ஏதாவது சொல்லத்தான் சொல்லுவாள். அதையெல்லாம் பார்த்தால் நாம் பிழைப்பது எப்படி?'' என்ருன் ராதாமுகுந்தன்.

''இப்படிச் சாப்பிடாமல் இருந்தால்தான் என்ன?''

''பின் எப்படி நாம் பிழைத்திருப்பது?''

''இதைவிடச் செத்தொழியலாமே!''

''அதுவரைக்குமாவது கொஞ்சம் நிம்மதியாகத் தூங்கேன்; அதஞல் உன் மனவேதனையும் அடங்கும்'' என்றதும், அந் நல்லுரைக்கு எடுத்துக்காட்டாக நித்திரையுள் ஆழ்ந்தான்.

ராதாமுகுந்தனும், பெரியவர் சசிபூஷணரும் ஒரு வயிற்றுப் பிறந்த சகோதரர்களல்லர்; நெருங்கிய உறவினரும் அல்லர். ஒரே கிராமத்தில் பிறந்து வளர்ந்து உடன்பிறந்தவர்களைவிட அன்பின் பிணைப்பிஞல் ஒரே கூரையின்கீழ் ஏக குடும்பமாக வாழ்க்கை நடத்தியவர்கள். பெரியவள் விரஜசுந்தரிக்கு இது துளியேனும் பொறுக்கவில்லை. சசிபூஷணர் நகையோ நட்டோ செய்துபோடும் விஷயத்தில் தன்னைவிட ராஸமணியிடம் தாராளம் காட்டுவதுதான் அவளுக்கு மேலும் எரிச்சலைத் தோற்றுவித்தது. மேலும், அந்த மனுஷ்யன் தன்னுடன் எந்த யோசனையிலும் கலப்பதில்லை. ராதாமுகுந்தனிடந்தான் ஆந்தரிகமெல்லாம். சசிபூஷணர் உலக விவகாரங்களில் பிடித்தமே இராதவர். நிலபுலங்களைப் பார்ப்பது, மற்ற வெளிஜோலி யாவற்றையும் ராதாமுகுந்தனிடமே நம்பி விட்டிருப்பவர். விரஜசுந்தரிக்கு மட்டும் சந்தேகம்: தன் கணவனை வஞ்சித்து இந்த ராதாமுகுந்தன் இரகசியமாகச் சொத்துச் சேர்த்து வருகிருனென்று. இதை நிரூபிக்க அவளுக்கு அத்தாட்சிகள் இராமல் போகவே, ராதாவின்மீது அவளுக்குள்ள பகை படமெடுத்து ஆடியது. அத்தாட்சிகள்கூடத் தனக்கு எதிராகச் சதி புரிகின்றன என்று அவள் அவற்றையும் தூற்றித் தன் சந்தேகக் கோட்டையை வலுவாக்கிக்கொண்டாள். இவ்வளவு பாடுபட்டு வளர்த்த அந்த உள்ளத் தீ சில சமயம் பூகம்பமும் எரிமலையும் போல் வெடித்து வெளிக் கிளம்பிவிடும்.

அன்றிரவு ராதாமுகுந்தனுக்கு நல்ல தூக்கம் இருந்ததோ இல்லையோ தெரியாது; ஆஞல், மறுநாள் காலையில் சசிபூஷணரிடம் சென்ருன். இவ்வளவு இளங்காலையில் அவன் தோன்று

வதைப் பார்த்து அவர், ''ராதா, என்ன ஒரு மாதிரியாக இருக்கிறாய்? ஏதாவது உடல்நலம் சரியில்லையா?'' என்றார்.

ராதா மெதுவான குரலில், ''அண்ணா! இனி இந்த வீட்டில் நான் இருப்பது சரியல்ல'' என்றதும், முன்னாள் மாலை மதனி பேசியதையெல்லாம் விளக்கமாகக் கூறினான்.

சசிபூஷணர் நகைத்து, ''அடேயப்பா, என்னமோவென்று பார்த்தேன்! இது இன்றைக்குத்தானா...? அவளோ இங்கிதம் அறியாதவள் - வாய்த்துடுக்குக்காரி, அதற்காக எனக்கு ஆந்தரிகமான நீங்கள் வீட்டைத் துறந்து போவதா? என்னையுந்தான் அந்தத் தேவி நடுநடுவே காய்ச்சுகிறாள். இதையெல்லாம் சட்டை பண்ணினால், அப்புறம் வாழ்வது எப்படி?'' என்றார்.

ராதா, ''இப்படி நியாயமிராமல் பேச்சுக் கேட்பதால், என்ன ஜன்மம் நம்முடையதென்ற வேதனையே வருகிறது, அண்ணா. எதற்காக எங்களால் உங்கள் குடும்பத்தில் கலைச்சல் ஏற்பட வேண்டும்? நாங்கள் போகிறோம்'' என்றான்.

''நீ போய்விட்டால் எனக்கு அப்புறம் அமைதி ஏது?'' என்றார் சசிபூஷணர் வேதனையுடன். அதற்குமேல் அவர்கள் பேசவில்லை. ராதாமுகுந்தன் பெருமூச்செறிந்துவிட்டு அகன்றான். அவனுடைய உள்ளத்திலிருந்து ஒரு பெருஞ்சுமை இறங்கியது போல் ஆகியது.

இந்தப் புறம் பெரியவளின் கொக்கரிப்பு நாளுக்கு நாள் அதிகமாகியது. ஏதாவது சாக்கிட ராதாவைக் குத்திக் காட்டிக் கொண்டே இருந்தாள். இப்படி அடிக்கடி வசைக்கணைகளைத் தாங்கித் தாங்கி, ராஸமணி படுகிடையாக ஆகிவிடுவாள்போல் இருந்தது. ராதா, எண்ணம் விசாரமின்றிப் புகை குடித்துக் கொண் டிருப்பான். நெக்குருகி அழும் தன் மனைவியைக் கண்டதுமே கண்களை மூடிக் குறட்டைவிடத் தொடங்குவான். ஆனால் இதுபோன்ற ஒரு நிலை நீடிப்பது அவனுக்கும் பொறுக்க முடியாமல்தான் இருந்தது.

சசிபூஷணருடன் அவனுக்குள்ள தொடர்பு இன்றைக்கேற்பட்டதன்று. இளம் வயதில் இருவரும் காலையில் பழையது உண்டுவிட்டு ஜோடியாகவே பள்ளிக்குச் செல்வார்கள். இருவருமே சேர்ந்து யோசனை பண்ணி உபாத்தியாயரின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டுப் பள்ளிக்கூடத்திலிருந்து தப்பி, தோப்பில் மாட்டுக்காரப் பிள்ளைகளுடன் பல வகையான விளையாட்டுக்களில் ஈடுபடுவர். ஒரே படுக்கையில் இருவரும் படுத்து அத்தையம்மாவிடம் அரசகுமாரி கதைகளெல்லாம் கேட்பார்கள். வீட்டிலுள்ளவருக்குத் தெரியாமல் இரவில் வெளியேறி, தெருக்கூத்துப் பார்க்கப் போய்விடுவார்கள். காலையில் இவர்கள் இருவரும் பெரியவர்களிடம் சிக்கும்போது, சமமாகவே உதை

யையும் பங்கிட்டுக்கொள்வார்கள். அப்போது இந்த விரஜசுந்தரி தான் எங்கிருந்தாள்? ராஸமணிதான் எங்கிருந்தாள்? வாழ்வில் இப்படி இதயங்கள் ஒன்றிப் பழகியவர்கள் பிரிந்துபோவதென்ருல் சாத்தியமா? அதுவும் ஒரே நாளில் அறுத்துக்கொள்ளத்தான் முடியுமா, அப் பிணைப்பிலிருந்து? ஆனால் அப் பிணைப்பு தன்னலம் கருதியே உருவாக்கியது, பிறர் உதவியை எதிர்பார்த்து வயிறு வளர்த்து வாழும் ஒருவகைச் சூழ்ச்சியென்று யாராவது சொன்னாலும் சசிபூஷணர் காதைப் பொத்திக்கொண்டார். ஆனால் இப்படி எத்தனை நாள் நடக்குமென்பது யாருக்கும் தெரியாது. அச் சமயம் எதிர்பாராத ஒரு விபரீதம் நிகழ்ந்தது.

குறிப்பிட்ட அச் சமயத்தில், சர்க்காரிடமிருந்து ஒரு தாக்கீது வந்தது அன்று சூரியன் அஸ்தமிப்பதற்குள் கஜானாவுக்குச் சேர வேண்டிய வரிகளைச் செலுத்தத் தவறினால், சசிபூஷணரின் ஜமீன்தாரி நிலங்கள் ஏலம் போடப்படுமென அறிக்கை விடப் பட்டது.

ஒரு நாள் செய்திவந்தது. சசிபூஷணருக்குச் சொந்தமான அந்தப் பர்க்கணு ஜமீன் நிலங்களும் சர்க்காருக்குச் சேரவேண்டிய தொகையைச் செலுத்தாததால் ஏலத்தில் மூழ்கிப்போயினவாம்.

ராதாமுகுந்தன் தனக்கே இயல்பான அமைதியும் நிதானமும் தோன்ற, ''என்னுடைய தப்பு!'' என்ருன்.

சசிபூஷணர், ''உன்னுடைய தப்பு எப்படி? நீயோ பணம் செலுத்தக் கஜானாவுக்குப் போனாய். வழியில் கொள்ளைக்காரன் மடக்குவான் என்று யார் எதிர்பார்த்தார்கள்? அதற்கு நீ என்ன செய்யலாம்?'' என்ருர்.

தவறு யாருடையது என்று ஆராயவேண்டிய அவசியமே இல்லை. இப்போது முக்கியப் பிரச்னை, குடும்பத்தை நடத்துவது எப்படி என்பதே. ஏதாவது வேலையில் அமர்ந்து இரண்டு காசு சம்பாதிக்கவேண்டிய வழியே சசிபூஷணருக்குத் தெரியாது. அந்த வழியில் அவருக்கு அநுபவமே போதாது. அந்தச் சுபாவமும் அவரிடம் இல்லை. அவர், படிவழுக்கி நீரில் வீழ்ந்தவர்போல் ஆனர்.

முதலில் அவர் மனைவியின் நகைகளை அடகுவைக்கத் தலைப் பட்டார். ராதாமுகுந்தன் அவர் முன்னால் பணத்தை வைத்து அவரை அவ் வழிக்குச் செல்லாதபடி தடுத்தான். அவருக்கு முன்னாலேயே தன் மனைவியின் நகைகளை அடகுவைத்து, வேண்டிய பணத்தைத் திரட்டிவிட்டான்.

அவர்களது வாழ்விலே ஒரு பெருமாறுதல் தோன்றியது. செல்வம் மல்கியிருந்த காலத்தில் யாரைத் தூற்றி அப்புறப் படுத்தப் பல வழிகளைப் பெரியவள் கையாண்டாளோ, அவளையே மெலிந்துபோன காலத்தில் திடமாகப் பற்றினாள். இச் சமயம்

சகோதரர்கள் போன்ற இவ்விருவருள் எவரை நம்பி வாழ்வ தென்பதை அவள் விரைவாகவே புரிந்துகொண்டாள். ராதா முகுந்தனை ஒரு சமயம் வெறுத்தவளா அவள் என்ற விஷயம் இப்போது மறந்துபோயிற்று.

ராதாமுகுந்தன் முன்னாலேயே தனியாகவே பணம் சம்பாதிக் கும் முயற்சிகள் செய்துவந்தான். அருகிலுள்ள ஒரு நகரில் அவன் 'அட்டர்னி' (வழக்குப்பற்றி யோசனை கூறுவோன்) வேலை நடத்தியவன். அச் சமயம் இந்த வேலையில் பணம் ஈட்டுவது இக்காலத்தைவிட எளிதாக இருந்தது. கூரிய அறிவுடையவனாத லால் ராதா நன்றாகவே பொருளீட்டி வந்தான். அதனால் ஜில்லாவி லுள்ள பெரிய ஜமீன்தார்கள் அவனிடமே தம் வழக்குகளை ஒப்படைத்தனர்.

இப்போது ராஸமணியின் நிலை முன்பு இருந்ததற்கு நேர் மாறாயிற்று. இப்போது அவளிடும் சோற்றைத் தின்றுதான் சசிபூஷணரும், விரஜசுந்தரியும் காலங் கடத்தினர். இதுகுறித்து அவளுக்குக் கர்வம் தலைக்கேறியதோ இல்லையோ நமக்குத் தெரி யாது. ஆனால் நடை, உடை பாவனையில் ஒரு மிடுக்கும், திமிரும் அடிக்கடி வெளிப்படலாயின. ஒரு நாள் ஏதோ ஒரு விஷயத்தில் பெரியவளுக்கு எதிராக இவள் நடந்துகொண்டாள். ஆனால் மறு நாளே அந்த அகந்தையொழிந்து முன்னைவிட மிகவும் அடக்கமாகி விட்டாள். காரணம், அந்த விஷயம் அவளுடைய கணவன் செவிக்கு எட்டிவிட்டது. அன்று இரவு ராதா படுக்கையறையில் அவளிடம் என்ன சொன்னானோ, காலையில் வெளியே வந்தபோது அவள் முகம் சுண்டிப்போயிருந்தது. பெரியவளுக்கு அடங்கி வேலைகளைச் செய்தாள். அப்புறம் கேள்வி, ராதாமுகுந்தன் அன்றே தன் மனைவியைப் பிறந்தகம் அனுப்ப ஏற்பாடு செய் தானாம். ஒரு வாரகாலம் அவளுடைய முகதரிசனமே செய்ய வில்லையாம். அப்புறம், விரஜசுந்தரி மைத்துனனிடம் அவளுக் காகப் பரிந்து பேசவே தம்பதிகளிடையே சௌஜன்யம் நிலவிய தாம். ''சின்னவள் பாவம், அவளுக்கு என்ன தெரியும்? நேற்று வந்த பெண். நான் எத்தனை நாளாக இந்தக் குடும்பத்தில் இருக் கிறேன்? நாம் எப்படி மனம்விட்டுப் பழகுகிறோம். அசடு, அவளுக் குத் தெரிகிறதா?... அவளை மன்னித்துவிடு'' என்றாளாம்.

ராதாமுகுந்தன் குடும்பத்திற்கு ஆகும் செலவுக்கான பணத்தை விரஜசுந்தரியிடமே கொடுத்துவிடுவான். ராஸமணியும் தனக்கு வேண்டிய அளவிற்கு அவளிடம் யாசித்தே பெறுவாள். வீட்டிலே பெரியவளுடைய நிலை முன்னைவிட இப்போது நல்லபடி யாகவே இருந்தது; காரணம், சசிபூஷணர் அன்பின் மேலீட் டாலும், பலவாறு சிந்தித்துப் பார்த்ததாலும், ராஸமணியிடம் அதிக பட்சபாதமே காட்டினார்.

சசிபூஷணரின் முகத்தில் எப்போதும்போல் சிரிப்பு உலாவிய போதிலும் மறைவாக ஏதோ நோயினால் அவர் மெலிந்துபோனார். இதை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை, ஆனால் அண்ணாவின் முகத்தைக் கவனிக்கும் ராதாவுக்குத் தூக்கம் பிடிப்பதே இல்லை. நள்ளிரவில் சில சமயம் ராஸமணி விழித்துக்கொண்டபோது, கணவன் எதனாலோ பெருமூச்சு விட்டுக்கொண்டே, இப்படியும் அப்படியும் வேதனையால் புரளுவதைக் கவனித்திருக்கிறாள்.

ராதாமுகுந்தன் பலதடவை ஆறுதல் சொல்லச் சசிபூஷண ரிடம் சென்று, ''அண்ணா! நீ ஒரு கவலையும் படாதே. உன்னுடைய சொத்தை நான் திருப்பிக்கொண்டு வந்துவிடுகிறேன் பார். நான் விடமாட்டேன்; இன்னும் அதிக நாளில்லை இதைச் செய்வதற்கு'' என்றான்.

உண்மையில் இதற்கு அதிக நாட்களே பிடிக்கவில்லை. சசிபூஷணரின் சொத்தை ஏலத்தில் எடுத்த ஆள் ஒரு வியாபாரி. அவன் ஜமீன் விவகாரங்களின் நெளிவு சுளுவை அறியாதவன். ஏதோ வீண்கௌரவத்துக்காக வாங்கிவிட்டான்; கஜானாவுக்கும் பணம் கட்டுகிறான். ஆனால், இலாபமே கிட்டவில்லை. ராதா முகுந்தன் வருடந்தோறும் இருமுறை குண்டர்களை ஏவிச் சாகு படியையெல்லாம் கவர்ந்துவிடுவான். ஊர்க்குடிகள் இதற்குத் துணைநின்றனர். வமிசம் வமிசமாகப் பெரிய குலத்தைச் சேர்ந்த வர்கள் அநுபவித்த ஜமீன் அந்நியன் - அதுவும் தாழ்வுற்ற சாதியா னிடம் இருப்பதை அவர்கள் பொறுக்கவில்லை. ராதாமுகுந்தனின் யோசனையையும், தந்த பணவுதவியையுங்கொண்டு ஜமீன் தாருக்கு எதிராக விவசாயிகள் வழக்குத் தொடுக்கலாயினர்.

கடைசியில், அந்த அப்பாவிப் பயல் பல சிக்கலில் மாட்டிக் கொண்டு தப்பி வரப்போகிறோமா என்று ஆகிவிட்டது. மிகக் குறைந்த விலைக்கு ஜமீனை ராதாமுகுந்தனுக்கே விற்றுத் தொலைத் தான்!

கதைப்போக்கில், இப்படி நிகழ்ந்தது சிறிது காலத்திற்குள் என்றே தோன்றும். ஆனால், இது முடிவதற்குப் பத்து ஆண்டு களாயின. பத்தாண்டுக்கு முன்பு சசிபூஷணர் நடுவயதினராக இருந்தார். ஆனால், இந்த ஒன்பது, பத்து ஆண்டிற்குள் அவருக்கு ஏற்பட்ட மன அதிர்ச்சியினால் நீராவி எஞ்சின் வேகத்தில் அவருக்கு முதுமைப்பிராயம் வந்துவிட்டது. பிதுரார்ஜிதச் சொத்தைத் திரும்பப் பெற்றபோது அவருக்கு அந்தப் பழைய தெம்பே இல்லை. பல நாட்கள் எடுத்துப் பழகாததால்,வீணையின் தந்திகள் இறங்கிப் போய், எவ்வளவு திருகினாலும் தொய்ந்து போவனபோல, அவருடைய ஸ்வரமெல்லாம் ஒடுங்கிப்போயிற்று.

கிராமத்தவர்களுக்கெல்லாம் கொண்டாட்டம். ஒரு பெரிய விருந்துச் சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்யச் சசிபூஷணரை நாடி

னர். சசிபூஷணர் ராதாவை பார்த்து, ''என்ன, தம்பி?'' என்றார். ராதா, ''கட்டாயம்! இது போன்ற சமயத்தில் ஆனந்தமாக ஒரு விருந்து வைக்கத்தான் வேண்டும்'' என்றான்.

அதுபோன்ற சந்தர்ப்பம் கிராமத்தில் என்றுமே நடந்ததில்லை. ஊரடங்கலும் அதில் திளைத்திருந்தனர். வேதியர், ஏழை பாழை எவருக்கும் மனமாரத் தட்சிணை தானமெல்லாம் அள்ளி வீசப்பட்டன. குடியரானவர்களுக்குத் துணிமணியெல்லாம் வழங்கப்பட்டது.

குளிர்காலத் தொடக்கம். சசிபூஷணர் இந்த ஆர்ப்பாட்டத்தில் சற்றுப் பங்குகொண்டு அலையவே, உடல்நலம் கெட்டது. அவர் படுக்கையாகப் படுத்துவிட்டார். உடலில் பல கோளாறுகள் போதாவென்று குளிர்க்காய்ச்சலும் கண்டது அவருக்கு. வைத்தியர் அவரைப் பரிசோதித்துவிட்டு, ''சிரமந்தான்'' என்று தலையசைத்துவிட்டார்.

இரவு இரண்டாம் யாமப்பொழுது; நோயாளியின் அறையில் இருந்தவர்களை வெளியே அனுப்பிவிட்டு ராதாமுகுந்தன் சசிபூஷணரை நெருங்கி, ''அண்ணா! உனக்குப் பிறகு, இந்தச் சொத்துக்கள் யாரை அடையவெண்டுமென்பதற்கு இப்போதே ஓர் உயில் தயார் செய்ய உத்தரவு கொடு'' என்றான். சசிபூஷணர், ''அப்பனே, தருவதற்கு என் சொத்து என்ன இருக்கிறது?'' என்றார்.

ராதா, ''எல்லாம் உன்னுடையதுதானே, அண்ணா!'' என்றான். சசிபூஷணர், ''ஒரு சமயம் இருந்தது! இப்போது என்னுடையதல்ல'' என்றார்.

ராதாமுகுந்தன் நெடுநேரம் சும்மா இருந்தான். படுக்கையின் ஓரமாக அமர்ந்து, அடிக்கடி போர்வையைத் தன் கையால் எடுத்து அண்ணனுக்குப் போர்த்தலானான். சசிபூஷணருக்குச் சுவாசம் விடுவதே சிரமமாக இருந்தது.

ராதாமுகுந்தன், படுக்கையின் விளிம்பில் நின்று, நோயாளியின் இரு பாதங்களையும் பற்றி, ''அண்ணா, நான் பெரும்பாவம் செய்துவிட்டேன். இத்தனை நாள் நான் உன்னிடம் அதை வெளியிடவில்லை'' என்று கம்பலையுடன் கூறினான்.

சசிபூஷணரிடமிருந்து மறுமொழியே வரவில்லை. ராதாமுகுந்தன் மேலே தொடர்ந்தான்: அதே அமைதியும் நிதானமும் இணையப் பெருமூச்செறிந்தவண்ணம் கூறலானான்: ''அண்ணா! இதை எப்படித் தெளிவாக எடுத்துச் சொல்வது? என் உள்ளத்தில் இருப்பதை அந்தப் பகவான்தான் அறிவார். இந்த உலகத்தில் உன் ஒருத்தனுக்கே இதன் மர்மம் புரியும். இளமைதொட்டு நாம் இருவரும் எந்த வேற்றுமையுமின்றிப் பழகினோம். ஒரே வேற்றுமைதான்: நீ பணக்காரன், நான் ஏழை. இந்தச் சிறு விஷயத்தில் நமக்

குள் தாரதம்மியம் இருப்பது நம்முடைய சிறந்த நட்பிற்கு ஊறு விளைவிக்குமோ என அஞ்சி இந்தக் காரியத்தைச் செய்தேன். உன்னுடைய வரிப்பணத்தை நடுவழியில் கொள்ளையடித்துச் செல்ல நான்தான் ஆட்களைத் தூண்டினேன். அத் தொகையைக் கொண்டு நிலபுலங்களையும் ஏலத்தில் எடுத்துச் சுவாதீனமாக்கிக் கொண்டேன்...'' என்ருன்.

சசிபூஷணருடைய முகத்தில் துளியேனும் மாறுதல் தோன்றவில்லை. அவர் தொண்டையடைத்து, மெல்ல மெல்லப் பேசலுற்றர். ''தம்பி! நீ செய்தது சரியே. இவ்வளவு செய்தும் எந்தப் பலனுவது உண்டா? கடைசியில் என்ன வைத்துக்கொண்டாய்? தயாமூர்த்தியே!... ஹரி'' என்றதும் அவர் முகத்தில் ஒரு மெல்லிய சிரிப்பு ஊர்ந்தது; கண்களிலிருந்து நீர் பெருகியது.

ராதாமுகுந்தன், அவருடைய கால்களில் தன் தலையை வைத்து, ''அண்ணு! என்னை மன்னித்துவிடு, அண்ணு!'' என்று அழுதான்.

சசிபூஷணர் அவனை அருகில் அழைத்து, அவன் கைகளைத் தடவித்தந்து, ''தம்பி! நான் செல்வதைக் கேள். இது முதலிலேயே தெரியும். நீ எவர்களுடன் சேர்ந்து இச் சதியைச் செய்தாயோ அவர்களே என்னிடம் இதைக் கூறிவிட்டனர். அப்போதே உன்னை மன்னித்துவிட்டேனப்பா!'' என்ருர். ராதாமுகுந்தன் தன் இரு கைக்குள் முகம் புதைத்து தேம்பித்தேம்பி அழலானுன்.

வெகுநேரம் பொறுத்து, ''அண்ணு! என்னை மன்னித்ததற்கு அடையாளமாக இந்தச் சொத்தை நீயே ஏற்பாய்; வெறுப்புற்று எனக்கு அதைத் திருப்பக்கூடாது'' என்ருன். சசிபூஷணரால் பேச முடியவில்லை. அவருக்கு நினைவு தப்பிவிட்டது. ராதாமுகுந்தனையே மருளமருள நோக்கின, அவருடைய ஆணி அடித்துப் போன கண்கள். அவர் என்ன சொல்லவேண்டுமென நினைத்தாரோ? ஒருவேளை ராதாமுகுந்தனுக்கு அக் குறிப்பின் பொருள் விளங்கியிருக்கலாம்.

அக்காள்

அடுத்த வீட்டுக்காரியின் புருஷன் செய்யும் அநியாயம், அட்டூழியங்களைக் கற்பனைத்திறனுடன் வர்ணித்த தாரா, ரத்தினச் சுருக்கமாக தன் தீர்ப்பை எடுத்துக் கூறினாள்: ''இந்த மாதிரிப் புருஷன் வாயில் தீயை வைக்கலாம்.''

இதைக் கேட்ட ஜயகோபால் பாபுவின் மனைவி சசி மிகவும் வேதனைப்பட்டாள். சுருட்டு நெருப்பைத் தவிர வேறு எந்த விதமான தீயும் கணவன்மார் வாயில் இருப்பதாக எண்ணுவது மனைவிமாருக்கு அழகல்ல. அவள் உடனே கூச்சத்துடன் மறுப்புச் சொல்ல முயன்றாள். தாரா கல் நெஞ்சுக்காரி. இருமடங்கு தீவிரத்துடன் அவள், ''இப்படி ஒரு புருஷன் இருப்பதைவிட ஏழேழு பிறவிகள் விதவையாகவே இருக்கலாம்'' என்று சொல்லிவிட்டு வம்புக் கூட்டத்தை விட்டு எழுந்து சென்றாள்.

'இவ்வளவு தூரம் கரித்துக் கொட்டும்படி தன் புருஷர் அப்படி என்ன குற்றம் செய்துவிட்டார்' என்று உள்ளூற நினைத்தாள் சசி. நினைக்கும்போதே அவள் உள்ளத்தில் கணவர்பால் அன்புப்பெருக்கு ஊற்றெடுத்துப் பாய்ந்தது. படுக்கையில் கணவர் வழக்கமாகப் படுத்துக்கொள்ளும் பக்கமாகக் கரம் நீட்டித் துழாவினாள். தலையணையை அணைத்து முத்தம் சொரிந்தாள். கணவருடைய உருவமாகத் தலையணையைக் கற்பனை செய்து மோந்தாள். கதவை மூடிக்கொண்டு மரப்பெட்டியில் மங்கிக் கிடந்த ஒரு போட்டோவையும், கணவர் கைப்பட எழுதிய சில கடிதங்களையும் எடுத்தாள். அன்றைப் பிற்பகல் முழுவதும் இவ்வாறு பழைய நினைவுகளிலும், பிரிவின் வேதனையிலுமாகத் தனியறையில் கழித்தாள் சசி.

சசிகலா, ஜயகோபால் இவர்கள் புது மணமக்கள் அல்லர். சிறு வயதில் மணமாகிக் குழந்தைகளும் பிறந்தன அவர்களுக்கு. இருவரும் ஒருங்கே இருந்து சாதாரணமாகக் காலத்தைக் கழித்தவர்கள். ஒருவர்மேல் மற்றொருவருக்கு அப்படி அளவுக்கு மிஞ்சிய காதற் பெருக்குக் கிடையாது. இப்படிப் பதினறு ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்த பின்னர், வேலை விஷயமாக வெளியூருக்குச் சென்ற பின்னரே சசியின் உள்ளத்தில்

காதலின் வேகம் பிறந்தது. பிரிவினால் பிணைப்பு இறுகப்பட்டது. அதே தீவிரத்துடன் உள்ளத்தில் காதலின் சுருக்கம் இறுக லாயிற்று; சாதாரண நிலையில் எதை அவள் உணரவில்லையோ அது பிரிவின்மூலம் அவளை வருத்தியது. அதனால்தான் குழந்தை களுக்குத் தாயான பின்னரும் சசி வசந்த காலத்தின் மத்தி யான நேரத்தில் புது மணப் பெண்ணுக்குரிய காதலுடன் இன்பக் கனவுகளில் ஆழ்ந்திருந்தாள்.

அலையையும் அறியாமல் ஓடிவிட்ட இளமையின் காதல் வேகத்தில் அன்று அவள் எதிர் நீச்சலிட்டாள். அலைகளின் ஓசை அவள் மனத்தைத் தட்டி எழுப்பியது. அந்தப் பெருக்கில் நீந்திய அவள் தன் இரு கண்களிலும் பல இன்பப் பூங்கா நகரங்களைக் கண்டு மகிழ்ந்தாள். ஆனால் அவற்றில் அடி எடுத்து வைக்கும் உரிமை அவளுக்கு இல்லை. மீண்டும் கணவர் வரும்போது, வாழ்க்கையை வறட்சியாக விடக்கூடாது; வஸந்தம் வீணாகக் கூடாது. எத்தனையோ நாட்கள் கணவருடன் அநாவசியமாக வாதாடித் தொந்தரை செய்ததுண்டு. அன்று அவை அவளுடைய உள்ளத்தை வருத்தின. ...இனிமேல் பொறுமையை இழக்கக் கூடாது. கணவருடைய இஷ்டத்துக்கு மாறு கூறக் கூடாது. அவர் சொல்வது போல் நடந்து கொள்ளவேண்டும். அன்பு மண்டிய மனத்துடன் கணவர் நல்லது, பொல்லாதது எதைச் செய்தாலும் பொறுத்துக் கொண்டு போகவேண்டும். ஏனென்றால், கணவர்தான் அவளுக்கு எல்லாம்! அவர்தான் தெய்வம்!... என்றெல்லாம் அவள் தனக்குள் உறுதி செய்துகொண்டாள். பல காலம் வரையில் சசிகலா தாய் தந்தையருக்கு ஒரே செல்வப் பெண்ணாக இருந்தாள். அதனால்தான் ஜயகோபால் சொற்ப வருவாயுடன் வேலை செய்தாலும், எதிர்காலத்தைப்பற்றிய கவலையே இராமல் இருந்தார். நாட்டுப்புறத்தில் ராஜ போகத் துடன் இருக்கக்கூடிய அளவு சொத்து அவர் மாமனாருக்கு இருந்தது.

இந்த வேளையில்தான், கிழவயதில் சசிகலாவின் தாய் தந்தை யருக்கு ஒரு பிள்ளை பிறந்தது. தாய்தந்தையர் இப்படி எதிர் பாராமல் ஓர் அநியாயத்தைச் செய்து வைத்தது சசிகலாவின் உள்ளத்தைக் குன்றச் செய்தது. ஜயகோபாலும் சற்று மனவாட்டமடைந்தார்.

வயதான பின் பிறந்தவனல்லவா? தாய் தந்தையர் இந்தப் பிள்ளையைச் செல்லமாக வளர்த்தனர். புதிதாக வந்த இந்தச் சின்னஞ்சிறு பிள்ளை, தாய்ப் பாலுண்டு உறங்கும் குழந்தை தன் சிறு கரங்களால் ஜயகோபாலுடைய நம்பிக்கைகளைப் பறித்துக் கொண்டு விடவே, அவர் அஸ்ஸாம் தேயிலைத் தோட்டத்தில் வேலை தேடிக்கொண்டார். எல்லோரும் அக்கம் பக்கத்தில் எங்காவது

வேலை தேடிக்கொள்ளும்படி வற்புறுத்தினுர்கள். ஆனுல், மற்ற வர்கள்மேல் ஏற்பட்ட கோபத்தினுலோ, தேயிலைத் தோட்டத்தில் மேல் வருவாய்க்கு வழியிருந்தது என்பதாலோ, ஜயகோபால் யார் சொல்வதையும் காதில் போட்டுக்கொள்ள வில்லை. சசியைக் குழந்தைகளுடன் பிறந்தகத்தில் விட்டுவிட்டு அவர் அஸ்ஸாம் சென்றுவிட்டார். மணமான பிறகு கணவன் மனைவியரின் முதல் பிரிவு அப்போதுதான் ஏற்பட்டது. இது வேறு சசிக்குத் தம்பியின்மேல் வெறுப்பை யூட்டியது. வாய் விட்டுச் சொல்லமுடியாத ஆத்திரம் பின்னும் வெறுப்பை அதிக மாக்கியது. தம்பியோ கவலையின்றித் தாயிடம் பால் குடித்து உறங்கினுன். தமக்கையோ சாதம் சில்லென்றிருக்கிறது, பால் கொதிக்கிறது, பிள்ளை பள்ளிக்கூடம் போக நேரமாகிவிட்டது என்றெல்லாம் இராப்பகலாக முணுமுணுத்து எரிந்து விழுந்து கொண்டிருந்தாள். சில நாட்களுக்குள்ளாகவே, பிள்ளையின் தாயார் காலமானுள். சாகுமுன், குழந்தையை ஆளாக்கும் பொறுப்பை மகளிடமே விட்டுச் சென்ருள்.

தாயற்ற அந்தப் பிள்ளை வெகு சுலபமாகத் தமக்கையின் உள்ளத்தில் இடம் தேடிக் கொண்டான். கூச்சலுடன் அவன் தன் பொக்கை வாயால் தமக்கையின் மூக்கு, காது இவைகளை விழுங்கு வதற்கு முயலுவான். தன் சிறு கைகளால் அவளுடைய கூந்தலைப் பற்றியிழுப்பான்: கொஞ்சத்தில் விடமாட்டான். சூரியன் உதிக்கு முன்னரே கண் விழித்து அவள் அருகில் உருண்டு வந்து எழுப்பத் தொடங்குவான். நாளடைவில் அவன் அவளை அக்கா என்று அழைத்தான். செய்யக் கூடாத சேஷ்டைகள் செய்வான்: தின்னக் கூடாதவற்றைத் தின்பான். இப்படியெல்லாம் அவன் செய்வது கண்டு சசிகலாவினுல் பற்றின்றி இருக்க முடியவில்லை. தன்னிச்சையாகத் திரியும் அந்தச் சிறுவனிடம் தன்னை மறந்தாள். தாயற்ற பிள்ளை என்பதால் அவனிடம் அவள் அதிகச் செல்ல மாக இருந்தாள்.

பையனுடைய பெயர் நீலமணி. அவனுக்கு இரண்டு வயதிருக்கும்போது தகப்பனுருக்குக் கடுமையான நோய் கண்டது. சீக்கிரமே வரும்படியாக ஜயகோபாலுக்குச் செய்தி சென்றது. ஜயகோபால் மிகவும் பிரயாசைப்பட்டு விடுமுறை எடுத்துக்கொண்டு வந்தபோது காளீபிரஸன்னருக்குக் காலம் மிகக் குறுகிவிட்டது.

காளீபிரஸன்னர் தம் பிள்ளையை ஜயகோபாலின் பொறுப் பில் விட்டு, மகளுக்குத் தன் சொத்தில் நான்கில் ஒரு பகுதியை எழுதி வைத்தார். ஜயகோபால் சொத்தைக் கவனித்துக்கொள் வதற்காகத் தன் வேலையை விட்டுவிட வேண்டியதாயிற்று.

பல காலம் கழிந்த பிறகு தம்பதியர் மீண்டும் கூடினர்.

ஏதாவது ஒரு பொருள் உடைந்தால் மீண்டும் அதை உருப்படியாக ஒட்ட வைக்கலாம். ஆனால் இருவர் பிரிந்தால், நீண்ட காலம் சென்றபிறகு பழைய ரீதியில் சேருவது இயலாது. ஏனென்றால், மனம் உயிருள்ளது. மாறுவதும், முடிவதும் கண் நேரத்தில் அதனால் இயலும்.

சசிகலாவுக்கு இந்தச் சேர்க்கை புதுவிதமாகத் தோன்றியது. மீண்டும் மணமானதுபோன்ற உணர்ச்சியே அவளுக்கு ஏற்பட்டது. முதல்முறை பழகிப்போய் சாரமற்றதெனத் தோன்றிய வாழ்க்கை, பிரிவுக்குப் பின்னர்ப் புது விதமாகத் தென்பட்டது. எது எப்படியானாலும் சரி, புதிதாகக் கணவரிடம் மூண்ட இந்தக் காதல் தீவிரம் எத்தனை காலமானாலும் மங்கி விடக்கூடாது என்று உறுதிகொண்டாள் சசி.

ஜயகோபாலின் மனநிலையோ வேறுவிதமாக இருந்தது. முன்பு இருவரும் பிரிவின்றிச் சேர்ந்து இருந்தபோது, மனைவியுடன் சுயநலம் காரணமாகவும், பழக்கத்தின் காரணமாகவும் ஒரு மன ஒற்றுமை இருந்தது. அன்று மனைவி அவருக்கு இன்றியமையாதவளாக இருந்தாள். அவள் இராவிட்டால் அன்றாட வாழ்க்கை ஏதோ வெறிச்சென்றாகிவிட்டது போலிருக்கும். இந்தப் பழக்கம் காரணமாக வெளியூர் சென்ற புதிதில் ஜயகோபால் மிகவும் சிரமப்பட்டார். ஆனால் நாளடைவில் இந்தப் பிரிவின் நடுவே புதுப்பழக்கம் ஒன்று புகுந்து அந்தச் சிரமம் தெரியாதபடி செய்துவிட்டது. அதுமட்டுமே அல்ல; முன்பெல்லாம் ஒருவித முயற்சியும் இன்றி நிம்மதியாக அவர் காலம் கழியும். நடுவே இரண்டு ஆண்டுகள், வேலையில் முன்னுக்கு வரவேண்டும் என்ற தீவிரத்தில் அவருக்கு வேறு எதுவுமே நினைவில்லை. இந்த ஆர்வத்தின்முன் பழைய வழக்கங்கள் யாவும் நிழலைப் போலாயின. பெண்களின் வாழ்வில் காதல் பெரிய மாறுதல் உண்டாக்குகிறது. ஆண்களின் வாழ்வில் மாற்றங்களை உண்டு பண்ணுபவை கெட்ட வழக்கங்கள்.

இரண்டு வருஷங்களுக்குப் பின்னர் வந்த ஜயகோபால் முற்றும் புதுமையான மனைவியையே கண்டார். அவளுடைய வாழ்க்கையில் தன் இளம் மைத்துனன் ஒரு பெரிய மாறுதலை யூட்டியிருப்பது அவருக்குத் தெரிந்தது. இது அவருக்கு முற்றும் புதுமையானது. அவருக்கு அதில் சிறிதும் சம்பந்தமில்லை. இந்தக் குழந்தையிடம் தனக்குள்ள பாசத்தில் கணவரும் பங்கு பெறச் சசி பல முயற்சிகள் செய்தும் பலன் இல்லை. நீலமணியை இடுப்பில் தூக்கிக்கொண்டு மலர்ந்த முகத்துடன் கணவரை அணுகுவாள். நீலுவோ அவள் கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டு தோளில் முகம் புதைப்பான். மனத்தை வசப் படுத்திக் கொள்ளக்கூடிய திறமைகளையெல்லாம் தம்பி தன்

கணவரிடம் காட்டவேண்டும் என்று சசி விரும்பினுள். ஆனல், ஜயகோபால் அதைச் சிறிதும் வரவேற்கவில்லை. குழந்தையும் அவரிடம் அவ்வளவு நெருங்கவில்லை. தேகம் மெலிந்து பெருத்த தலையுடனிருக்கும் இந்தப் பிள்ளையிடம் இவ்வளவு பாசம் கொள்ளும்படியாக என்னதான் இருக்கிறதோ என்று ஜயகோபால் நினைத்தார்.

அன்பு, பாசம் இவைகளைப்பற்றி பெண்கள் சட்டென்று புரிந்துகொள்ளும் சுபாவம் படைத்தவர்கள். நீலமணியிடம ஜயகோபாலுக்குச் சிறிதும் அன்பு கிடையாதென்று சீக்கிரத் திலேயே சசி புரிந்துகொண்டாள். சிறுவனைத் தன்னிடமே மறைவாக வைத்துக்கொள்ளலானுள். கணவருடைய வெறுப்புப் பார்வையில் படக்கூடாதென்று அவள் அவனைக் கட்டிக் காத்ததன் விளைவாக அவனிடம் அவள் கொண்ட பாசம் பன்மடங்காகப் பெருகியது. ஒளித்து வைத்துத் தனதே என்றுள்ள ஒரு பொருளிடம் ஏற்படும் அன்பு தீவிரமாகத்தானே இருக்கும்?

நீலமணி அழுதால், ஜயகோபாலுக்குக் கோபம் வரும். அதனுல் சசி அவனை மார்பில் அணைத்து, தோளில் தூக்கி அவனுடைய அழுகையை நிறுத்துவாள். அதிலும் முக்கியமாக இரவு வேளைகளில் நீலமணியின் அழுகை கணவருடைய தூக்கத்தைக் கலைத்தால் அவர் குழந்தையின்மேல் கோபத்துடன் எரிந்துவிழுவார். சசி மிகவும் வேதனையுடன் குற்றவாளி போலக் குன்றிப் போவாள். அந்தக் கணமே நீலுவை எடுத்துக்கொண்டு தொலைவில் சென்று, ''என் செல்லம், என் மாணிக்கம்'' என்று முதுகில் தட்டித் தூங்கப் பண்ணுவாள்.

வீட்டில் சிறுபிள்ளைகள் இருந்தால் பூசல்கள் எழுவது சகஜம். முன்பு இந்த மாதிரி வேளைகளில் சசி தன் குழந்தைகளைத் திட்டுவாள். தம்பியின் பக்கமே பரிந்து வருவாள். ஏனென்றுல், அவன் தாயில்லாப் பிள்ளையாயிற்றே! இப்போது நீதிபதி மாறி விடவே, தீர்ப்பும் மாறிவிட்டது. எப்போதும் அநியாயமாக, தவறு செய்யாதபோதுங்கூட நீலமணி அடிபட வேண்டிய தாயிற்று. இந்த அநியாயம் ஈட்டிபோல் சசியின் உள்ளத்தில் தாக்கும். அடிபட்ட தம்பியை உள்ளே அழைத்துச் சென்று, பக்ஷணம் பொம்மையெல்லாம் கொடுத்துக் கொஞ்சுவாள். தன் ஆதரவினுல், நொந்துபோன குழந்தையின் உள்ளத்துக்கு அமைதி யூட்டுவாள்.

இதன் விளைவாகச் சசி அவளிடம் பரிவு அதிகம் காட்ட, ஜயகோபாலின் வெறுப்பு அதிகரித்தது. அதைக் கண்ட சசியின் அன்பு பன்மடங்காகப் பெருகியது. ஜயகோபால் ஒருபோதும் தன் மனைவியிடம் கடுமையாக நடந்துகொண்டவரல்ல. அவளும் பணிவுடனும் அன்புடனும் அவருக்குப் பணிவிடைகள் செய்தாள்.

இந்தச் சிறுபிள்ளையால்தான் அவர்களுக்கிடையே மனப் புகைச்சல் ஏற்பட்டது. வெளிப்படையாக நேரும் சச்சரவு, இப்படி உள்ளூறப் புகையும் பூசலைவிட எவ்வளவோ மேலென்று சொல்லலாம்.

நீலமணியின் உடம்பில் தலைதான் பெரியது. பிரம்மதேவன் ஒரு சிறு குழலினுள் காற்றை ஊதி, ஒரு பெரிய குமிழியை உப்ப வைத்திருப்பதுபோலத் தோன்றும். வைத்தியர்கள் வெகு நாட்கள்வரை பையன் நீர்க்குமிழியைப் போலவே சீக்கிரம் மறைந்துவிடுவான் என்று நம்பியிருந்தார்கள். பல நாட்கள் வரை அவனுக்குப் பேசவும் நடக்கவும் வராமலிருந்தது. வேதனை மண்டிய அந்த முகத்தைப் பார்த்தால், கிழவயதின் கவலைச் சுமையை தாய் தந்தையர் அந்தச் சிசுவின் தலையினுள் சுமத்தி விட்டுச் சென்றிருப்பார்களோ என்றே எண்ணத் தோன்றும். தமக்கையின் ஆதரவும், அக்கறையுமே அவனை ஆபத்திலிருந்தும் காப்பாற்றி ஆறு வயதுவரை வளர்த்துவிட்டது.

கார்த்திகை மாதம் 'பாயிபோன்டா' (ப்ராத்ரு த்விதீயை) என்ற பண்டிகை அன்று சசி நீலுவுக்குப் புதுச் சட்டை, சரிகை வேஷ்டியெல்லாம் அணிந்து, பொட்டு வைத்தாள். அப்போது அடுத்த வீட்டுப் பெண் தாரா அவளோடு சண்டை பிடித்தாள்: ''ஏண்டி, ரகசியமாக அவனை நாசமடித்துவிட்டு, இப்படித் தடபுடலாகப் பண்டிகை கொண்டாடுகிறாயா? வெட்கமாக இல்லை?''

சசிக்குக் கோபமும் வருத்தமும் கலந்து வந்தன. கடைசியில் விஷயம் தெளிவாகியது. அவர்கள் கணவன் மனைவிமார் கூடி நீலமணியின் சொத்துக்களை வரி கட்டாமல் ஏலத்தில் விட்டு, ஜயகோபாலின் அத்தை பிள்ளையின் பேரில் வாங்கி வருவதாக ஊரில் பேச்சாக இருந்தது.

சசி அதைக் கேட்டு வயிற்றெரிச்சலுடன் இவ்வளவு பெரிய பொய்யைச் சொன்னவர்கள் வாயில் புழு வரட்டும் என்று சாப மிட்டாள். பின்னர் அழுதுகொண்டே கணவரிடம் சென்று ஊரில் பரவும் செய்தியைச் சொன்னாள்.

''இந்தக் காலத்தில் எவரையுமே நம்புவதற்கில்லை. உபேன் என் அத்தை பிள்ளை. அவனிடம் சொத்துக்களை விட்டுவிட்டு நான் நிம்மதியாக இருந்தேன். அவன் எப்போது வரி கட்டாமல் ஏமாற்றித் தன் பேரில் நிலங்களை மாற்றிக்கொண்டானோ எனக்கே தெரியாது'' என்றார் ஜயகோபால்.

சசி வியப்புடன், ''ஏன், வழக்குப் போடுங்களேன்'' என்றாள்.

''அத்தை பிள்ளையின்மேல் எப்படி வழக்குப் போடுவது? வழக்குப் போட்டாலுங்கூட பலன் ஒன்றுமில்லை. வீண் பணச் செலவுதான்.''

கணவர் சொல்வதை நம்புவது மனைவியின் கடமைதான். ஆனால் சசியால் அதை நம்ப முடியவில்லை. சுகம் நிறைந்த வாழ்க்கை, அன்பு நிறைந்த இல்லறம் யாவும் பயங்கரமான உருவுடன் அவள்முன் தோன்றின. தனது இருப்பிடம் எனக் கருதிய வீடு இன்று சுயநலத்தின் குகையாக அவளுக்குப் பட்டது. அக்காவும் தம்பியுமாக அந்த வலையினுள் சிக்கிக்கொண்டு தவித்தனர். அவளோ பெண்; நீலமணியைக் காப்பாற்றும் வகையறியாது விழித்தாள். யோசிக்க யோசிக்க, பயமும் வெறுப்பும் கூடி அவள் நீலுவின்மேல் பின்னும் அதிகமாகத் தன் உள்ளன்பைச் செலுத்தினாள். வழி தெரிந்தால், கவர்னர் துரையிடம் சொல்லலாமே! மகாராணியிடமே விண்ணப்பம் செய்து, தன் தம்பியின் சொத்துக்களைக் காப்பாற்றிக்கொள்ள லாமே! மகாராணி நீலமணியின் ஹாஸில்புர் நிலங்களை (வருஷத்துக்கு எழுநூற்று எண்பது ரூபாய் வருமானம் வரக் கூடியவை) விற்க ஒருகாலும் அநுமதிக்க மாட்டார்களே என்றெல்லாம் எண்ணினாள்.

சசி எவ்வாறு மகாராணியிடம் விண்ணப்பம் செய்யலாம், அத்தை பிள்ளையை அடக்கலாம் என்று யோசனை செய்துகொண் டிருக்கும் சமயத்தில், நீலமணிக்கு எதிர்பாராமல் ஜுரம், வலிப்பு, மயக்கம் எல்லாம் பிடித்துக்கொண்டன.

ஜயகோபால் உள்ளூர் வைத்தியனை அழைத்துவந்தார். சசி நல்ல வைத்தியரைக் கூப்பிடச் சொன்னபோது, ''ஏன், மதிலால் நல்ல டாக்டர் இல்லையா?'' என்றார். சசி அவர் காலைப்பிடித்துக் கெஞ்சினாள்; கடைசியில் அவர், ''சரி, பட்டணத்து டாக்டரை வரவழைக்கிறேன்'' என்றார்.

நீலமணியை மார்பில் அணைத்தவாறு படுத்திருந்தாள் சசி. நீலமணி ஒரு கணநேரங்கூடத் தன்னைவிட்டு அவள் செல்ல இடம் தருவதில்லை. ஏமாற்றிவிட்டுச் செல்வாளோ என்ற பயத்தில் எப்போதும் அவளைக் கட்டியவாறே கிடப்பான். தூங்கும்போது கூடத் தலைப்பை விடமாட்டான். பகலெல்லாம் இப்படிக் கழிந்த பின் சாயங்காலம் ஜயகோபால் வந்தார். ''பட்டணத்தில் டாக்டர் பாபுவைக் காணவில்லை. எங்கேயோ தொலைவில் யாரையோ பார்க்கப் போயிருக்கிறாராம்'' என்றவர் சற்றைக் கெல்லாம், ''வழக்கு விஷயமாக நான் இப்போதே வேறு ஊருக்குப் போக வேண்டியிருக்கிறது. மதிலாலிடம் நான் சொல்லியிருக்கிறேன். அவர் வழக்கமாக வந்து பார்ப்பார்'' என்று சொல்லிச் சென்றார்.

இரவு நீலமணி பிதற்றத் தொடங்கினான். காலையில் ஒன்றும் யோசியாமல் சசி தம்பியை எடுத்துக்கொண்டு படகில் ஏறிப் பட்டணத்தில் டாக்டர் வீட்டுக்குச் சென்றாள். டாக்டர்

வீட்டில்தான் இருந்தார். எங்கும் வெளியூர் செல்லவில்லை. நல்ல இடத்துப் பெண் இப்படி வந்து நிற்பதுகண்டு அவர் பரபர வென்று தங்க இடமும் துணைக்கு ஒரு வயதான விதவையையும் ஏற்பாடு செய்தார். பையனுக்கு வைத்தியமும் பார்த்தார்.

மறுநாளே ஜயகோபால் வந்து சேர்ந்தார். கோபத்தில் நெருப்பாய்க் கொதித்து, உடனே தம்மோடு ஊருக்கு வரும்படி அழைத்தார்.

''என்னை வெட்டிப் போட்டாலும் சரி, நான் வரமாட்டேன். என் நீலமணியைக் கொன்றுவிடப் பார்க்கிறீர்கள். அவனுக்கு அம்மா, அப்பா யாருமே கிடையாது. என்னைத் தவிர, அவனை யார்தான் காப்பாற்றுவார்கள்?''

''சரி, இங்கேயே கிட; என் வீட்டிற்குள் இனி வராதே'' என்றார் ஜயகோபால்.

சசி சட்டென்று உரக்க, ''உங்கள் வீடா! வீடு என் தம்பி யினுடையதுதானே?'' என்றாள்.

''சரி, அதையும் பார்க்கலாம்'' என்றார் ஜயகோபால்.

ஊரில் இது விஷயமாகச் சில நாட்கள் ஒரே பேச்சாக இருந்தது. தாரா, ''புருஷனோடு சண்டை போடவேண்டுமானால் வீட்டுக்குள்ளேயே போடு. வீட்டை விட்டு ஏன் வெளியே போக வேண்டுமாம்! ஆயிரம் இருந்தாலும் தாலி கட்டிய புருஷன் இல்லையோ?'' என்றாள்.

எடுத்துச் சென்ற பணம், தன் நகைகளை விற்ற பணம் இவை களைக் கொண்டு சசி தன் தம்பியை மரணத்தின் வாயிலிருந்து மீட்டாள். அப்போதுதான் அவளுக்கு வருஷம் ஆயிரத்தைந்நூறு ரூபாய் வருமானம் வரக்கூடிய தோப்பு, அதிலிருந்த வீடு எல்லாவற்றையும் ஜமீன்தாருடன் சூழ்ச்சிசெய்து ஜயகோபால் தம் பேருக்கு மாற்றிக் கொண்டுவிட்ட செய்தி தெரியவந்தது. இனி, தன் தம்பிக்கு அதில் உரிமை ஏதுமில்லை என்று தெரிந்தது.

உடம்பு குணமாகி எழுந்த நீலமணி, ''அக்கா! வீட்டுக்குப் போகலாம்'' என்றான். அங்கு அக்காள் பிள்ளைகளுடன் அவன் விளையாடலாமல்லவா? ''நம் வீட்டுக்குப் போகலாம் வாயேன், அக்கா'' என்று அவன் கூறியதைக் கேட்ட சசி அழுதாள். ''நமக்கு ஏதடா வீடு, நீலு!'' - அழுதால் மட்டும் போதுமா! நீலுவுக்கு அவளைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு டெபுடி மாஜிஸ்டிரேட் தாரணி பாபுவின் வீட்டுக்குப் போய் அவர் மனைவியிடம் முறை யிட்டாள்.

டெபுடி பாபுவுக்கு ஜயகோபாலைத் தெரியும். நல்ல குடும் பத்துப் பெண் கணவனுடன் சண்டையிட்டு வீட்டை விட்டு வெளியே வந்து சொத்துக்காக வழக்காடுவது அவருக்கு வெறுப்

பூட்டியது. அவளுக்கு ஆறுதல் கூறி ஜயகோபாலுக்கு உடனே கடிதம் எழுதினர். ஜயகோபால் அவளைத் தம்பியுடன் பலவந்தமாகப் படகில் ஏற்றி வீட்டுக்கு அழைத்துச் சென்றார். இரண்டாவது முறையாகப் பிரிவுக்குப் பின்னர்த் தம்பதிகள் மூன்றும் தடவையாகக் கூடியதும் பிரம்ம தேவனின் ஏற்பாடு போலும்! பல நாட்கள் கழிந்த பின்னர், தன் பழைய தோழர்களுடன் சேர்ந்து நீலு மகிழ்ச்சியுடன் விளையாடித் திரிந்தான். அவன் இப்படி நிம்மதியாக விளையாடுவது கண்டு சசியின் நெஞ்சு வெடித்துக்கொண்டு துக்கம் வந்தது.

குளிர் காலம் வந்தது. மாஜிஸ்டிரேட் துரை நாட்டுப் புறங்களைச் சுற்றிப் பார்க்க வந்தவர் ஊரில் கூடாரம் அடித்துத் தங்கியிருந்தார். ஊர்ப்பாட்டையில் துரையை நீலமணி சந்திக்க நேர்ந்தது. மற்றச் சிறுவர்கள் துரையைக் கண்டதும் சாணக்யன் கூறிய சுலோகத்தில் சற்று மாறுதல் செய்து, நகம், கொம்பு, பற்கள் கொண்ட பிராணிகளுக்கு ஒப்பாக அவரை எண்ணி ஒதுங்கிச் சென்றார்கள். ஆனால், நீலமணியோ மலர்ந்த முகத்துடன் துரையையே உற்றுக் கவனித்தான்.

துரையும் அவனுடைய அக்கறையைக் கண்டு அருகில் வந்து, ''நீ பள்ளிக்கூடத்தில் படிக்கிறாயோ?'' என்று கேட்டார்.

மெல்லத் தலையசைத்து, ''ஆம்'' என்றான் நீலமணி.

''எந்தப் புஸ்தகம் படிக்கிறாய்?''

புஸ்தகம் என்ற சொல்லின் பொருள் விளங்காமல் அவர் முகத்தையே நோக்கினான் நீலமணி.

மாஜிஸ்டிரேட் துரையைக் கண்டு பேசிய விவரத்தை மிகவும் ஆர்வத்துடன் தமக்கையிடம் நீலமணி சொன்னான்.

அன்று பகலில் கோட்டு, கால் சட்டை, தலைப்பாகை அணிந்து துரையைப் பார்க்க ஜயகோபால் சென்றார். சுற்றுமுற்றும், துரையைப் பார்க்கவந்த கூட்டம்; வேலையாட்கள், டவாலிகள், போலீஸ்காரர்கள் வேறு குழுமியிருந்தனர். துரை வெயிலுக்காக வெளியே மர நிழலில் மேஜையைப் போட்டுக்கொண்டு இருந்தார். ஜயகோபாலை அவர் நாற்காலியில் உட்காரச் சொல்லி ஊர் விஷயங்களை விசாரித்தார். ஜயகோபால் ஊரார் முன்னிலையில் பெருமையுடன் அங்கு உட்கார்ந்து பூரித்தார். இந்தச் சமயத்தில் சக்கரவர்த்தியோ, நந்தியோ வந்து தம் பெருமையைக் காணவேண்டுமே என்று எண்ணியது அவர் மனம்.

அந்தச் சமயம் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் தலையை முக்காட்டினால் மூடியவாறு நீலமணியுடன் ஒரு பெண் வந்து நின்றாள். ''ஐயா! உங்கள் கையில் இந்த அநாதைத் தம்பியை ஒப்படைத்து விட்டேன். நீங்கள்தான் இவனைக் காப்பாற்றவேண்டும்'' என்றாள்.

துரை தாம் முன்பு கண்ட பையனையும், அவனுடன் வந்திருந்த பெண்ணையும் பார்த்ததும், மரியாதைக்காக எழுந்து நின்றார். ''நீங்கள் உள்ளே வந்து பேசலாமே'' என்றார்.

''நான் சொல்ல வேண்டியதை இங்கேயே சொல்லி விடுகிறேனே'' என்றாள் அவள்.

ஜயகோபாலுக்கு இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. ஊராரும் ஆவல்பொங்க என்ன நடக்கிறதென்று பார்க்க நெருங்கினர். ஆனால், துரை பிரம்பை எடுக்கவும் அவர்கள் பின் வாங்கினர்.

சசி தன் தம்பியின் கையைப் பிடித்துக்கொண்டு தாய் தந்தையற்ற அவனுடைய வரலாற்றை விவரமாகச் சொன்னாள். ஜயகோபால் இரண்டொரு தடவைகள் குறுக்கிட முயன்றார். ஆனால் துரை கண்கள் சிவக்க, ''சும்மென்றிரு'' என்றார். பிறகு பிரம்பினால் அவரை எழுந்திருக்கச் சொல்லிச் சைகை செய்தார்.

ஜயகோபால் சசியின் மேல் உள்ளூற எரிச்சலுடன் எழுந்து நின்றார். நீலமணி தமக்கையின் உடலுடன் ஒட்டியவாறு நின்று திறந்த வாயுடன் அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டு நின்றான். சசி சொல்லி முடித்த பிறகு துரை ஜயகோபாலைச் சில கேள்விகள் கேட்டார். அவர் சொன்ன பதில்களைக் கேட்டபின் சற்று நேரம் சும்மென்றிருந்தார். ''அம்மா! இந்த வழக்கு என்னிடம் வராது. இருந்தாலும் நீ கவலைப்படாதே. இது விஷயமாக நான் என் கடமையைச் செய்கிறேன். நீ உன் தம்பியுடன் நிம்மதியாக வீட்டுக்குப் போகலாம்'' என்றார்.

''ஐயா! என் தம்பிக்கு அவனுடைய வீடு திரும்பக் கிடைக்கிற வரையில், இவனை வீட்டுக்கு அழைத்துச் செல்ல எனக்குத் துணிவில்லை. நீலமணியை உங்களிடமே வைத்துக்கொள்ளுங்கள். இராவிட்டால் இவன் உயிருடன் இருப்பதே முடியாது'' என்றாள் சசி.

''நீ எங்குப் போவாய்?''

''நான் என் கணவர் வீட்டுக்குப் போகிறேன். எனக்கு என்ன பயம்?''

துரை சற்றுச் சிரித்தார். பிறகு வேறு வழியின்றி கழுத்தில் தாயத்துடன் நின்ற அந்த ஒல்லியான வங்காளிச் சிறுவனைத் தம்முடன் அழைத்துச்செல்ல ஒப்புக்கொண்டார்.

சசி, வீட்டுக்குச் செல்லப் புறப்பட்டபோது, நீலமணி அவளுடைய தலைப்பைப் பிடித்துக்கொண்டான். துரை, ''அப்பனே! பயப்படாதே! வா'' என்றார்.

முசுப்பினுள் கண்களைத் துடைத்துக்கொண்டே சசி, ''என் கண்ணேல்லியோ! மறுபடியும் நான் உன்னைப் பார்க்க வருவேன்'' என்றாள். பிறகு அவனைத் தடவி முத்தம் கொடுத்துவிட்டுப்

பரபரவென்று தலைப்பை விடுவித்துக்கொண்டு சென்றாள். துரை அவனைத் தம் கரங்களால் அணைத்துக்கொண்டார். நீலு, ''அக்கா! அக்கா!'' என்று உரக்க அழுதான். 'சசி ஒருமுறை திரும்பிப் பார்த்தாள். தனது வலக் கரத்தை உயர்த்தி அவனுக்கு ஆறுதல் கூறியவள், உடைந்துபோன உள்ளத்துடன் வீடு சென்றாள்.

மீண்டும் கணவன் மனைவியர் இல்லத்தில் கூடினர். இதுவும் விதியின் திருவிளையாடல்தான். ஆனால், இந்தத் தடவை இந்தக் கூடல் நீடிக்கவில்லை. சில நாட்களுக்குள்ளாகவே ஒருநாள் காலையில், சசிக்கு இரவு வாந்திபேதி கண்டு இறந்ததாயும், அப்போதே அவளைக் கொளுத்திவிட்டதாகவும் ஊரில் செய்தி பரவியது.

இதுபற்றி இரண்டாம்பேர் வாய் திறக்கவில்லை. அடுத்த வீட்டுக்காரி தாராமட்டும் நடுநடுவே குமுறுவாள்; ஊரார் அவள் வாயை அடக்கிவிடுவார்கள்.

சசி கடைசியாக, ''மறுபடியும் உன்னைப் பார்க்க வருகிறேன்'' என்று நீலுவிடம் சொன்னாள்; அதை எங்கு நிறைவேற்றினாளோ!

படித்துறையின் கதை

என்றோ நிகழ்ந்த சம்பவம் கல்லிலே பதிவது உண்டெனின் மாந்தர் மறந்த அப் பழங் கதையை என்னுடைய கற்படிகள் உங்களுக்கு எடுத்துக் கூறும். பழைய வரலாற்றை அறிய விழை வீராயின் இந்தப் படிகளில் அமருங்கள். கீழே உருண்டோடும் நீத்தத்தின் இன்னொலியைக் கூர்ந்து கேளுங்கள். பல ஆண்டு களுக்கு முன்பு நிகழ்ந்த ஓர் அதிசயக் கதை உங்கள் செவிக்கு எட்டும்.

முன்னர் நிகழ்ந்த அந்த விஷயம் நினைவுக்கு வருகிறது. இதே போன்று ஒருநாள், ஐப்பசி மாதம் பிறக்க இரண்டே நாட்கள் இருந்தன; வைகறைப் பொழுது மெல்லிய குளிர்காற்று வீசி, துயில் கலைந்தெழுந்தவர்க்கு இன்பத்தைத் தந்தது. மரங்களில் தளிர்களுக்கிடையே காற்றின் மெல்லூறல் சிலிர்த்துச் சென்றது. நிறை வெள்ளமாக விரையும் கங்கையாறு. என்னுடைய துறையின் நான்கு படிகள்மட்டுமே நீருக்குமேல் தலையைக் காட்டின. ஆறும் கரையும் ஒன்றுகூடும் விந்தைக் காட்சி. கரைமேட்டிலுள்ள மாஞ்சோலைவரை பிரவாகம் பரவியிருந்தது. அதோ தெரிகின்றன, ஆற்றின் வளைவில் மூன்று பழைய சூளை மேடுகள்; அவை அச் சமயம் நீருக்குமேல் சிறிதே எட்டிப் பார்த்தன. கரையிலிருந்து தம் கிளைக் கரங்களை நீட்டும் வேல மரங்களின் வேர்களில் வலைஞர் தம் தோணிகளைக் கட்டி வைப்பர். காலையில் வரும் நீரேற்றத்தில் அவை மிதந்து அசையும். இளமையின் வேகத்தைப் போன்றே ஆற்று வெள்ளமும் கட்டிற் குட்படாது இரு கரையும் பெருகி வழிந்து சென்றது.

சரத் காலமானதால் புனல் ததும்பும் ஆற்றின்மேல் படியும் ஞாயிற்றின் ஒளி, சண்பக மலரின் பசும்பொன் வண்ணமாகத் திகழ்ந்தது. அவ் வகையான வண்ணக் கவினை வேறு எந்தப் பருவ காலத்திலும் காணமுடியாது. எக்கரிட்ட ஆற்றிடைக் குறைகளில் நாணற்புதர்களிடையே கதிரவனின் வெளிச்சம் பாய்ந்தது. வெளேரெனப் பூத்த நாணல் மலர்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகத்தான் தெரிந்தன; இன்னும் கூட்டமாகப் பூக்க வில்லை. ராம் ராமென்று இறைவனைக் கும்பிட்டு வலைஞர் தோணிகளை அவிழ்த்தனர். பறவையினங்கள் இறகடித்து ஒளியைப்

பருக நீல் விசும்பிடைப் பறந்து சென்றன. தோணிகள், தம் வெள்ளைச் சீலைகள் காற்றிலே ஊதிப் புடைத்துக் கிளம்பின. அவை அசைந்து செல்வது அன்னங்களை நினைவுறுத்தின. ஆனால், தோணியின் சீலை - இறகுகள் மேலே விரிந்து இருந்தன.

புரோகிதர், வழக்கம்போல் மடிசஞ்சி, பூஜைப் பேழை இவற்றுடன் நீராடத் துறைக்கு வந்தாயிற்று. ஊர்ப் பெண்டிர் இரண்டொருவர், குடமும் கையுமாக நீர் மொள்ள வந்தனர்.

இவை வெகுநாளைய செய்திகள் அல்ல. அதிக நாட்களாயின போல் உங்களுக்குத் தோன்றும். ஆனால் எனக்கு, இதெல்லாம் நேற்று நடந்தவையாகவே இருக்கின்றன. எனது வாழ்நாள் இந்த நதியுடன் தொடர்புடையதாகும். என் வரைக்கும் நான் எந்தக் கால வரம்பிற்கும் கட்டுப்படாத மாதிரிதான். பகலில் எனது ஒண்ணிழலும் இரவில் என் கருஞ்சாயையும் இவ்வாற்று நீரில் படிந்து எங்கோ மறைந்து விடுகின்றன! இவ் விந்தையை, நான் காணாத நாளே கிடையாது. எனது சில வடிவிற்கு முதுமை வந்துவிட்டபோதிலும், எனது உள்ளத்தில்மட்டும் அழியாத தோர் இளமை திகழ்கிறது. பல ஆண்டுகளின் குழப்பமான நினைவுகள் பாசி உருவில் என்னை மூடி இருப்பினும், என் மேல் கதிரவனின் வெம்மை படிந்துகொண்டுதான் இருக் கிறது. சில நினைவுகள் காரணமின்றி என்னைவிட்டு அகலாமல் இருக்கின்றன. கங்கையின் ஓதம் படாத என் படிகளின் புரைகளில் முளைத்திருக்கும் குத்துச் செடிகளும் கொடிகளுமே எனது பழமைக்கு அத்தாட்சிகளாகும். இந் நினைவுகளுடன் என்னைப் பிணைத்து எனது வாழ்நாளைப் புதுமையும் பசுமையும் கொண்டு விளங்கும்படி அவை செய்கின்றன. கங்கை படிப் படியாக என்னை விட்டு இச் சில ஆண்டுகளாக விலகிக்கொண்டே போகிறாள். நானும் ஒவ்வோர் அடியாகச் சிதைவுற்று வருகிறேன். நீராடிவிட்டு, குளிரினால் உடல் நடுக்குற நாமாவளியை முணு முணுத்துக்கொண்டே இதோ வீடு திரும்புகிறாரே, சக்கரவர்த்தி குடும்பத்தைச் சேர்ந்த பெரியவர் - இவருடைய அம்மாவைப் பெற்ற தாயார் 'இவ்வளவுண்டு' பெண்ணாயிருக்கும்போதே எனக்குத் தெரியும். நன்றாகக் கவனம் இருக்கிறது. அவள் நாள் தவறாது ஆற்றிலே இலைப்படகை விட்டு வேடிக்கை பார்ப்பது வழக்கம். எனக்கு இடது பக்கமாக இருக்கும் மேட்டில் அக் குட்டிப் படகு சிக்கிச் சுழன்று நீரின் விசையில் அடித்துச் செல்லப் படும். இதையே அவள் கண்ணிமைக்காமல் கவனிப்பாள். எனக் குத்தான் காலம் ஒரு பொருட்டே இல்லையே. பார்த்துக்கொண் டிருக்கும்போதே அச் சிறுமி, பெரியவளாகி நீர் மொண்டு செல்லத் தன் மகளுடன் ஆற்றுக்கு வந்தாள். தன்னுடன் வரும் சிறுமியர் ஒருவர்மீது ஒருவர் நீரை வீசிக் குதூகலமாகச் சிரிக்கும்

போது, அந்தப் பெரிய மனுஷி அவர்களை அதட்டுவாள். இவளல்லவோ ஒரு சமயம் இலைப்படகை விட்டு வேடிக்கை பார்த்த பெண் என்று எனக்கு நினைவு வரும் - அவ்வளவு பழமை மிக்க பாறை ஆன்மா நான்.

நான் எதையோ எடுத்து வம்பளக்கிறேனே...ஒன்றை எடுக்கையில், மற்றொரு நினைவின் ஓட்டம் அதை இழுத்துச் சென்று விடுகிறது. அதைப் பிடித்து நிறுத்த என்னால் இயலவில்லை. நீரில் செல்லும் இலைப்படகையொத்து இரண்டொரு விஷயங்கள் தப்பித் தவறி என் மனத்திடைச் சிக்கிவிடுகின்றன. அந்தக் கதையின் பாயிரம் என்னைச் சுற்றிச் சுற்றி மூழ்கியும் வெளியே தலை நீட்டியும் அலைகிறது. படகைப் போலவே நான் சொல்லப் போகும் கதையும் சிறியதுதான். அப்படி விசேஷம் ஒன்றுமில்லை அதில். எளிய உள்ளம் படைத்த அச் சிறுமி இரு மலர்களை ஏந்திய படகு, நீரில் ஆழ்வதை நோக்கி எவ்வாறு பெருமூச் செறிந்து தன் வீட்டிற்குத் திரும்பினாளோ அவ்வாறே நீங்கள் இக் கதையைக் கேட்டதும் வெய்துயிர்ப்பீர்! இதில் ஐயமே இல்லை.

எதிரே தென்படும் கோயிலுக்கு அணித்தாக, நான் கூறும் சமயத்தில் கோஸ்வாமி வீட்டாரின் மாட்டுக் கொட்டகை இருந்தது. அது இருந்த அடையாளத்தை அங்குள்ள குட்டிச் சுவர் காட்டும். கோஸ்வாமி இங்கு வந்து குடிபுகுவதற்கு முன்னர், அவ்விடத்தில் ஒரு பெரிய வேலமரம் உண்டு. அதனருகில் ஓலைக் குடிசையொன்று இருந்தது.

இன்று எனது உடலில் ஊடுருவி என்னை மேலும் சிதிலமாக்கும் இந்தப் பெரிய ஆலமரம் அச் சமயம் மிகச் சிறிய செடி. கொழுந் தளிர்விட்டு அது என் மடிமீது எப்போதும் அசைந்து கொண்டே இருக்கும். வெயில் பொழுதில் என்மீது அதன் நிழல் விளையாடும்: அதன் மெல்லிய வேர்கள் ஒரு சிறு பிள்ளையின் மெல் விரல்கள் போன்று என் ஆகத்துள் குருகுருக்கும். அதன் தளிர் ஒன்றை யாராவது கிள்ளினாலோ எனக்கு அழுகை வந்து விடும். இப்போது எனக்கு வயது அதிகமாகிவிட்டாலும், நான் கூறும் சமயத்தில் எனது உடல் வலுவாகத்தான் இருந்தது. இன்றோ பல இடங்களில் தேய்ந்து வளைந்து கூன் விழுந்து போய்க் கிடக்கின்றேன். பாளம் பாளமாக என் தேகம் வெடித்து விட்டது. அந்த வெடிப்புக்குள் குளிர் நாட்களில் கும்மென்றிருக்கும். எத்தனை தவளைகள் அவ் வங்கினுள் இன்துயில் செய்ய இடம் தேடிக்கொள்கின்றன தெரியுமா? எனது இடதுபுறமாக உள்ள செங்கற் கட்டிடம் சிறிது கலகலத்துவிட்டது. அதன் இடுக்குகளில் நாகணவாய்க் குருவிகள் கணக்கிராது குஞ்சு பொரித்திருக்கின்றன. பொழுது விடிந்ததோ இல்லையோ, அந்த வங்கு களிலிருந்து முன்னதாக வானம்பாடி கிளம்பி, வானில் மறைந்து

சீழ்க்கை பயிற்றத் தொடங்கிவிடும். அத்துடன் குஸுமா துறைக்கு வரும் நேரமும் நெருங்கிவிட்டதென நான் தெரிந்து கொள்வேன். நான் குறிப்பிடும் பெண்ணை, அவளுடன் வரும் தோழியர் 'குஸுமா' என்றே அழைப்பார்கள். அதனால்தான் எனக்கு அவள் பெயர் தெரியவந்தது. நீரில் குஸுமாவின் நிழல் விழும்போதெல்லாம் 'இந்தப் பிரதிபிம்பம் இப்படியே என் உள்ளத்தில் பதிந்துவிடக் கூடாதா? இதைக் கல்லில் இருத்திவிட முடியாதா?' என்றெல்லாம் அவா கொள்வேன். என்ன அசட்டு எண்ணங்கள்! நான் கண்டவற்றுள் எவைதாம் நிலைத்துநின்றன? பாதசரங்கள் கல்லென ஒலிக்கத் தன் கால்களை என்மேல் அவள் பதிக்கும்போது என்மீது வளரும் புற் பூண்டுகள்கூடப் புளகம் கொள்ளும்.

அவளுடன் வரும் சிறுமியரும் அவளைப் போலவேதான் விளையாட்டில் விருப்புடையவர்கள்; வேடிக்கையாகப் பேசிச் சிரிப்பார்கள். ஆனால், அவர்கள் குஸுமாவுக்கு இணையாக மாட்டார்கள். அவளிடத்தில்தான் எனக்குப் பற்றுதல் எல்லாம். அவள் பேதை, நல்லபெண் என்று நான் கூறவரவில்லை. அவளும் விஷமக்காரிதான். மற்றவர்கள் அவளைக் கேலியாக 'அடி குஸீ! ராக்ஷஸீ' என்றவாறு சொல்லும்போது, அவள் வெட்டென மறுமொழி தருவாள். அவளுடைய அன்னை, அவளை 'குஸுமி' என்று செல்லமாக அழைப்பது வழக்கம். அவளுக்கு வேளை சமயம் என்பதே இல்லை. எப்போதும் ஆற்றில் துளைந்தபடியே இருப்பாள். அவளுடைய உள்ளத்திற்கும், இதோ செல்லும் நீரோட்டத்திற்கும் ஓர் ஒற்றுமை இருந்தது. அதற்கேற்றாற்போல் நீர் என்றால் அவளுக்கு உயிர்.

அப்புறம் சிலநாட்கள் வரை குஸுமாவை நான் பார்க்கவே இல்லை. புவனியும், சொர்ணவும் மட்டுமே துறைக்கு வந்து கண்ணீர் சிந்துவார்கள். எதற்கு என்று எனக்குப் புரியவில்லை. ஒன்றிப் பழகிய தோழியைவிட்டுப் பிரிந்ததனாலா? அவர்கள் பேசிக்கொண்டதிலிருந்து குஸுமா புக்ககம் போய்விட்டதாகத் தெரிந்துகொண்டேன். அந்த ஊரில் ஆறென்பதே இல்லையாம். மனிதர், வீடுவாசல் எல்லாம் புதிதாம். ஆகா, நீரில் பிறந்த தாமரையை நிலத்தில் நட்டுவளர்த்தால்....

நானும் குஸுமாவை ஒருவாறு மறந்துபோகலானேன். ஓர் ஆண்டாயிற்று. துறைக்கு வரும் பெண்பாலார் அவளைக்குறித்துப் பேசுவதே இல்லை. கடைசியாக ஒருநாள் மாலைநேரம் சட்டென்று மிகவும் பழக்கமான காலடி என் மார்பில் பட்டது. எனக்கு இன்பவூறல் எடுத்தது. குஸுமா வந்துவிட்டாளா? ஆம்! அவளுடைய மெல்லடிதான். ஆனால், பாதசரத்தின் சதங்கை ஏன் ஒலிக்கவில்லை? அவளுடைய மெல்லடிகள் எழுப்பும் அம் மதுர

நாதம் எங்கே? குஸுமாவின் மெல்லிய பாதமும், அச் சதங்கையின் இன்னொலியும் என்னுடைய உடலின் ஒவ்வொரு புரையிலும் பதிந்து அழியாததொரு நினைவை எழுப்பி உள்ளன. அதை நுகர்ந்தபிறகு எனக்கு நீரின் சாயலும், தண்மையும், சலசலப்பும் துளியும் பிடிக்கவில்லை. கரைமீதிலிருக்கும் மாந்தளிரின் அலைப்பு காற்றுவாக்கில் 'சோ... ஐயோ' என்று ஓலமிடுவதுபோலவே இருந்தது எனக்கு. சீ, என்ன பிரமை இது!

குஸுமா கைப்பெண்ணாகிவிட்டாள். அவளுடைய கணவன் வெளியூரில் எங்கோ பெரிய அலுவலாளனாம். அவனுடன் அவள் கூடிக்குலவியதெல்லாம் இரண்டே நாட்கள்தானாம். பின்னர் அவள் தன் நாயகனைப் பார்க்கவே இல்லையாம். கடித வாயிலாக அவள் கணவன் இறந்துபோன செய்தி தெரிந்ததாம். எட்டு வயதான அச் சிறு பெண்மலர், நெற்றித்திலகத்தை அழித்து விட்டு, மாங்கல்யம் இழந்தவளாய்த் தன் பிறந்தகத்திற்கே- இவ் வாற்றங்கரைக்கே - வந்துவிட்டாள். ஐயோ! அவளுக்கு இப்போது தேறுதல் கூறித் துயரைத் தணிக்க அந்தத் தோழியர் எவருமே இல்லை. புவனி, சொர்ணா யாவரும் தத்தம் புக்ககம் போய்விட்டனர். சரத்மட்டும் இருந்தாள். அவளுக்கும் இந்தத் தைமாதம் திருமணமாம்... சீக்கிரமே புக்ககம் போய்விடுவாள். இனி, குஸுமா தனியாகத்தான் இருக்கவேண்டும்.

அது ஒரு புறம் இருக்கட்டும். குஸுமா இப்போது தலையில் கையை வைத்துக்கொண்டு என் மடிமீது அமர்ந்திருந்தாள். ஆற்றின் சிற்றலைகள் கைகொட்டி, குஸீ, ராக்ஷஸீ என்று பழையபடி தன்னை விளையாட்டிற்கு அழைப்பதுபோல் இருந்தது அவளுக்கு. ஆனால், அவளுடைய தீராத்துயர், இந்தச் சஞ்சல இயல்புடைய அலைப்பிள்ளைகளுக்கு எங்ஙனம் தெரியப்போகிறது? ஒரே இடத்தில் அசைவற்றிருக்கும் இயல்புடைய நான் இந்தத் துயரைக் கண்டு பொறுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறதே! அவையோ வேடிக்கைமீதே கருத்தாக அலைந்து ஓடிக்கொண் டிருக்கின்றன.

மழையின் தொடக்கத்தில், இருந்தாற்போல் இருந்து கங்கை யின் நீரோட்டம் கபகபவென்று ஒவ்வொரு படியாக ஏறத்தலைப் பட்டது. குஸுமாவும் பார்த்துக்கொண் டிருக்கையிலேயே மதமத வென வளர்ந்து மாமைக்கவினளாக மாறிவிட்டாள். ஆனால், அவளது எளிய உடையும் வாடியமுகமும் அவளது நிறைவனப்பை மறைக்க முயன்றன. குஸுமா பெதும்பைப் பருவத்தைக் கடந்து மடந்தையானதை எவராவது கவனித்தார்களா? கணவனை இழந்தவளைப்பற்றி யாருக்கு அக்கறை? எப்போதும் அவளைப் பார்ப்பதனாலோ என்னவோ அவளிடத்தில் எந்த மாறுதலும் எனக்குப் புலப்படவில்லை. அவளுடைய கால்களில் பாதசரம் இல்லாதுபோனாலும், அதனுடைய சதங்கை ஒலி என்

கற்செவிக்கு மட்டும் கேட்டது. பழைய நினைவுகள் அவ்வளவு விரைவில் மாறுவனவா? பத்தாண்டுக்காலம் இவ்வாறு கனவெனப் பறந்துபோயிற்று. அவ்வூரினர் இதனை அறிந்தார்களா? இன்று, உங்களை எப்படி உயிருள்ளவர்களாக, உண்மையாகப் பார்க்கின்றேனே அப்படியே தெளிவாக அவளையும் ஒருநாள் நான் பார்த்திருக்கிறேன்.

இன்றுபோல் நான் கூறும் சமயம் ஒருநாள் வந்தது. இன்று திகழும் இயற்கையின் எழிலை நீங்கள் கண்டு களிப்பதுபோல, உங்களுடைய பாட்டிமார்களும், இளங்காலையில் கதிரவன் செங்கிரணங்களைப் பரப்புவதைக் கண்டு மகிழ்ந்தனர். அப்போது இளமைக்காரிகளாக இருந்த அவர்கள், குடங்களில் நீர் மொண்டு, முசுக்கைச் சரியாக இழுத்து முகத்தை மறைத்த வண்ணம், மேடுபள்ளமான கிராமப்பாதையில் குதுகுதுப்புடன் பேசிக்கொண்டே வருகையில், தம் வயிற்றில் நீங்கள் தோன்றுவீரெனக் கனவிலாவது நினைத்திருப்பார்களா? உங்களுக்கு இதெல்லாம் எப்படித் தெரியப்போகிறது? என் கண்முன் ஒரு காலத்தில் உயிர்த் துடிப்புடன் இருந்த அந்தக் காட்சிகள் வந்து நிற்கின்றன. அவர்களும் ஒரு சமயம் இன்ப துன்பத்தைத் துய்த்து வாழ்க்கைப் போரில் ஈடுபட்டவர்களே. முன் அவர்கள் கண்டு களித்த ஒரு கவினுர் சரத்காலம் பல ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அதே பொலிவுடன் தோன்றப்போவதை அவர்கள் எங்ஙனம் அறிவார்கள்? அதுபோன்ற சமயம் காலைப்பொழுதில் வாடைக்காற்று மெல்ல வீசத்தொடங்கியது. நன்றாகப் பூத்து உதிரும் வேலம் பூக்கள் காற்றில் பறந்துவந்து என்னுடைய படிகள்மீது குவிந்தன. முத்துப்போன்ற பனித்துளிகள் என்மீது படிந்திருந்தன. அன்று, எங்கிருந்தோ ஓர் இளம் சந்நியாசி, தங்கச்சாயலான மேனியர்-அகன்ற நெற்றிபடைத்தவர்-எனக்கு நேராக உள்ள சிவாலயத்தில் வந்து தங்கினார். துறவி வந்த செய்தி ஊரெங்கும் பரவிவிட்டது. துறைக்கு வந்த மகளிர் குடங்களை வைத்துவிட்டு, அவரைத் தரிசிக்க ஆலயத்தை நோக்கி நடந்தனர்.

கூட்டம் நாளுக்குநாள் பெருகியது. ஒரு தவசி, அதுவும் பெருந்தேஜசுடன் விளங்குபவர் என்றால் சொல்லவும் வேண்டுமா? நெருக்கம் வரம்பு மீறினாலும் யாரையும் அவர் கடிந்துகொள்வதில்லை. அவர் குழந்தைகளைக் கண்டால் கொஞ்சுவார். இல்லற சுக துக்கங்களைப்பற்றிப் பெண்டுகளை விசாரித்ததால் மெல்லியலார் அவர்பால் ஆழ்ந்த பற்றுதல் வைத்தனர். ஆடவரும் ஏராளமானவர் வரத்தலைப்பட்டனர் அவரிடம். புதிய துறவி சில நாட்கள் பகவத்கீதை படித்து, தெளிபொருள் கூறி உபந்நியாசம் நிகழ்த்துவார். அவருடைய வாயிலிருந்து வரும் தத்துவக் கதைகளில்

காணும் புதிய கருத்துக்களைப் பண்டிதரும் பாமரரும் மெய்ம் மறந்து கேட்பார்கள். அவர் நடத்தும் சாஸ்திரபுராண ஆராய்ச் சிக்கோ அளவில்லை. தீராதநோய்களுக்கு அவரிடம் சிலர் மருந்து யாசித்தனர். ஆகா! என்ன சௌமியமான தோற்றம் அவருக்கு! ஒருவேளை இறைவனே அவர் வடிவில் இறங்கி வந்துவிட்டானோ...? —இப்படி ஒரு சந்தேகம் எனக்கு ஏற்பட்டது.

நாடோறும் வைகறைப் பொழுதில் அந்தத் தவசி துறைக்கு வந்து ஆற்றில் நீராடி இடுப்பளவு அமிழ்ந்தபடி நின்று எதிரே வான் முகட்டில் விடிவெள்ளி சுடர்விட, கம்பீரமான குரலில் மந்திரங்களை உச்சரிப்பார். அப்போது நான் தன்மயமாகி அத்திரு வார்த்தைகளைச் சிரவணம் செய்வேன். என்னைச் சுற்றி நடக்கும் விஷயம் எனக்கு எதுவுமே தெரியாது. வானம் செம்பொன் நிறம் கொள்ளும். மேக விளிம்புகளில் பொன்வண்ணம் மறைந்து எப்போது வெளுத்துவிடுமோ எனக்குத் தெரியாது. வான், ஆறு, திசை, கரை யாவும் இந்த வண்ணமாயையில் தோய்ந்து விளங்கும். இம் மகானின் மந்திரசக்தியினுலோ இப்படி இயற் கையின் படாத்தில் இந்திர ஜாலங்கள் தோன்றுகின்றன! கங்குல் எனும் நிருதர் ஆட்சி சிதைந்தொழிவது அவர் விடும் அந்த அருக்கிய நீரின் மகிமையினுலா? செம்பழமென ஞாயிறு வானிடைக் கிளம்பியது. இயற்கையின் படம் முற்றிலும் புதிய புதிய காட்சிகளைக் கொண்டது. அம் மகானும் நீராடிவிட்டு எரிப் பிழம்பெனத் தூய்மையை நாற்புறமும் வீசிக்கொண்டே ஆலயத்தை நோக்கி நடந்தார்.

அந்த மாதம் இப்படியே ஓடிவிட்டது. பங்குனி மாதத்தில் சூரிய கிரகணம் வந்தது. புண்ணிய நீராடலுக்கு மக்கள் திரளாக ஆற்றங்கரையில் கூடினர். இதுவே அண்டை அயலூரிலுள்ள வர்கள் நம் தவசியை வந்து சேவிக்க ஒரு வாய்ப்பை அளித்தது. வேலந்தோப்பினுள் கடை கண்ணிகள் தோன்றின. அன்று எனது கடைசிப் படியில் அமர்ந்து அவ்விளந் துறவி தியானத்தில் ஆழ்ந் திருந்தார். தொலைவிலிருந்து அவரை ஒரு பெண் தாழ்ந்த குரலில் மற்றவளிடம், ''அடீ! இவர் நம் குஸுமாவின் கணவன் போலவே இல்லை?'' என்றுள்.

அந்தத் தடவை குஸுமாவின் புக்ககத்துப் பெண்டிரும் வந்தனர். மற்றவள் முட்டாக்கைச் சிறிது விலக்கி அதன் இடுக்கு வழியாக அவ்விளந் துறவியை நன்கு கண்ணுற்று, ''ஆமாமடீ! நம் சட்டர்ஜி அகத்துப் பிள்ளைதான் இவர்!'' என்றுள். இன்னொருத்தி, ''அடியம்மா, அதே கண், மூக்குக்கூடவா அப்படியே இருக்க வேண்டும்... தத்வத் அவரே!'' என்றுள். வேறொரு பெண், துறவி மீது அவ்வளவாகக் கவனம் செலுத்தாதவள்- ''நம் குஸுமிக்கு இனிமேல் ஏதடீ நல்லகாலம் பிறக்கப்போகிறது? செத்தவன்

எங்கேயாவது திரும்பி வருவதுண்டோ? இதெல்லாம் சுத்தப் பைத்தியக்காரத்தனம்! உம், அவ்வளவு பாக்கியம் அவள் பண்ணியிருந்தால் இப்படியெல்லாம் ஏன் நடக்கிறது?'' என்று பெரு மூச்சுடன் மொழிந்தாள்.

அப்போது அங்கிருந்த ஒருத்தி, ''மாமி, குஸுமி அகமுடையானுக்குக் கன்னத்தில் இவ்வளவு மயிர் இல்லை. உயரங்கூட இவ்வளவு இல்லை. இவர் வேறு யாரோ!'' என்றாள். இப்படி இவர்களுக்குள் ஏற்பட்ட ஐயம் ஒருவாறு விலகியது. அதற்குமேல் பெண்களின் வம்பளப்பு நீடிக்கவில்லை.

கிராமத்தில் குழந்தைமுதல் கிழம் அடங்கலும் இளந் தவசியைச் சேவித்தாகிவிட்டது. குஸுமா ஒருத்திதான் எஞ்சி நின்றாள். அவள் இன்னும் இந்த மகானை அணுகித் தரிசனம் செய்யவில்லை. கணவன் இறந்த துயரினால் அவள் அவரைக் காண விருப்பங்கொள்ளவில்லையா? ஒருகால் புக்ககத்து நாத்தூண் எதிரில் தான் வரக்கூடாதென்று இருக்கிறாளா?

ஒரு நாள் அந்தி நேரம். அன்று முழுமதி. அவளுக்கு என் நினைவு வந்துவிட்டதோ என்னவோ? துறையில் அச்சமயம் ஆள் நடமாட்டமே இல்லை. சிள்வண்டுகளின் இறகிசை ரிங்கென்று எதிரொலித்தது. ஆலயத்தில் மணியடித்து அப்போதுதான் ஓய்ந்தது. அதன் ஒலியலை ஆற்றுநீர்மேல் பரவித் தொலைவில் மங்கலாகத் தெரியும் காட்டின் கருங்கோட்டுடன் கலந்துவிட்டது. தங்கத் தகடுபோல் வட்ட மதியமும் முளைத்தது. துளும்பியோடும் நீர். ஆற்றில் காற்றே இல்லை. அவ்வேளை மரஞ்செடி கொடிகளும் எதையோ கூர்ந்து கவனிப்பனபோல் அசைவின்றி நின்றன. எதிரே விரிந்த ஆற்றுத் திடர்மீதும் தோப்பு, ஆலயம், அதன் சிகரம் இவற்றின்மீதும் நிலவின் வெள்ளிச்சலாகை நிழலும் ஒளியும் குழைத்த ஒரு மாய சித்திரத்தைத் தீட்டியது. இருளானது ஒளிக்கு அஞ்சி வெகு தூரத்தில் பனந்தோப்பினுள் பதுங்கிக்கொண்டது. ஏழிலைப் பாலைமரத்தின் தோப்புகளில் வௌவால்கள் 'கீச் கீச்' என அரற்றித் தலைகீழாக ஊசலாடின. வயல்களிடையே குள்ளநரிகளின் ஊளை சிறிது சிறிதாக அடங்கி வந்தது.

துறவி ஆலய மண்டபத்திலிருந்து மெல்ல எழுந்து வெளியே வந்தார். கால் கழுவத் துறையை அணுகி, இரண்டு படிகள் இறங்குகையில், கீழ்ப்படியில் ஓர் இளமடந்தை இருப்பதைக் கவனித்துத் திரும்பிச் செல்ல முனைந்தார். அக்கணமே குஸுமா முகத்தில் நிலவின் ஒளி விழ நிமிர்ந்து அந்தத் தவசியை நோக்கினாள். அவரை அவள் காண்பது இதுவே முதல் முறையாகும். தலையிலிருந்து முட்டாக்கு நழுவிப் பின்புறமாக விழுந்து விட்டது. இருவருடைய கண்களும் கலந்தன. ஒருவரையொருவர்

எங்கோ கண்டிருப்பது போலவே அவர்களுக்குத் தோன்றியது. ஒருவேளை அவர்களது முற்பிறவியில் இக் கூட்டம் நிகழ்ந்திருக்குமோ?

அதே சமயம் இவர்களுடைய தலைக்கு நேராக ஆந்தை 'கிக்' என்று ஒன்றைச் சொல் கூவிச்சென்றது. குஸுமாவுக்குத் தூக்கிப் போட்டது. தன் நினைவு வந்து அவள் முட்டாக்கை இழுத்து முகத்தை மறைத்து அவ்விளந் துறவியின் காலைத்தொட்டு வணங்கினுள்.

தவசி அவளை நோக்கி, ''உன் பெயர் என்ன, தாயே?'' என்று கேட்டார்.

''குஸுமா'' என்றுள் மடந்தை.

அன்று இத்துடன் நின்றது அவர்களது பேச்சு. குஸுமாவின் வீடு படித்துறைக்கு அருகிலேதான். மெல்லத் தன் இடத்திற்குச் சென்றுள். இரவு முழுவதும் அவ்விளந் துறவி என்னுடைய படியின்மீது அமர்ந்திருந்தார். என்ன சிந்தனைகள் அவர் மனத்துள் சென்றனவோ யாருக்குத் தெரியும்? அவர் துளியேனும் கண்ணயரவில்லை. பூர்ணசந்திரன் மேற்கு வானில் தாழ்ந்து அவரது நிழலுருவம் என்மீது படியும்போதுதான் அவர் அங்கிருந்து ஆலயத்தை நோக்கிச் செல்வதைப் பார்த்தேன்.

மறுநாளே தொடங்கிக் குஸுமா தவருமல் வந்து அவ்விளந் தவசியைத் தரிசித்துவிட்டுப் போவாள். அவர் சொல்லும் புண்ணியக் கதைகளையும் உரைகளையும் ஆலயத்தின் ஒரு தூண் மறைவிலிருந்தபடியே கேட்டு இன்புறுவாள். துறவி தம் கடமைகளை முடித்துவிட்டுக் குஸுமாவை அருகில் அழைத்து அவளுக்கு நல்லுபதேசம் செய்வார். ஆனுல், அவை அவளுக்குப் புரிந்திருக்குமா? குருவின் கட்டளையின்படி ஊக்கமாக மட்டும் நடந்து வந்தாள். சிவபூஜைக்குப் பனிமலர் கொய்வது, புனிதமான கங்கை நீரினுல் தேவ சந்நிதியை மெழுகி இழை கோலமிடுவது போன்ற தொண்டுகளைச் செய்ய அவள் தவறுவதில்லை. ஆனுல், இவற்ருல் அவள் மனத்திற்கு அமைதி ஏற்படவில்லை. துறவியின் உபதேச மொழிகளை என்படிமீது அமர்ந்தே அவள் ஆராய்வாள். இதனுல் அவளது அகக்கண் விரிவடைந்தது. அடிக்கடி அவள் முகத்தில் படரும் பிரகாசம், காணுதற்கரிய உண்மைகளை அவள் காண்பது போலவே எனக்குத் தோன்றும். முன்பு அவளது முகப்பொலிவை மழுங்கச் செய்த அந்தக் கவலைக் குறிகளெல்லாம் இப்பொழுது எங்கே? புலரிப் பொழுதில் பக்தி நிரம்பிய உள்ளத்துடன் துறவிக்குத் தொண்டாற்றும்போது, கடவுளுக்கே உரியவளாகத் தோன்றுவாள், அந்த மலரனையாள். சொல்லுக்கடங்காத ஒரு திவ்யதேஜசு அவள் அவயவங்களில் படர்ந்து ஒளிரும்.

குளிர்காலத்தின் இறுதி வாடைக்காற்று மாறி, இளவேனி லின் வரவை அறிவிப்பதுபோல் தென்றல் அடிக்கடி வந்து உலவிச் சென்றது. பனிபெய்வதும் நின்றது. பருவ மாறுதலினுல் மக்களிடையே புத்துணர்வு பிறந்தது. படகோட்டிகள் தம் தொழி லேயும் மறந்து தெம்மாங்கு பாடிப் பொழுதை இனிமையாகக் கழித்தனர். சிறு புள்ளினம் பேருவகையுடன் ஒன்றையொன்று கூவியழைத்தன. இப்படித் தெரியாமலே மாறியது காலமும். இளவேனில் வெம்மைக் காற்று படவே என் பாறையுள்ளத்திலும் இளமையின் இன்பவூறல் உண்டாயிற்று. என்மீதுள்ள கொடி செடிகளும் இப் பூரிப்பினுல் செழித்து விளங்கின. ஆகா! இந்த வசந்த ருதுவின் கவர்ச்சிதான் என்னே! சின்னஞ்சிறு பூக்கள் பசும்புல்மீது பதிந்தாற்போல் இதழ்விரித்தன. ஆனுல் இத்தகைய கவின்கெழு காலத்தில் குஸுமா ஏனே வருவதில்லே? சில நாட்களாகவே அவளே அக் கோயில் பக்கம் காணவில்லே. அத்துறவி யைத் தரிசிக்கவும் வருவதில்லே. அவளுக்கு என்ன நேர்ந்தது? ஒன்றுமே விளங்கவில்லே எனக்கு; நான் வெறும் பாறை - மட்டிப் பாறைதானே!

பின்னர்க் குஸுமாவும் அந்த நவீன தவசியும் என்னுடைய படிமீது ஒரு மாலே வேளே சந்திக்க நேரிட்டது. குஸுமா தலே குனிந்தபடி, ''நீர் என்னே கூப்பிட்டீராமே?'' என்ருள். ''ஆமாம், தாயே, ஏன் முன்போல நீ இங்கு வருவதில்லே? உன் பார்வை யில்லாமல் கோயில் பாழடைந்து கிடக்கிறதே! உன்னுடைய விரல்கள் தொடுக்கும் மாலே இல்லாது போகவே என் பூஜை குறையாக நின்றுவிடுகிறது. இது ஏன், அம்மணி?'' என்ருர் துறவி. இதற்கு மறுமொழி குஸுமாவிடமிருந்து வரவில்லே. ''உனக்கு என்ன மனவேதனே? அதை என்னிடம் சொல்லு'' என்ருர் அவர்.

குஸுமா முகம் நிமிர்த்தி, ''சுவாமி, அடியாள் மகாபாபி; அதனுலேயே இம்மாதிரி...'' என்று அரைகுறையாக வார்த்தையை நிறுத்திவிட்டாள்.

துறவி மிகவும் இளக்கத்துடன், ''குஸுமா, உன் மனசை ஏதோ கவலே ஆழ்த்துகிறது; நன்ருகத் தெரிகிறதே'' என்ருர்.

குஸுமாவுக்குத் திக்கென வாரிப்போட்டது. ஒருவேளே அவர் தன் அந்தரங்க விஷயத்தை ஊகித்துக்கொண்டாரோ என எண்ணிஞளோ? அவள் கண்களில் நீர் வார்ந்தது. முகத்தை மேலாடையினுல் மூடிக்கொண்டு துறவியின் பாதங்களேச் சிக் கெனப் பிடித்தவாறு விம்மிவிம்மி அழலாஞள்.

துறவி சற்று விலகி நின்ருர். ''அம்மா! உன்னே வாட்டும் வேத னேயை என்னிடம் அஞ்சாமல் சொல்லு. உனக்கு அமைதியைத் தரும் வழியை நான் காட்டுகிறேன்'' என்ருர் அவ்வறவோர்.

குஸுமா பக்தியின் ஆர்வத்துடன் பேசத்தொடங்கினாள். ஆனால் தன் மனக்குறையை முற்றும் வெளிப்படுத்தமுடியாதவாறு இடையிடையே என்னவோ ஒன்று அவளைத் தடைசெய்தது. "உங்கள் ஆக்ஞையின்படி நான் சொல்ல முயல்கிறேன். ஆனால் என் உள்ளத்தைவிட்டு அந்த விஷயம் வர மறுக்கிறதே, நான் எப்படி வெள்ளையாகச் சொல்லுவேன்? நீங்களோ தீர்க்கதரிசி...நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள், சுவாமி. நான் ஒருவரைத் தெய்வம் போலவே பாவித்து என் இதயத்தில் வழிபட்டு வந்தேன். அதனால் உண்டான ஆனந்தமே என் நெஞ்சினுள் நிறைகொண்டது. ஒரு நாள் கனவிலே - அதைச் சொல்ல எனக்கு வெட்கமாயிருக்கிறது- என் உள்ளம் கவர்ந்தவருடன் நான் ஒரு மகிழமரத்தின் அடியில் காதலுரையாடுவதுபோல் கண்டேன். அது நிகழக்கூடியதன் றென எனக்கு அப்போது தோன்றவில்லை. நான் கண்டது என் னவோ சொப்பனந்தான். ஆனால் ஏன் எனக்கு அதுபோல் தோன்ற வேண்டும்? கனாக் கலைந்தது. ஆனால், அதன் மயக்கம்மட்டும் இன் னும் எனக்குத் தெளியவில்லை. விதவையான நான் இப்படி மருளுக்கு ஆளாவது தகுதியல்லவே. மறு நாள் என் காதலரை நேராகவே பார்த்தேன். என்றும் பார்ப்பதுபோலவே பார்த் தேன்...அதற்கப்புறமே நான் அவர் கண்ணுக்கு அகப்படாமல் இருக்கத் துணிந்தேன். கனவில் மருட்டிய யாவும் இன்னும் கண் முன்னே உயிர்பெற்று நிற்கின்றன. என்னுடைய பாப எண்ணங் கள் அவரை அணுகவிடாமல் நான் அப் புனித மனிதரிடமிருந்து விலகியே நின்றேன். என் பாழும் நெஞ்சுமட்டும் அதை மறக்க வில்லை. இந்த வேதனையே என்னைப் பிழிந்தெடுக்கிறது. என் வாழ்வு பாழாகிவிட்டது. ஐயோ!.."

அவள் விழிநீர் சிந்த இதைச் சொல்லும்போது, அவ்விளந் துறவி தனது இடது காலினால் படியை அழுத்தியதை என் கல் உள்ளமும் உணர்ந்தது. அவர் அங்ஙனம் செய்யக் காரணம்? தம் மனத்துள் எழுந்த கிளர்ச்சி எதையாவது அடக்கவா?

குஸுமா பேசி முடித்ததும் அவர், "கனவில் நீ கண்ட மனி தர் யார்?" என்றார். அப்போது கைகளைக் கூப்பிக் குஸுமா குரல் தழுதழுக்க, "அவர் யாரென்று சொல்லுவேன்?" என்றாள்.

"சொல்லம்மா..."

"சுவாமி, என்னை மன்னிக்கவும்—அந்த மனிதர் நீர் தான்!"-அவள் சொன்னது அவளுடைய காதிலேயே விழுந்ததோ இல்லையோ, குஸுமா மூர்ச்சையாகி என் கடினமான மடிமீது சாய்ந்தாள். துறவி சிலையெனத் தம்பித்து நின்றார். நினைவு வந்த தும் குஸுமா எழுந்திருந்தாள். அப்போது அந்த அதிசயத் துறவி, "அம்மா! நீ இதுவரை என் உபதேசங்களைச் சரிவரப் பாவித்து வந் திருக்கிறாய். இன்னொரு முறையும் நீ என் ஆணைக்குக் கட்டுப்பட

வேண்டும். இன்றே இவ்விடத்தை விட்டு அகல்வேன். என்னை நீ மறந்துவிடவேண்டும். சத்தியம் செய்; இதுவே எனது கடைசி உபதேசம்!'' என்றார் மிகவும் உருக்கமாக. குஸுமா துறவியின் முகத்தை ஒருமுறை நன்றாகப் பார்த்துவிட்டுத் தன் ஆசை நிறைவுற்றதும் மெதுவாகவே, ''தேவரீர் அப்படியே, உமது ஆணைப் படி'' என்று கூறி நீண்ட பெருமூச்செறிந்து அவர் இணையடிகளில் வணங்கினாள்.

துறவி, ''ஆனால் நான் போகிறேன்'' என்றார். மேலே ஒன்றும் கூறாமல் குஸுமா அவருடைய பாததூளியைச் சிரமேற்கொண்டாள். அந்த மகான் அக்கணமே அவ்விடத்தைவிட்டு அகன்றார்.

''அவருடைய சொற்படியே நான் நடப்பேன்; நடப்பேன். நான் அவரை மறந்துவிடவேண்டும், மறந்துவிடவேண்டும்..'' என்று மூளைத் தடுமாற்றத்துடன் கூறிக்கொண்டே விசையாகச் செல்லும் ஆற்றுப்பெருக்கில் இறங்கிவிட்டாள் அப் பூம்பாவை. அவளுக்குச் சிறு வயதுதொட்டு மகிழ்ச்சி தந்த அந்தக் கங்கையா, அவள் அமைதியை விரும்பி வரும்போது இடமளித்து ஆதரிக்க மறுப்பாள்? நிலவும் அத்தமனமாகியது. அச்சந் தரும் பேரிருள் எங்கும் சூழ்ந்தது. அவள் நீருள் விழுந்த ஒலிகூடக் கேட்கவில்லை. தன் குழந்தைமீது இந்தக் கங்கைத் தாய்க்குத்தான் எவ்வளவு அன்பு! காற்று என்னைப்போல் இந்தத் துன்ப நாடகத்திற்குச் சாட்சியாக வேதனை தாளாது 'உச் உச்' என அலறிற்று. தாரகைத் தீபங்கள், அவள் மறைந்ததும் ஒவ்வொன்றாக அணைந்துபோய் வானமே வெறிச்சோடி விளங்கியது. சிறு பிராயத்திலிருந்து என் மேல் குதித்து ஓடி விளையாடிய அந்த மாசில்லா மலர் கடைசியாக இந்த வேடிக்கையைக் காட்டிவிட்டு என் மடியிலிருந்தே எங்கோ நழுவிப்போய்விட்டதே!

இடைவெளி

உறவு முறையில் வனமாலியும், ஹிமாம்சுவும் அத்தான் அம்மான் சேய். அதுவும் வெகுதூரத்து உறவு. ஆனால் பல காலமாகவே, இரு குடும்பத்தாரும் அக்கம்பக்கத்தில் வசித்துவந்தார்கள். இரண்டு வீடுகளுக்கும் நடுவே ஒரு தோட்டந்தான் குறுக்கிட்டது. இதனால் உறவு நெருக்கமாக இராவிட்டாலும், நெருங்கிய தொடர்பு இருந்தது.

வனமாலி, ஹிமாம்சுவைவிட வயதில் மூத்தவன். ஹிமாம்சுவுக்குப் பல் முளைத்து, பேச்சுவராத பருவத்தில் வனமாலி தோட்டத்தில் காலையிலும் மாலையிலும் அவனைத் தோளில் சுமந்து காற்று வாங்கியதுண்டு. அவனுடன் விளையாடியதுண்டு; அழுதால் வேடிக்கை காட்டுவான்: தூங்கக்கூடத் தாலாட்டுப் பாடியிருக்கிறான். வயதான கிழவன் போலத் தலையை ஆட்டுவான். கீச்சுக் குரலில் பேசிச் சிரிப்பு மூட்டுவான். இப்படியெல்லாம் வேடிக்கை காட்ட அவன் ஒரு நாளும் தயங்கியதில்லை.

வனமாலி அதிகம் படித்தவனல்ல; தோட்டக்கலையில் அவனுக்கு ஆர்வம் அதிகம். இந்தத் தம்பியும் அவனுக்கு இருந்தான். கிடைத்தற்கரிய விலைமதிப்பற்ற கொடியை வளர்ப்பது போல், வனமாலி ஹிமாம்சுவின்மேல் தன் உள்ளத்தின் அன்பையெல்லாம் சொரிந்து வளர்த்தான். அந்தத் தம்பியும், வனமாலியின் அகத்தையும் புறத்தையும் தழுவி வளர வளர, அவன் தன் வாழ்வின் நிறைவை எய்திவிட்டதாகவே எண்ணி மகிழ்வுற்றான்.

இப்படி நிகழ்வது மிகவும் அரிதுதான். ஆனால் நடுநடுவே, இவ்வாறு ஒரு சிறு ஆர்வம் காரணமாக, ஒரு சிறு குழந்தை அல்லது நன்றிகெட்ட ஒரு நண்பன் இவர்களுக்காகத் தங்களையே எளிதாக அர்ப்பணம் செய்துகொண்டவர்களும் உண்டு. இவர்கள் இந்தப் பரந்த உலகில் ஒரு சிறு பகுதிக்காகத் தங்கள் வாழ்க்கையின் மூலதனத்தையே இழந்து நிம்மதியாக வாழ்வார்கள். பின்னர் மனத்திருப்தியுடன் எளிய வாழ்க்கை நடத்துவதும் உண்டு. அல்லது ஒரு நாள் காலை வீடுவாசலையெல்லாம் விற்றுவிட்டுப் பிச்சைக்காரனாக நடுத்தெருவில் நின்றாலும் வியப்பில்லை.

ஹிமாம்சு பெரியவனானதும் வயது, உறவு முறையில் இருந்த வேறுபாடுகளையும் மீறி அவர்களுக்கிடையே ஒரு நட்புறவு நிலைத்

தது. பெரியவன், சின்னவன் என்ற வேறுபாடு அவர்களிடையே இல்லை. இதற்கு ஒரு காரணமும் இருந்தது. ஹிமாம்சுவுக்கு இயல்பாகவே படிப்பில் மிகவும் ஆர்வம் இருந்தது. புத்தகம் ஏதாவது கிடைத்தால் படிக்க உட்கார்ந்துவிடுவான். அவற்றுள் உதவாக்கரைப் புத்தகங்கள் பல இருந்தாலும், அவனுடைய மனம் ஒரு முதிர்ச்சியை அடைந்துவிட்டிருந்தது. வனமாலி அவன் சொல்வதை அக்கறையுடன் கேட்பான். அவனுடன் பல விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்வான். யோசனைகள் கேட்பான். மொத்தத்தில், ஹிமாம்சுவைச் சின்னவன் என்று எந்த விஷயத்திலும் அசட்டை செய்ததில்லை. உலகில் முதன்முதலாகத் தன் உள்ளன்பைச் சொரிந்து ஆளாக்கியவன், இளமையில் அறிவாற்றலிலும், பண்பிலும் உயர்ந்து விளங்கினல், அவனைப் போல் மனத்துக்கினியவன் வேறு யார் இருக்கமுடியும்!

ஹிமாம்சுவுக்கும் தோட்டத்தின்மேல் ஒரு பிடித்தம் இருந்தது. இந்த விஷயத்தில் இருவரிடையே ஒரு கருத்து வேறுபாடிருந்தது. வனமாலிக்குப் பாசத்தில் விருப்பம்; ஹிமாம்சுவுக்கோ அறிவைப் பெருக்கிக்கொள்வதில் பிடித்தம். உலகில் இந்தப் பசுமையான செடிகொடிகள் இவை அசைவிராத உயிர்க் குவைகள்; இவை ஒருவிதமான ஆதரவையும் எதிர்பார்க்கவில்லை. ஆதரவளித்தாலோ, வீட்டுப் பிள்ளைகள்போல் மடமடவென்று வளரத் தயங்குவதில்லை. மானிடக் குழவிகளையும்விட ஆதரவற்ற குழந்தைகளான இவைகளைப் போற்றி வளர்க்கும் ஆர்வம் வனமாலிக்கு இயல்பாகவே இருந்தது. ஆனல் ஹிமாம்சுவோ செடி கொடிகளை ஓர் ஆராய்ச்சி நோக்குடன்தான் பார்த்தான். விதை முளைக்கிறது; இளந் தளிர்கள் தலைதூக்குகின்றன. மொட்டுக்கள் மலருகின்றன; இவை யாவும் ஹிமாம்சுவின் கவனத்தை ஈர்த்தன.

விதை விதைப்பது, பாத்தி கட்டி உரமிடுவது இதைப் போன்ற விஷயங்களில் ஹிமாம்சுவுக்குப் பல புது யோசனைகள் தோன்றும். வனமாலி அவற்றை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வான். தோட்டத்தின் தோற்றம், பொலிவு விஷயமாக எத்தனை விதமான கூட்டல்களும், கழித்தல்களும் செய்யவேண்டுமோ, அனைத்தையும் அவர்கள் கூடியே செய்வார்கள்.

தோட்டத்தின் நுழைவாயிலின் எதிரே ஒரு மேடை போலக் கட்டியிருந்தது. மணி நான்கு அடித்ததும், வெளேரென்ற சட்டையும், மடிப்புக் கலையாத மேல்துண்டுமாக வனமாலி மர நிழலில் கையில் ஹுக்காவுடன் அந்த மேடையில் வந்து உட்கார்ந்துவிடுவான். நண்பர்கள் என்று யாரும் அவனுக்கு இல்லை. கையில் ஒரு புத்தகமோ, தினசரியோகூட இராது. உட்கார்ந்து தன்பாட்டில் ஹுக்கா குடிப்பான், சற்றைக்கொரு

தரம் ஓரக் கண்ணால் நாலு பக்கமும் பார்த்துக்கொள்ளுவான். இவ்வாறு பொழுதும், ஹுக்காவில் எழும் புகைபோல் மெல்லப் பறந்து, சிதறி, மறைந்தும் போய்விடும். ஒருவிதச் சின்னமும் இராது. கடைசியில் பொழுது சாயுமுன் ஹிமாம்சு பள்ளிக்கூடத்திலிருந்து திரும்புவான்; முகம், கால் கழுவி, சிற்றுண்டி அருந்திய பின்னர்த் தோட்டத்தில் தலைகாட்டுவான். வனமாலியும் ஹுக்காவை ஒதுக்கிவிட்டு எழுந்துகொள்வான். இவ்வளவு நேரம் பொறுமையுடன் யாருடைய வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தான் என்பதை அவனுடைய ஆர்வத்தைக் கண்டே புரிந்து கொள்ளலாம்.

அதன் பின்னர் இருவருமாகத் தோட்டத்தில் உலாவுவார்கள். இருட்டியபிறகு, இருவருமாக மேடையில் உட்கார்ந்து கொள்வது வழக்கம். இலைகளினூடே சலசலப்பை எழுப்பியவாறு தென்றல் வீசும்; சில நாட்கள் காற்று என்ற பேச்சே இராது. செடிகொடிகள் எழுதுசித்திரமென நிலைத்து நிற்கும். மேலே எண்ணிறந்த தாரகைகள் 'மினுக் மினுக்' என்று கண் சிமிட்டும்.

ஹிமாம்சுதான் பேசுவான்; வனமாலி பதில் பேசாது அதைக் கேட்பான். புரியாவிட்டாலுங்கூட, வனமாலி அவன் சொல்வதை அக்கறையாகக் கேட்பான். பிறர் சொன்னால் அருவருப்பூட்டக்கூடிய விஷயங்களைக்கூட ஹிமாம்சு கூறுகையில் அவன் ஊன்றிக் கேட்பான். இவ்வளவு அக்கறையுடன் கேட்கக்கூடிய பெரியவர் கிடைத்துவிடவே, ஹிமாம்சுவின் கற்பனைத் திறன், நாவன்மை, ஞாபக சக்தி யாவும் மட்டிராத திருப்தியை அடைந்தன. படித்த விஷயங்களையும், தனக்கே தோன்றியவைகளையும் அவன் சமயோசிதம்போல் அள்ளி வீசுவான். சில வேளைகளில் தனக்குத் தெரியாத விஷயங்களைத் தன் கற்பனைத் திறமையால் மழுப்பிவிடுவான். அவன் சொல்வதில் சில சரியாக இருக்கும்; தவறுகளும் பல இருக்கலாம். ஆனால் வனமாலி கவனமாகக் கேட்பான். நடுநடுவே இரண்டொரு கேள்வி கேட்பான். அவற்றுக்கு ஹிமாம்சு என்ன பதில் சொன்னாலும் சரியென்று ஏற்றுக்கொள்ளுவான். மறுநாள் ஹுக்காவுடன் நிழலில் உட்கார்ந்து வியப்புடன் அவன் கூறிய பதில்களையே சிந்தித்துக்கொண்டிருப்பான்.

இதன் நடுவே, ஒரு சச்சரவு மூண்டது. வனமாலியின் தோட்டத்துக்கும் ஹிமாம்சுவின் வீட்டுக்கும் நடுவே குடிநீர்க் கால்வாய் ஒன்று இருந்தது. அந்தக் கால்வாயின் ஓரமாக எலுமிச்சைச் செடி ஒன்று முளைத்திருந்தது. அதில் பழம் பழுத்த போது வனமாலியின் வீட்டு வேலைக்காரன் பறிக்கச் சென்றான். ஹிமாம்சு வீட்டு வேலைக்காரன் அதைத் தடுக்கவே இருவரும்

சண்டையிட்டனர். அவர்கள் போட்ட கூச்சலும், திட்டிய வசவு களும் தோட்டமெங்கிலும் எதிரொலித்தன.

இதன் விளைவாக வனமாலியின் தந்தை ஹரசந்திரருக்கும், ஹிமாம்சுவின் தந்தை கோகுலசந்திரருக்கும் இடையே பெருத்த தகராறு ஏற்பட்டது. அந்தக் கால்வாய் யாருக்குச் சொந்தம் என்பதுபற்றிக் கோர்ட்டில் வழக்குத் தாக்கலாயிற்று.

வக்கீல்களும், பாரிஸ்டர்களும் தங்கள் திறனைக் காட்ட எதிரெதிர் பக்கங்களைச் சார்ந்து சொற்போரைத் தொடங் கினார்கள். இரு தரப்பினரும் செலவழித்த பண வெள்ளத்தைப் போல் புரட்டாசிப் பெருக்கில்கூட அந்தக் கால்வாயில் நீர் ஓடியதில்லை.

இறுதியில், ஹரசந்திரரே வெற்றியடைந்தார். கால்வாயும் எலுமிச்சைச் செடியும் அவருடையவைதான் என்று தீர்ப் பாயிற்று. அப்பீல் செய்துகொண்டபோதும் இதே தீர்ப்பைத் தான் உறுதி செய்தார்கள். இந்த வழக்கு நடந்துகொண்டிருந்த போதுகூட ஹிமாம்சு, வனமாலியின் நட்புறவு தடைப்படவில்லை. இந்த வழக்கினால் தங்கள் நட்புச் சிதைவுறுமோ என்று அஞ்சிய வனமாலி பின்னும் பன்மடங்கு நெருக்கமாகத் தன் மார்புடன் ஹிமாம்சுவை அணைத்துக்கொண்டான். ஹிமாம்சுவும் சிறிதளவு கூட முகம் கோணாமல் இதை ஏற்றுக்கொண்டான்.

ஹரசந்திரருக்கு வெற்றி கிடைத்த அன்று வீட்டில், அதுவும் பெண்டுகளிடையே மிகுந்த மகிழ்ச்சி பரவியது. பாவம், வன மாலிக்கோ அன்றிரவு உறக்கமே பிடிக்கவில்லை. மறுநாள் பிற்பகல் அவன் மேடையில் போய் உட்கார்ந்தபோது, உலகிலேயே மாபெருந் தோல்வியுற்றவனைப்போலத் தோற்றம் அளித்தது அவன் முகம்.

அன்றைய பொழுது கழிந்தது. மணி ஆறு ஆகியுங்கூட ஹிமாம்சு வரவில்லை. ஆழ்ந்த பெருமூச்சுடன் வனமாலி ஹிமாம்சுவின் வீட்டுப் பக்கம் பார்த்தான். திறந்து கிடந்த சாளரத்தினூடே, ஹிமாம்சு கழற்றிய பள்ளிக்கூடச் சட்டை தென்பட்டது. இதைத் தவிர இன்னும் சில அறிகுறிகளும், ஹிமாம்சு பள்ளியிலிருந்து வீடு வந்துவிட்டதைக் குறிப்பிட்டன. வனமாலி ஹுக்காவை ஒதுக்கிவிட்டு, வாடிய முகத்துடன் தோட் டத்தில் உலாவினான். அவன் பார்வை சற்றைக்கொருதரம் ஹிமாம்சு வீட்டுச் சாளரப் பக்கம் சென்றது. ஆனால், ஹிமாம்சு தோட்டத்துக்கே வரவில்லை. அந்தி மங்கியதும் வனமாலி ஹிமாம்சுவின் வீட்டுக்குள் நுழைந்தான்.

கோகுலசந்திரர், வாசல் பக்கமாகக் காற்று வாங்கிக்கொண் டிருந்தவர், ''யாரது?'' என்றார்.

வனமாலி திடுக்குற்றான். திருட வந்து அகப்பட்டுக்கொண்

டவன் போல் இருந்தது அவனுக்கு, குரல் தடுமாற அவன்; ''மாமா, நான்தான்'' என்றான்.

"யாரைத் தேடுகிறாய்? வீட்டிலே யாருமில்லை" என்றார் அவர்.

வனமாலி வாய் திறவாமல் மீண்டும் தோட்டத்தில் வந்து உட்கார்ந்தான். இரவு கனத்தது. ஹிமாம்சு வீட்டுச் சாளரங்கள் மூடப்பட்டன. இடையே தெரிந்த சில வெளிச்சக் கற்றைகளும் மங்கி மறைந்தன. ஹிமாம்சுவின் வீட்டுக் கதவுகள் யாவும் அவனை வெளியே இருட்டில் விட்டுவிட்டு மூடிவிட்டதுபோல் அவனுக்குத் தோன்றியது.

மறுநாளும் வழக்கம்போல் அவன் தோட்டத்தில் வந்து உட்கார்ந்தான். ''ஹிமாம்சு இன்றாவது வரக்கூடும் அல்லவா? இதுவரை தினமும் வந்துகொண் டிருந்தவன் என்றைக்குமே வராமல் போய்விடுவானா!'' என்றது அவன் மனம். இந்தத் தொடர்பு இற்றுவிடலாம் என்றே அவன் நினைக்கவில்லை. தன் வாழ்வின் சுக துக்கம் யாவும் இந்தப் பிணைப்பில் சிக்குண்டு விட்டதைத் தெரிந்துகொள்ளாமல் அவன் இதுவரை நிம்மதியாக இருந்துவிட்டான். இன்று தொடர்பு சட்டென்று அறுந்து விடவே தன் வாழ்வே வெறிச்சிட்டுப் போனதை உணர்ந்தான் வனமாலி. • இதை அவனால் மனமார நம்பவும் முடியவில்லை.

ஹிமாம்சு தற்செயலாகவேனும் வரக்கூடும் என்ற நம்பிக்கையுடன் வனமாலி தினமும் தோட்டத்துக்குச் சென்று உட்காருவான். ஆனால் அவனுடைய துரதிருஷ்டம், சில நாட்கள் முன்பு வரை தொடர்ந்து நிகழ்ந்தது, தெய்வச் செயலாகக்கூட ஒரு நாளும் நிகழாமல் போயிற்று.

ஞாயிற்றுக் கிழமை வந்தது. வழக்கம்போல் ஹிமாம்சு தன் வீட்டில் சாப்பிட வருவான் என்று வனமாலி எதிர்பார்த்தான். மற்றவர்கள் வந்தார்களே தவிர, ஹிமாம்சு வரவில்லை. சாப்பிட்ட பிறகு வரக்கூடுமென்று எண்ணினான். அப்புறமும் வரவில்லை. ''சாப்பிட்டுவிட்டுத் தூங்கியிருப்பான்; எழுந்ததும் வருவான்'' என்றது அவன் மனம். தூக்கம் எப்போது கலைந்ததோ, ஹிமாம்சு வரவேயில்லை.

மீண்டும் அந்தி மங்கியது; இருள் கவிந்தது. ஹிமாம்சுவின் வீட்டுக் கதவுகள் மூடப்பட்டன. விளக்குகளும் ஒவ்வொன்றாக அணைந்தன. இவ்வாறு திங்கள்முதல் ஞாயிறுவரையில் ஏழு நாட்கள் ஒவ்வொன்றாகக் கழிந்தன. நம்பிக்கையைத் தூண்டிவிட வாரத்தின் ஏழு நாட்களில் ஒன்றுகூட மிகுந்திருக்கவில்லை. வனமாலியின் கண்களில் நீர் முட்டியது. அவன் ஹிமாம்சுவின் வீட்டுப் பக்கம் ஆழ்ந்த பெருமூச்சுடன் தலை நிமிர்ந்து பார்த்தான். அவன் மனத்தின் வேதனை யாவும், ''தெய்வமே!'' என்ற சொல்லாக மெல்ல வெளியேறின.

மறு வஞ்சம்

முகுந்தபாபு வம்சத்தவரின் முன்னுள் திவானின் (ஜமீன் காரியஸ்தர்) பேத்தி, இப்போதுள்ள மானேஜரின் மனைவி இந்திராணி ஏதோ கெட்டவேளையில் அந்தப் பாபுக்களின் வீட்டில், அவர்களது பெண்வழிப் பேரனின் விவாகத்தின்போது மணமகள் விருந்து[1] உண்ணச் சென்றிருந்தாள்.

முன்னைய வரலாற்றை இங்குச் சுருக்கிக் கூறின் விஷயம் தெளிவாகும்.

இச் சமயம் முகுந்தபாபுவும் இவ்வுலகில் இல்லை. அவருடைய திவான் கௌரீகாந்தரும் இல்லை. இவர்கள் உயிருடன் இருக்கையில் இருவரிடையேயும் ஒரு நெருங்கிய பிணைப்பு இருந்தது. தாய் தந்தையற்ற கௌரீகாந்தருக்கு வாழ்க்கை நடத்துவதே சிரமமாக இருந்தபோது அவருடைய முகராசியைப் பார்த்து நம்பிக்கை வைத்து, தமக்கிருந்த சிறு சொத்தைக் கண்காணிக்கும் பொறுப்பை அவரிடம் தந்தார் முகுந்தபாபு. தவருக அவர் எடை போடவில்லை என்பது காலக்கிரமத்தில் வெளிப்பட்டது. கறையான் எப்படி ஒரு பெரிய புற்றையே எழுப்பிவிடுமோ, சொர்க்கம் புக விருப்புள்ளவன் எப்படிப் புண்ணியங்களைக் குவித்துக் கொள்வானே அப்படியே சலியாத உழைப்பால் தினையளவு தினையளவாக முகுந்தபாபுவின் சொத்துடைமைகளைச் சேர்த்துப் பனையளவாகப் பெருக்கிவிட்டார் கௌரீ காந்தர். கடைசியாக, அவர் வெகு சாமர்த்தியமாக, மிகக் குறைந்த விலைக்கு வாங்காகாடி மிராசை வாங்கி முகுந்தபாபுவின் சொத்துடன் சேர்த்த காலந் தொட்டு முகுந்தபாபு பெரிய ஜமீன்தாரர் என்ற கண்ணியமான பதவிக்கு உயர்ந்துவிட்டார். எஜமானரின் எழுச்சியுடன் சேவகரின் நிலையும் உயர்ந்தது. சிறிது சிறிதாக முன்னேறி, செங்கல் வீடு கட்டிக்கொண்டார்; நிலம் வாங்கினுர்; நாலிடத்தில் புரோகிதத் தொழிலையும் விரிவாக்கிக்கொண்டார். இதுவே முன்னைய வரலாருகும். நடப்புக் காலத்தில் முகுந்தபாபுவுக்கு ஒரு வளர்ப்புப் புத்திரன் ஏற்பட்டான். அவன் பெயர் விநோத விஹாரி. கௌரீகாந்தரின் பேத்தியின் கணவன் அம்பிகாசரணன்

---

[1] மணமகள் விருந்துக்குப் 'பௌபாத்' என்று பெயர். புதிய மணுட்டுப் பெண் புக்ககத்து உற்ருர் உறவினருக்குத் தானே சமைத்து இடும் விருந்துச் சாப்பாடாகும் இது.

படித்தவன்; ஜமீன்தாரரின் மானேஜராக வேலை பார்த்து வரு கிறான். திவானுக்குத் தம் பிள்ளையான ரமாகாந்தனிடம் நம் பிக்கை இல்லை. அவருக்கு முதுமைப்பிராயம் வந்துவிடவே ஓய்வு எடுத்துக்கொண்டு, தம் மகளையும் புறக்கணித்துப் பேத்தியின் கணவனைத் தாம் பார்த்துவந்த பணிக்குத் தகுதியுடையவனாகத் தேர்ந்தெடுத்தார்.

ஜமீன் நடவடிக்கைகள் யாவும் செவ்வனம் நடந்து வந்தன, முன் எவ்வாறு இருந்தனவோ அவ்வாறே. ஆனால், ஒரு விஷயத் தில்மட்டும் சற்று வித்தியாசம் இருந்தது. இப்போது எஜமான ருக்கும் சேவகருக்குமிடையிலான தொடர்பு இதயத்துடன் ஒட்டியதன்று; வெறும் வேலை நிமித்தமானதே. அந்தக் காலத்தில் பணத்துக்குப் பெருமை கிடையாது. உள்ளம் இழையப் பழகுவதும் எளிதாக இருந்தது. இப்போது தன் இஷ்டம் போல் உள்ளத்தின் போக்கு வீண் செலவாவது மட்டுப்பட்டு விட்டதெனலாம்! உறவினர் விஷயத்திலேயே ஜமீன்தாரரின் கையும் சரி, மனமும் சரி சற்று இழுத்துப் பிடிக்கும்போது, வெளி மனிதன் விஷயத்தில் சொல்லுவானேன்?

இதற்கிடையே, பாபுக்களின் வீட்டில் பேரப்பிள்ளையின் விவாகத்தின்போது 'பௌபாத்' அழைப்பை ஏற்று, திவானின் பேத்தி இந்திராணி சென்றாள்.

இந்த உலகு, கண்ணுக்குப் புலனாகாத விதிபுருஷன் பலவித மாகச் சோதித்துப் பார்க்கும் ஓர் இரசாயன கூடமாகும். இங்குப் பல்வேறு விசித்திரப் போக்குடைய மாந்தர் இணைவதும் பழகு வதும், பிரிவதுமான விந்தைகள் நிகழ்கின்றன. இவற்றிற்கோர் எண்ணிக்கையே இல்லையெனலாம். இந்தப் 'பௌபாத்'தின் ஆனந்த கோலாகலக் கூட்டத்தில் இருவகையான மனிதர்கள் இருந்தனர். பார்த்துக்கொண் டிருக்கையிலேயே இவ்வுலக படாத்தின் நெசவிலே புதுப்புது வண்ண இழைகள் தோன்ற லாயின; புதிய முடிச்சுக்கள் விழுந்தன.

விருந்துணவு யாவும் முடிந்த பிறகு இந்திராணி பொழுது போய்ச் சற்றுத் தாமதமாகவே ஜமீன்தாரரின் வீட்டுக்குச் செல்ல நேர்ந்தது. விநோதனின் மனைவி நயனதாரா, அவள் இப்படி வந்த தற்குக் காரணம் வினவியபோது, இந்திராணி வீட்டில் ஏராள வேலை, உடல்நலம் சரியாக இல்லை என்ற இரு காரணங்களைக் காட் டினாள். ஆனால் அவை அங்குள்ளவர்களுக்குத் திருப்தியளிக்கவே இல்லை.

உண்மையான காரணத்தை இந்திராணி மறைத்தாலும் அவர்களுக்குப் புரியாமல் போகவில்லை. அக்காரணமாவது, முகுந்த பாபு பெரிய செல்வச் சீமான்தான்; ஆனால் குல மரியாதையைக் கவனிக்கும்போது திவான் வீட்டார் உயர்ந்த மரபினரே.

இந்திராணி இந்தக் குலகௌரவத்தை மறந்தவளல்லள். தன்னை விடக் குலத்தில் தாழ்வான ஜமீன்தாரர் வீட்டில் சாப்பிடுவதைத் தவிர்க்கவே இவ்வாறு ஆலசியமாக அங்கு வந்திருக்கிறாள். அவளுடைய சிரமங்களைப் புரிந்துகொண்டதுபோல் ஜமீன்தாரர் வீட்டுப் பெண்டுகள், அவளை ஒரு வாயாவது உண்டுவிட்டுப் போக வற்புறுத்தினர். ஆனால் இந்திராணி இதற்கெல்லாம் மசிபவள் அல்லள்; அவள் சாப்பிடவே இல்லை.

ஒரு சமயம் முகுந்தபாபுவும் கௌரீகாந்தரும் வாழ்ந்திருந்த காலத்திலேயே இந்தக் குலாபிமானத்தால் பெரியதொரு கிளர்ச்சியே மூண்டது. அதை இங்குக் குறிப்பிடவேண்டியது அவசியமாகும். இந்திராணி கண்கவர் அழகி. நம்முடைய இலக்கியத்தில் இத்தகைய எழிலார் நங்கையரை நிலைத்த மின்னற் கொடியோடு ஒப்பிடும் கவிமரபுண்டு. இந்த உவமம் பெரும்பாலும் பொருந்துவதில்லை; ஆனால் இந்திராணி விஷயத்தில் இது சரியாகவே அமைந்துவிட்டது. ஒருவகைக் கவர்ச்சி - ஒரு தீவிர விரைவு-இயல்பான அவளுடைய கம்பீரத்துடன் கூடி விளங்கியது. இந்த மின்னலின் துடிப்பு, பளபளப்பு, அவள் முகபாவத்தில், கண்ணோக்கில், உடல் வளைவில் அப்படியே நிலைத்து விளங்கியது. இந்த இடத்தில் அதற்குரிய சலனத்தன்மை தடுக்கப்பட்டதாகும்.

இக் காமர் வனப்பினைப் பார்த்ததுமே முகுந்தபாபு தம் வளர்ப்புப் பிள்ளைக்கு இவளை முடிபோடக் கௌரீகாந்தரிடம் மெல்லப் பேச்செடுத்தார். எஜமான விசுவாசத்தில் கௌரீகாந்தர் யாருக்கும் குறைந்தவரல்ல. அவருக்காக உயிரையும் தரக்கூடிய மனத்திண்ணியர். எஜமானரால் அவருடைய நிலை உயர்ந்துள்ளது. அவருடன் நண்பனைப்போல் நெருங்கிப் பழகியிருக்கிறார். கனவில்கூட எஜமானரிடம் வைத்த நன்மதிப்பை அவர் மறந்தவரேயல்லர். ஆனால் இந்த விஷயத்தில்மட்டும் அவர் சற்றும் இடங் கொடுக்கவில்லை. எஜமானருக்குப் பட்ட கடனை வேண்டுமானாலும் வட்டியும் அசலுமாக அவர் தீர்ப்பாரே தவிர, குல மரியாதையைமட்டும் விட்டுக்கொடுக்கவே மாட்டார். முகுந்தபாபுவின் வளர்ப்புப் பிள்ளைக்குத் தம் பேத்தியை மணம் செய்விக்கும் யோசனையை அவர் ஏற்கவில்லை.

தம்மிடம் உழைத்து உருவானவர் இப்படி இருப்பது முகுந்தபாபுவுக்குப் பிடிக்கவே இல்லை. இந்த யோசனையைத் தம்மிடம் அவ்வளவு பக்தியுடைய அச் சேவகர் பெரிய அநுக்கிரகமாகவே கருதுவாரென அவர் நம்பியிருந்தார். பாவம்; ஆனால் கௌரீகாந்தர் அந்த வழியில் அவருடைய பேச்சிற்கு மதிப்புத் தரவில்லை. இதனால் முகுந்தபாபு சில நாட்கள் அவருடன் பேசுவதைக்கூட நிறுத்தி, அவருக்கு மனவருத்தத்தை உண்டுபண்ணினார்.

எஜமானர் இப்படி வேற்றுமுகமாக இருக்கவே, கௌரீகாந்தருக்கு இதயத்தில் சாவுக் கணை ஊடுருவியதுபோன்ற எவ்வம் படர்ந்தது. இருப்பினும், தம் பேத்தியை, தாய் தந்தையற்ற, வறுமையில் உழலும் ஒரு நற்குடி மகனுக்கே மணம் புரிவித்து, அவனைத் தம்மிடத்திலேயே நிறுத்திக்கொண்டு, தம் செலவிலேயே படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டுவந்தார்.

இத்தகைய குலச்செருக்குக் கொண்ட பாட்டனாரின் பேத்தி இந்திராணி, எஜமானர் வீட்டு விருந்தில் சாப்பிடவில்லை. இதனால், எஜமானரின் மனைவி நயனதாரா உள்ளத்தில் துளியேனும் மகிழ்ச்சி அடையவில்லை என்பது கூறாமலேயே விளங்கும். இதிலிருந்து இந்திராணியிடம் ஓர் அகம்பாவம் தென்படுவதாக, பகையால் கசந்த அவளுடைய கற்பனையில் விபரீத எண்ணம் ஒன்று எழலாயிற்று.

முதலாவது, இந்திராணி உடல் முழுவதும் அணிகலன் பூண்டு வந்திருக்கிறாள். எஜமானர் வீட்டுக்கு வரும்போது அவரிடம் பணிபுரியும் ஆளுடைய மனைவி இப்படி வருவது அடாத செயலாகும். இரண்டாவது, இந்திராணிக்குத் தன்னை மிஞ்சிய அழகி எவருமில்லை என்ற இறுமாப்பு; அந்தஸ்தில் குறைவான இவளுக்கு இத்தனை அழகு இருக்கவேண்டிய அவசியமில்லை; அது அநியாயங்கூட! நயனதாரா நினைத்தாள்: 'அழகிற்காக யாரையும் குறை கூற வேண்டியதில்லை. ஆனால் அந்த அழகினால் ஏற்பட்ட கர்வத்தைக் கண்டித்துத்தானே ஆகவேண்டும்?' மூன்றாவது, இந்திராணியிடம் தென்படும் பெருமிதம், பேச்சுவழக்கில் சொல்லப் போனால் 'திமிர்' அவளிடம் இயல்பாகவே இருந்தது. தனக்கு மிகவும் தெரிந்தவர்கள், அறிந்தவர்களிடந்தான் பேசுவாள். அதிகமாக யாருடனும் உறவாடமாட்டாள். இதைத் தவிர, எவர் விஷயத்திலும் தலையிட்டு, எந்தக் காரியத்தையும் செய்ய முற்படாள்; இது அவள் சுபாவம்.

இவ்வாறு உள்ளதும் இல்லாததுமான காரணங்களினால் நயனதாரா சிறிது சிறிதாகப் பகையைத் தன் மனத்துள் வளர்த்து வரலானாள்.

குத்திக் காட்டுவதற்கு அவளைப் பார்க்கும்போதெல்லாம், ''அவள்தானடி, எங்கள் மானேஜரின் ஸம்ஸாரம். எங்களிடம் வேலை செய்து வயிறு வளர்த்த திவானின் பேத்தி...'' என்று கூறி வந்தாள் நயனதாரா. அவள் தனக்குத் துணைபோன ஒரு கிராம மடந்தையைப் பார்த்த இடமெல்லாம் இந்திராணியை ஏதாவது கேலி செய்யுமாறு பணித்தாள். மேல் விழுந்து அவள், இந்திராணி அணிந்திருக்கும் நகை நட்டுகளைத் தொட்டுத் தடவி, ''அடீ, இந்தக் கழுத்துச் சங்கிலி என்ன அழகான மோஸ்தர்! இந்த

வளையல் அசல் பொன்னு, கில்ட்டா?'' என்றெல்லாம் பலர் அறிய ஏளனம் செய்யத் தொடங்கினாள்.

இந்திராணி பதற்றமடையாமல், ''இல்லையடீ; இது பித்தளை'' என்பாள்.

நயனதாரா ஒருநாள் இந்திராணியை விளித்து, ''அடி, நீ அங்கே தனியாக என்னப் பண்ணிக்கொண் டிருக்கே... இப்படிக் கொஞ்சம் வா! இந்தப் பட்சணக் கூடைகளை இந்தப் பல்லக்கில் எடுத்துவை'' என்று அழைத்தாள். அவள் அருகிலேயே வீட்டு வேலைக்காரியும் இருந்தாள்.

இந்திராணி சில கணம், தன்னுடைய தடங்கண்களால் நயனதாராவையே உற்று நோக்கியதும், மறுகணமே எதுவும் பேசாமல் அந்தப் பட்சணக் கூடைகளைப் பல்லக்கில் வைக்க முன்னேறினாள்.

இந்தப் பட்சணங்கள் யாருக்காக அனுப்பப்பட்டனவோ, அந்த அம்மையார் (சம்பந்தியம்மாள்) பரபரப்புற்று, ''எதற்கம்மா நீ சிரமப்படுகிறே... அதோ இருக்கிறாளே வேலைக்காரி, அவள் செய்கிறாள்'' என்றாள்.

இந்திராணி இதற்கிணங்காமல், ''இது என்ன கஷ்டமான வேலையா?'' என்று கூடைகளைத் தூக்கினாள். வேறு ஒருத்தி, ''என்னிடம் கொடுங்கள்'' என்றாள். இந்திராணி, ''இதனால் என்ன குறைந்து போய்விடுவேன்? பரவாயில்லை'' என்றாள்.

அன்னபூரணித் தாய், குளிர்ந்த பார்வையும், இளகிய நெஞ்சுமாய்த் தன் பக்தர்களுக்கு உண்டி வழங்குவது போன்றே அவ்வழகியும் முகம் கோணாது ஒவ்வொரு கூடையாகப் பட்சணங்களைப் பல்லக்கில் எடுத்து வைத்தாள். இந்தச் சிறு நாழிகைக்குள் ஹாட்கோலாவுக்குப் பயணமாகும் பணக்கார இடத்து மாமி, மிதமாகவே உரையாடும் சிரித்தமுகமுள்ளவளான இந்திராணியிடம் நெஞ்சிற் பின்னிய நீங்கல் செல்லா அன்பு கொண்டு விட்டாள்.

பெண்களுக்கே உரித்தான இந்தக் கொடூரமான கேலிக்குச் சிறிதும் அசைந்து கொடுக்காமல் நிமிர்ந்து நின்றாள் இந்திராணி. மாசற்ற அவளுடைய முகப்பொலிவுக்கு முன்னால் சூழ்ச்சி மிக்க மற்றவர்களின் முகங்கள் சுண்டிக் கறுத்துப் போயின. இவள் இன்னும் செம்மாப்புடன் நிற்கிறாளே என்று நயனதாராவுக்கு ஏற்கனவே இருந்த எரிச்சல் பின்னும் பன்மடங்காகியது. இதனை இந்திராணியும் கவனித்தாள். யாருமே பராக்காக இருந்த சமயம் அந்த இடத்தை விட்டே அவள் அகன்று போய்விட்டாள்.

எவர் சாந்தமாகவே பொறுத்துக்கொண்டு போகிறார்களோ அவர்களே மனத்துள் ஆழமாகப் புண்பட்டவராவர். அவமானத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியை இந்திராணி ஒரு பொருட்டாக

நினைக்காது போனாலும், அது உள்ளூற அவளைத் துளைத்து விட்டது.

இந்திராணியை விநோதவிஹாரிக்கு மணம் செய்விப்ப தற்கான பேச்சு வந்தது போலவே, இந்திராணிக்குத் தூர உறவுள்ள, சல்லிக் காசுகூட இராத சிற்றப்பாவின் மகன் வாமாசரணனுக்கும் நயனதாராவைக் கொடுப்பதாக ஒருசமயம் பேச்சு உலவியது. அந்த வாமாசரணன் இப்போது விநோத பாபுவின்கீழ் வேலை செய்யும் ஒரு சாதாரணக் காரியஸ்தன். இந்திராணிக்கு நன்றாக ஞாபகம் இருந்தது: அவள் சிறியவளாக இருந்தபோது இந்த நயனதாராவின் தந்தை, நயனதாரா வையும் கூடவே அழைத்து வந்து வாமாசரணனுக்கு எப்படி யாவது அவளைக் கட்டிப்போட வேண்டுமெனப் பாட்டனார் கௌரீ காந்தரிடம் மன்றாடிக் கேட்டுக்கொண்டார். அந்தச் சமயம், வயது நிரம்பாத இந்த நயனதாரா பிஞ்சிலேயே முற்றியவள் போல் பேசுவதைக் கேட்டு வீட்டிலுள்ளவர் எவரும் திகைத்தே போயினர். 'பிஞ்சிலேயே முற்றிய இந்தப் பூசனிக்'காயின் முன்னே தான் எம்மாத்திரம் என்றுகூட இந்திராணி எண்ணிக்கொண் டாள் அப்போது. இவ்வளவு சூடிகையாகப் பேசும் பெண்ணைப் பார்த்துக் கௌரீகாந்தர் உண்மையில் மகிழ்ச்சியே கொண்டாலும் குலகௌரவத்தை உத்தேசித்து, வாமாசரணனுக்கு மணம் செய்து கொள்ளச் சம்மதப்படவில்லை. கடைசியில் அவருடைய விருப்பப்படியே, அவரது முயற்சியினாலேயே நயனதாரா விநோத பாபுவுக்கு வாழ்க்கைப்பட்டாள்.

இதையெல்லாம் நினைவுபடுத்திக்கொண்டபோதிலும், இந்திராணி மனஆறுதல் அடையவில்லை. அந்த அவமானம் அவள் மனத்தை மிகவும் புண்ணாக்கிவிட்டது. மகாபாரதத்தில் வரும் சுக்கிராசாரியரின் மகள் தேவயானி, சர்மிஷ்டை இவர்களை நினைத்துக்கொண்டாள். தேவயானி தன் எஜமானனை வசியம் செய்து சர்மிஷ்டையின் கர்வத்தைக் குலைத்து அவளைத் தன் அடிமையாக்கிக்கொண்டாள். அதேபோல் இந்திராணி செய்தால் இதற்கேற்ற பலனும் கிட்டும். இதற்கு ஒரு வாய்ப்பு வந்தது. அசு ரர்களுக்குச் சுக்கிராசாரியர் எவ்வளவு முக்கியமாக விளங்கினாரோ அதேபோல் முகுந்தபாபு குடும்பத்துக்கு அவளுடைய பாட்டனா இன்றியமையாதவராக விளங்கினார். அவர் மனம் வைத்தால் முகுந்த பாபுவைக் 'குலத்தில்தாம் மட்டம்' என்று அவரே ஒப்புக் கொள்ளவும் செய்திருப்பாள். ஆனால் அவர்தானே முகுந்த பாபுவின் சொத்தைப் பெருக்கி அவரை ஒரு கண்ணியமான நிலைக்கு உயர்த்தியவர்! அவர் கடமை உணர்வை மறக்காத சீலர். அந்த எஜமான விசுவாசத்தையெல்லாம் இப்போது நினைத்துப் பயனில்லை. அந்த வாங்காகாடி பர்க்கனாவைப்

பாட்டனுரே எளிதாகத் தமக்காக வாங்கிப்போட்டிருக்கலாம்; அப்போது அதற்கான தகுதி அவருக்கு இருந்தது; ஆனுல் அதைத் தம் எஜமானருக்கே வாங்கித் தந்தார். இது ஒரு வகையில் தானம், தியாகம் என்று இந்த ஜமீன்தாரர் குடும்பத்தார் நினைத்து நன்றி காட்டினரா? 'நாங்கள் வளர்த்ததும், பெருக்கியது மான இந்தச் சொத்து இருப்பதால்தானே பெருமிதங்கொண்டு கண்டபடி பேசுகிருர்கள்! ஆகட்டும்...' என்று இந்திராணியின் மனத்துள் ஒரு போராட்டம் நடந்தது.

வீடு திரும்பியதும், அவள் எஜமானர் வீட்டுக்குப் போய் விருந்தில் கலந்துகொண்டு, ஜமீன் சம்பந்தமான காரியங்களை முடித்துவிட்டுத் தன் கணவன் பள்ளியறையில் ஒரு சுகாசனத்தில் சாய்ந்து தன்மயமாகச் செய்தித்தாள் ஒன்றைப் படித்துக்கொண் டிருப்பதைக் கவனித்தாள்.

கணவன் மனைவி இவர்களது இயல்பு ஒன்ருகவே ஒத்திருக்கு மென்பது பலருடைய நினைப்பு. ஏதோ தெய்வாதீனமாக மனைவியும் கணவனும் ஒத்த குணத்துடன் இருப்பதைப் பார்த்து எல்லோரும் இப்படித்தான் என்று முடிவு கட்டுவது வழக் கமே. அது எப்படியிருப்பினும், அம்பிகாசரணனுக்கும் இந்தி ராணிக்குமிடையே சில அம்சங்களில் ஒற்றுமை நிலவியது. அம்பிகாசரணனும் எல்லோருடன் கலகலப்பாகப் பேசிப் பழகுபவனல்லன். ஏதாவது ஜோலி இருந்தால்தான் அவன் வெளியே செல்வான். தான் செய்யவேண்டியதைக் குறைவறச் செய்தும், பிறரிடம் செவ்வனம் வேலை வாங்கியும் தன் வீடாகிய கோட்டைக்குள் வந்து அடைவான். வெளியே அவன் வேலை யுண்டு, கடமை உண்டு; வீட்டில், அவன், அவன் மனைவி இந்தி ராணி. இதுவே அவன் வாழ்க்கையின் வட்டம்.

ஆபரணங்கள் உடலெங்கும் ஜொலிக்க, பகட்டு உடையுடன் இந்திராணி அறையினுள் நுழையும்போது அம்பிகாசரணன் அவளைப் பார்த்து விளையாட்டாக என்னவோ சொல்லப் போனவன், சட்டென அடக்கி, சிந்தனையில் ஆழ்ந்தவனுய், ''ஏன் ஒருமாதிரி இருக்கு உன் முகம்? என்ன நடந்தது?'' என்று கேட்டான்.

இந்திராணி தன் சிந்தாகுலத்தையெல்லாம் ஊதித் தள்ளி, ''வேறென்ன? என் புருஷ ரத்தினத்தைத்தான் பார்க்க வந் தேன்'' என்ருள்.

அம்பிகாசரணன் செய்தித்தாளைக் கீழே எறிந்துவிட்டு, ''அது உன் கண்முன்னர் வீற்றிருக்கிறதே! அதற்கு முன்னுல் என்ன நடந்தது?'' என்ருன்.

இந்திராணி தன் அணிகலன்களை ஒவ்வொன்ருகக் கழற்றியபடி, ''அதற்குமுன் கணவரின் மதிப்பைப் பெற்றிருந்தேன்'' என்ருள்.

''எந்தமாதிரியோ அந்த மதிப்பு?'' என்ருன் அவன்.

இந்திராணி கணவனிடம் நெருங்கி, அவனுடைய சுகாசனத்தின் கைப்பிடிமீது அமர்ந்து, கழுத்தில் கையை வளைத்து, ''உங்களிடம் எந்த வகையில் பெறவேண்டுமோ, அவ்வகையில்'' என்ருள்.

அப்புறம், ஒவ்வொன்ருக நடந்ததையெல்லாம் கணவனிடம் சொன்னுள். இந்த வெட்கக்கேடான சமாசாரத்தை அவனுக்குத் தெரியப்படுத்தவேண்டாமென அவள் நினைத்தாள். ஆனுல் அந்த உறுதி நிற்கவில்லை; இதுபோன்ற உறுதியை இதற்கு முன்னரும் காப்பாற்றியதில்லை. வெளியாரிடம் இந்திராணி எவ்வளவு அடக்கமாக இருப்பினும் கணவனிடம் இந்தக் கட்டுத் தளைகளையெல்லாம் மீறிவிடுவாள். தன்னை மறைத்துக் கொள்ளவேமாட்டாள்.

அம்பிகாசரணன் நடந்த விஷயங்களைக் கேட்டு, உள்ளூறக் கொதிப்பே அடைந்தான். ''இப்போதே, நான் என் வேலையை ராஜீநாமாச் செய்துவிடுகிறேன்'' என்றதும், விநோதபாபுவுக்கு ஒரு விறுவிறுப்பான கடிதம் எழுதத் தொடங்கினுன்.

இந்திராணி, அச் சமயம் ஆசனத்தின் கைப்பிடியிலிருந்து இறங்கி, தரையில் கம்பளத்தின்மீது அமர்ந்து, கணவனின் முழந்தாளில் கைகளை ஊன்றியவாறு, ''இத்தனை பரபரப்பு எதற்கு? அப்புறம் எழுதலாம், நாளைக் காலை யோசனை பண்ணிச் செய்யலாம்'' என்ருள்.

அம்பிகா ஆத்திரமடைந்தவனுய், ''கூடாது, இனி ஒரு நிமிஷங்கூடப் பொறுக்கமாட்டேன்'' என்ருன்.

இந்திராணி தன் பாட்டனுரின் இதயத் தண்டிலே பூத்த தண்டாமரையென விளங்கியவள். அவருடைய இதயத்திலிருந்து அவள் அன்பின் சத்தை உறிஞ்சியதுபோலவே அவருடைய உயர்பண்புகளையும் தெரியாமலே பெற்றிருந்தாள். முகுந்தபாபுவின் குடும்பத்தவர்பால் கௌரீகாந்தருக்கு இருந்த ஒரு பற்றும் பரிவும் இந்திராணியிடம் முழுவதும் படியாமற் போனுலும், எவர் உப்பைத் தின்று நன்னிலைக்கு வரமுடிந்ததோ, அவருக்கு வாழ்க்கையை அர்ப்பணம் செய்வது சிறந்த கடமையாகுமென்ற உணர்வு அவள் மனத்துள் ஆழ வேரூன்றி இருந்தது. அவளுடைய படித்த கணவன் விரும்பினுல், வக்கீல் தொழிலில் பணம் ஈட்டமுடியும், அல்லது உயர்ந்த உத்தியோகத்தில் அமர முடியும். ஆனுல், அவனுடைய இல்லாள் மனத்துள் பூண்டிருந்த ஒரு திடமான கொள்கையைப் பின்பற்றி அவன் தன்னலங்கருதாது, ஜமீன்தாரரின் சொத்து உடைமைகளைக் கண்காணித்து வந்தான். இந்திராணிக்கு என்னவோ அவமானம் இழைக்கப் பட்டது. ஆனுல் தன் கணவன், பொறுப்புள்ள ஒரு

பணியிலிருந்து இதற்காக விலகுவானென்று அவள் துளியேனும் நினைத்தவளல்லள்.

இந்திராணி இதற்கான யுக்தி தருக்கங்களை எடுத்துரைத்து, இனிமை பயக்கும் குரலில், "விநோதபாபுமீது ஒரு தவறுமில்லை. அவருக்கு ஒன்றுமே தெரியாது, இதைப்பற்றி. அவருடைய மனைவி மீது ரோஷம்கொண்டு எதற்காக இந்த வீண் சச்சரவில் இறங்கு கிறீர்கள்?" என்றாள்.

அவள் இப்படிப் பேசுவதைக் கேட்டதும், அம்பிகா உரக்கச் சிரித்தான். தான் கொண்ட முடிவு இப்படிச் சிரிப்புக்கிடமாகப் போயிற்றே என்று அவன் உணரலானான். "நீ சொல்வதும் சரி தான்; அவர் எஜமானராக இருந்தாலும், எப்பேர்ப்பட்டவராக இருந்தாலும் உன்னை அந்த இடத்துக்கு அனுப்பமாட்டேன்" என்றான்.

இச் சிறு புயல் வீசியதும் அன்றைக்கான கருமுகில்கள் விலகின. வீட்டில் ஒளி பரவிக் கலகலப்பாயிற்று. கணவன் காட்டிய ஆதரவி னால் இந்திராணி, வெளியிலிருந்து வந்து தன்னைத் தாக்கிய அந்த அதிர்ச்சியையும் அவமானத்தையும் மறந்தே போனாள்.

விநோதவிஹாரி, அம்பிகாசரணனிடம் முழுப்பாரத்தையும் போட்டுவிட்டு ஜமீனின் காரியங்களைக் கவனிப்பதே இல்லை. எல்லா வசதிகளும் நன்கு அமைந்து, கவலைப்பட அவசியமே ஏற்படாத நிலையில் சில கணவன்மார், கட்டிய பெண்டாட்டியை அலட்சியம் செய்வதுபோலவே அவனும் தன் சொத்துக்களைப் பற்றி அக்கறையே கொள்ளவில்லை. ஜமீனிலிருந்து கிடைக்கும் வருமானம் ஒரே சீராக வந்ததால், அது ஒரு பெரிய வருமான மாக அவனுக்குப் படவே இல்லை!

விநோதனின் அவா, ஏதாவது குறுகிய சுரங்கவழியைப் பிடித் துக்கொண்டு திடுமென ஒரே இரவில் குபேரனுடைய நிதியத் தைப் பெறவேண்டுமென்பதே ஆனால், பலபேருடன் அவன் ஆலோசித்து, மர்மமான, உள்ளம் சிலிர்க்கச் செய்யும் காரியங்க ளில் ஈடுபட்டான். ஒரு சமயம் அவனுக்கு யாராவது 'நல்லுபதே சம்' செய்வார்கள்; நாட்டிலுள்ள வேலமரங்களையெல்லாம் வெட்டி ஓரிடமாகச் சேர்த்து அதிலிருந்து மாட்டுவண்டிக்கான சக் கரங்களைப் பண்ணப் பணம் குவித்துவிடலாமென்று சிலரும், சுந்தரவனத்தில் இருக்கும் தேன்கூடுகளையெல்லாம் கொண்டு வந்துவிடலாமென்று வேறு சிலரும் அவனுக்கு யோசனை கூறுவர். மேற்குப்பிராந்தியத்திற்குச் சென்று, அங்குக் காடுகளில் கிடைக்கும் கடுக்காய்களைச் சேகரித்து எல்லா உரிமையையும் பெற்று இலாப கரமாக வியாபாரம் நடத்தவும் அவனைச் சிலர் தூண்டினர். இதையெல்லாம் கேட்டால் உலகத்தவர் சிரிப்பாரென்று அவன் யாரிடமும் கூறுவதில்லை, தன் திட்டங்களைப்பற்றி. முக்கியமாக

அம்பிகாசரணனிடம் இதையெல்லாம் வெளியிடுவது வெட்கமாக இருந்தது. பணத்தைத் தண்டச்செலவு செய்கிறானெனத் தன்னை பற்றி நினைப்பானோ என்று அவன் உள்ளுக்குள் கூச்சமே கொண்டான். அம்பிகாசரணனிடம் அவன் பழகிய விதம் அம்பிகா ஜமீன்தாரன் போலவும், தான் அவன்கீழ் அமர்ந்து வெட்டிப் பொழுதுபோக்கி மாதச் சம்பளம் பெறும் ஆள் போலவும் இருந்தது!

'பௌபாத்' அழைப்பிற்கு மறுநாள் முதலே நயனதாரா தன் கணவன் காதில் மந்திரம் ஓதத் தொடங்கிவிட்டாள்: ''நீங்கள் எதைத்தான் கவனிக்கிறீர்கள்? அம்பிகா எதைக் கொடுக்கிறானோ அதைத் தலைமேல் வைத்துக்கொண்டு திருப்தியடைகிறீர்கள். இந்தப் பக்கம் உள்ளுக்குள் என்ன அழிவு வேலையெல்லாம் நடக்கிறது தெரியுமா? உங்களுடைய மானேஜரின் பெண்டாட்டி இருக்கிறாளே, அவள் உடம்பில் எப்படி அத்தனை நகை ஏறியது? அந்தச் சிறுக்கிக்குத்தான் என்ன தலை இடறிப்போகிறது!''—இவ்வாறு நகைகளைப்பற்றிப் புனைந்து கூறினாள். மேலும் இந்திராணி, வீட்டு வேலைக்காரியை எப்படியெல்லாம் வைது திட்டினாள் என்று இல்லாததையெல்லாம் சேர்த்துக் கதையாக மொழிந்தாள்.

விநோதபாபு பலவீனமானவன். ஒரு பக்கம், பிறரை நம்பி இராமல் அவனால் இருக்கவே முடியாது; மறுபக்கம், அவன் காதில் யாராவது எதையாவது சொன்னால் அவனுக்குச் சந்தேகம் பிறந்துவிடும்; அப்படியே கலகப்பேச்சை நம்பிவிடுவான். மானேஜர் சுளையம் செய்கிறானென்ற சந்தேகம் அவனுக்குத் திடமாகிவிட்டது. எந்தக் காரியத்தையும் அவன் நேரில் கவனிக்காததால் நோக்கும் திசையெங்கும் மருட்சியே அவன் கண்முன் தாண்டவமாடியது. இந்த மானேஜரைக் கையும் களவுமாகப் பிடிக்க வழியும் அவனுக்குத் தெரியாது. அவன் முகத்துக்கு எதிரே பட்டெனத் தனக்குப் பட்டதைச் சொல்லவும் துணிவு இல்லை. பெரிய சங்கடத்துள் ஆழ்ந்தான்.

அம்பிகாசரணனின் 'சர்வாதிகார'த்தால் அவன்கீழ்ப் பணியாற்றியவர்கள் பொருமி அழுக்காறு கொண்டு குமுறினர். முக்கியமாக, கௌரீகாந்தருக்குத் தூரத்து உறவினனும் மருமானுமான வாமாசரணனே அவனிடம் அதிகப் பகைமை காட்டியவன். காரணம், உறவு முறையாகப் பார்த்தால், தான் எந்த விதத்திலும் அம்பிகாசரணனுக்குக் குறைவானவனல்லன்; பொறாமையினாலே இவன் தனக்கு உத்தியோக உயர்வு தராமல்இருக்கிறான் என்ற எண்ணம் அவனுக்கு. பதவி வந்தால் தானாகவே யோக்கியதையும் ஏற்பட்டுவிடுமென்பதே அவனுடைய கருத்து. மானேஜரின் வேலை ரொம்பப் பெரிய வேலையோ என்று மிகத் துச்சமாக எண்ணிவிட்டான் வாமாசரணன். அக்காலத்தில் தேருக்குமேல் கொடி

பறக்கும்; இந்தக் காலத்தில் ஆபீஸ் வேலையில் மானேஜரின் நிலையும் அதே போலத்தான். தேரை இழுத்துக் குதிரை இங்கே சாய்கிறது; மானேஜர் ஐயாவோ கொடிமாதிரி மேலிடத்தில் பறக்கிறார் என்று சொல்வான் அவன்.

இதற்கு முன்னர் விநோதன் ஜமீன் அலுவல்களைப்பற்றி அப்படி அக்கறையுடன் மேற்பார்வையிடும் வழக்கமே இல்லை. எப்போதாவது ஏதாவது புரட்டுவதற்குப் பணம் தேவைப்பட்டால் மானேஜரை அணுகிப் பெட்டியில் தொகை எவ்வளவு இருக்கிறதெனக் கேட்பான். பொக்கிஷதார், இருப்பு எவ்வளவு என்று கணக்குப் பார்த்துச் சொல்லுவார். விநோதன் தயங்கிக் கேட்டு வாங்கிக்கொள்வான். பிறருடைய சொத்தாகவே பாவித்து, பணத்தில் தானே கை வைக்கமாட்டான். பொக்கிஷதார் அவனிடம் கையெழுத்துப் பெற்றுப் பணம் எண்ணித் தருவார். அப்புறம் அந்தப் பக்கமே தலைகாட்டமட்டான். அம்பிகாசரணனை விட்டு விலகி நிற்பதே அவனுக்கு ஆறுதலாக இருக்கும். ஆனால், இப்போது நினைத்தபோது பணத்தைத் தானே எடுத்துச்செல்லத் தொடங்கினான்.

அம்பிகா நடுநடுவே நேரே அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கியவுடன், பல சிக்கல்களைச் சமாளிக்க முடியாமல் தவித்தான். யாருக்கு என்ன தருவது, எந்தச் செலவைக் கட்டிப்பிடிப்பது; பணிசெய்வோருக்கு மாதச்சம்பளம் பட்டுவாடாச் செய்வது; எடுத்துக்கொண்ட தொகையைச் சரிக்கட்டுவது; வீண் விரயத்தைத் தடுப்பது; செலவினங்களைத் தவிர்ப்பது - இப்படி ஜமீன் லேவா தேவி விஷயமே அவருக்குப் புரியாத புதிராகும்.

வரவர விநோதன் அம்பிகாசரணனை நச்சரிக்கத் தொடங்கினான். அம்பிகாவுக்குச் சேயென்று ஆகிவிட்டது. இரும்புப் பெட்டியின் சாவியை தன்னிடமே வைத்துக்கொண்டான். விநோதன் அவனுக்குத் தெரியாமல் பணம் எடுப்பது நின்றது. பணத்துக்குடையவன் விநோதன். எஜமானனாக இருந்தும் இதய துர்ப்பலத்தால், தன் உரிமையை வெளிப்படையாக நிலை நாட்டமுடியாமல் விழித்தான். அம்பிகாசரணன் என்ன எச்சரிக்கை எடுத்துக்கொண்டுமென்ன? அவனுடைய முயற்சி வீணாகியது. முகடி ஜமீன்தாரனின் பக்கம் இருக்கும்போது இரும்புப் பெட்டியின் சாவியைக் கையில் வைத்திருந்தால் உள்ளே இருக்கும் திரவியம் நிற்குமா என்ன? நன்மையைக் கோரப்போய் விபரீதமே ஏற்பட்டது. ஆனால், இதைப்பற்றிப் பின்னர்க் கவனிப்போம்.

அம்பிகாசரணன் கடுமையான எச்சரிக்கை எடுத்துக்கொள்ளவே விநோதனுக்கு உள்ளுக்குள் எரிச்சல் அதிகமாயிற்று. அச்சமயம் நயனதாரா அவன் மனத்துள் சந்தேகத் தீயை வேறு கிண்டிவிட்டு வேடிக்கை பார்த்தாள். ஒவ்வொரு

பணியாளனுக வரவழைத்துப் புலன் விசாரிக்கலானுன். வாமா சரணன் அவனுக்குப் பிரதான ஒற்றனுக வேலை செய்தான்.

கௌரீகாந்தரின் காலத்தில் திவான், பலாத்காரமாகப் பக்கத்து ஜமீன்தாரனின் நிலங்களில் கைவைக்கக் கூசுவதில்லை. இவ் வழியிலேயே அவர் நிலபுலன்களை ஆர்ஜிதம் செய்தார். ஆனுல் அம்பிகாசரணன் இத்தகைய வேலைகளில் ஈடுபடாதவன். அப்படி ஏதாவது வழக்கு விவகாரம் ஏற்பட்டாலும் சமரசம் செய்து முடித்துவிடுவான். வாமாசரணன் ஜமீன்தாரனின் பார்வையை இதன் பக்கம் திருப்பினுன். 'அம்பிகாசரணன் கட்டாயமாக எதிர்க் கட்சியிடமிருந்து லஞ்சம் வாங்கி நமக்குச் சாதகமாக இருக்கும் விவகாரத்தைக் கெடுத்துவிட்டான்' என்று வர்த்தி வைத்தான். திறமைசாலி எவனுமே கையில் பணம் வாங்காமல் இரான் என்பது அவன் அறிந்த அடிப்படை உண்மைகளில் ஒன்ருகும்.

இவ்வாறு மறைவாகவும் பலர் வாயிலாகவும் குறளையைக் கேட்டு விநோதனின் மூளையில் சந்தேக வித்து நன்ருக ஊன்றி, முளை விட்டுக் கிளைக்கத் தொடங்கிவிட்டது. ஆனுல், கண்கூடாக அவன் எதையும் செய்யத் துணிவு கொள்ளவில்லை. முதலாவது, கூச்சம்; இரண்டாவது திகில்; ஒருவேளை நல்ல ஸ்திதியில் உள்ள அம்பிகாசரணன் பதிலுக்கு ஏதாவது நடவடிக்கை எடுத்து மானத்தை வாங்கினுல் என்ன செய்வதென்ற அச்சம்.

கடைசியில் நயனதாரா கணவனின் கோழைத்தனத்தைப் பொசுக்கி, விநோதனுக்குத் தெரியாமல், அம்பிகாசரணனை அழைத்து, திரைக்குப் பின்னுலிருந்தே, ''உங்களை இனி வேலையில் வைத்திருக்க இஷ்டமில்லை; வாமாசரணனிடம் எல்லாக் கணக்கு வழக்கு, ரொக்கம், பேழைச்சாவி யாவற்றையும் ஒப்படைத்துவிட்டுப் போகலாம்'' என்று உத்தரவிட்டாள்.

அம்பிகாவுக்கு இதுபற்றி முன்பாகவே சற்று விசேஷமாகச் செய்தி எட்டியது. அதனுல் இப்படி நயனதாரா கூறியதைக் குறித்து அவன் வியப்புறவில்லை. உடனேயே விநோதனை அவன் அணுகி, ''என்னை வேலையிலிருந்து நீக்க விரும்புகிறீர்களா?'' என்று கேட்டான்.

விநோதன், ''அப்படி ஒன்றுமில்லையே'' என்ருன்.

அம்பிகாசரணன் மேலும் வினவினுன்; ''உங்களுக்கு என்மீது சந்தேகப்படக்கூடிய காரணம் ஏதாயினும் உண்டா?''

''ஒன்றுமே இல்லையே'' என்ருன் விநோதன் திடுக்குற்று.

அம்பிகாசரணன் நயனதாரா சொன்னதைக் குறித்து, எதுவுமே எடுக்காமல், தன் அலுவலகத்திற்குச் சென்ருன். வீட்டில் இந்திராணியிடமும் இதுபற்றி ஒன்றுமே கூறவில்லை. இப்படிச் சின்னுட்கள் விரைந்தன.

அச் சமயம் அம்பிகாசரணன் இன்ப்ளூயென்சா காய்ச்சலில் படுத்தான். அப்படிக் கடுமையான பிணியன்று; ஆயினும் உடல் மிகவும் பலவீனமுற்றதால் அலுவலகத்திற்குப் போகாமல் ஒய்வு எடுத்துக்கொண் டிருந்தான். சர்க்காருக்குக் கஜானு பாக்கி செலுத்தவேண்டிய சமயம் அது. வேலையின் மும்முரம்; அதனைக் கவனிப்பதற்கு ஒரு நாள் இளங்காலையில் அம்பிகாசரணன் திடீரென அலுவலகத்திற்குச் சென்றுன்.

அன்று அவன் வருவானென எவருமே எதிர்பார்க்கவில்லை. ''நீங்கள் இந்த உடல்நிலையில் எதற்கு வந்தீர்கள்?'' என்றனர் காரியஸ்தர்கள்.

தனக்குள்ள பலவீனத்தைப்பற்றிய பேச்சை அவன் உதறித் தள்ளி மேஜைக்கெதிரில் போய் அமர்ந்தான். வந்திருந்த காரியஸ்தர்களுக்குக் கைகால் ஓடவில்லை. அதிகக் கவனம் செலுத்தித் தத்தம் வேலையில் தோய்ந்தனர்.

அம்பிகாசரணன், மேஜை இழுப்பறையைத் திறந்து பார்த்தான். அதனுள் எந்தக் காகிதத்தையும் (தஸ்தாவேஜு) காணவில்லை. ''இதென்ன?'' என்று அவர்களைக் கேட்டான். திருடன் மருள மருள விழிப்பதுபோல் - ஏதோ பேயைக் கண்டு வெருண்டதுபோல்-எல்லோரும் கண்களை மேலே தூக்கிப் பிரமை பிடித்து நின்றனர்.

வாமாசரணன் மட்டும், "ரொம்பத்தான் ஐயா... உம்முடைய பித்தலாட்டம் தெரியும். இங்கே எல்லோருக்குமே தெரியுமே, அந்தத் தஸ்தாவேஜுகள் யாவும் எஜமானர் எடுத்துச்சென்றிருக் கிருர்'' என்றுன்.

அம்பிகாசரணன் கோபத்தால் முகம் சிவக்க, ''எதற்காக?'' என்றுன்.

''அதுபற்றி எனக்கு என்ன தெரியும்?'' என்றுன் வாமா சரணன், எதையோ மிகவும் அக்கறையாக வரைவதுபோல் பாசாங்கு செய்து.

விநோதன், அம்பிகாசரணன் நோய்வாய்ப்பட்டு அலுவலகத்திற்கு வராதிருந்த சமயம் பார்த்து வாமா சரணனின் சூழ்ச்சியின்பேரில் கள்ளச்சாவி ஒன்றைத் தயார் செய்து மானேஜரின் சொந்த மேஜை இழுப்பறையைத் திறந்து, அதிலுள்ள காகிதப் பத்திரங்களை அலசிப் பார்க்க எடுத்துச் சென்றுன். கெட்டிக்கார வாமாசரணன் இதை மறைக்கவில்லை. அம்பிகா இந்த அவமானம் பொறுக்காமல் வேலையை ராஜீநாமாச் செய்து விடுவான் என்று அவன் நினைக்கவில்லை என்று சொல்ல முடியாது.

அம்பிகாசரணன் மேஜையைப் பூட்டிவிட்டுக் கோபத்தால் உடல் நடுக்குற விநோதனைத் தேடிப்பிடிக்கச் சென்றுன்,

ஆனால், விநோதன் உட்புறத்திலிருந்து தனக்குக் கடுமையான தலைவலி, இப்போது பார்க்க முடியாதெனச் செய்தியை அனுப்பி விட்டான். வீட்டுக்குத் திரும்பி அம்பிகா திராணியிராமல் படுக்கையில் வந்து சாய்ந்தான். இந்திராணி ஓடிவந்து அவனைத் தன் முழு ஆதரவுடன் அணைத்துக்கொண்டாள். அப்புறம் நடந்ததையெல்லாம் தெரிந்துகொண்டாள்.

நிலைத்த மின்னற்கொடி, இப்போது அதன் துரிதசலனத்தைக் கொண்டது. அவளுடைய மார்பு விம்மி விம்மி அடங்கியது. அகல மான விழிமேகத்திலிருந்து இடியின் தீவிர ஒளி கொப்புளித்தது... இத்தகைய தங்கமான கணவனுக்கா இப்படி ஓர் அவமதிப்பு! நம்பகமாக இருந்ததற்கா இப் பரிசு?

இந்திராணிக்கு மூண்டெழுந்த வெவ்விய ரோஷத்தைக் கண்டதும் அம்பிகாசரணனுக்கிருந்த கோபமெல்லாம் தணிந்து விட்டது. சினந்தெழும் ஒரு தெய்வத்தின் சாபத்திலிருந்து பாபியைக் காக்க இந்திராணியின் கைகளைக் கெட்டியாகப் பற்றி, "விநோதபாபு அப்பாவி மனிதன்; மனத்திண்மை இராதவன்; நாலுபேர் சொல்வதை நம்பி அவனது மூளை குழம்பிவிட்டது" என்றான் அம்பிகா.

அப்போது இந்திராணி, தன் இரு கரத்தாலும், கணவனுடைய கழுத்தைத் தழுவி, மார்புடன் சேர அவனை அணைத்து, உணர்ச்சி வேகத்தால் அவனை அழுத்தமாகப் பற்றினாள். சற்று முன் மின்னழல் புறப்பட்ட அவளுடைய கண்களில் பெருமழை இறங்கிற்று. இவ்வுலகத்தவர் சுமத்தும் அடாத பழியிலிருந்தும், அவமானத்திலிருந்தும் தன் நாயகனைக் காக்க அவள் இருகரங்களையும் விரித்து, அவனைத் தன்னுள் அடக்கி, இதயக்கோயிலின் தெய்வமாக வழிபட விழைந்தாள்.

இதுபோன்ற வேலையை விட்டுத் தொலைப்பதென்று அம்பிகா சரணன் முடிவுகட்டினான். இப்போது யாருமே அதைத் தடுத்துக் கூறவில்லை. வேலையை விடுவதென்று தீர்மானமானதும் அம்பிகாசரணனின் கோபம் அடங்கிவிட்டது. ஆனால், அவனுடைய வேலைகள், அவனுடைய ஓய்வு நேரங்கள் இவற்றிடையே இந்திராணியின் வெஞ்சினம் அவளுடைய இதயபீடத்துள் மழுவெனக் காய்ந்துகொண் டிருந்தது.

அதே சமயம் வேலையாள் ஜமீன்தார் பாபுவின் பொக்கிஷதாரர் வந்திருப்பதாக அறிவித்தான். விநோதன், தனக்கு நேரே வருவதற்கு மூஞ்சியிராமல், பொக்கிஷதாரன்மூலம் தன்னுடைய ராஜீநாமாச் சீட்டைப் பெற ஆளை அனுப்பியதாக எண்ணிக்கொண்டான் அம்பிகா. அதற்காக அவன் வேலை நீக்கச் சீட்டை அவரிடம் எழுதித் தந்தான்,

பொக்கிஷதாரர் அதுபற்றி எதுவும் பேசாமல், ''ஐயோ! எல்லாம் நாசமாய்ப் போயிற்றே, அம்பிகா 'பாபு'' என்று தொடங்கினன். அம்பிகாசரணன், ''என்ன நடந்தது?'' என்ருர்.

அவன் உரைத்ததாவது: அம்பிகரசரணன் முன்னெச்சரிக்கையாக பொக்கிஷதாரிடமிருந்து ஜமீன்தாரன் பணம் பெறுவதை நிறுத்திவிடவே, அவன் பல இடங்களில் கைம்மாற்ருகப் பணம் வாங்கத் தலைப்பட்டான். இப்படி அந்தப் பணத்தை வைத்து ஒவ்வொரு வியாபாரமாக நடத்தி நஷ்டம் வந்து, கடன்தொகை ஏறிக்கொண்டே போயிற்று. அப்புறம் இக் கடன் தொல்லையைப் போக்கப் புதுப்புது வழிகளைக் கையாண்டு, முடிவில் சொத்தே முழுகும் அளவுக்குக் கொண்டுவந்துவிட்டான். அம்பிகாசரணன் நோயுற்று அலுவலைக் கவனிக்காது இருந்த சமயத்தைப் பயன் படுத்தி ஜமீன்தாரன் ரொக்கத்தையெல்லாம் வாங்கிச் செலவு செய்துவிட்டான். வாங்காகாடி பர்க்கனு, பக்கத்து ஜமீன் தாரனுக்கு அடகு வைக்கப்பட்டது. அந்தக் கடன் தொகைக்கு வட்டிகூடக் கொடுக்க முடியாமல் போகவே, . அடுத்த ஊர் ஜமீன்தாரன் வழக்குப் போட்டுச் சொத்தை ஜப்தி செய்துவிட்டான். இதுதான் அவன் குறிப்பிட்ட பெருத்த நாசம்.

இதைக் கேட்டு அம்பிகாசரணன் திடுக்குற்ருன். ''இப்போது எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை...நாளைக்கு இதுபற்றிச் சிந்திக்க லாம்'' என்ருன். பொக்கிஷதாரர் விடை பெற்றுச் செல்ல எழுந்தபோது, அவரிடம் தந்த ராஜீநாமாச் சீட்டைத் திருப்பி வாங்கிக்கொண்டான்.

உட்புறம் வந்து அம்பிகா, இந்திராணிக்கு நடந்ததையெல் லாம்பற்றித் தெளிவாகக் கூறினன். ''விநோதபாபுவுக்கு இப்படி ஒரு சங்கடமான நிலை ஏற்பட்டிருக்கும்போது நான் வேலையை விடமுடியாது'' என்ருன்.

இந்திராணி வெகு நேரம் சிலையுருவென நிலைத்து நின்ருள். கடைசியில், தன்னுள் குமுறும் உணர்ச்சிகளையெல்லாம் வசப் படுத்தி அடக்கி நெட்டுயிர்த்து, ''வேண்டாம்; வேலையை விடவேண்டியதில்லை'' என்ருள்.

அதற்கப்புறம் இந்தக் கடனைத் தீர்ப்பதற்குப் பணம் எங்கே, பணம் எங்கே என்று தேடும் கட்டம் தொடங்கியது. வேண்டிய பணம் கிடைக்கவில்லை. அந்தப்புரத்திலிருந்து நகைகள் வந்தால் அவற்றை வைத்தாவது ஒருவாறு சமாளிக்கலாமென்ருன் அம்பிகா. எவ்வளவோ வேண்டி அழுது, வணங்கியும் நகைகளைத் தருமாறு கெஞ்சினன் விநோதன். நயனதாரா அவற்றைத் தர மறுத்தாள். நகைகளைக் கொடுத்தால் இந்த நிலையில் தனக்கு

ஆதரவு எதுவுமிருக்காது என நன்கு உணர்ந்தாள் அவள். அதனால் விடாப்பிடியாகக் கொடுக்க மறுத்தாள்.

இப்படிக் கட்டிய பெண்டாட்டியும் கைவிரித்துவிடவே, கடுத்திருந்த இந்திராணியின் வதனம் ஒரு பூரிப்பினால் பிரகாசமாயிற்று. அவள் தன் கணவனுடைய கரம்பற்றி, "நீங்கள் உங்கள் கடமையைச் செய்தாயிற்று. நீங்கள் இருங்கள்; நடக்கிறபடி நடக்கும்'' என்றாள்.

கணவனை அவதூறுக்கு உள்ளாக்கியது அந்தப் பத்தினிப் பெண் இதயத்தை இன்னும் வாட்டியது. இதைப் பார்த்து அம்பிகாசரணன் தனக்குள் சிரித்துக்கொண்டான். ஆபத்து நேர்ந்த சமயம்; பாவம் விநோதன், ஒன்றுமறியாப் பாலகனைப்போல் தன்னை நம்பி உள்ளான்; இவனை எப்படிக் கைவிட்டுவிடுவது? தன்னுடைய சொத்தையாவது விற்று இவனைக் காப்பதுதான் நேரிதென அவன் அதற்கு ஏற்பாடு செய்ய எழுந்தான். ஆனால், இந்திராணி ஆணைவைத்து, ''இதில் நீங்கள் தலையிடவே கூடாது'' என்றாள்.

அம்பிகாசரணனுக்கு எவ்வழி போவதென்றே தெரியவில்லை. இந்திராணியிடம் விளக்கமாகக் கூறலானான்; அவளோ அவனைப் பேசவே விடவில்லை. கடைசியில், அம்பிகாசரணன் சப்பிட்டுப் போய் உட்கார்ந்துவிட்டான்.

அப்போது இந்திராணி இரும்புப் பெட்டியைத் திறந்து தன்னுடைய நகைகள் அனைத்தையும் எடுத்து ஒரு தட்டில் கோபுரம் போல் குவித்து வைத்தாள். அந்தப் பளுவான தட்டைக் கையில் ஏந்தி மெல்லச் சிரித்துக் கணவனின் காலடியில் வைத்தாள்.

பாட்டனாரின் அன்பின் கொழுந்தான இந்திராணி பாட்டனிடமிருந்தே வருடந்தோறும் விலையுயர்ந்த அணிகளைப் பரிசாகப் பெற்றுவந்தாள். அளவாகச் செலவு செய்யும் கணவனின் சம்பாத்தியத்தை மிச்சப்படுத்திக் கிடைத்த பணத்தையும் தங்க நகைகளாக மாற்றினாள். அந்தப் பொன்னிழை, மணி மாணிக்கங்களைக் கணவனிடம் சமர்ப்பித்து இந்திராணி, ''என்னுடைய நகைகளைக்கொண்டு என் பாட்டனார் அளித்த நன்கொடையை வைத்து மீண்டும் நம் கர்த்தாவின் குடித்தனத்தை நிலைநிறுத்த அவர்களுக்கே தானம் செய்கிறேன்'' என்றாள்.

இதை மொழிந்ததும் கண்களில் நீர் ததும்ப இமைகள் மூடிடத் தலைதாழ்த்தி மனக்கண்முன் கற்பனை செய்துகொண்டாள். தலையில் சிறிதே நரைமயிரும், முகத்தின் பிரசன்னமும், அறிவொளி படர்ந்த கண்களும் கொண்ட அந்தப் பாட்டனார் அவள் முன் நிற்பதுபோலவும், அவருடைய கைகளை அவள் சிரத்தில் பதித்து மௌனமாக வாழ்த்துவதுபோலவும் ஒரு சித்திரம் எழுந்தது.

வாங்காகாடி பார்க்கணு கடன்தொல்லேயிலிருந்து மீட்கப்பட்டு விட்டது. தன்னுடைய பிரதிக்ஞையையும் முறித்து அணிகலனற்ற இந்திராணி மறுபடி அழைப்பை ஏற்று, நயனதாராவின் அந்தப் புரத்திற்குச் சென்ருள். இப்போது அவள் மனத்துள் எந்தவித மான அவமானத்தின் வேதனேயோ வீரோதமோ இல்லே.

கொடுக்கல் வாங்கல்

ஐந்து பிள்ளைகள் அடுத்தடுத்துப் பிறந்த பின்னர் ஒரே பெண்ணாக அவள் பிறந்தாள். தாய் தந்தையர் அவளுக்குச் செல்லமாக நிருபமா என்று பெயரிட்டார்கள். இப்படி ஒரு புதுமையான பெயர் அவர்கள் வம்சத்திலேயே இதுவரையில் கேள்விப்பட்டதில்லை. கணேசன், கார்த்திகேயன், பார்வதி என்பதுபோல் தெய்வங்களின் பெயர்களைத்தான் வைப்பது வழக்கம்.

நிருபமாவுக்குக் கல்யாண வயதாயிற்று. அவளுடைய தகப்பனார் ராமசுந்தர மித்ரர் எவ்வளவு தேடியும் மனத்திற்குப் பிடித்தமான வரன் எவனும் கிடைக்கவில்லை. கடைசியில், பிரபலமான ராய் பகதூர் வீட்டு ஒரே பிள்ளையைத் தேடிப்பிடித்தார். ராய் பகதூருக்குப் பிதுரார்ஜிதச் சொத்து அப்படி 'ஓகோ' என்று சொல்லும்படியாக இல்லை. என்றாலும், பழைய திமிர்மட்டும் சற்றும் குறைவிராமல் இருந்தது. பிள்ளை வீட்டார் பத்தாயிரம் ரூபாய் ரொக்கமாக வரதக்ஷிணையும் பெருமளவில் சீர் வகைகளும் கேட்டுவைத்தார்கள். ராம்சுந்தரர் தயங்கவில்லை. அவர்கள் கேட்டதைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். இவ்வளவு உயர்த்தியான வரனைக் கைநழுவவிட அவருக்கு விருப்பமில்லை. ஆனால், பணத்துக்கு ஏற்பாடு செய்வதில் மிக்க கஷ்டம் ஏற்பட்டது. அடகு வைத்தும், விற்றுங்கூட ஆறு ஏழு ஆயிரங்களுக்குமேல் பணம் பின்னும் தேவைப்பட்டது. கல்யாண நாள் குறுகியது.

முகூர்த்த நாளும் வந்தது. அநியாய வட்டிக்குக் கடன் தருவதாகச் சொன்ன ஒருவனும் சமயத்தில் கை விரித்துவிட்டான். மணப்பந்தலில் பெருத்த குழப்பமே ஏற்பட்டது. ராமசுந்தரர் ராய் பகதூரின் காலைப் பிடித்துக்கொண்டார். ''திருமணம் நல்லபடியாக நடக்கட்டும். பணத்தைக் கண்டிப்பாகத் தீர்த்துவிடுகிறேன்'' என்று கெஞ்சினார். பணத்தைப் பூர்த்தியாகத் தராவிட்டால் மாப்பிள்ளை பந்தலுக்கு வரமாட்டான்'' என்று ராய் பகதூர் ஒரே பிடியாக நின்றார்.

இப்படி ஒரு குழப்பம் ஏற்படவே, உள்ளே புலம்பல் எழுந்தது. இத்தனைக்கும் மூலகாரணமாக இருந்தவளோ புதுச்சேலை, நகை நட்டுக்களுடன், சந்தனப்பொட்டுடன் சிங்காரித்துக்கொண்டு

உட்கார்ந்திருந்தாள். வருங்காலத்தில் புக்ககத்து மனிதராகப் போகிறவர்களிடம் அவளுக்கு ஒருவிதப் பிடித்தமோ, மரியாதையோ பிறக்கவில்லை.

இதற்குள் ஒரு நல்ல திருப்பம் ஏற்பட்டது. மாப்பிள்ளைப் பையனுக்கு என்ன தோன்றியதோ, திடீரென்று அவன் தகப்பனுருக்கு எதிராகத் திரும்பினுன். ''இந்தக் கத்தரிக்காய்ப் பேரமெல்லாம் எனக்குத் தெரியாது. கல்யாணம் செய்துகொள்ள வந்தேன். அது நடக்கத்தான் வேண்டும்'' என்று அவன் அடித்துச் சொன்னுன்.

ராய்பகதூர் எதிர்ப்பட்டவர்களிடமெல்லாம் குறைப்பட்டுக் கொண்டார்: ''பார்த்தீர்களா, இந்தக் காலத்துப் பிள்ளைகளை!''

''ஊம்! எல்லாம் அரைகுறைப் படிப்பினுல் வருகிற கேடு! சாஸ்திரம், நீதியெல்லாம் எங்கே சொல்லிக் கொடுக்கிருர்கள்?'' என்று சில முதியோர்கள் அவருக்கு ஆறுதலாகச் சொன்னுர்கள்.

கல்விமுறையில் ஏற்பட்ட குறை தம் பிள்ளையிடம் பூரணமாகப் புலனுவது கண்ட ராய் பகதூருக்கு அடங்குவதைத்தவிர வேறு வழியேதும் தோன்றவில்லை. திருமணமும் யாதொரு கலகலப்பின்றி மிகச் சாதாரணமாகவே நடந்தேறியது.

புக்ககம் செல்லவேண்டிய நேரம் வந்தது. ராமசுந்தரர் தம் பெண்ணை அணைத்துக்கொண்டார். அவரால் கண்ணீரை அடக்க முடியவில்லை. ''ஏனப்பா! அவர்கள் என்னை இங்கே அனுப்பவே மாட்டார்களா?'' என்று கேட்டாள் நிருபமா.

''ஏனம்மா அனுப்பமாட்டார்கள்! நானே வந்து அழைத்து வருகிறேன்'' என்ருர் தகப்பனுர்,

பெற்றவர் அடிக்கடி பெண்ணைப் பார்க்கச் செல்வார். ஆனுல், அங்கு அவருக்கு எந்தவிதமான மரியாதையும் கிடைக்காது. வேலையாட்கள்கூட அவரை அலட்சியமாகப் பார்த்தனர். வெளிப்புறத்து அறையில் இரண்டொரு நிமிஷங்களே அவரால் பெண்ணைக் காண முடிந்தது. அதுவுங்கூடச் சில நாட்கள் முடியாமல் போய்விடும்.

சம்பந்தியின் வீட்டில் இவ்வளவு அவமதிப்புப் பொறுக்கமுடியாததுதான்; எப்படியாவது பணத்தைக் கொடுத்துவிடவேண்டுமென்று ராமசுந்தரர் முடிவுசெய்தார். ஆனுல், அதுவரையில் ஏறிய கடன் சுமையே தாளமுடியாத அளவுக்கு இருந்தது. செலவினங்களும் அதிகமாயின. கடன்காரர்களிடமிருந்து தப்ப அவர் இழிவான தந்திரங்களையும் வழிகளையும் மேற்கொள்ள வேண்டிவந்தது. புக்ககத்தில் பெண் வேறு, எடுத்ததற்கெல்லாம் பேச்சுக் கேட்கவேண்டி வந்தது. பிறந்தகத்தைப் பழிப்பது கேட்டு நிருபமா தன் அறைக்கதவைத் தாழிட்டுக்கொண்டு அழுவாள். இதுவே அவளது தினசரி வழக்கமாகவும் ஆகிவிட்டது.

மாமியாருக்கு ஆத்திரம் தணியவே இல்லை. ''ஆகா! அழகு என்றால் உன் மாட்டுப்பெண்தான்! முகத்தைப் பார்த்தாலே மனம் குளிருகிறது'' என்று யாராவது சொல்லிவிட்டால் போதும்; ''ஆமாம்! ரொம்ப அழகுதான்! பிறந்தகத்து அழகு தான் சொட்டி வழிகிறதே!'' என்று இடித்துரைப்பாள். மாட்டுப் பெண்ணின் ஊனுடை சம்பந்தமாகவும் எவரும் அவ்வளவு அக்கறை செலுத்தவில்லை. அண்டை வீட்டார் யாராவது இளகிய மனசுடன் எடுத்துச் சொன்னால், மாமியார், ''அவள் அழகுக்கு எல்லாம் இது போதும்'' என்பாள். அவள் குரலில், பிறந்தகத்தார் செய்யவேண்டியதைச் செய்தால்தான் மாட்டுப்பெண்ணுக்குரிய மதிப்பு இவளுக்குக் கிடைக்கும் என்ற பொருள் தொனிக்கும். நிருபமாவுக்குப் புக்ககத்தில் ஒருவித அதிகாரமும் கிடையாது. ஏமாற்றிவிட்டு உள்ளே நுழைந்தவள்தானே என்ற எண்ணம் எல்லோரிடமும் நிறைந்திருந்தது.

இப்படி நிருபமா புக்ககத்தில் பழிப்புக்கும் இழிவுக்கும் ஆளாவது, நிச்சயம் தகப்பனுருக்கும் எட்டியிருக்கத்தான் வேண்டும். அதனால் அவர் தமது வீட்டையே விற்கவும் முயற்சி செய்யலானார். அதைப் பிள்ளைகளுக்குத் தெரியவிடக்கூடாது என்று எண்ணினார். வீட்டை விற்றுவிட்டு, அதிலேயே குடிக் கூலிக்கு இருக்கலாம் என்று எண்ணியிருந்தார். தமது கடைசி நாள் வரையில் பிள்ளைகளுக்கு இதைத் தெரியவிடக்கூடாது என நினைத்தார். ஆனால் பிள்ளைகளுக்கு இது விஷயம் எப்படியோ தெரிந்துவிட்டது. அவர்கள் அப்பாவிடம் வந்து முறையிட்டார்கள். பெரிய பிள்ளைகள் மூவருக்கும் மணமாகிக் குழந்தைகளும் இருந்தன.

அவர்களுடைய எதிர்ப்புச் சற்றுக் கடுமையாக இருக்கவே, வீடு விற்கும் யோசனையை ஒத்திப் போட வேண்டியதாயிற்று. அதிக வட்டிக்கு அவர் கொஞ்சங் கொஞ்சமாகக் கடன் வாங்கலானார். இதன் விளைவாக அன்றாடத் தேவைகளுக்கே கஷ்டமாகி விட்டது.

தகப்பனாரின் முகத்தைக் கண்டே விவரங்களைப் புரிந்து கொண்டாள் நிருபமா. நரைத்த தலை, வறுமையும், கவலையும் தோய்ந்து வாடிய முகம் இவையே விஷயத்தைத் தெளிவாக்கின. பெண்ணுக்குத் தவறிழைத்ததனால் ஏற்பட்ட மனவேதனை தந்தையின் முகத்தில் தெரியாமல் இருக்குமா? சம்பந்தியின் அனுமதியுடன் தம் பெண்ணைச் சந்திக்கும் சில கணங்களில் அவருடைய உள்ளம் படும் பாட்டை அவருடைய சிரிப்பிலிருந்தே புரிந்துகொள்ள முடிந்தது.

இப்படிக் குமுறும் தந்தையின் உள்ளத்துக்குச் சிறிதேனும் ஆறுதலளிக்க வேண்டும், அதற்காகவேனும் சில நாட்கள்

பிறந்தகம் சென்று இருக்கவேண்டுமென்று தவித்தாள் நிருபமா. தந்தையின் முகவாட்டத்தைக் கண்ட பின்னர் அவளால் ஒதுங்கியிருக்க முடியவில்லை. ''அப்பா! என்னை வீட்டிற்கு ஒருதடவை அழைத்துச் செல்லுங்களேன்'' என்ருள்.

அதற்கு அவருக்கு ஏது அதிகாரம்? பெற்ற பெண்ணிடம் ஒரு தந்தை கொண்டாடக்கூடிய உரிமையைத் தாம் வரவேண்டிய வரதக்ஷிணைக்காக அடகு வைத்துவிட்டாரே! பெண்ணைப் பார்க்கவுங்கூட அவர் தயக்கத்துடன்தான் கெஞ்சவேண்டியிருந்தது. சில சமயங்களில் ஏமாற்றம் ஏற்படும். அப்போதெல்லாம் இரண்டாந்தரம் கேட்கவுங்கூட அவருக்கு வாயிருக்காது. ஆனலும், பெற்ற பெண்ணே பிறந்தகம் வர ஆசைப்படும்போது, எந்தத் தகப்பனுல்தான் கம்மென்று இருக்க முடியும்! சம்பந்தியிடம் போய்ப் பெண்ணைப் பிறந்தகம் அழைத்துச் செல்ல அநுமதி கேட்க, எவ்வளவோ அவமானங்களையும், பழிச்சொற்களையும் கேட்டுக்கொண்டு மூவாயிரம் ரூபாய் சேகரித்தார் ராமசுந்தரர். பணத்தைக் கைக்குட்டையில் சுற்றி மேல் துண்டில் மூடி எடுத்துக்கொண்டு சம்பந்தியிடம் சென்ருர். முதலில் சிரித்துக்கொண்டே ஊர் வம்புகள் பேசினர். இன்னர் வீட்டில் திருட்டுப்போனது, நவனி-ராதாமாதவன் என்ற அண்ணன் தம்பிகளைப்பற்றி வம்பளந்தார். தம்பியின் புத்திசாலித்தனம், அண்ணனின் மூடத்தனம்பற்றிப் புகழ்ந்தார்; இகழவும் செய்தார். ஊரில் பரவியிருக்கும் புதுவித நோயைப்பற்றியும் பலவிதமாகப் பேசித் தீர்த்தார். கடைசியில், ஹுக்காக்குழலை வைத்துவிட்டு அசட்டுச் சிரிப்புடன், ''ஹி ஹி... அந்தப் பணம் பாக்கி நின்றுவிட்டது. தினமும் நினைக்காமல் இல்லை. போகும்போது கொஞ்சம் கொடுக்கலாமே என்றுதான்...ஆனல், நினைவே இருப்பதில்லை. வயசும் ஆகிக்கொண்டு வருகிறதில்லையா!'' என்ற பீடிகையுடன் மார்புக் கூட்டின் மூன்று விலா எலும்புகளுக்கு ஈடான மூன்று ஆயிரம் ரூபாய் நோட்டுக்களையும் அலட்சியமாய் எடுப்பதுபோல் எடுத்தார். ஆனல் ராய்பகதூரோ மூன்றே ஆயிரந்தானு என்பது போல் உரக்கச் சிரித்தார்; ''கிடக்கிறது: இது எனக்குத் தேவையில்லை'' என்று ஒரு வங்கப் பழமொழியை உதிர்த்தார். அநாவசியமாகத் தமது கையைக் கறையாக்கிக்கொள்ளத் தமக்கு விருப்பமில்லை என்றும் காட்டிக்கொண்டார். இதற்கு மேல் பெண்ணைப் பிறந்தகம் அனுப்பி வைக்கும்படி எவ்வாறு கேட்க முடியும்? ஆனல், ராமசுந்தரரோ அதற்குமேல் கூச்சப்படுவது அழகல்ல என்று எண்ணி மெதுவாக விஷயத்தை எடுத்தார். ராய் பகதூர் காரணம் கூருமல், ''இப்போதைக்கு அது சாத்தியமில்லை'' என்று சொல்லிவிட்டு வேறு வேலையாகக் கிளம்பினர்.

ராமசுந்தரர் பெண்ணிடம் முகத்தைக் காட்டவும் இயலாமல் ரூபாய் நோட்டுக்களை மேல் துண்டில் முடிந்து எடுத்துக்கொண்டு வீடு திரும்பினர். பணத்தை முழுவதும் தீர்க்காமல் சம்பந்தியின் வீட்டுக்கே இனிப் போவதில்லை என்று தீர்மானம் செய்து கொண்டார்.

சில நாட்கள் சென்றன. நிருபமா ஆளுக்குமேல் ஆளாக அனுப்பியும் தகப்பனர் வரவில்லை. அவளும் கடைசியில் ரோஷத் துடன் ஆள் அனுப்புவதை நிறுத்தினள். இது தமது மனத்தைப் புண்படுத்தியது என்ருலும், ராமசுந்தரர் அதை வெளிக்காட்ட வில்லை.

புரட்டாசி மாதம் வந்தது. ''இந்தத் தடவை கட்டாயம் நிருபமாவை அழைத்து வரத்தான் வேண்டும்'' என்று அவர் உறுதியும் செய்துகொண்டார்.

பஞ்சமியன்று அவர் மறுபடியும் சில ரூபாய் நோட்டுக்களைத் துண்டில் மறைத்து எடுத்துக்கொண்டு சம்பந்தியின் வீட்டுக்குக் கிளம்பினர். அந்தச் சமயம் அவருடைய ஐந்து வயதுப் பேரன் ஓடிவந்து அவருடைய கால்களைக் கட்டிக்கொண்டான். "தாத்தா, எனக்கு வண்டி வாங்கி வரத்தானே போகிருய்?'' என்ருன். அவனுக்கு நீண்ட நாட்களாகவே சைக்கிள் வண்டி ஓட்டவேண்டு மென்று ஆசை. அந்த ஆசையை எப்படி நிறைவேற்றி வைப்பது என்று அவருக்குத் தெரியவில்லை. ஆறு வயதுப் பேத்தி ஒருத்தி ஓடி வந்தாள்; ''தாத்தா, நவராத்திரிக்கு நல்லதாக ஒரு பாவாடை வேணும்; நாலுபேர் பார்க்கும்படியாக இருக்க வேண்டாமா?'' என்ருள் அவள்.

ராமசுந்தரருக்கும் இது தெரிந்த விஷயந்தான். அதற்காக அவர் எத்தனையோ யோசனைகள் செய்ததுண்டு. ராய் பகதூர் வீட்டில் விஜயாவை அழைத்தால் தமது மாட்டுப்பெண் ஏழை போலச் சென்று நிற்கவேண்டியிருக்கும் என்பதும் அவர் அறிந்ததுதான். ஆனல், இந்தக் கவலைகளால் முகத்தில் வறுமையின் சின்னங்கள்தான் அதிகரித்தன; வேறு பலன் ஏதும் கிட்டவில்லை.

வீட்டில் எழும் குற்றச்சாட்டுகளைக் கவனியாமல் அவர் சம்பந்தியின் வீட்டுக்குச் சென்ருர். அன்று அவர் மனத்தில் தயக்கம் ஏதுமில்லை. வேலைக்காரன், வாயில் காப்போன் இவர் களைக்கூட ஏறிட்டுப் பார்க்கத் தயங்குபவர், அன்று தம்முடைய வீட்டினுள் நுழைவதுபோல் உள்ளே சென்ருர். ராய் பகதூர் அப்போது வீட்டில் இல்லை. சற்றுநேரம் காத்திருக்கவேண்டி வந்தது. மனத்தில் பொங்கி எழும் ஆர்வத்தைத் தணிக்க இயலாமல் அவர் பெண்ணைப் பார்த்தார். அகத்தின் மலர்ச்சி அவர் கண்களில் புலப்பட்டது. பெண்ணும் அழுதாள்; சிறிது

நேரம் அவர்களால் பேசவும் முடியவில்லே. கடைசியில் ராம சுந்தரர், ''இந்தத் தடவை நிச்சயம் உன்னே அழைத்துப் போகிறேன், அம்மா, தடையே எதுவும் இராது'' என்ருர்.

அந்தச் சமயத்தில் அவருடைய பெரிய பிள்ளே ஹரமோகன் தன்னுடைய பிள்ளேகள் இருவரையும் அழைத்துக்கொண்டு உள்ளே வந்தான். ''ஏனப்பா, எங்களேயெல்லாம் நடுத்தெருவில் நிற்க வைத்துவிட்டாயே; இது நியாயமா?'' என்ருன் அவன்.

''உங்களுக்காக நான் சொன்ன வார்த்தை தவறவேண்டுமா? நரகத்துக்கா நான் போகவேண்டும்!'' என்று எரிந்து விழுந்தார் ராமசுந்தரர். அவர் வீட்டை விற்றுவிட்டார். பிள்ளேகளுக்கு அது விவரம் தெரியக்கூடாது என்று எவ்வளவோ மூடித்தான் வைத்தார். என்ருலும், அவர்களுக்கு அது தெரிந்துவிட்டது. அவர்களுக்கு இது எரிச்சலேயும் அருவருப்பையும் மூட்டியது.

''தாத்தா, எனக்கு நீ வண்டி வாங்கித் தரமாட்டியா?'' என்றவாறு பேரன் அவர் காலேக் கட்டிக்கொண்டான். தலே குனிந்து உட்கார்ந்திருந்த தாத்தாவிடமிருந்து பதில் ஏதும் வரவில்லே. மெல்ல அவன் அத்தையை அணுகினுன். ''அத்தை! நீ எனக்கு வண்டி வாங்கித் தர்றயா?'' என்ருன்.

நிருபமாவுக்கு விஷயம் தெள்ளென விளங்கியது. ''அப்பா, இனிமேல் என் மாமனுருக்கு ஒரு காசு கொடுத்தாலுங்கூட உங்கள் பெண்ணேக் காணமாட்டீர்கள். உங்களேத் தொட்டுச் சொல்கிறேன்'' என்ருள் அவள்.

''சீச்சீ! அப்படிச் சொல்லாதே, அம்மா. பணம் தரா விட்டால், உனக்கும் அவமானம்; உன் தகப்பனுக்கும் தலே குனிவு'' என்ருர் ராமசுந்தரர்.

''பணம் கொடுத்தால்தான் அவமானம். உங்கள் பெண் ணுக்கு ஒருவித மரியாதையும் கிடையாதா? பணம் இருக்கும் வரையில்தான் எனக்கு மதிப்பா? வேண்டாம், அப்பா! இந்தப் பணத்தைக் கொடுத்து என்னேச் சிறுமைப்படுத்தாதீர்கள். தவிர, என் கணவருக்கு இந்தப் பணம் தேவையில்லேயே!''

''உன்னே அனுப்பமாட்டார்களே, அம்மா.''

''அதற்கு என்ன செய்வது? நீங்களும் அந்த ஆசையை விட்டு விடுங்கள்!''

ராமசுந்தரர் வேறு வழியின்றி மேல்துண்டில் பணத்தை முடிந்து எடுத்துக்கொண்டு திருடனேப்போல வெளியேறினுர்.

ராமசுந்தரர் பணம் கொண்டுவந்தது, நிருபமா அதைத் தடுத்தது, அவர் பணத்தைத் திரும்ப எடுத்துச் சென்றது இவை யாவும் ரகசியமாக இருக்கவில்லே. வம்புக்காரியான வேலேக்காரி ஒருத்தி இதற்குக் கண்ணும் மூக்கும் வைத்து, மாமியாரிடம் எடுத்துச் சொன்னுள். மாமியாரின் ஆத்திரம் அளவு கடந்து

போயிற்று. அதன் விளைவாக, நிருபமாவுக்குப் புக்கக வாழ்க்கை நரகமாகிவிட்டது. கணவனோ, கல்யாணமான சில நாட்களுக்குள் டெபுடி மாஜிஸ்டிரேட் பதவியேற்று வெளியூர் சென்றுவிட்டான். பிறந்தகத்தாருடன் பழகினால் கீழ்த்தரமான பழக்கந்தான் படியும் என்ற சாக்கில், பிறந்த வீட்டாரின் தொடர்பும் இற்று விட்டது.

இந்த நிலையில், நிருபமா உடம்புடன் படுத்துவிட்டாள். மாமியார் மட்டுந்தான் இதற்குக் காரணம் என்று சொல்லிவிட முடியாதுதான். நிருபமா உடம்பைச் சரியாகக் கவனித்துக் கொள்ளவில்லை. கார்த்திகை மாதக் குளிரில் போர்வைகூட இராமல் ஜன்னல்களை திறந்து வைத்துக்கொண்டு தூங்கினாள். உரிய வேளையில் சாப்பிடுவதுகூடக் கிடையாது. வேலைக்காரி நடுநடுவே சாப்பாடு கொண்டுவர மறந்துவிட்டால், அவள் வாய் திறந்துகேட்கமாட்டாள். தான் அவர்கள் வீட்டில் ஒரு வேலைக்காரி, எஜமானியின் தயவினால்தான் வாழ்கிறோம் என்ற எண்ணம் அவள் மனத்தில் வேரூன்றிவிட்டது. ஆனால் மாமியாருக்கு இதுவுங்கூட எரிச்சல் ஊட்டியது. சாப்பாடு விஷயத்தில் மாட்டுப்பெண் அசட்டையாக இருந்தாலோ, ''நவாபு வீட்டுப் பெண்! ஏழை வீட்டுச் சாப்பாடு ஏற்குமோ?'' என்பாள். ஒரொரு சமயம், ''மூஞ்சியைப் பார்! காய்ந்த மரக்கட்டை போல!'' என்றும் ஏசுவாள்.

நோய் முற்றியது. மாமியார், ''அத்தனையும் வேஷம்!'' என்றாள். ஒரு தடவை நிருபமா, அண்ணன்மாரையும், தகப்பனாரையும் பார்க்க விரும்பினாள். ''பிறந்தகம் போக ஒரு சாக்கு'' என்று இடித்துரைத்தாள் மாமியார்.

சொன்னால் நம்புவதுகூடக் கடினந்தான். கடைசியாக ஒருநாள் நிருபமாவுக்குச் சுவாசம் வாங்கத் தொடங்கியபோது தான் முதல் முறையாக டாக்டர் வந்து பார்த்தார். அதுவே கடைசியாகவும் ஆகிவிட்டது.

வீட்டிற்குப் பெரிய மருமகள் காலமாகிவிட்டாள். கடைசிக் காரியங்கள் தடபுடலாக நடந்தன. ராய் சௌதுரி வீட்டில் விஜயாவன்று காளிப் பிரதிமை விஸர்ஜனம் எவ்வளவு ஆடம்பரத்துடன் நடக்குமென்று புகழ்பெற்றதோ, அவ்வளவு புகழுடன் ராய் பகதூர் வீட்டு முதல் மருமகளின் கடைசிக் கிரியைகள் நடந்தேறின! சந்தனக் கட்டைகளாலேயே முழுதும் இதுவரையில் எந்தச் சிதையும் அடுக்கியதில்லை என்று பேசிக்கொண்டார்கள். இத்தகைய நடப்பு ராய் பகதூர் வீட்டில்தான் நடக்க முடியும் என்ற அளவுக்கு அவர்கள் செய்தார்கள். கொஞ்சம் கடன்கூட ஏற்பட்டதாகக் கேள்வி.

ராமசுந்தரரைத் துக்கம் விசாரிக்க வந்தவர்கள், எவ்வளவு

ஆடம்பரத்துடன் அவளுடைய கடைசிக் காரியங்கள் நடந்தேறின என்று விதவிதமாக வருணித்தார்கள்.

டெபுடி மாஜிஸ்டிரேட் அதற்குள் ஒரு கடிதம் எழுதியிருந் தான். ''ஏற்பாடுகள் எல்லாம் செய்துவிட்டேன். மனைவியை அனுப்பி வை'' என்று அவன் எழுதியிருந்தான்.

ராய் பகதூரின் மனைவி, ''அப்பனே, உனக்காக வேறு பெண் பார்த்து வைத்திருக்கிறேன். ஆகவே, லீவு எடுத்துக்கொண்டு வா'' என்று அதற்குப் பதில் எழுதினாள். இந்தத் தடவை இருபதினாயிரம் ரூபாய் வரதக்ஷிணை; அதுவும் கைமேல் ரொக்கமாகக் கொடுத்துவிடவேண்டும் என்று ஏற்பாடு.

தாராபிரஸன்னரின் புகழ்

தாராபிரஸன்னர் ஓர் அப்பாவி. அவருக்குச் சற்றுக் கூச்சமும் அதிகம். நான்குபேர் எதிரே வருவதென்றால் அவருக்கு உயிரே போய்விட்டாற்போல் இருக்கும். வீட்டுக்குள்ளேயே உட்கார்ந்து எழுதிவந்ததால் கண் பார்வை சற்று மங்கியிருந்தது. முதுகும் சற்றுக் கூனியிருந்தது. லௌகிக ஞானம் மிகக் குறைவு. வெளியுலகில் பரவிய மொழிகூட எளிதில் அவர் வாயில் வராது. அதனால் வீட்டுக் கோட்டையை விட்டு வெளியே வருவதுகூட ஆபத்து என்று அவர் கருதினார்.

ஊராரும் அவரை ஒருவிதப் பிரகிருதி என்று எண்ணினால், அவர்களைக் குறையேதும் சொல்ல முடியாது. ''உங்களுடன் பேசிப் பழகியதில் எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?'' என்று ஒரு பெரியவர் அவரிடம் சொல்வதாக வைத்துக் கொள்வோம். அவரோ வாய் பேசாது தமது வலது கரத்தையே பார்த்துக்கொண்டு நிற்பார். திடீரென்று அவர் இவ்வாறு நிற்பதன் பொருள் இதுதான்: ''உங்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கலாம். ஆனால், எனக்கு மகிழ்ச்சி என்று எவ்வாறு பொய் சொல்வது? அதுதான் யோசிக்கிறேன்.''

பெரிய பணக்காரர் ஒருத்தர் மத்தியான்னம் உணவருந்த அவரை அழைத்திருப்பார். சாயங்காலந்தான் உணவு பரிமாறுவார்கள். பரிமாறுகையில் அந்தப் பெரிய மனிதர் முன் நின்று, ''ஏதோ அல்பமானதுதான்; ஏழை கொடுக்கும் விருந்து; விதுரர் அளித்ததுபோலத்தான்'' என்று பணிவுடன் சொல்வார். அப்போதுங்கூடத் தாராபிரஸன்னர் வாய்திறக்க மாட்டார். 'இதுவும் உண்மைதானே! எதற்குப் பதில் சொல்லவேண்டும்?' என்று அவருக்குத் தோன்றும்.

யாரேனும் அவ்வப்போது அவரை, ''என்ன மேதை! ஆஹா! இந்தக் காலத்தில் இத்தகைய அறிஞர்களைக் காண்பதே அருமை! கலைமகளே தன் வெண்டாமரையை விட்டுத் தங்கள் நாவில் குடி கொண்டுவிட்டாள்!''என்று வானளாவப் புகழ்வார்கள். அவரோ ஒருவித மறுப்புரையும் சொல்லமாட்டார். உண்மையிலேயே கலைமகள் அவர் நாவில் உறைபவள்தான் என்பதுபோல் இருக்கும் அவரது மௌனம், எதிரே புகழ் பாடுபவர்கள் பின்னால் இகழ்ச்சியும்

செய்வார்கள் என்பதும், தாம் கூறுவதை மறுக்கவேண்டுமென்ற நோக்கத்துடனேயே மிகைபடக் கூறுபவர்கள் என்பதும் அவருக்குத் தெரியாது. சொல்வதையெல்லாம் உண்மையென்று எடுத்துக்கொண்டு விட்டால், பேச்சாளர்கள் ஏமாற்றமே அடைவார்கள். அவர்களுடைய உற்சாகமும் குன்றிவிடும். இந்தச் சமயங்களில் தாங்கள் சொல்வது பொய் என்று ருசுவானுலுங்கூட அவர்கள் கவலைப்படுவதில்லை.

வெளியே இப்படி; ஆனல் வீட்டுக்குள் அவர் நடந்து கொள்வது வேறுவிதமாக இருக்கும். பேச்சில் அவருடைய மனைவி தாக்ஷாயணியால்கூட அவருடன் போட்டி போட முடியாது. அவள், ''போதும். உங்களுடன் பேசி என்னல் ஆகாது. எனக்கு வேறு வேலை இருக்கிறது'' என்று தன் தோல்வியை ஒப்புக் கொண்டு விடுவாள். மனைவியே தன் வாயினல் தோல்வியை ஒப்புக்கொள்ளும் அளவுக்குத் திறமை வாய்ந்த அதிர்ஷ்டசாலிகள் உலகில் எத்தனை பேர் இருக்கிருர்கள்! இவ்வாறு அவர் தம்பாட்டில் காலத்தை ஓட்டினர். தன் கணவரைப்போலக் கல்வி கேள்விகளில் சிறந்தவர் யாருமில்லை என்று தாக்ஷாயணி உறுதியாக நம்பினள். அதை எடுத்துச் சொல்லவும் அவள் தயங்கவில்லை. ''ஆமாம். உனக்கு இருப்பது நான் ஒரு கணவன்தானே! எவருடன் ஒப்பு நோக்குவாய்?'' என்பார் தாராபிரஸன்னர். அவளுக்கு அசாத்தியமான கோபம் வரும். அத்துடன் அவளுக்கு உள்ளூற ஒரு மனத்தாங்கலும் இருந்தது. 'இவ்வளவு மேதாவியாக இருந்தும், வெளியுலகுக்கு இவர் அறிவுத்திறன் வெளிப்படவில்லையே! அதற்காக ஒரு முயற்சியும் செய்யாமல் இருக்கிருரே' என்று அவள் உள்ளூற வருந்துவாள். எழுதுகிருரே தவிர, எதுவும் வெளிக் கொண்டு வருவதில்லையே!

தாக்ஷாயணி அவர் எழுதியவற்றைப் படிக்கச் சொல்லிக் கேட்பாள். தனக்குப் புரியாவிட்டாலும் வியப்புடன் கேட்பாள். கிருத்திவாஸர் இராமாயணம், காசிதாசின் மகாபாரதம், கவி கங்கணசண்டி முதலியவைதான் அவள் படித்த புத்தகங்கள்; சில காலக்ஷேபங்களையும் கேட்டிருக்கிருள். அதெல்லாம் அவளுக்கு மிகத் தெளிவாகப் புரியும். படிப்பு வாசனையே இராதவர்கள்கூட அவைகளைப் புரிந்துகொள்ளலாம். ஆனல், தாராபிரஸன்னரைப் போல் ஒன்றுமே புரியாத வகையில் எழுதும் திறனை இதுவரை அவள் எங்குமே கண்டதில்லை.

இந்தப் புத்தகம் அச்சில் வெளியாகி நாடெங்கும் புரியாமல் விழிக்கும்போது மக்கள் எவ்வளவு தூரம் திகைப்பார்கள் என்று அவள் கற்பனை செய்துகொள்ளுவாள். ''இதை வெளியிடுங்கள்'' என்று பல தடவை அவரை நச்சரிப்பாள்.

''புத்தகம் வெளியிடும் விஷயத்தில் மநு என்ன சொல்லி

யிருக்கிறார் தெரியுமா! 'ப்ரவ்ருத்திரேஷா பூதானும், நிவ்ருத்திச்ச மகாபலா: (மக்களின் இயல்பு இதுதான்: அதை அடக்குபவரே பலசாலிகள்.)' ''

தாராபிரஸன்னருக்கு நான்கு குழந்தைகள்! நான்குமே பெண்கள். இதுவும் தன் துரதிருஷ்டந்தான் என்று நினைத்தாள் தாக்ஷாயணி. புத்திசாலியான கணவருக்குச் சற்றும் தகுதியிராத மனைவி என்று அவள் குன்றிப்போவாள். சிறிதும் புரியாத விஷயங்களை எழுதிக் குவிக்கும் புத்திசாலியின் மனைவி, பெண்களாகவே பெற்றுத் தள்ளினால் அது அவளுக்குத் தலையிறக்கந்தானே என்று அவள் நினைத்தாள்.

மூத்த பெண் அவருடைய மார்பளவுக்கு வளர்ந்துவிட்ட போதுதான் அவருடைய நிம்மதிக்குத் தடையேற்பட்டது. 'ஒவ்வொருத்தியாக நான்கு பெண்களுக்கும் மணம் செய்துவைக்க வேண்டுமே! அதற்குப் பணம் தேவைப்படுமே!' என்று அவருக்கு நினைவு வந்தது. மனைவியோ சற்றும் கவலையுறாமல், ''நீங்கள் சிறிது மனம் வைத்தாலே போதும்; கவலைப்பட என்ன இருக்கிறது!'' என்றாள்.

தாராபிரஸன்னர் கொஞ்சம் ஆவலுடனேயே, ''அப்படியா! நான் என்ன செய்யவேண்டும், சொல்'' என்றார்.

தாக்ஷாயணி சற்றும் கலக்கம் இராத குரலில், ''கல்கத்தா போய் உங்கள் புத்தகங்களை அச்சிடுங்கள். நான்கு பேருக்கு உங்களைப்பற்றித் தெரியும். அதன் பின்னர், பணம் தானே வந்து சேரும்'' என்றாள்.

மனைவியின் நம்பிக்கை அவருக்குச் சற்று ஆறுதலளித்தது. 'இதுவரையில் தாம் எழுதிக் குவித்த புத்தகங்களை வெளியிட்டால், நம் நான்கு பெண்களுக்குமட்டுமென்ன, ஊரிலுள்ள அத்தனை கன்னிப் பெண்களுக்குமே மணம் செய்து வைக்கலாமே!' என்று அவருக்கு நம்பிக்கை பிறந்தது.

கல்கத்தாவுக்கு அவர் புறப்படும் சமயம் சற்றுக் குழப்பம் ஏற்பட்டது. அப்பாவியாக வீட்டிலேயே கிடந்த கணவரைத் தனியாகக் கல்கத்தா அனுப்ப தாக்ஷாயணிக்கு மனமில்லை. 'குளிப்பது, உடை அணிவது, வேளையில் சாப்பிடுவதுபோன்ற தினசரி அலுவல்களை அவருக்கு நினைவூட்ட ஒருத்தர் தேவையாயிற்றே!' என்று அவளுக்குக் கவலை. ஆனால் முன்பின் தெரியாத ஓர் இடத்துக்கு மனைவி பெண்களை அழைத்துச் செல்ல அவருக்குத் தயக்கம் ஒரு புறம். பயமும் ஒரு பக்கம் இராமல் இல்லை. கடைசியில் தாக்ஷாயணி, ஊரில் நாலும் தெரிந்த ஆள் ஒருத்தனைப் பிடித்து அவனுக்குப் பல புத்திமதி சொல்லித் தனக்குப் பதிலாக அவனை அவருடன் அனுப்பி வைத்தாள். கணவருக்கும் பல

ரக்ஷைகள் அணிவித்து ஊருக்கு அனுப்பிவிட்டு உள்ளே வந்து புலம்பினாள்.

கல்கத்தாவுக்கு வந்த தாராபிரஸன்னர் தம்மோடு வந்தவனுடைய துணையுடன், 'வேதாந்த பிரபாகரம்' என்ற நூலை வெளியிட்டார். மனைவியின் நகைகளை அடகு வைத்துக் கடன் வாங்கிய பணத்தில் பெரும்பகுதி அதற்கே செலவாகிவிட்டது.

விற்பனைக்காகக் கடைகளுக்கும், விமர்சனத்துக்காகப் பல பத்திரிகைகளுக்கும் அவர் 'வேதாந்த பிரபாகர'த்தை அனுப்பினார். மனைவிக்கும் ஒரு பிரதியை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பி வைத்தார். வழியில் தபால்காரரர் எவரேனும் புத்தகத்தை அமுக்கிவிட்டால் என்ன செய்வது என்று அவருக்குப் பயம்.

புதிய புத்தகத்தின் முதல் பக்கத்தில் தன் கணவருடைய பெயரை அச்சில் கண்டதுமே தாக்ஷாயணி ஊரிலுள்ள பெண்களையெல்லாம் விருந்துக்கு அழைத்தாள். பெண்டுகள் வந்து உட்காரும் இடத்தில் புத்தகத்தையும் போட்டு வைத்தாள்.

எல்லோரும் வந்து உட்கார்ந்ததும் அவள் உரத்த குரலில், ''ஐயோ! இங்கு யார் புத்தகத்தைப்போட்டு வைத்தது! அடியம்மா அன்னதா, அதை எடு. உள்ளே வைக்கவேண்டும்'' என்றாள். வந்த பெண்களில் அன்னதா சற்றுப் படிக்கத் தெரிந்தவள். புத்தகத்தைக் கையில் வாங்கி தாக்ஷாயணி அதை மாடப்புரையில் வைத்தாள்.

கணநேரத்துக்குள் எதையோ எடுக்கப்போய்ப் புத்தகத்தைக் கீழே தள்ளினாள். பிறகு தன் பெரிய பெண்ணைப் பார்த்து, ''சசி! அப்பாவின் புத்தகத்தைப் படிக்க ஆசைப்பட்டாயே! இந்தா, போய்ப் படி. இதில் வெட்கமென்ன?'' என்றாள். சசிக்கு அப்பாவின் புத்தகத்தைப் படிக்க ஆசையேது!

இன்னும் சற்றுநேரம் பொறுத்து இன்னொரு பெண்ணைக் கடிந்துகொண்டாள் - "சீச்சீ! அப்பவின் புத்தகத்தை இப்படியெல்லாம் நாசமடிக்கலாமா! போய், கமலா அக்காவின் கையில் கொடு. அவள் அலமாரியில் எடுத்து வைப்பாள்.'' அந்தப் புத்தகத்துக்குமட்டும் உயிர் இருந்தால், அந்த ஒரே நாளில் அவள் கையில்பட்ட வேதனையால் உயிரையே விட்டிருக்கும்.

பத்திரிகைகளில் ஒவ்வொன்றாக விமரிசனம் வெளி வந்தது. தாக்ஷாயணியின் கற்பனை ஓரளவுக்கு உண்மையாகவே இருந்தது. புத்தகத்தில் ஓர் அக்ஷரங்கூட புரியாமல் விமரிசனக்காரர்கள் குழம்பிப்போனார்கள். யாவரும் ஒரே குரலாக, ''இவ்வளவு கருத்துக்கள்கொண்ட நூல் இதுவரையில் வெளி வந்ததே இல்லை'' என்று சொல்லிவிட்டார்கள்.

ரேனல்ட்ஸ் எழுதிய 'லண்டன் ரகசியம்' என்ற நூலின் வங்க மொழிபெயர்ப்பைத் தவிர, வேறு எதையுமே தொட்டும்

அறியாத விமரிசனக்காரர்கள் சிலர் மிகவும் உற்சாகத்துடன், ''நாட்டில் குப்பை கூளங்கள் போலக் கடைகளில் மலிந்துகிடக்கும் நாவல் நாடகங்களின் நடுவே இப்படியும் இரண்டொரு நூல் வெளியானல், வங்க இலக்கியமுங்கூட அவசியம் படிக்கக்கூடியதாக இருக்கும்'' என்று எழுதினர்கள்.

வேதாந்தம் என்ற சொல்லைக்கூடப் பல தலைமுறைகளாகக் கேட்டறியாத விமரிசனக்காரர்கள் பின்வருமாறு எழுதித் தள்ளினர்கள்: ''தாராபிரஸன்ன பாபுவின் கருத்துக்களைப் பல இடங்களில் எங்களால் ஒப்புக்கொள்ள இயலவில்லை. இடம் பற்றுக்குறை காரணமாக விவரமாக அவைகளை எடுத்துக் கூறவில்லை. இருந்தாலும், மொத்தமாகச் சொன்னல், ஆசிரியர் கருத்துப் பல இடங்களில் எங்களுடையதை ஒத்து உள்ளது.'' இவர்கள் எழுதியிருப்பது உண்மையாகமட்டும் இருந்தால் புத்தகத்தையே பொசுக்கி இருக்கவேண்டும்.

நாடெங்கிலும் இருந்த நூல் நிலையங்களில் (தலைவர்கள் இராத நூல் நிலையங்களுங்கூடத்தான்) பணத்துக்குப் பதிலாக முத்திரையிட்ட காகிதங்களை எழுதிப் புத்தகம் அனுப்பக் கோரினர்கள். ''உங்களுடைய சிந்தனைக்குவை மிகுந்த நூலினல் நாட்டின் பெருத்த குறை ஒன்று நீங்கிவிட்டது'' என்று பலர் எழுதினர்கள். ஆசிரியருக்குச் 'சிந்தனைக்குவை' என்று அவர்கள் குறிப்பிட்டது விளங்கவில்லை. இருந்தாலும், உள்ளம் பூரித்தவராகத் தாமே அஞ்சல் செலவையும் ஏற்று ஒவ்வொரு நூல் நிலையத்துக்கும் 'வேதாந்த பிரபாகரம்' ஒரு பிரதி அனுப்பி வைத்தார்.

இவ்வாறு புகழுரைகளில் தாராபிரஸன்னர் மூழ்கிக் கிடந்த சமயம் தாக்ஷாயணிக்கு ஐந்தாவது முறையாகப் பேறுகாலம் கிட்டிய செய்தி தெரியவந்தது. அவர் தமது துணைவனைக் கூட்டிக் கொண்டு பணம் சேகரிக்கும் நோக்கத்துடன் கடைகளுக்குச் சென்றார். அங்குக் கடைக்காரர்கள் எல்லோரும் ஒரே குரலாக ஒரு பிரதிகூட விற்கவில்லை என்றார்கள். ஒரே ஓர் இடத்தில் மட்டும் வெளியூரில் ஒருத்தர் பிரதி கேட்டதாயும், அவர்கள் வி. பி. யில் அனுப்பியதாயும், அது வாங்குவாரின்றித் திரும்பி விட்டதாயும் சொன்னர்கள். அஞ்சல் கட்டணம் நஷ்டம் என்ற ஆத்திரத்தில் கடைக்காரன் புத்தகங்களை ஆசிரியரிடமே கொடுத்துவிடத் துணிந்தான்.

தாராபிரஸன்னர் வீடு திரும்பியதும் யோசனையில் ஆழ்ந்தார். அவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. சிந்தனையைத் தூண்டும் நூலைப்பற்றி அவருடைய யோசனை பலமாக ஆக, கவலையும் அதிகரித்தது. கடைசியில், கையில் மிகுந்திருந்த பணத்துடன் அவர் வீட்டுக்குத் திரும்பினர். வீட்டில் மனைவியிடம் விஷயத்தைப் பலவித வர்ணனைகளுடன் விவரித்துச் சொன்னர்.

தாக்ஷாயணியும் சுபச்செய்திக்காக முகமலர்ச்சியுடன் காத்திருந்தாள். தாராபிரஸன்னர், 'கௌட வார்த்தாவஹ' என்ற பத்திரிகையை அவளிடம் கொடுத்தார். அதைப் படித்த மனைவி ஆசிரியர் பிள்ளைகுட்டிகளுடன் நல்வாழ்வு வாழவேண்டுமென ஆசி கூறினாள். மனமாரச் சந்தனகுங்குமமும் மலர்மாலையும் சார்த்திக் களித்தாள். அது முடிந்தபின் கணவருடைய முகத்தை ஏறிட்டு நோக்கினாள்.

அடுத்து 'நவ் பிரபாதம்' வந்தது. அதையும் படித்தபின் தாக்ஷாயணி குளிர்ந்த மனத்துடன் கணவருடைய முகத்தை நோக்கினாள். அவளுடைய பார்வை எதையோ எதிர்பார்த்தது. பின்னர், 'யுகாந்தர்' முதல் பாகம் வந்தது. பாரத பாக்ய சக்ரம், சுப ஜாகரணம், அருணலோகம், ஸம்வாத தரங்க பங்கம், ஆசா, ஆகமனி, உச்வாஸம், புஷ்பமஞ்சரி, ஸஹசரி, ஸீதா கெஜட், அகல்யா லைப்ரரி பிரகாசிகா, லலித ஸமாசார், கோடால், விசுவவிசாரக, லாவண்யலதிகா என்று அடுத்தடுத்துப் பல பத்திரிகைகளை எடுத்துக் கொடுத்தார் தாராபிரஸன்னர். தாக்ஷாயணி புன்னகையுடன் ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். கண்களைத் துடைத்துக்கொண்டு கணவருடைய புகழ் மண்டிய முகத்தை நோக்கினாள். ''இன்னும் எத்தனையோ இருக்கிறது'' என்றார் அவர்.

''அதெல்லாம் மத்தியான்னம் பார்க்கிறேன். இப்போது விஷயம் என்ன ஆயிற்று, சொல்லுங்கள்?''

''கவர்னர் பெண்டாட்டி ஒரு புத்தகம் வெளிக்கொண்டு வந்திருக்கிறாளாம். ஆனால், அதில் 'வேதாந்த பிரபாகரம்' பற்றி ஒன்றுமே எழுதவில்லை என்று கல்கத்தாவில் கேள்விப்பட்டேன்.''

''அது கிடக்கட்டும். என்ன கொண்டு வந்தீர்கள்?'' என்றாள் தாக்ஷாயணி.

''நாலைந்து கடிதங்கள் இருக்கின்றன.''

இதற்குப் பிறகுதான் அவள் பளிச்சென்று கேட்டாள். ''பணம் எவ்வளவு கிடைத்தது?''

''விதுபூஷணனிடம் ஐந்து ரூபாய் கைமாற்று வாங்கி வந்தேன்'' என்றார் அவர்.

விஷயத்தை விவரமாகக் கேட்டபிறகுதான் தாக்ஷாயணிக்கு உலகம் தான் நினைத்ததுபோல் அவ்வளவு நல்லதன்று என்பது விளங்கியது. ஒன்று, கடைக்காரர்கள் தன் கணவரை ஏமாற்றியிருக்கவேண்டும். அல்லது புத்தகம் வாங்கும் பெரிய மனிதர்கள் ஒன்றுகூடிச் சூழ்ச்சிசெய்து கடைக்காரர்களை ஏமாற்றியிருக்க வேண்டும் என்று அவள் நினைத்தாள். சற்றுநேரம் பொறுத்ததும், 'இது விதுபூஷணனின் வேலையாகவும் இருக்கலாம். அவனே கடைக்காரர்களுடன் சேர்ந்துகொண்டு தாராபிரஸன்னரை

ஏமாற்றி யிருக்கலாம்' என்று பட்டது. இன்னும் கொஞ்சநேரம் கழிந்தது. 'அந்தத் தெரு விசுவம்பர சாடுஜ்ஜேக்கு இவரைக் கண்டால் ஆகாதே. அவனேகூட இப்படியெல்லாம் செய்திருக்கலாம்' என்று அவளுக்குத் தோன்றியது. 'இவர் கல்கத்தா போன நான்கு நாட்களுக்குப் பின், அரசமரத்தடியில் காஞயி பாலுடன் விசுவம்பர் பேசிக்கொண்டிருந்தானே!' அப்போது தாக்ஷாயணிக்கு இது தெரியாது. இப்போது அல்லவா விஷயம் புரிகிறது!

தாக்ஷாயணியை அன்றுடக் குடும்பத்தொல்லைகள் வேறு வாட்டின. பணம் சேமிக்க இருந்த ஒரே வழியும் இப்படிப் பலனற்றுப் போய்விடவே, பெண்களைப் பெற்றதன் வருத்தம் அவளைப் பன்மடங்காகப் பிழிந்தெடுத்தது. விதுபூஷணனே, விசுவம்பரனே, வங்கநாட்டு ரசிகப்பெருமக்களோ யாரும் காரணமல்லர், தன்னுடைய துரதிருஷ்டமே அனைத்துக்கும் காரணம் என்று அவளுக்குப் புரிந்தது. அந்தத் துரதிருஷ்டத்தில் தன் பெண்களுக்கும் பங்களிக்க அவள் தயங்கவில்லை. அல்லும் பகலும் இந்த வேதனை அவள் மனத்தை அலைக்கழித்தது.

பிரசவ சமயம் நெருங்கியது. அவளுடைய உடல்நிலை பெருந் திகிலை ஊட்டியது. தாராபிரஸன்னர் வேறு வழியேதும் தோன்றாமல் பித்தனைப்போல் விசுவம்பரனிடம் நின்றார். ''அண்ணா! இந்த ஐம்பது புத்தகங்களையும் வைத்துக்கொண்டு ஏதாவது பணம் கொடுத்தால்தான், நான் பட்டணத்திலிருந்து நல்ல மருத்துவச்சியை வரவழைக்கமுடியும்'' என்று கெஞ்சினார்.

''அப்பனே! நீ கவலைப்படாதே. புத்தகங்களை நீயே வைத்துக்கொள். நான் பணம் தருகிறேன்'' என்று விசுவம்பரன் காஞயி பாலுடன் கலந்துபேசிப் பணம் கொணர்ந்து கொடுத்தான். விதுபூஷணன் தானே கல்கத்தா போய், சொந்தச்செலவில் மருத்துவச்சியை அழைத்து வந்தான்.

தாக்ஷாயணிக்கு என்ன தோன்றியதோ, கணவரை அருகில் அழைத்தாள். ''உங்களுக்கு அந்த வலிப்பு வந்தால் சாமியார் கொடுத்த மருந்தை மறக்காமல் சாப்பிடுங்கள். ரக்ஷையைக் கழற்றவே கூடாது'' என்று இன்னும் பல வேண்டுகோள்களையும் கூறினாள். ''விதுபூஷணனிடம் எனக்கு நம்பிக்கையே இல்லை. அவன்தான் உங்களை நாசமடித்தவன்'' என்றும் சொன்னாள். புது மருந்து, ரக்ஷைகள், இன்னும் என்னென்னவோ உறுதிமொழிகளையும் வாங்கிக்கொண்ட பிறகுதான் கணவரை விட்டாள். உலகம் அறியாத அப்பாவிக் கணவரைச் சூழ்ச்சி, தந்திரங்கள் நிறைந்த உலகில் தனியே விட்டுச் செல்கிறோமே என்று அவளுக்கு அங்கலாய்ப்பு. கடைசியில் மெதுவான குரலில், ''எனக்குப் பிறக்கும் பெண்ணுக்கு 'வேதாந்தபிரபா' என்று பேர்

வையுங்கள். பிழைத்துக் கிடந்தால் 'பிரபா' என்று கூப்பிடலாம்'' என்றாள். பின்னர் அவருடைய பாததூளியைக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். 'பெண்களாகவே பெற்றுத் தள்ளத்தான் நான் வந்தேன். இந்தத் தடவையோடு இது முடிந்தது' என்று அவள் நினைத்தாள்.

''அம்மா, பெண்ணைப் பாருங்கள், கொள்ளை அழகு'' என்றாள் மருத்துவச்சி. கண்கள் மெல்ல ஒருமுறை குழந்தையை நோக்கின. 'வேதாந்த பிரபா' என்று முணுமுணுத்தது அவள் வாய். அதன் பின்னர் இவ்வுலகில் அவள் மறுபேச்சுப் பேசவே அவசியம் இராது போயிற்று.

அணிகலமிழந்தாள்

கலகலத்துப்போன அந்தப் படகுத் துறையில் என்னுடைய படகு கட்டப்பட்டிருந்தது. அப்போது அஸ்தமித்துவிட்டது. படகின் மேல்தளத்தில் படகோட்டி 'நமாஜ்'[1] படித்துக்கொண்டிருந்தான். செவேலென்றிருக்கும் மேற்கு வானத்திரையில் கடவுளை வழிபடும் அவனுடைய உருவம் ஓர் ஓவியமெனக் காட்சி தந்தது. சற்றும் நுடங்காத ஆற்றுநீர்மேல் சொல்லுக்கு அடங்கா வண்ண வின்னியாசங்கள் நிமிடத்திற்கு நிமிடம் பொன்னிறத்திலிருந்து எஃகின் நீலக்கருமைக்கு மாறி மழுங்கி இருளுடன் கலக்கத் தொடங்கின.

உடைந்த சாளரங்களும், சரிந்துபோன தாழ்வாரங்களும் கொண்டு, பழுதுபட்டுப் போன ஒரு மாளிகைக்கு முன்பு அரச மரத்தின் வேர்கள் ஊடுருவிக் கற்கள் பிதுங்கித் தெரியும் நீர்த்துறையில் சிள் வண்டு உறங்கும் அவ்வந்திப்பொழுது நண்ணும் சமயம் குளிர்நீரில் கண்ணைக் கழுவ இறங்கியபோது, உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரைக்கும் என்னைச் சிலிர்க்க வைத்தது ஒரு குரலோசை: ''ஐயா, எங்கிருந்து வருகிறீர்கள்?''

நிமிர்ந்து நோக்கினேன். போதிய உணவு இராததால் வற்றல் மேனியாக, பாக்கியதேவதை புறக்கணித்த ஒரு மனிதர் நின்றிருந்தார். வங்கநாட்டில் வெளியிடங்களிலிருந்து வந்து வேலை பார்ப்பவரின் ஒழுங்கற்ற தோற்றமே அவரிடமும் தென்பட்டது. அழுக்கு வேட்டிக்குமேல், எண்ணெய்ச் சிட்டமுடைய அஸ்ஸாமிய ரீதியான மட்கா சாப்கான்[2]. அது பித்தான்கள் போடாமல் திறந்தபடியே இருந்தது. அப்போதுதான் கடுமையான வேலை செய்துவிட்டு வெளியே வருவதுபோன்ற ஓர் அலங்கோலம். அந் நிலையில் ஏதாவது வயிற்றுக்குப் புசித்தலே நலமாகும். ஆனால், அந்த நிர்ப்பாக்கியன் ஆற்றங்கரைக்கு வாயு பட்சணம் செய்யத்தான் வந்தான் போலும்.

வந்தவர் படியின் பக்கம் இடம் கொண்டார். ''நான் ராஞ்சியிலிருந்து வருகிறேன்'' என்றேன் நான்.

''என்ன ஜோலியோ?''

---

[1]குரானின் சில 'ஆயாத்' அல்லது திருவாசகங்களை உச்சரித்து முறைப்படி நடத்தும் கடவுள் தொழுகை.

[2]மோட்டா பட்டினாலான துணிவகை. சாப்கான் என்றால் நீள ஜிப்பா.

''ஏதோ வியாபாரம்.''

''என்ன வியாபாரமோ?''

''கடுக்காய், பட்டுப்பூச்சிக்கூண்டு, காட்டுக்கட்டை இவை சம்பந்தமான வியாபாரம்.''

''தங்கள் நாமதேயம் என்னவோ?''

சற்று நிதானித்து ஒரு பெயரைச் சொன்னேன். அது என்னுடைய சொந்தப் பெயரன்று.

வந்த மனிதனுக்கு என்னைப்பற்றி அறியவேண்டிய ஆவல் தணியவில்லை. மீண்டும் வினவினர்: ''இந்தப் பக்கம் எதற்காக வருகையோ?''

''காற்றுநீர் மாறுதலுக்காகத்தான்'' என்றேன் நான்.

அவருக்கு இது வியப்பாக இருந்தது. ''நானும் இந்த ஆறு வருஷங்களாக இங்குள்ள காற்றையும், நீரையும் அநுபவித்துத் தான் வருகிறேன். அத்துடன் அன்ருடம் பன்னிரண்டு கிரெயின் அளவு கொய்னவும் உண்டு வருகிறேன். அதனல் ஒரு பலனும் ஏற் படக் காணேன்'' என்ருர்.

''ஆனல் ராஞ்சியைவிட இது எவ்வளவோ மடங்கு பரவா யில்லையே! இதை நீர் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்'' என்றேன் நான். அவர், ''அப்படியா! நல்லது; இங்கே எங்கே இடம் பார்க்கப்போகிறீர்?'' என்ருர்.

நான், படகுத்துறைக்கு எதிராக உள்ள பாழடைந்த மாளிகையைச் சுட்டி, ''அதே இடந்தான்'' என்றேன்.

அவருக்குத் திடுமென என்மீது சந்தேகம் பிறந்துவிட்டதோ என்னவோ? அந்தப் பாழும் வீட்டினுள் ஏதோ புதைந்துகிடக்கும் தனத்தைத் தேடித்தான் நான் வந்திருப்பதாக எண்ணிக்கொண் டிருக்கலாம். ஆனல், இதுபற்றி எந்தச் சருச்சையையும் செய்ய வில்லை. அவர் இற்றைக்கு பன்னிரண்டாண்டுக்கு முன்பு அந்தச் சாபக்கேடான வீட்டில் நடந்த ஒரு வரலாற்றைத்தான் எனக்குக் கூறலானர்.

வந்தவர் அவ்வூரைச் சார்ந்த ஒரு பள்ளி ஆசிரியர். பட்டினி, பிணி இவற்ருல் சுருங்கி எலும்பு எடுத்த முகத்தில், பொட்டை விழுந்த தலைக்குக் கீழ் இரு கண்கள்மட்டும் பளபளப்பாக ஒளியை வீசின. அந்தக் காட்சி எனக்கு, கோலரிட்ஜ் புலவரின் காவியத்தில் வரும் அந்தப் 'பண்டைய நாவிகனி'ன் [1] நினைவை எழுப்பியது.

படகோட்டி 'நமாஜ்' முடிந்ததும் சோருக்குவதில் கவனம் செலுத்தினன். அந்திப்பொழுதின் கடைசி வண்ணமும் மறைந்து இருட்டாகிவிட்டது. மனிதச் சந்தடியற்ற அவ்விருளிடையே அப்பழைய மாளிகை, பேய் ஒன்று நிமிர்ந்து நிற்பதுபோன்ற மருளை எழுப்பியது.

---

[1] 'ஏன்ஷியன்ட் மாரினர்' என்ற காவியம்

பள்ளியாசிரியர், சொல்லத் தொடங்கினர்: ''இந்தக் கிராமத்தில் ஏறத்தாழப் பத்தாண்டுகளுக்கு முன்னர், இதே பங்களாவில் பணிபூஷண ஸாஹா என்பவன் வாழ்ந்து வந்தான். பிள்ளைப் பேறில்லாத தந்தை முறையாகவேண்டிய துர்க்கா மோகன ஸாஹாவின் அளவற்ற சொத்துக்கும், அவர் நடத்திய வர்த்தகத்திற்கும் உரிமையாளனுக விளங்கினுன்.

''ஆனுல், அவனை இக்காலத்து மோகம் பற்றிக்கொண்டது. நன்ருகப் படித்தான். கோட்டும் பூட்டுமாக வெள்ளைத்துரைமார் ஆபீசில் நுழைந்து அவர்களைப் போலவே ஆங்கிலமும் பேசுவான். அவன் மோவாயில் சிறு தாடி வைத்திருந்தான். அதனுல் வெள்ளைக்கார வியாபாரிகளிடையே அவன் முன்னேற வழியிராமல் போயிற்று. அவனைப் பார்த்த மாத்திரத்தில் அவன் ஒரு நவீன வங்கத்தான் என்றெண்ணிச் சலுகை காட்டாமல் இருந்தனர்.

''வீட்டிலும் ஒரு பேரிடும்பை வரலாயிற்று. அவனுடைய மனைவி கட்டழகி. கல்லூரியில் படித்தவளானதால் பழைய பாணியே அவளிடம் தென்படவில்லை. ஏதாவது தலைவலி, சிறு காய்ச்சல் வந்தாலும், பட்டணத்திலிருந்துதான் டாக்டர் வந்து அவளுக்குச் சிகிச்சை செய்யவேண்டும். அவள் உட்கொள்ளும் உணவு, அணியும் உடை, பூணும் இழை யாவும் நாளுக்கு நாள் புதுப் பாணியைப் பின்பற்றியே அமைந்திருந்தன.

''ஐயா! நீங்கள் மணமானவரென்று நினைக்கிறேன். சாதாரணமாகப் பெண்பாலார் பச்சை மாங்காய், காரமான பச்சை மிளகாய், முரட்டுக் கணவன்மார் இவர்களையே விரும்புவர். ஆனுல், அந்த நிர்ப்பாக்கியன் தன் மனைவியின் அன்பினின்று வஞ்சிக்கப்பட்டவன். அவன் அழகாக, கம்பீரமாகத்தான் இருப்பான்; முரடனும் அல்லன். நீங்கள் கேட்கலாம், இப்படி ஏன் ஆயிற்றென்று. இதுகுறித்து நான் பல செய்திகள் திரட்டியுள்ளேன். ஒருவனுக்கு ஓரிடத்தில் பிரவிருத்தியும், ஆற்றலும் இருப்பின் அதனை நன்கு பயன்படுத்திக் கொள்ளாதுபோனுல் அவன் இன்பம் துய்க்க மாட்டான். மான் தன் கொம்பைத் தீட்டிக்கொள்ள வயிரமான மரமொக்கையையே தேடும். வாழைத் தண்டின்மீது தீட்டினுல் கூர் ஏறுமா? படைப்பில் ஆண் பெண் இனமென்று பிரிவுகள் தோன்றியதிலிருந்து இந்தப் பெண்ணினம், ஆணைப் பலவழிகளில் மயக்கித் தன்வசமாக்கிக் கொள்ளும் வித்தையில் தேர்ச்சி பெற்றுவருகிறது. வசியமாகிவிட்ட கணவனின் மனையாள் அல்லவா? இன்றேல் அவள் தன் பாட்டி முப்பாட்டியிடமிருந்து லட்சக்கணக்கான வருஷங்களாகப் பெற்றுவரும் பளபளக்கும் வருணுஸ்திரம் அக்கினி

பாணம், நாகபாசம்[1] இவற்றிற்குப் பயனே இராமல் போய் விடுமே!

''மகளிர் ஆடவனை மயக்கித் தம் சக்தியைப் பிரயோகம் செய்தே காதலைப் பெற்று மகிழ்கின்றனர். கணவன் நல்ல மாதிரியாக அதற்கான வாய்ப்பைக் கொடுக்காது போனுல், அவனுடைய அதிர்ஷ்டம் சப்பை என்றுதான் சொல்ல வேண்டும்.

''புது நாகரிகத்தைப் பின்பற்றும் புருஷன், தனக்கு இயல்பாக, பரிபக்குவமான, கடவுள் அளித்துள்ள அந்தக் காட்டுமிராண்டித் தனத்தை இழப்பானுயின், தாம்பத்திய. உறவை அவன் சீர் குலைத்து விட்டானென்றே சொல்லுவேன். நிர்ப்பாக்கியனுன பணிபூஷணன் நவநாகரிகச் சமுதாயத்தின் எந்திரத்தில் பதம் பண்ணப்பட்டு வெளியே வந்தவன். வியாபாரத்தில்தான் அவன் வெற்றி பெறவில்லை என்ருல் தாம்பத்திய விஷயத்திலும் அவன் நற்பயனைக் காணவில்லை.

''பணிபூஷணனுடைய இல்லாள் மணிமாலிகா, பிரயத்தனம் இன்றியே ஆதரவு, கண்ணீர்ச் செலவு செய்யாமலே டாக்கா சேலை, பிணக்கு - புலவியிராமலே பாஜ்பந்து[2] இவற்றைப் பெற்ருள். இவ்வாறு அவளது பெண்மையும், அதனுடன் அவளது காதலுணர்வும் செயல் புரியாமல் நின்றன. அவள் எதையும் பெற்றுவந்தாள்; எதையும் வழங்கவில்லை. அவளுடைய கணவனே வாய்பேசாத அப்பாவி. இப்படித் தானத்துக்குமேல் தானம் வழங்கினுல் பிரதிதானமாகத் தனக்கு அவளிடமிருந்து ஆசை ஆதரவெல்லாம் வருமென நம்பினுன்போலும். ஆனுல் நேர் மாருனதே ஏற்பட்டது.

''இதனுல் அவள் தன் கணவனை டாக்காச் சேலையைத் தரும், நகைகள் பண்ணிப்போடும் எந்திரமாகவே கருதிவிட்டாள். இந்த எந்திரம் வாகாக அமைந்திருந்தது. இது நீடித்து வேலை செய்வதற்கு இதற்கு எண்ணெய் ஒரு துளியேனும் போடவேண்டிய அவசியமே இல்லை.

''பணிபூஷணனின் பிறந்தவூர் புலபேடே; வியாபார விடுதியும் அங்கேயேதான். வேலையின் நிர்ப்பந்தத்தால் அங்கேயே அவன் பெரும்பாலும் இருக்கவேண்டி வந்தது. புலபேடேயிலுள்ள வீட்டில் அவனுடைய தாய் இராது போனுலும், சிற்றன்னை, அத்தை, இன்னும் உறவினர் ஐந்தாறுபேர் வசித்து வந்தனர். ஆனுல் இவர்களுக்கு உதவியாக இருக்குமென எண்ணி அவன் இவ் வழகியை மணந்து இல்லறம் நடத்தவில்லை. ஆனுல், தன் அருமை

---

[1]வருணுஸ்திரம் - அழுகையும் கண்ணீரும்; அக்னி பாணம் - பெருமூச்சும் பிணக்குச் சொல்லும்; நாக பாசப் - அணைப்பில் சட்டிப் பிடித்தல்.

[2]தோள்வளை.

மனைவியை ஐந்து பேர் மத்தியிலிருந்து தேர்ந்தெடுத்து இம் மாளிகையில் தனக்காகவே தனியாக வைத்தான்.

"இந்த அருமை மனையாளோ அதிகமாகவே பேசாதவள்; அக்கம் பக்கத்துப் பெண்களுடன் கலகலப்பாகப் பழகமாட்டாள். ஏதாவது நோன்பு எடுத்து அதை முடிக்க, பிராம்மண புரோகிதரை அழைத்து, போஜனம் போடமாட்டாள். வாசலில் பாடிக்கொண்டே செல்லும் 'வைஷ்ணவி' எவளுக்கும் பிடி அரிசியோ, இரண்டு காசோ தரமாட்டாள். அவள் தொட்டபொருள் எதுவுமே பழுதாகாது. கணவன் காட்டும் ஆதரவு, அன்பு தவிர மற்றதையெல்லாம் பத்திரமாகச் சேர்த்து வைப்பாள். மற்றொரு விந்தை: அவளுடைய வனப்பு சிறிதும் குறையாமல் அவள் எப்படித்தான் காப்பாற்றி வந்தாளோ! அவளுக்கு இருபத்து நான்கு வயதாகியும், பதினாறு வயது இளநங்கையாகவே தோன்றினாளெனச் சொல்லிக்கொள்வார்கள். எவர்களது இதயம் பனிக்கட்டியைப்போல் இறுகியதோ, எவர்களது உள்ளத்தில் காதலோ, அன்போ இவற்றின் வெம்மை உணர்ச்சிக்கே இடமில்லையோ, இத்தகையோர் நீண்டகாலம் வாடா எழிலுடன் இருப்பரோ என்னவோ? இத்தகைய உலோபிகள் உள்ளும் புறமும் ஒத்து ஒரேமாதிரி இருப்பார் போலும்.

"தளிர்க்குவையுள்ள செழுங்கொடிபோல் கடவுள் மணிமாலிகாவைப் பலனற்ற(கனிதராத)வளாகச் செய்துவிட்டார். அவளுக்குக் குழந்தையே பிறக்கவில்லை. இரும்புப் பெட்டியில் தூங்கும் மணிமாணிக்கத்தை யெல்லாம்விட புத்திரரத்தினத்தைச் சிறந்ததாக அவள் கருதவே இல்லை. இளவேனில் காலையில் எழும் இளம்பரிதியின் இனிய வெம்மையால் பனிபோல உறைந்த அவள் உள்ளம் இளகி, வாழ்வில் ஒரு பிள்ளை அன்பின் ஊற்றுப் பெருக அவளுக்கு இறைவன் அருள் புரியவில்லை.

"ஆனால், மணிமாலிகா நிரம்பக் காரியங்களில் ஈடுபட்டவள். அளவுக்குமேல் அவள் ஆட்களை அமர்த்திக்கொள்ளவில்லை. தன்னால் செய்யக்கூடிய வேலைக்கு ஆளை வைத்து அவனுக்கு ஊதியம் தருவதை அவள் விரும்பவேமாட்டாள். யார் பொருட்டும் அவள் விசாரப்படுவதில்லை; எவர் மேலும் அவளுக்கு ஆசையோ பாசமோ கிடையாது. தன் வேலைகளைத் தானே செய்வாள்; பணம் சேர்ப்பாள். இதனால் அவளுக்கு நோயோ, நலிவோ, நல்குரவோ எதுவும் ஏற்படவில்லை. அளவுக்கு மேற்பட்ட உடல் நலம், தொந்தரையிராத அமைதிச் சூழ்நிலை, குவிந்து வரும் செல்வம் இவற்றிடையே அவள் அன்னமென மிதந்தாள்.

பெரும்பான்மையான கணவன்மார் இதுபோன்ற நிலையைத் தான் விரும்புவர்—இது அவர்களுக்கு போதுமானதும் கிடைத்தற்கரிதுமாகும். உடல் உறுப்புக்களில் இடுப்பென்ற ஓர் அம்சம்

உள்ளது. அந்த இடுப்புக்கு நலிவு கண்டாலொழிய எதுவுமே உறைப்பதில்லை. மனைக்கு விளக்கன்னாள் ஒருத்தி, காதலும் அன்பும் தன்னை நோக்கி வரும்போது, அதை அடிக்கு ஒருதரம் விலக்கிட வீட்டுப் பணியில் இருபத்துநான்கு மணி நேரமும் ஈடுபடுவதென்பதுதான் அந்த இடுப்பு வலி என்பதன் பொருள். பதிவிரதையாக இருப்பது ஒரு பெண்ணின் சிறப்பான வெற்றி யாகும். ஆனால் பதி (கணவன்) இதனால் மகிழ்ச்சியே அடைய வில்லையே! இது என்னுடைய முடிவு, ஐயா.

''மனைவியிடமிருந்து எவ்வளவு அன்பைப் பெற்றோம், அவளுடைய ஆசை எவ்வளவு குறைந்து வருகிறது - இதுபோன்ற சிக்கலான பிரச்னைகளைச் சீர்தூக்கிப் பார்ப்பதா கணவனின் கடமை! மனைவி அவள் வேலையைச் செய்யட்டும், நாம் நமது பணியைச் செய்வோம் - இதுதான் குடித்தனம் பண்ணுவதற்கு அழகான கணக்காகும். தெளிவற்றதில் தெளிவானது எத்துணை, கிடைத்துள்ளதில் குறைவு எவ்வளவு, தெளிவானதற்கிடையே குறிப்பானது எம்மட்டு; அணுபரமாணுக்கிடையே விரிவு எவ் வகைத்து-இதற்கு விடை பகரவொண்ணததுபோல் காதல் விஷயத் தின் நுட்பத்தைப் புரிந்துகொள்ளும் ஆற்றலை ஆடவருக்குப் பிரம் மன் புகட்டவில்லை. அதற்கான அவசியமும் இல்லை. ஆடவருடைய அன்பு, காதல் இவைகுறித்து அணு அணுவாக ஆராய்ச்சி செய்து எடைபோடுவோர் பெண்கள்; பேச்சிலும் குறிப்பிலும் பாவனை யிலும் உண்மையை அறியப் பிய்த்துப் பிய்த்துப் பார்ப்பவர்கள். ஏனெனில், ஆடவருடைய கேண்மை அவர்களுக்குப் பலம் தருவது; அவர்கள் நல்வாழ்விற்கான மூலதனம். காற்று வீசும் திசையைக் கவனித்து உரிய சமயத்தில் பாயை விரித்துப் படகைச் செலுத்து வார்கள். இதற்காகவே இறைவன் காதல், அன்பு எனும் அளவு எடுக்கும் கருவியைப் பெண்கள் இதயத்திலேயே மாட்டி வைத் திருக்கிறான். அதை ஆடவர்களுக்கு அளிக்கவில்லை.

''ஆனால் கடவுள் அளிக்காத இச் சக்தியை ஆடவர் தம் முயற்சியாலேயே தேடிக்கொண்டனர். புலவர்கள் கடவுளுக்குப் போட்டியாக இந்த அரிதான கருவியை - திசைகாட்டும் இக் காந்த முள்ளை, இடம்-பொருள் யோசியாமல் சாதாரணமானவர் களிடம் தந்துள்ளனர். நான் கடவுள்மீது குற்றம் சுமத்தவில்லை; அவர் பெண்ணினத்தை முற்றும் வேறான பிரகிருதியாகப் படைத்திருக்கிறார். ஆனால், சமூகத்தில் அந்த வேறுபாடு இருப்பதில்லை. இப்போதெல்லாம் பெண்கள் புருஷராகிவிடுகின் றனர்; ஆடவர், பெட்டைகளாகி விடுகின்றனர். இதனால் குடும்பத்திலிருந்து அமைதியும் ஒழுங்கும் விடைபெற்றுக் கொள்கின்றன. மணப்பதற்கு முன், நமக்கு வருபவள் பெண் தன்மையுடையவளா அல்லது ஆண்மை மிகுந்தவளா? அதே

போல் பெண்களும் தமக்கு வரும் கணவன்மாரை நினைக்கும் போதும் இரு சாராருக்குமே இதயத்துள். திகில் மூள்கிறது

''உங்களுக்கு இந்தப் பேச்சு வெறுப்பாக இருக்கலாம். நான் தனியாகத்தான் இருக்கிறேன். மனைவியைவிட்டுப் பிரிந்து இருக்கிறேன். தொலைவில் இருப்பதனுல் வாழ்க்கையைப்பற்றி இந்த ஆழ்ந்த தத்துவங்கள் என் மனத்தில் உதிக்கின்றன. இவை யெல்லாம் பள்ளிக்கூடத்து மாணவரிடம் சொல்லத் தகுந்த விஷயங்கள் அல்லவே; ஏதோ உங்களைச் சந்தித்தேன். அதனுல் சற்று மனம்விட்டுப் பேசினேன். நீங்களும் சிந்தனை செய்து பார்க்கலாம்.

''மொத்தத்தில், சாப்பாட்டில் உப்புக் குறைந்தில்லை; மெல்லும் வெற்றிலையில் சுண்ணும்பு அளவுக்குமேல் இல்லை. ஆனுலும், பணிபூஷணன், இதயத்துள் அது என்னவோ எதுவென்று சொல்ல இயலாத தடுத்தற்கரிதான இன்னலை அநுபவித்து வந்தான். மனைவியிடம் ஒரு தவறுமில்லை. அவளைப் பற்றிச் சந்தேகம் கொள்ள ஒன்றும் நடக்கவில்லை; இருப்பினும், கணவனுக்கு எதனுலோ மன நிம்மதியே இல்லை. அவன் தன் இல்லாளின் வெற்றுக் குகைபோன்ற இதயத்தை நிரப்ப முத்தும், வயிரமும், பொன்னுமாகச் சொரிகிருன். ஆனுல், அவை யாவும் இரும்புப் பெட்டியில் அல்லவா போய் விழுகின்றன. உடனேயே அது சூனியமாகி விடுகிறது. காலஞ்சென்ற சிற்றப்பா துர்க்கா மோஹன் இவ்வளவு நுண்ணிதாகப் புரிந்துகொள்ளவில்லை, இப்படி ஏங்கிக் கிடக்கவில்லை, இவ்வளவு வாரி வழங்கியதில்லை தம் மனைவிக்கு. ஆனுலும், அந்தக் கிழவி அவர்மீது உயிராக இருந்தாள்; தன் ஆதரவை, அன்பை, அள்ளி அள்ளித் தந்தாள். வியாபாரியாக இருக்க விரும்பினுல் நவநாகரிகம் பாராட்டக்கூடாது; கணவனுக இருக்க விரும்பினுல் பௌருஷ மிக்கவனுய் நடந்துகொண்டிருக்க வேண்டும்—இதில் சந்தேகப் படுவதற்கு இடமே இல்லை.''

சரியாக அதே சமயம், பக்கத்திலிருந்த தோப்பிலிருந்து குள்ளநரிகள் சேர்ந்து பயிலும் ஊளைக் குரல் வந்தது. பள்ளியாசிரியரின் கதையோட்டம் இதனுல் சற்றுத் தடையுற்றது. அப்போது அந் நரிகள் ஊளையிடுவது எனக்கு ஓர் எண்ணத்தை உண்டு பண்ணியது. பள்ளியாசிரியர் அந்த இருளார் அரங்கில் கணவன்-மனைவி இவர்களது பொருத்தம்பற்றி மிக நுட்பமாக ஆராய்ந்த சொற்பொழிவைக் கேட்டா, அல்லது நவநாகரிகத்தால் பௌருஷம் இழந்த பணிபூஷணனுடைய பரிதாபமான போக்கைக் கண்டா அவை அவ்வாறு தம் குதூகலத்தை வெளிப்படுத்தின?

அந்த ஊளையொலி நின்றதும் வான், புவியெங்கும் இரு மடங்கு நிச்சப்தம் நிலவியது. பள்ளியாசிரியர் அந்த இருட்டில்

தம்முடைய ஒளி படைத்த பெரிய கண்களை உருட்டிக் கதையைத் தொடர்ந்தார் :

''பணிபூஷணனுடைய சிக்கல் நிரம்பியதும் பன்முகமானது மான வியாபாரத்தில் திடுமென எங்கோ ஒரு பிளவு தோன்ற லாயிற்று. வியாபாரத்தில் அநுபவமிராதவனுக்கு அந்தப் புரை எங்கு என்பது விளங்காது. மொத்தத்தில், மார்க்கெட்டில் அவனுக்குத் திடுமென நாணயக் குறைவு ஏற்பட்டது. இன்னும் ஐந்தாறு நாட்களுக்குள் ஓர் ஒன்றரை லட்சம் ரூபாயைப் புரட்ட முடிந்தால், தனக்கு நேர்ந்த இடுக்கணிலிருந்து தப்ப வழியிருந் தது. முன்போலவே வியாபாரமும் அநுகூலமான திசைக்குத் திரும்பலாம்.

''ஆனால் பணந்தான் சிக்கவில்லை. அந்த ஊரைச் சேர்ந்த ஒரு சாவுகாரிடம் கடன் வாங்க அவன் முனைந்துள்ளான் என நாலு பேருக்குத் தெரிந்தால் அவனுடைய வியாபாரத்தில் மேலும் நஷ்டம் ஏற்பட நிமித்தம் இருந்தது. இந்தத் திகில் மூளவே அவன் தனக்கு அறிமுகமிராத வேறு ஒருவரிடம் கடன் வாங்க நினைத்தான். ஆனால், அதற்கு ஈடுகாட்டச் சொத்து வைத்தால்தானே காரியம் கைகூடும்?

''நகைகளை அடகு வைத்தால், எழுதிக் கொடுக்க வேண்டிய தொல்லை ஏதுமிராது. காரியம் சட்டப்பட்டெனத் தீர்ந்துபோகும்.

''பணிபூஷணன் மனைவியை அண்டினான். புருஷன் சாதாரண மாகத் தன் மனைவியை நெருங்கும் திறமை பணிபூஷணனுக்கு இல்லை. அவனுடைய துர்ப்பாக்கியம், மனைவியிடம் அவன் வைத்த அன்பு காவியத்தில் தலைவிமாட்டுத் தலைவன் கொள்ளும் ஓர் உயர்வகை உணர்ச்சியாகும். அந்த இடத்தில் இனியாளின் இதய கவாடத்தை முரட்டுத்தனமாகத் திறக்க வழியில்லை. படிப்படியாக ஒவ்வோர் அகச் சுவையின் துறை களைப் பின்பற்றி, மெல்ல உள்ளக் கிளர்ச்சியை வெளிப்படுத்துவ தாகும். இந்தக் காதலின் ஈர்ப்பு கதிரவனுக்கும் பூமிக்கும் இடையில் ஏற்படும் ஓர் ஆகர்ஷணைபோல், ஒதுங்கியே நிகழ வேண்டிய விஷயம்.

''சங்கடம் ஏற்பட்ட காலத்தில் காவியத்தலைவன்கூட இனியாளிடம் ஹுண்டி, அடைமானம், வெண்ணிலைப் பத்திரம் இவைபற்றிப் பேச்சை எடுக்கலாம்; ஆனால் யாசிக்கும்போது குரல் தழுதழுக்கும், சொற்கள் தடுமாறும். இதுபோன்ற வெளிப்படை யான சமாசாரங்களில் பேச்சு உணர்ச்சித் தடுமாற்றத்தால் பிறழ்வதும், உடல் வேதனையால் நடுக்குறுவதுமான மெய்ப் பாடுகள் தோன்றும். நிர்ப்பாக்கியன் பணிபூஷணனால், தான் கோரி வந்த விஷயத்தைப் பளிச்சென எடுத்துரைக்க முடியவில்லை. 'எனக்கு இப்போது ரொம்பவும் பணமுடை; நிலைமையைச்

சமாளிக்க உன் நகைகளைக் கழற்றித் தா' என்று சுதந்திரமாகக் கேட்டு வாங்க அவனுக்குத் துணிவு பிறக்கவில்லை.

''அவன் பேசினான்; ஆனால் அந்த வேண்டுகோளில் வீரியமே இல்லை. மணிமாலிகா முகம் கறுத்து, 'உண்டு, இல்லை' என்று எதுவுமே பதில் கூறவில்லை. அவன் இதனால் தாக்குண்டான்; ஆனால் அவளைத் தாக்கவில்லை. ஆடவரிடம் தென்படும் முரட்டுத் தனம் அவனிடம் சிறிதும் இல்லை. எந்த இடத்தில் வலுக் கட்டாயப்படுத்திப் பொருளைப் பெறவேண்டுமோ அங்கு வாய் பொத்தியிருந்து உள்ளுக்குள் வெந்து துடித்தான். காதலுக்கே எங்கே எல்லா உரிமையும் வழங்கப்பட்டுள்ளதோ, எல்லாம் இழக்க நேரிட்டாலும், அந்த இடத்தில் பலத்தைப் பிரயோகம் செய்து காரியம் சாதித்துக்கொள்வது அவனுடைய தன்மையி லேயே இல்லை. அவளை இது விஷயமாக ஏதாவது வைது தீர்க்கலா மல்லவா? அல்லது, அவன் இப்படி மனத்துள் தருக்கித்து இருக்கலாம்: 'கட்டின மனைவிக்குத் தெரியும், தனக்கு ஏற்பட்டுள்ள மான அவமானம்; அவளே இஷ்டப்பட்டு நகைகளைத் தராத போது, பலாத்காரமாகப் பெறுவது அழகல்லவே! வியாபாரத்தில் நாணயம் வேண்டுவதுபோல், வீட்டிலே அன்பு அவசியம். உடல் வலிமை யுத்த களத்திற்குத்தான் ஏற்புடையது. இப்படி ஒவ்வோர் அம்சமாக, சூட்சும தருக்க ஜாலம் புனைவதற்காகவா பிரம்மன் மனிதனை இவ்வாறு உதாரமுள்ளவனாகவும், பெருமை மிக்கவனாகவும் வாட்டம் சாட்டமாகவும் படைத்தான்?

''இது எப்படியாவது போகட்டும்; பணிபூஷணன் உதார மனப்பான்மையுடன் பெண்டாட்டியின் நகைமீது கைவைக்காது, வேறு வழியில் பணம் தேடக் கல்கத்தாவுக்குப் போனான். வாழ்க் கையில் சாதாரணமாக மனைவியைப்பற்றிக் கணவன் அறிந்திருப் பதைக் காட்டிலும் மனைவி கணவனைக்குறித்து அதிகமாகவே அறிவாள். ஆனால், கணவனின் தன்மை மிகவும் சூட்சுமம் நிரம்பிய தானால், மனைவியின் நுண்நோக்கிற்கு எல்லாம் புலனாவதில்லை. நம் பணிபூஷணனின் மனைவிக்கு இது அடியோடு புரியாது. பெண்களி டம் காணும் கல்லாமலே வரும் திறமை, மிகப் பழமைதொட்டுப் பழக்க வழக்கத்திலிருந்து உருவானதாகும். மிகவும் நவீனப் போக் குடைய ஆடவரும் அவர்களுக்குச் சமமாக நிற்கவே முடியாது. சாதாரண ஆண்பாலாருள் தனிப்பட்ட பிரகிருதிகள் உள்ளனர். சிலர் முரடர், சிலர் மடையர், சிலர் கண்ணவிந்தவர் - இவர்கள் எவரையுமே அவர்கள் எதிரே நிற்க வைக்கமுடியாது.

''ஆதலால் மணிமாலிகா ஆலோசனை கேட்கத் தன்னுடைய மந்திரியை அழைத்தாள். அதே ஊரைச் சேர்ந்தவன் அல்லது அவளுக்குத் தூர உறவினனாகவும் இருக்கலாம் - மணிமாலிகாவின் ஒரு தம்பி, பணிபூஷணனின்கீழ்க் கணக்கு வழக்குப் பார்க்கும்

குமாஸ்தாவாக வேலை பார்த்துவந்தான். வேலைசெய்து மேலுக்கு வரவேண்டும்; உறவினன் என்ற முறையில் எதையாவது சாக்கிட்டுச்சம்பள உயர்வுக்கு வழி பண்ணுவது; வேறு வழிகளில் பணம் பண்ணுவது - இவைபோன்ற வழிகளையே அறியாத சுபாவமுடையவன். மணிமாலிகா இவனை அழைத்துச் சமாசாரத்தையெல்லாம் சொன்னாள். 'இதற்கு என்ன உன் யோசனை?' என்றாள்.

''அவன் புத்திசாலிபோல் தலையை அசைத்தான். இப்போக்கு நல்லதற்கு இல்லை போலிருக்கே என்று சூசிப்பதுபோலவே இருந்தது அது. புத்திசாலிகள் எப்போதுமே எதையும் நல்லபடியாகப் போவதாக நினைப்பதில்லை. அவன் சொன்னான்: 'பாபாவுக்குப் பணம் எங்கேயுமே கிட்டப்போவதில்லை. கடைசியில் உன்னுடைய நகைகளுக்குத்தான் தலைவலி ஏற்படப்போகிறது.' மணிமாலிகாவுக்கும் அவன் சொல்வது சரியென்றே பட்டது. அவளுக்குத் திகில் பிடித்துக்கொண்டது. அவளுக்குக் குழந்தைகுட்டி எதுவுமே இல்லை. கணவன் இருக்கிறானே தவிர, அவன் இருப்பதை அவள் இதயத்துள் உணரவில்லையே! அவளுக்கு மிகவும் நெருங்கியுள்ளது, கண்ணும் கருத்துமாய்ச் சேர்த்த அந்தப் பணம் ஒன்றே. சொந்தக் குழந்தையை வளர்ப்பதுபோல் அதை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துப் பெருக்கி வந்திருக்கிறாள். உருவத்தால் வெள்ளி மட்டுமா, தன்மையால் பொன் மட்டுமா, அந்த மாணிக்கம், மார்பில் அணியும் சுடர்பூண், கழுத்துமாலை, சிரத்தில் தாங்கும் சீரிழை - எத்தனை நாளாக அவள் காத்துவந்த அரும்பொருள்கள்; இவை ஒரே அடியாக பள்ளத்தில் எறியப்படுமோ எனக் கற்பனை செய்துகொண்டதுமே அவளுக்கு உடலெங்கும் சில்லிட்டுப் போயிற்று. 'இதற்கு என்ன பண்ணலாம்?' என்று கேட்டாள்.

''மதுசூதனன் சொன்னான்: 'உன் நகைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு பிறந்தகம் போய்விடு.' அந்த நகைகளில் ஏதாவது சில, இல்லை பெரும்பகுதியே தனக்குக் கிடைக்கும் வழியை அந்தப் புத்திசாலி மது மனத்துள் வகுத்திருந்தான்.

''மணிமாலிகா அவனுடைய யோசனைக்கு உடனே சம்மதம் தெரிவித்தாள்.

''ஆடிமாதம் வைகறைப்பொழுது; இதே படகுத்துறையில் ஒரு படகு வந்து நண்ணியது. ஆகாயத்தில் ஒரே மேகமூட்டம்; இருள் பிரியவில்லை. தவளைகளின் இரைச்சலுக்கிடையே ஒரு மோட்டா போர்வைக்குள் கால்முதல் தலைவரைக்கும் தன்னை மறைத்தவண்ணம் மணிமாலிகா படகில் ஏறிக்கொண்டாள். மதுசூதனன் படகின் அறையிலிருந்து குரல் கொடுத்தான். 'நகைப்பெட்டியை என்னிடம் கொடு' என்றான். 'அப்புறம் தருகிறேனே. இப்போது படகை முன்னால் கிளப்பு' என்றாள் மணி.

''படகு புறப்பட்டது; ஆற்றில் நீர் பொங்கிச் சுழன்று ஓடியது. மணிமாலிகா புறப்படுவதற்கு முன்னிரவே ஒவ்வொன்ருகத் தன் அணிகலன்களை எடுத்து உடம்பில் பூண்டாள். உடலில் ஓர் அங்கம் பாக்கி இல்லை. பெட்டியில் அவற்றை வைத்தால், ஒருவேளை ஞாபகப்பிசகாக எங்கேயாவது வைத்தால் அத்தனையும் இழக்கநேரிடலாமென்று முன்னெச்சரிக்கையுடன் இவ்வாறு செய்தாள். மணிமாலிகாவுக்குப் பணிபூஷணனின் சுபாவம் தெரியாமல் இருக்கலாம். ஆனுல், மதுசூதனனை அவள் நன்கு புரிந்துகொண்டிருந்தாள்.

''மதுசூதனன் அலுவலகத்தில் தான் யஜமானியம்மாளை அவள் பிறந்தகம் வரைக்கும் கொண்டுவிடத் துணையாகப் போவதாக ஒரு கடிதம் எழுதிவைத்துவிட்டு வந்தான். அவனுடன் வேலை செய்யும் குமாஸ்தா பணிபூஷணனுடைய தந்தை காலத்தே பிடித்து இருப்பவன். அவனுக்கு வெறுப்பு. (குறில்) இகரத்தை (நெடில்) ஈகாரமாக்கி, தந்த்ய (பல்லில் படும்) ஸவைத் தாலவ்ய (நாக்கு உராயும்) ஷவாக்கி எஜமானருக்கு ஒரு கடிதம் வரைந்தான். அவன் எழுதிய வங்கமொழி தவறுகள் மலிந்ததுதான். ஆனுல், மனைவிக்கு அதிக இடம் கொடுப்பது ஒரு கணவனுக்கு அழகன்று எனச் சற்றுத் தெளிவாக அதில் கண்டிருந்தான்.

''பணிபூஷணன் மணிமாலிகாவின் மனத்திலுள்ளதைச் சரியாகப் புரிந்துகொண்டான். அவன் மனத்தை மிகவும் உறுத்திய விஷயமாவது: 'எனக்கு எவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்டபோதிலும், என் மனைவியின் ஆபரணங்களை நாடாது வேறு வழியில் பணத்திற்காக நான் பிரயாசைப்படும்போது, அவள் என் மீது சந்தேகம் கொள்கிருளே... இன்னும் என்னை அவள் புரிந்துகொள்ளவில்லை பார்.'

''தன்னை அவள் இப்படி மதிப்பிட்டதற்காக அவன் சீறி எழுந்திருந்திருக்கவேண்டும். ஆனுல், அவன் உள்ளுக்குள் பொருமினுனே தவிர, வேறில்லை. புருஷன் கடவுளின் நியாயக்கோல் அனையன். அகத்துள் இடியேற்றின் வன்மை புதைத்துள்ளான். தன் வரைக்குமோ, பிறர் பொருட்டோ அநீதம் தலைவிரித்து ஆடும்போது அதை ஒடுக்கச் சக்தியற்ற அப்பாவி கெடுவான்! புருஷன் என்பவன் சாதாரணமாக ஒரு சிறு பிழைக்காகக் காட்டுத்தீயெனக் கிளர்ந்தெழுவான். பெண்ணே, காரணமிராததற்கு மழைநாள் மேகமெனக் கண்மாரி பொழிவாள். இப்படி ஓர் ஏற்பாட்டைப் பிரம்மன் செய்துள்ளான்; ஆனுல் இது நீடிப்பதில்லை.

''பணிபூஷணன் தவறுதலாக நடந்துகொண்ட மனைவியைக் குறித்து மனத்துள்ளேயே சொல்லத்தொடங்கினுன்: 'இது உன்னுடைய முடிவென்ருல் அப்படியே இருக்கட்டும்; என் கடமையை நான் செய்துகொண்டு போவேன்.' அத்யாத்மிக சக்தி

உலகில் தலைதூக்கி நிற்கும்; போகும்; பின் வர இருக்கும் நூற்றுண்டில் அவன் பிறப்பு எடுத்திருக்கவேண்டியவன். ஆனல் விதி, இந்தப் பத்தொன்பதாவது நூற்றுண்டில் பிறந்து, விபரீத புத்தியால் விநாசத்திற்கு வழி செய்யும் பழையகாலத்து ஒரு பெண் பேயை மனைவியாகப் பெற்றுச் சஞ்சலப்படுகிருன். பணிபூஷணன் அவளுக்கு ஒரு கடிதங்கூடப் போடவில்லை. இது பற்றி அவளிடம் எதுவுமே பேசக்கூடாதென்றும் உறுதி பூண்டான். இதைவிட ஒரு பயங்கரத் தண்டனை அவளுக்கு வேண்டுமா?

''பத்து நாட்களுக்குப் பிறகு எவ்வாருே பணத்தைத் திரட்டிக் கொண்டு தலைக்குமேல் வந்த நஷ்டத்திலிருந்து கரையேறி வீட்டுக்குத் திரும்பினன். மணிமாலிகா பிறந்தகத்தில் நகையையெல்லாம் பத்திரப்படுத்திவிட்டு இத்தனை நாளுக்குத் திரும்பி விட்டிருப்பாளென்றே நினைத்திருந்தான். முன்னெல்லாம் மிகவும் இறங்கிக் கெஞ்சுவதுபோல் தான் அவளை அண்டும் பழக்கத்தைப் பார்த்த அப் பேதை, சென்ற காரியம் வெற்றியுடன் முடிந்து திரும்பும் தன்னைப் பார்த்ததும் உண்மையாகவே வெட்கிச் சாவாள், நகைகளை மறைக்க வீண் சிரமப்பட்டோமேயென்று வருந்துவாள் —இப்படிக் கற்பனை செய்தவண்ணம் பணிபூஷணன் அவளைச் சந்திக்க நேராக அந்தப்புரத்தை நோக்கி நடந்தான்.

''ஆனல் அவன் கண்டதென்ன? கதவு பூட்டப்பட்டிருந்தது. பூட்டை உடைத்து உள்ளே நுழைந்தான். வெற்று அறை; அதன் ஒரு பக்கம் இருந்த இரும்புப்பெட்டி திறந்து கிடந்தது. அதில் நகை எதுவுமே இல்லை. கணவனின் இதயத்தில் இது பேரதிர்ச்சியை உண்டுபண்ணியது. இந்த வாழ்வு, இந்த ஆசை, இந்த வாணிகம் யாவும் வீணே, பலனற்றவையென உள்ளூற உறைத்துவிட்டது அவனுக்கு. இந்த வாழ்க்கைக் காட்டை எவ்வளவு பத்திரமாகக் கம்பியிட்டுக் காத்தும் பயனென்ன? அதில் பறவை இருந்தால் தானே! அதைக் கொண்டு வைத்தாலும் அது தங்காது. ஆனல், நாள் தவருது தன் இதயக்கனியிலிருந்து இரத்த மாணிக்கத்தையும், கண்ணீர் முத்துக்களையும் வாரித் தந்து எப்படியெல்லாம் அவளை அலங்கரித்தான் பாவம்! அனைத்தையும் தந்து இவ்வளவு நேர்த்தியாக அமைத்த வாழ்வெனும் கிளிக்கூண்டு வெற்றிடமாகவே, பணிபூஷணன் அதைத் தூக்கி வெளியே எறிந்தான்.

''மனைவியைப்பற்றி அறியப் பணிபூஷணன் எந்த முயற்சியும் எடுக்க விரும்பவில்லை. அவளுக்கு எப்போது விருப்பமோ அப்போது திரும்பட்டுமென நினைத்தான். கிழவரான பிராம்மணக் காரியஸ்தர் அவனிடம் வந்து, 'இப்படிச் சும்மா இருந்தால் எப்படி? எஜமானியம்மாளைப்பற்றிச் சமாசாரம் எதுவுமே தெரியவில்லையே!' என்ருர். உடனேயே மணிமாலிகாவின் பிறந்தகத்துக்கு

ஆளை அனுப்பினர். அங்கிருந்து செய்தி வந்தது. மணிமாலிகாவும் சரி, மதுவும் சரி, வந்தே சேரவில்லை யென்று.

''அப்புறம் பரபரப்புற்று ஆட்கள் அவர்களைத் தேட நாற்றிசையும் விரைந்தனர். ஆற்றங்கரையோரமான ஊர்களிலெல்லாம் விசாரித்தனர். மதுசூதனனைப் பிடிக்கப் போலீசுக்கும் தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் இருவரும் சென்ற படகு எது, படகோட்டி யார், எந்த வழியாக ஆற்றில் சென்றனர் – இவை யெல்லாம்பற்றிப் புலன் விசாரிக்கலாயினர்.

''இவ்வளவு செய்தும் பயனில்லை. நம்பிக்கை இழந்த பணிபூஷணன் ஒருநாள் மாலைப்பொழுது இருட்டும் சமயம், இத்தனை நாள் தான் திரும்பிப் பாராத அப்பள்ளியறைக்குள் சென்றான். அன்று ஜன்மாஷ்டமி. காலையில் தொடங்கிய மழை சற்றும் நிற்காமல் கொட்டிக்கொண் டிருந்தது. விழா நிமித்தம் கிராமத்து மேட்டு வெளியில் ஒரு மேளாவுக்கு ஏற்பாடாகியிருந்தது. அங்கே பெரிய கீற்றுக் கொட்டகையினுள் கூத்து ஆரம்பமாகியது. கனத்த மழையோசையில் அந்தக் கூத்துக்களத்திலிருந்து பாட்டின் ஸ்வரம் மெல்லியதாகவே காதுக்குள் கேட்டது. ஜன்னலருகில், கீலைவிட்டு நழுவிய அதன் கதவு தொங்கிக்கொண் டிருந்தது. அதன் ஓரமாகப் பணிபூஷணன் இருளில் தனியாக அமர்ந்திருந்தான். ஊதைக் காற்று; மழைச்சாரல் அடிக்கிறது, சரேலென்று. நடுநடுவே தெளிவாகக் காற்றுவாக்கில் கூத்தாடிகளின் சாரீரமும், மத்தளவொலியும் வந்தன. இதெல்லாம் அவன் நினைவிலேயே பதியவில்லை. அறையின் சுவரில் ஆர்ட்-ஸ்டூடியோவில் வரையப்பட்ட லக்ஷ்மி, ஸரஸ்வதி தேவதைகளின் இரட்டைப் படம் மாட்டப்பட்டிருந்தது. கயிற்றுக்கொடியில் ஒரு துவாலையும், சவுக்கமும்; டோரியாக் கறைபோட்ட ஒரு சேலையும், எடுத்து அணிவதற்கான வகையில் மடித்துப் போடப்பட்டிருந்தது. அறையின் மற்றொரு மூலையில் டீ-பாய்மீது பித்தளைக் கிண்ணத்தில் மணிமாலிகா தன் கையாலேயே செய்த வெற்றிலைச் சுருள் வாடிக் கிடந்தது. கண்ணாடிக் கதவு வைத்த அலமாரியில், அவள் சிறு பிராயத்திலிருந்து சேகரித்த சீனா பொம்மைகளும், செண்டுக்குப்பிகளும், வண்ணப்பளிங்காலான கூஜாவும், தந்தச் சீட்டுக்கட்டும், பெரிய அளவு கடற்சோழிகளும் சோப்பிராத வெறும் பெட்டிகளும் ஒழுங்காக இடம் பெற்றிருந்தன. ஒரு சிறிய வட்டச்சிமினி போட்ட கிரோசின் இராவிளக்கு—அவள் ஒவ்வொருநாளும் அதை ஏற்றி ஒரு ஸ்டாண்டில் வைப்பாள்; அந்த விளக்கு அணைந்து புகையேறி ஒரு புறம் கிடந்தது. அதுவே மணிமாலிகா அறையைவிட்டுக் கடைசிமுறையாகச் சென்றதைப் பார்த்த மௌன சாட்சியாகும். எல்லாவற்றையும் வெற்றுப் பாழாக்கிச் சென்றுவிட்டாள்! அவள் விட்டுச்சென்ற இத்தனை

அடையாளங்களும் இந்தச் சூனியத்தைத் மேலும் தெளிவாக்கி, அவளுடைய ஸ்பரிசத்தைத் தம்முள் சார்ந்திருந்தன. 'மணி மாலிகா, திரும்பி வா; உன் விளக்கை ஏற்று; உன் வீட்டினுள் ஒளி பரவச் செய்; நிலைக்கண்ணாடிமுன் நின்று உன் அழகைப் பார்த்துக் கொள்; உன் புதுப் புடைவையை அணிந்து அழகுநடை பயின்றிடு, உன்னுடைய பொருள்கள் உனக்காக ஏங்குகின்றன. உன்னிடம், எதையும் நான் கேட்கவில்லை; நீ இங்கே இருந்தாலும் போதும்; உன் வாடா எழிலுடன் உலவி இங்குள்ள பொருள்களுக்கு ஜீவ களையை ஊட்டிடுவாய். இதையெல்லாம் நீ துறந்து சென்று விட்டாயே! இவ்வீடு வெறிச்சோடி மயானத்தின் மோனத்துள் ஆழ்ந்துவிட்டதே!'—இவ்வாறு ஓர் ஏக்கம் அவ்வறையெங்கும் தொனிப்பதுபோலவே இருந்தது.

''நள்ளிரவு நேரம்; மழையின் பாட்டமும், கூத்தின் ஓலமும் எப்போது நின்றனவோ தெரியாது. பணிபூஷணன் ஜன்னலருகில் வீற்றவன் வீற்றபடியே இருந்தான்; ஜன்னலுக்கு வெளியே உலகெலாம் பரவிய புரையிலாத பேயிருட்டு, யமனது உலகிற்குச் செல்லும் வானளாவிய தோரண வாயிலாகவே அவனுக்குத் தோன்றியது. இங்கிருந்து ஓலமிட்டுக் கூவியழைத்தால், மறைந்து போனவை மீண்டும் என்றென்றைக்கும் உயிர்பெற்று எழுந்து வந்தாலும் வரலாம். இந்த மைக்கருமையான நமன் திரையில், கட்டளைக் கல்லில் உரைத்ததுபோல பொன்னின் கீற்று ஏதாவது தென்படுமோ என்னவோ!

''அதேசமயம் டக்டக்கென்று ஓர் அரவம் கேட்டது. அத்துடன் அணிகலன்களின் மெல்லொலியும் வந்தது. அந்த விசித்திர ஓசை ஆற்றுப் பக்கத்திலிருந்து படித்துறை வழியாகத்தான் வருவதுபோல் தோன்றியது. ஆறு எது, துறை எது என்று புரியாதவண்ணம் இருட் போர்வை சூழ்ந்திருந்தது. அந்த இருளூடே பணிபூஷணனின் ஆவல் மலிந்த கண்கள் கூர்ந்து எதையோ நோக்க விரைந்தன. ஏக்கத்தாலும், தீவிர வேதனையினாலும் அவனுடைய மார்பு வெடித்துவிடும்போல் இருந்தது; கண்கள் நொந்துபோயின. எதுவுமே புலப்படவில்லை. இருளிடையே கூர்ந்து நோக்க நோக்க, அவனுக்கு இந்த ஜகமே பிரம்மாண்ட நிழலாக அளாவி நின்றது. இயற்கை அந்த நடு யாமத்தில், தன் பயங்கர மாளிகையில் உற்று நோக்கும் அதிதியைப் பார்த்துத் துரிதமாகவே அதைத் திரையிட்டு மறைத்துவிட்டது.

''அந்த அபூர்வ அரவம் படகுத் துறையின் மேல் படிகளைத் தாண்டி வீட்டை நோக்கி வந்தது. வீட்டெதிரே வந்ததும் நின்றது. வாயில் கதவை மூடிவிட்டுக் காவலாளி கூத்துப் பார்க்கப் போய்விட்டான். மூடிய கதவைக் 'கல் கல் ஜல் ஜல்' என்று யாரோ தட்டுவதுபோல் இருந்தது. இந்த அணிகலன்களின் கல்லெனும்

ஒலியுடன், சற்று வலுவான பொருளின் ஓசையும் கதவுமீது மோதியது. பணிபூஷணனுக்கு இருப்புக்கொள்ளவில்லை. விளக்கு கள் அணையும் தறுவாயில் உள்ள அறைகளைக் கடந்து இருண்ட படிக்கட்டு வழியே இறங்கிவந்து வாசல் கதவருகில் நின்றான். கதவு வெளியே தாழிடப்பட்டிருந்தது. தன் இரு கைகளாலும் அக் கதவை உலுக்கியபோதுதான் அவன் திடுக்குற்று விழித்துக் கொண்டான். மாடியில் தூங்கிக்கொண் டிருந்தோமே, எப்படி இங்கே வந்தோமென அவனுக்கே புரியவில்லை. உடலெங்கும் வியர்வை; கைகால்கள் எல்லாம் பனிக்கட்டிபோல் சில்லிட் டிருந்தன. அவனுடைய இதயம் அணையும் திரி சுடர்வதுபோல் 'தக் தக்' என்றது. கனவு கலைந்து கவனிக்கையில் அந்த ஓசையே கேட்கவில்லை. மழைதான் சோவென்று பெய்துகொண் டிருந்தது; அவ்வோசையுடன் கூத்தில் பாடும் சிறுவர்களின் சன்னமான குரலும் கலந்து வந்தது.

''இவை யாவும் கனவானாலும், இவை மிக நெருங்கிய உண் மைக்காட்சியைப்போலவே பணிபூஷணனுக்குத் தோன்றின. அவன் ஓர் அதிசய உலகின் அநுபவத்தைப் பெறும் வாய்ப்பை இழந்து ஏமாற்றமடைந்தான். மழைத்தாரையின் நாதத்துடன் தொலைவிலிருந்து வரும் பைரவி ராகத்தின் தாளமும் இழைந்து, 'இது விழிப்பிலேயே தோன்றும் கனா; மெய்யாகப் புலப்படும் பொய்மாயம்' என்று அறிவிப்பதுபோல் இருந்தது.

''மறுநாளும் கூத்து இருந்தது. காவலாளி அதைப் பார்க்க எஜமானனிடம் உத்தரவு பெற்றான். ஆனால், இவன் செல்லுமுன் வாயிற் கதவை திறந்தே இருக்கும்படி பணிபூஷணன் கட்டளை யிட்டிருந்தான். 'எதற்கு, சாமி? மேளாவுக்கு எங்கெங்கிருந்தோ மனிதர்கள் வருவாங்க. வாசற் கதவை மூடியிருப்பதுதான் நல்லதுங்க' என்றான் காவல்காரன். பணிபூஷணன் இதற்கு இணங்கவில்லை. 'சரி; நான் இரவெல்லாம் இங்கேயே ஆஜராகிப் பாரா தருகிறேன்' என்றான் காவல்காரன். 'வேண்டாம், நீ கூத்துக் கேட்கப் போ' என்றான் பணிபூஷணன். காவல்காரனுக்கு இப்படி அவன் பேசியது வியப்பாக இருந்தது. அடுத்த நாள் அந்திப்பொழுது, விளக்கை அவித்துவிட்டு, பணிபூஷணன் படுக்கையறையில் அந்த ஜன்னல் அருகில் வந்து அமர்ந்தான். வானில் மழைக்கான மேகங்கள் குழுமியிருந்தன. நாற்புறமும் என்னவோ ஒன்று நிகழப்போவதை எதிர்நோக்கிய நிச்சப்தம் நிலவியது. தவளைகளின் அரற்றலும், கூத்தரங்கிலிருந்து வரும் பாட்டின் அபஸ்வரமும் சேர்ந்தாலும், அப் பெருமோனத்தை அவற்றால் கலைக்க முடியவில்லை. புலனுக்கு அப்பாற்பட்ட ஓர் அற்புதச்சுவையே அவ்வொலியில் மண்டிக்கிடந்தது.

''இரவு வெகு நாழிகையிருக்கும். தவளை இரைச்சல், சிள்

வண்டுகளின் அரவம், கூத்தாடிகளின் பாட்டுக்குரல் யாவும் அடங்கிவிட்டன. அந்த மைச்சிமிழ்க் கங்குலேயும் மறைத்து ஓர் இருள்திரை மெல்லப் படர்ந்தது. என்னவோ நிகழப்போவதற்குச் சமயம் குறுகிவிட்டது. முன்னுள் கேட்டதுபோலவே அதே 'டக் டக் ஜம் ஜம்' என்ற ஒலி வந்தது. ஆனுல், பணிபூஷணன் அந்தப் பக்கம் கண்ணேத் திருப்பவே இல்லே. தான் பரபரப்புற்று சட்டென எழுந்தால், தான் காண விழையும் ஓர் அபூர்வக் காட்சி மறைந்துபோமோ என்ற திகில். இவ்வளவு காத்திருந்தும் அந்தத் தருணத்தை நழுவவிட்டால் அவன் ஆசை அனேத்தும் வீணுகி விடுமே!-இந்தப் பரபரப்பு, தன் புலனுர்ணவை அழுத்திவிடுமோ என ஐயுற்ருன். தன்னே அவன் அடக்கிக்கொள்ள எவ்வளவோ திடத்தைத் திரட்டி ஒரு மரப் பொம்மையைப்போல் அசையாமல் இருந்தான்.

''அந்த நகைகள் நெளிந்து சிங் சலுங்கென்ற ஓசை மெல்ல மெல்ல நெருங்கி வந்தது. வாசல் கதவருகில் அது நிற்பதுபோல் இருந்தது. உட்புறமாக உள்ள வளேவு மரப்படிகள் வழியே அது மேலே வரும் அரவம் கேட்டது. பணிபூஷணனுல் இருக்கவே முடியவில்லே. அவனுடைய இதயத்துள் ஒரு புயலின் கொந்தளிப்பு தோன்றியது. அவனுக்கு மூச்சே போய்விடுவதுபோல் திணறல் ஏற்பட்டது. வளேவு மரப்படிகளின் மேல்வரிசையைக் கடந்து வராந்தா வழியாக, தன் அறைப்பக்கமாக அந்த விசித்திர சப்தம் நெருங்குவதை உணர்ந்தான். வந்துவிட்டது; அதோ கதவின்மீது அணிகள் பூண்ட அதன் கரங்கள் படுகின்றன! அந்த ஒலி நின்றுவிடுகிறது. அது வாசற்படியைத் தாண்டவேண்டியது தான் பாக்கி.

''பணிபூஷணனுக்கு இருப்புக் கொள்ளவில்லே. இதுவரை அவன் கட்டுப்படுத்திய உணர்வின் வேகம் பொங்கி எழுந்தது. அவன் மின்னல் விரைவுடன் தன்னிடத்திலிருந்து எழுந்து அழுத வண்ணம், 'மணீ! மணீ' என்று அழைத்தான். சட்டென அவன் திடுக்குற்றுச் சுற்றுமுற்றும் மருள மருள நோக்கினுன்; தன்னுடைய அழுகைக்குரல் அறையெங்கிலும் ஒலிப்பதையே உணர்ந்தான். வெளியே அதே தவளே இரைச்சலும் கூத்துக்களத்தில் சிறுவர்கள் தொண்டை கமறப் பாடுவதும் கேட்டன.

''பணிபூஷணன் நெற்றியில் கையால் அறைந்துகொண்டான். மறுநாள் மேளா கலேந்தது. கடைகளும், வேடிக்கை பார்க்கவந்த ஜனங்களும் மறைந்து போயினர். பணிபூஷணன், மாலே நேரத்திற்குப் பிறகு அம்மாளிகையில் தன்னேத் தவிர, வேறு எவருமே இருக்கக் கூடாதென உத்தரவு பிறப்பித்து விட்டான்.

''தனிமையான அந்த வீட்டில் மாலே நேரம் மங்கும் சமயம்

பணிபூஷணன் அதே ஜன்னல் அருகில் வந்து அமர்ந்தான். அன்று ஆகாயத்தில் மேகம் எதுவுமே இல்லை. மண்ணகம் குளிர்ந்து தூய காற்று வீசியது. வானிடைத் தாரகைகள் மண்ணிய முத்துக்களென மிடுக்கு ஒளியுடன் துடித்தன. இருட்பக்கத்துத் தசமியின் பாதிமதி தோன்ற இன்னும் நாழிகை இருந்தது. மேளா கூட்டம் போய்விட்டதால் ஆற்றுத்துறையில் ஒரு படகுகூடத் தென்படவில்லை. விழா பார்த்து அயர்ந்துபோன கிராமம் ஆழ்ந்து துயின்றது.

''பணிபூஷணன் தன் ஆசனத்தில் சாய்ந்தவண்ணம் முகம் தூக்கித் தாரகை மண்டலங்களை நோக்கிக்கொண் டிருந்தான். அப்போது அவனுக்குப் பழைய நினைவுகள் படிப்படியாக எழுந்தன: ...அவனுக்கு அப்போது வயது பத்தொன்பது இருக்கும். கல்கத்தாவில் கல்லூரியில் படித்துக்கொண் டிருக்கிறான்... மாலை நேரங்களில் கோல்தீகியின் புற்றரையில் சாய்ந்து தலைக்குப் பின்னால் கைகளை மடக்கியபடி நித்தியகாலமான இவ்விண்சுடர்களைக் கண்ணிமைக்காமல் கவனிப்பான்... ஆற்றங்கரையோரமாகக் கண்ணுக்கினிய மாமனார் வீட்டில் ஓர் அறையில்தனிமையில் மங்கையிலிருந்து மடந்தைப் பருவத்திற்கு வரும் தன் ஆருயிர் மணிமாலிகாவை அணைக்க விரகத்தால் துடித்ததுபோலவே, அந்தத் தாராகணங்களும் கூடலுவகையால் புளகமுறும் அவ்வினிய பொழுதில் வசந்த ராகத்தில் யதிதாளத்திற்கேற்ப அவனுடைய இதயம் கீதமிசைக்கும். இன்றோ அதே தாரகைத்திரள் வெவ்வழலைக்கொண்டு வானப்பலகையில் 'மோஹ முத்கர'த்தின் சுலோகத்தை எழுதுகிறது: 'ஸம்ஸாரோயம் அதீவ விசித்ரம்'[1].

''பார்த்துக்கொண் டிருக்கையில் தாரகைகள் மங்கி மறைந்தன. ஆகாயத்திலிருந்து ஓர் அந்தகாரம் இறங்கியதும், பூமியிலிருந்து ஓர் இருள் எழுந்து மேலும் கீழுமுள்ள கண்ணிமைகள் மூடுவதுபோல் எங்கும் கவியலாயிற்று. அன்று பணியின் உள்ளம் அமைதியில் குளித்திருந்தது. அவன் விரும்பியது, அன்று கட்டாயம் கைகூடுமென அவன் நிச்சயமாக உணர்ந்தான். உண்மையான சாதகனுக்கு மரண தேவதை தன் ரகசியத்தை திறந்து காட்டுமென அவன் திடமாக நம்பினான்.

''முன்னாள் இரவில் நிகழ்ந்தது போன்றே அதே அரவம் நதிப் பக்கத்திலிருந்து, துறைப்படிகளைக் கடந்து மேலே வந்தது. பணிபூஷணன் இருவிழிகளையும் அழுத்தி மூடியவாறு ஒரே நினைவாகத் தியானத்தில் ஆழ்ந்தான். அரவம் வருகிற ஓசை வாசலில் கேட்கிறது. இப்போது யாருமே இராத உட்புறத்து மாடிப்படி வழியாக மேலே ஏறிவருகிறது... நீண்ட வராந்தாவைக் கடக்கிறது. படுக்கையறைக் கதவருகில் நிற்கிறது.

---

[1]ஆதிசங்கரர் எழுதிய நூல்.

''பணிபூஷணனின் இதயம் வேதனையால் துள்ளுகிறது. அவன் உடம்பெங்கும் மயிர்க்கூச்சு தென்படுகிறது. இருந்தாலும் விழிகளைத் திறக்கவே இல்லை. துவாலை, சேலை தொங்கும் கயிற்றுக் கொடியண்டை, கிரோசின் இராவிளக்கு உள்ள இடத்தில், உலர்ந்த வெற்றிலைச்சுருள் இருக்கும் கிண்ணத்தருகில், பல விசித்திரப் பொருள் உள்ள கண்ணாடி அலமாரி ஓரமாக, ஒவ்வோர் இடமாக நின்று நின்று இறுதியில் பணிபூஷணனின் பக்கமாக நகர்ந்து வந்தது.

''அப்போது பணி சட்டென விழித்துப் பார்த்தான். அறை முழுவதும், உதயமாகிக்கொண் டிருக்கும் அரைமதியின் நிலா வொளி பரவிக்கொண் டிருந்தது. அந்த மங்கிய ஒளியில் தனக்கு முன்னால் ஓர் எலும்புக்கூடு நிற்பதை உணர்ந்தான். அந்த எலும்புக் கூட்டின் கைகளின் எட்டுவிரல்களிலும் மோதிரங்கள், மணிக்கட்டில் மணித்தொடி, முழங்கையில் வயிரவங்கி, தோள் புறம் பாஜுபந்து, கழுத்தில் ரத்தினகண்டி, நெற்றியில் வயிரச் சுட்டி இவை பளபளத்தன! எலும்புக் கோவைக்குள் அவை தொள தொளவென்று பூட்டப்பட்டிருப்பினும், கீழே கழன்று விழுவன வாக இல்லை. எல்லாவற்றையும்விட வெண்தலையில் இருந்த அந்த விழிகள் உயிர் ஒளியைக் காட்டின. அதே கருமணிகள்; அதே நீண்ட இமைகள்; அதே சுடரும் பார்வை; எதற்கும் சலிக்காத அதே அமைதி நோக்கு. பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் முத்து வேய்ந்த மணப்பந்தலிலே மேளம் குறிஞ்சிப்பண் இசைப்ப, பணி பூஷணன் கழுத்தில் மாலையிடும்போது கருமணி பிறழும் அத் தடங் கண்களைக் கண்டான். அதே நயனக் கொள்ளையை இன்று ஆவணி மாதத்து நடுநிசியில் தசமியின் அரைமதியொளியில் கண்டான். கண்டதுமே அவன் உடலில் இரத்தம் உறைந்தே போயிற்று. முகத்தைக் கைக்குள் பொத்திக்கொள்ள முயன்றான்; ஆனால், முடியவில்லை. அவனுடைய கண்களும் இறந்தவனின் கண்களைப் போலவே ஆணி அடித்தாற்போல இமை கொட்டாமல் நின்றன.

''அந்த எலும்புடல் நிலைத்துப்போய்ப் பணிபூஷணனையே கூர்ந்து நோக்கி, தனது வலது கையைத் தூக்கி விரலால் சமிக்ஞை செய்தது. அதன் நான்கு விரல்களிலும் இருந்த மோதி ரங்கள் பளபளத்தன.

''பணிபூஷணன் மதிமயங்கிப்போய் எழுந்தான். எலும் புருவம் கதவுப் பக்கமாகச் சென்றது. அது செல்லும்போது எலும் புப் பூட்டுக்களின் கடகட்டென்ற ஒலியுடன், அது பூண்டிருந்த அணிகளும் கலகலவென ஓசையை எழுப்பின. பணிபூஷணன், கயிறு இயக்கும் மரப்பொம்மைபோல் அப்பேயின் பின்னாலேயே சென்றான். வராந்தாவை அது கடந்து, இருளிடையே அந்தச்

சுழல் மரப்படிகள் வழியாகக் கட்கட்டெனக் கீழே இறங்கி வந்தது. எவருமே இராத அந்த வெளிவாசலையும் விட்டு, பங்களா தோட்டப் பாதையாகச் சென்று வெளியேறியது. கற்கள்மீது நடக்கும்போது கால் எலும்புக் கோவைகள் உராய்ந்து கடமடவென ஒலி செய்தன. அங்கே நிலாவெளிச்சம் கோலம் புனையும் இடத்தில் சற்றுத் தயங்கி, மழை மணமும், மணல் வாசனையும் கலந்த இருண்ட நிழற்பாதையில் ஒரு மின்மினிக் கூட்டத்தினிடையே புகுந்து ஆற்றுத் துறைக்கருகில் வந்து நின்றது.

''துறைப் படிகளை ஒவ்வொன்ருகக் கடந்து கடைசிப் படியில், அணிகலன் பூண்ட மணிமாலிகாவின் பேய் வடிவம் சட்டென அசையாமல் விறைப்பாக நின்று ஒவ்வோர் அடியாக எலும்புக் காலை வைத்து இறங்கத் தொடங்கியது. நிரம்பித் தளும்பி யோடும் ஆற்றுப் புனல்மீது நிலவொளியின் சாய்கிரணங்கள் பளபளத்தன. எலும்புருவம் ஆற்றுள் இறங்கியது. அதைத் தொடர்ந்து பணிபூஷணனும் நீரில் காலை வைத்தான். குளிர்ந்த நீர் உடலில் படவே அவனுடைய துயில் கலைந்தது. அவனுக்கு முன்ஞல் வழிகாட்டிச் சென்ற அந்த நிழல் உருவத்தாளைக் காணவில்லை. ஆற்றின் அக்கரையில் மரங்கள் அசையாமல் நிற்கும் காட்சி, அவற்றின்மீது மெல்லிய ஒளியைப் பூசும் அரைமதி, இவ்விந்தை நிகழ்ச்சிக்குச் சாட்சியாக நின்றது. பணி பூஷணனுக்கு உடலெங்கும் நடுக்குற்றது. கால் வழுக்கி ஆற்றுப் புனலில் விழுந்துவிட்டான். அவனுக்கு நீந்தத் தெரிந்தாலும், மனத்துள் மூண்ட ஓர் அதிர்ச்சியினுல் அவனுடைய அங்கங்கள் அவசமாகி இயங்க மறுத்தன. ஓர் அற்புதக் கனவிலிருந்து விழித் தெழுந்த அவன் சிறிது நேரத்துக்கெல்லாம் நித்தியமான தூக்கத்துள் ஆழ்ந்து போனுன்.''

கதையைக் கூறி முடித்ததும் பள்ளியாசிரியர் சற்று நின்ருர். தாம் நின்றதால் உலகத்துப் பொருள்கள் யாவுமே அடங்கிவிட்டதாக நினைத்துக்கொண்டாரோ என்னவோ! வெகு நேரம்வரை நானும் வாய் பேசாது இருந்தேன். இருளிடையே அவரால் என் முகத்தில் படர்ந்த உணர்ச்சிகளைத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

அவர் என்னை விளித்து, ''நீங்கள் இந்தக் கதையை உண்மை யென்று நம்புகிறீர்களா?'' என்ருர்.

''இதை நீங்கள் நம்புகிறீர்களா?'' என்றேன் நான். அதற்கு அவர், ''நம்பவில்லை. அதற்குச் சில காரணங்களைக் கூறுகின்றேன். முதலாவது, இயற்கை எனும் அம்மையாருக்கு இதுபோல் விசித்திரக் கதைகளைப் புனையத் தெரியாது. அவளுக்கு இதைவிட

முக்கியமான வேலைகள் உள்ளன'' என்றார். அப்போது நான் அவரைத் தொடர்ந்து, ''இரண்டாவது என்னுடைய பெயர் தானே ஸ்ரீ பணிபூஷண ஸாஹா'' என்றேன்.

பள்ளியாசிரியர் இதற்குச் சிறிதும் சிணுங்கவில்லை. ''சரி, நான் ஊகித்தது சரியாகப் போயிற்று. உங்களுடைய மனைவியின் பெயர் என்னவோ?'' என்றார்.

''நிருத்யகாளி'' என்றேன் நான்.

பிள்ளை வேள்வி

கிராமத்திலேயே வைத்தியநாதன் அறிவாளி. அதனாலேயே வருங்காலத்தை எதிர்நோக்கி, நிகழ்காலத்தின் காரியங்களைச் செய்துவந்தான். அவனுக்கு மணமாகியபோது, கண்ணெதிரிலிருந்த புது மணமகளைவிட வரப்போகும் இளம்பிள்ளையின் முகமே புலப்பட்டது. 'சுப திருஷ்டி'[1]யின்போது இவ்வளவு தூரதிருஷ்டி எவருமே பெற்றதில்லை. அவன் கைதேர்ந்தவனானதால் காதலைவிடக் கருவைப்பற்றி அதிகமாக அறிந்திருந்தான். மக்கட் பேற்றுக்குத்தானே மனையாள் (புத்ரார்த்தே க்ரியதே பார்யா) என்ற உட்கருத்துடனேயே விநோதினியை அவன் மணஞ் செய்துகொண்டான்.

ஆனால், இந்தப் பாழும் உலகில் அறிவுள்ளவரே ஏமாற்றம் அடைகின்றனர். நல்ல யுவதியாக இருந்தும் விநோதினி அவளுக்கான கடமையை (மகனைப் பெற்றெடுப்பது) ஆற்றாது போகவே 'புத்' என்ற நரகத்தின் வாயில் திறந்திருப்பதைக் கண்டு (ஒரு புத்திரனைப் பெறாத நிர்ப்பாக்கியன் நரகிற்குச் செல்வான்) வைத்தி மிகவும் கவலைக்காளானான். தன் மறைவுக்குப் பிறகு, அத்தனை சொத்தையும் எவனோ ஒருவன்தானே அநுபவிப்பான் என்ற விசாரத்தால், அந்த நிலை ஏற்படுமுன்பே அதன்மீது வெறுப்புக் கொண்டான். ஏற்கனவே கூறியுள்ளேன்: அவன் நிகழ்காலத்தைவிட வருங்காலத்தை உண்மையென நம்புபவன்.

ஆனால், யுவதியான விநோதினியிடம் இதுபோன்ற ஓர் அறிவு முதிர்ச்சியைக் காண முடியாதே. பேதையின் கிடைத்தற்கரிய வருங்காலமும், இளம் வனப்பும், அன்பையோ, ஆதரவையோ பெறாமல் வீணே கழிவது வருந்தக்கூடிய விஷயமே. இம்மையில் அவள் நெஞ்சினுள் எரிந்த வேட்கையால் மறுமைக்கு வழி திறக்கும் கருவின் பசியை அவள் மறந்தே போனாள். மநு வகுத்துள்ள தூய விதியும், வைத்தியநாதனின் அத்தியாத்துமிக விளக்கமும், அன்பிற்காக அலைபாயும் அவள் உள்ளத்திற்கு ஆறுதலையே அளிக்கவில்லை.

---

[1] திருமணத்தின்போது மணமக்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ளும் சுபச் சடங்கு.

எவர் எதைக் கூறினும் என்ன, இந்த நிறையின்மைக் காலத்தில் அன்பைத் தருவதும், அன்பைப் பெறுவதுமே மகளிர் காணும் இன்பமாகும். எக்கடமையையும்விட இம்மெல் லுணர்வே அவர்களுக்கு மேலாகத் தோன்றும்.

ஆனால், விநோதினியின் தலையெழுத்து, காதலெனும் தண்மாரி பொழியாது, தென்புலத்தில் வாழும் பிதுருக்கள் தம் வருங்காலம் பற்றிய கவலையால் இடி மின்னலுடன் ஆலங்கட்டி சிதறிட, அவள்மீது தம் சினத்தைக் காட்டினர். எல்லோரும் அவளை மலடி யெனத் தூற்ற ஆரம்பித்துவிட்டனர். ஒரு பூஞ்செடியை வெளிச்சமும் காற்றும் புகா அறையில் வைத்தால் எவ்வாறு துவளுமோ, அவ்வாறே விநோதினியின் இளமையும் துவண்டது.

எந்த நேரமும் தன்னைப்பற்றி இப்படி ஏச்சும் பேச்சும் மித மிஞ்சிப் போகவே, வீட்டில் இருப்பதைவிடக் குஸுமியின் அகத் துக்குச் சென்று அவளுடன் சிறிது நேரமாவது சீட்டாடினால் மன நிம்மதி ஏற்படுமென நினைத்தாள். அங்கே 'புத்' என்ற நரகத் தின் பயங்கர நிழல் எதுவும் இராததால் மனம் விட்டு வம்பளக்கச் சௌகரியம் இருந்தது.

குஸுமி சீட்டாடத் தனக்கு யாரும் துணையிராத சமயங்களில் தன் இளைய மைத்துனன் நகேந்திரனை அழைத்துக்கொள்வாள். நகேந்திரனும், விநோதினியின் ஆட்சேபங்களைச் சிரித்தே உதறித் தள்ளுவான். இந்த உலகில் ஒன்றிலிருந்து மற்றொன்று உருவாகி வேடிக்கையாகத் தொடங்கியது சிக்கலாக மாறிவிடும். இது போன்ற பெரிய விஷயங்களில் இளமைப் பருவத்தவருக்கு நம்பிக்கை ஏற்படுவதில்லை. இவ்வாறு விநோதினியுடன் நகேந் திரனுக்கு அடிக்கடி தொடர்பு ஏற்பட்டு வந்தது.

நகேந்திரன் சீட்டாட அமர்ந்தபோது அச்சீட்டுக்களைவிட, ஓர் உயிர் ததும்பும் பொருள்மீதே அவனுடைய நோக்கு, நசை, யாவும் குவியும். இதனால் ஆட்டத்தில் அவன் தோல்வியுற நேர்ந்தது. இத்தோல்விக்கு உண்மைக் காரணம் என்னவென் பதைக் குஸுமி அறிவாள். முன்பே கூறியுள்ளேன்: வினைப் பயனின் ஆழத்தைப் புரிந்துகொள்வது இள வயதினரின் வேலையன்று. குஸுமியும், 'இந்த விளையாட்டு எவ்வளவு தூரம் செல்கிறதோ பார்ப்போம்; இதில் நூற்றுக்கு நூறு நிறைவைக் காணவேண்டும்' என்றே அவாவினாள். வளரும் காதல் பயிருக்கு நீர் பரய்ச்சுவதில் இளமைக்காரிகளுக்கே ஓர் ஆர்வம் உண்டு.

விநோதினிக்கும் இந்த விளையாட்டுப் பிடித்து இருந்தது. ஓர் ஆண்மகனைச் சாணைக்கல்லாக உபயோகித்து, அதில் தன் இதயத்தின் கூர்மையைத் தீட்டி வெற்றி அடைய விரும்புவது அப்படி அக்கிரமமான செயலன்றாலும், அது இயற்கைக்கு மாறானதேயன்று.

இவ்வாறு, சீட்டாட்டத்தில் வெற்றி தோல்வியுடன் ஜாக்கி, ஏஸ், ஆடுதன், கிளாவர் இவற்றைக் கலேத்துக் கலேத்து ஆடுவதன் மூலம் அவ்விருவர் மனமும் ஒன்றிப்போயின. அந்தர்யாமியைத் தவிர ஆட்டம் தெரிந்த வேறு ஆளும் இதைக் கண்டு, மகிழ்ச்சியே அடைந்திருக்க வேண்டும்.

ஒருநாள் பகல்வேளே; விநோதினி, குஸுமி, நகேன் மூவரும் சீட்டாடிக்கொண் டிருந்தனர். சிறிது நேரத்திற்கெல்லாம், நோயுற்ற குழந்தையின் அழுகையொலி கேட்டுக் குஸுமி எழுந்து போனுள். நகேன் விநோதினியுடன் சல்லாபத்தில் ஈடுபட்டான். தான் என்ன பேசுகிறேம் என்பதையே அவன் மறந்துபோனுன். அவனுடைய உடலெங்கும் ஓர் இரத்தத் துள்ளல் அலே அலேயாகப் பரவிச் சென்றது. திடுமெனக் கட்டுக் கடங்காத அவனது காளேப் பருவம் வரம்பை மீறிவிட்டது. விநோதினியைச் சடக்கெனக் கையைப் பிடித்து இழுத்து அவளே முத்தமிட்டான். நகேந்திரன் இப்படித் தன்னே அவமதிப்பதைப் பார்த்துக் கோபம், வெறுப்பு, வெட்கம் யாவும் ஒன்றுசேர, அவனது பிணேப்பிலிருந்து தன் கைகளே விடுவித்துக்கொள்ளப் பரபரப்புற்றுள் அவள். அதே சமயம் மூன்றுவது ஆள் அறை யினுள் நுழைவதைக் கண்ணுற்றுள். நகேனும், முகம் தொங்கி அறையை விட்டு நழுவ வழி தேடினுன்.

சமையற்காரி கடுங்குரலில், ''உன்னே அத்தையம்மா கூப்பிடுகிறுர்'' என்றுள். விநோதினி கண்களில் நீர் ததும்ப, நகேந்திரனே நோக்கி ஒரு மின்னல் பார்வையை வீசிவிட்டுச் சமையற்காரியின் பின்னுலேயே சென்றுள்.

சமையற்காரி, தான் நேரில் பார்த்ததைக் குறைத்தும், பாராததை நீட்டித்தும் கூறி, வைத்தியநாதனின் அந்தப்புரத்தில் ஒரு பெரும் புயலேக் கிளப்பிவிட்டாள். விநோதினியின் கதி என்னவாயிற்று என்பதை வருணிக்கவே வேண்டியதில்லே. இதில் தான் எம்மட்டு நிரபராதி என்பதை அவள் மெய்ப்பிக் கவே முயலவில்லே. தலேதாழ்ந்து எல்லாவற்றையும் சகித்துக் கொண்டாள்.

வைத்தியநாதன், பிற்காலத்தில் தனக்குப் பிண்டம் போடும் புத்திரன் தோன்றுவது இனிச் சந்தேகத்திற்கிடமே எனக் கருதி விநோதினியை விளித்து, ''நேர்மை கெட்டவளே, என் வீட்டை விட்டு வெளியே நட'' என்று ஆணேயிட்டுவிட்டான்.

விநோதினி படுக்கையறையைத் தாழிட்டுவிட்டு, அணேமீது படுத்தாள். கண்ணீர் பெருக்கிய அவளுடைய விழி பட்டப் பகலில் காணும் வெம்மைப் பாலேயாகவே தோன்றியது. மாலே மழுங்கி இருள் பரவும் நேரம்; வெளித் தோட்டத்தில் காகங் கள் கரையுமொலியும் அடங்கிவிட்டது. நட்சத்திர மணி பூண்ட

வானத்தையே வெறித்து நோக்கினாள். தன் தாய் தந்தையரின் நினைவு எழுந்தது அவளுக்கு. கண்மாரி அவளுடைய கன்னங்களில் பெருகியோடியது.

அப்போது விநோதினிக்கே தெரியாது, 'மகளிர் மக்களைப் பெறும் பாக்கியவதிகள்' என்று. மகளிருக்கு ஏற்படும் ஒரு நற்காலம் தனக்கு வந்தது, அவளுடைய கணவனுக்குப் பின்னர் எள்ளும் தண்ணீரும் தரப்போகும் மகவு அவள் வயிற்றில் கருவாகி வளருவான் என்பதை அவள் உணராதிருந்தாள்.

* * * *

இந் நிகழ்ச்சிக்குப் பிறகு பத்தாண்டுகள் விரைந்தோடி விட்டன. இதற்கிடையே வைத்தியநாதனின் சொத்தும் பன் மடங்காகப் பெருகிவிட்டது. இப்போது அவன் நாட்டுப்புறத்தை விட்டுக் கல்கத்தா நகரத்திலே மச்சும் மாளிகையுமாக வாழ்கிறான். ஆனால், தனக்குச் செல்வம் இத்துணை உயர்ந்தும், பிற்காலத்திற்கான செல்வன் இராத குறையே அவனை வாட்டத் தொடங்கியது.

அடுத்தடுத்து இரு தாரங்களை மணந்துகொண்டான். அப்போதும் அவனுக்குப் புத்திரன் பிறக்கவில்லை. பெண்களே பிறந்தனர். ஜோதிடர்கள், சாமியார், மந்திரத்தில் வல்லுநர் இவர்களின் கூட்டம் வீட்டில் அதிகமாகிக்கொண்டு வந்தது. யந்திரம், தாயத்து, தெய்வப் பிரசாதம், பேடென்ட் மருந்துகள் அவைபாட்டிற்குக் குவியலாயின. ஒரு மகனைப் பெற்றிடக் காளீ காட்டில், காளிமா தேவிக்குப் பலிகொடுத்த ஆட்டுக்குட்டிகளின் என்புக் குவைகள், தைமூர்லங் அக் காலத்தில் எழுப்பிய எலும்பு மலையையும் எஞ்சி நின்றன. ஆனால், சிறு என்புடன் மாமிசமும் சேர்ந்த ஆண் சிசு வைத்தியநாதனின் வீட்டில் ஓடியாட வரவே இல்லை. தனக்குப் பிறகு வெளியார் மகன் எவனோதான் தன் அன்னத்தைப் புசிப்பான் என்ற வேதனையால் இப்போதே வைத்திக்குச் சோற்றுமீது வெறுப்பு மூண்டுவிட்டது.

வைத்தியநாதன் இன்னொரு முறையாக ஒரு பெண்ணை மணந்துகொண்டான். காரணம், இந்த வாழ்வில் ஆசையோ நம்பிக்கையோ யாரை விட்டது? இப்படி ஒருவனுக்குத் தத்தம் செய்வதற்குப் பெண்களைப் பெற்றெடுத்தவர்கள் பலர் இருந்தனர்.

ஜோதிடர்களும், குறி சொல்லுவோரும், இப்போது வந்திருக்கும் வைத்தியின் மனைவிக்குப் புத்திர ஸ்தானத்தில் சுப கிரகத்தின் பார்வை இருப்பதால் சீக்கிரமே சுபுத்திரன் ஜனனமாவானெனக் கூறினர். இவர்கள் இப்படிச் சொல்லி வருடங்கள் ஆறுக்குமேல் ஆகியும், அந்தச் சுபக்கிரகம் அனுப்பவேண்டிய குல சிந்துவை, வெளியில் விட்டால்தானே!

வைத்தி நம்பிக்கையிழந்தே போனுன். கடைசியாகச் சாஸ்திரம் அறிந்தவர்களின் யோசனையின்படி, அபரிமிதமான பணச் செலவுசெய்து ஒரு புத்திரகாமேஷ்டியை (பிள்ளை வேள்வி) நடத்திப் பார்த்துவிடுவதென உறுதி பூண்டான். இதற்காக முன் கூட்டியே பிராம்மணசேவை, பூரி, போஜனமெல்லாம் நடத்தி வரலானுன்.

இந்தப் பக்கம், மழையின்மையால் நாடெங்கிலும் பஞ்சம் பரவி, வங்கம், பிஹார், ஒரிஸ்ஸா இப் பிராந்தியங்களில் மக்கள் என்பெடுத்து நடைபிணங்களாக உலவினர். வைத்தியோ, பெருஞ்சோற்றுமலைமீது நிலைகொண்டு, 'என் அன்னத்தை யார் புசிப்பார்?' என்று நினைத்துக்கொண் டிருக்கும்போது, பட்டினியால் வாடும்' நாடு, தன் வறுமைநிலையை நோக்கி, 'உண்ண எங்கிருக்கிறது சோறு?' எனக் கண்ணீர்விட்டது.

அதே சமயம் நான்கு மாதமாக வைத்தியின் நான்காவது அகமுடையாள் ஒரு நூறு பிராம்மணர்களின் பாதங்களைக் கழுவிய புனித நீரைப் (பாதோதகம்) பருகினுள். இன்னும் நூறு பேருடைய இலையில் திவ்வியான்னமும், நெய் விழுதும், பக்ஷண பாயசவகைகளும், கட்டித்தயிரும் பரிமாறியதால் முனிசிபாலிட்டி குப்பை வண்டிகளில் எச்சில் இலைகள் நிரம்பின. இந்த எச்சில் இலையிலிருந்து வீசும் சோற்றுமணத்தை மோந்து ஒரு பட்டினிக் கும்பல் வைத்திவீட்டு வாசலில் சேர்ந்துவிட்டது. அவர்களை உள்ளே நுழைய விடாதபடி காவல்காரர்கள் வைக்கப் பட்டனர்.

ஒரு நாள் காலை, வைத்தியநாதன் சலவைக்கல் பதித்த மேடையில் தொந்தி பருத்த ஒரு சந்நியாசிக்குத் தட்டுநிறைய மோகன்போக்கும்[1], அதை ஊறவைத்து விழுங்க, ஒன்றரைசேர் காய்ச்சிய பாலும் வைத்துச் சேவை பண்ணிக்கொண் டிருந்தான். அவன் வேஷ்டிக் கச்சத்தை இறுகக் கட்டி, அங்கவஸ்திரத்தை இடுப்பில் சுற்றியவண்ணம் தரையில் அமர்ந்து கைகூப்பியபடி பயபக்தியுடன் அந்தப் புனிதமாகேசுவரர் அமுதுண்பதைக் கண்டு களித்தான். அச் சமயம் எப்படியோ வாயிற்காப்போனையும் மீறிக் கொண்டு வற்றி உலர்ந்த ஒரு சிறுவனுடன் என்பெடுத்த ஒரு பெண்மணி அங்குத் தோன்றி, ''பாபு, ரொம்பப் பசி... காதை அடைக்குது. ஏதாவது கொடுங்களேன்'' என்று தீனக்குரலில் கெஞ்சினுள்.

வைத்தி எரிச்சல்மூண்டு உரக்கக் கத்தினுன்: ''டேய்! குருதயால்... எங்கேடா தூங்குகிறே? இவர்களை ஏன் உள்ளே விட்டாய்?''

---

[1]நெய்யிலேயே செய்யும் ஒரு தித்திப்புப் பணியாரம்; வங்காளத்திற்கே சிறப்பானது.

தங்களை விரட்ட வரப்போகிறார்களே என அஞ்சி, அந்தப் பெண்மணி, ''ஐயா, ஒன்றும் செய்யாதீர்கள். இந்தக் குழந்தை மூன்று நாளாகப் பட்டினி. இவன் வயிற்றுக்காவது கொஞ்சம் சாதம் போடுங்கள், ஐயா...'' என்று பரிதாபமான குரலில் கேட்டாள்.

காவல்காரன் குருதயால் வந்து அந்தப் பையனையும், மாதையும் வெளியே நெட்டித் தள்ளினான். பசியால் துடிக்கும் அந்தப் பையன் வேறு யாருமில்லை; நம் வைத்தியின் ஒரே புத்திரன். நூற்றுக்கணக்கான பிராம்மணர்களும் மூன்று கொழுத்த சந்நியாசிகளும், வைத்தியநாதனுக்குப் புத்திரப்பிராப்தி ஏற்படுவதற்காக அவனுக்கு ஆசை காட்டி, அவனுடைய அன்னத்தைப் புசித்து வயிறு வளர்த்து வந்தனர்.

நிகழாத கதை

ஒரே ஒரு ராஜாவாம்.

இதற்குமேல் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமில்லை. எங்கத்து ராஜா அவன், பெயர் என்ன-இவைபோன்ற கேள்விகள் போட்டுக் கதையின் ஓட்டத்தை நான் தடுப்பதில்லை. ராஜாவின் பெயர், சிலாதித்தியனோ, சாலிவாகனனோ, ஏதோ ஒன்று. காசி, காஞ்சி, கன்னோஜ், கோசலம், அங்கம், வங்கம், கலிங்கம் இவற்றுள் ஏதோ ஒன்று, அவன் ஆண்ட நாடு. இதுபோன்ற வரலாற்று வாதங்களை எழுப்புவதை நான் துச்சமெனக் கருதுபவன். கதையில் வரும் விஷயம் எனக்கு உள்ளத்துள் சிலிர்ப்பை உண்டுபண்ணவேண்டும். மின்விசையில், சுவாரசியமான கட்டத்தில் எனது இதயம் காந்தம் போல் ஒட்டிக்கொள்ளவேண்டும்; அவ்வளவே.

ஒரே ஒரு ராஜா இருந்தானா...

இக் காலத்துக் கதை படிக்கும் சிறுவர்கள், கச்சையை இழுத்துக் கட்டிக்கொண்டு பேசவருவார்கள். தொடக்கத்திலேயே இந்தக் கதாசிரியன் வெறும் புளுகுக்கதை திரிக்கிறானென்பர். நிரம்பத் தெரிந்தவர்களைப்போல முகத்தை ஆக்கிக்கொண்டு வினவுவார்கள்; ''எழுத்தாளரே! நீங்கள் சொல்வதுபோல் அப்படியே ஒரு ராஜா இருந்தான் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். அவன் எந்த நாட்டுக்கு அரசனோ?''

எழுத்தாளர்களும் இவர்களுக்குக் குறைந்தவரல்லரே! அவர்களும் தொல்பொருள் அறிஞர்களைப்போல் முகத்தை நான்கு மடங்கு பெருமை வீங்க வைத்துக்கொண்டு, ''ஒரே ஒரு ராஜா இருந்தான்; அவனுடைய பெயர் அஜாதசத்ரு'' என்பார்கள்.

இக்காலத்து வாசகன் கண்ணைச் சிமிட்டி, "ஓ அஜாதசத்ருவா? சரி, எந்த அஜாதசத்ரு சொல்லமுடியுமா?'' என்பான். எழுத்தாளன் சிறிதும் முகத்தைச் சிடுத்துக்கொள்ளாமல், ''அஜாதசத்ரு என்ற பெயரில் மூவர் இருந்தனர். ஒருவன், கிறிஸ்துவுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பிறந்தவன். இரண்டு வருடம் எட்டுமாதமானதும் மரணமெய்தினான். இதில் துயர்தரும் விஷயம் என்னவெனில், அவனுடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறும் பிரமாணமுள்ள நூல் எதுவும் கிடைக்கவில்லை. இரண்டாவது

அஜாதசத்ருவைப்பற்றிப் பத்துச் சரித்திர வல்லுநர்கள் பத்துவித மாக எழுதியுள்ளனர்'' என்று மூன்றுவது அஜாதசத்ருவுக்கு வரும் போது வாசகன் பொறுமையிழந்து, ''போதும், பேரறிஞர்தாம் நீங்கள்- ஏதோ கதை கேட்கவந்து நல்ல பாடம் கற்றேன்! அஜாத சத்ரு என்ற அரசன் இருந்ததை நான் நம்புகிறேன்! அப்புறம் கதையைத் தொடரும்'' என்பான்.

எல்லே பாவம், மனிதன் ஏமாற்றவே நினைக்கின்றுன்; ஏமாற்றவே விரும்புகின்றுன்; யாராவது தன்னை ஒன்றுமறியாத முட்டாள் என நினைத்துவிடப் போகிறுர்களே என்று நூற்றுக்கு நூறு பயமே. இதற்காகவே நிரம்பக் கஷ்டப்பட்டு எல்லாம் தெரிந்தவனைப்போல் வேஷம் போடப் பார்க்கின்றுன். அதன் விளைவு, கடைசியில் அவனே ஏமாற்றமடைகின்றுன்; அதுவும் கண்ணியமாகவும், ஆடம்பரமாகவும் ஏமாற்றப்படுகின்றுன்.

ஆங்கிலத்தில் ஒரு முதுமொழி உண்டு. கேள்வி கேட்காதே; கேட்டால் பொய்யான பதிலே வரும் (Ask questions and you will be told lies). சிறுவர்களுக்கு இது தெரியும். அதனுல் கேள்வி கேட்க மாட்டார்கள். இக்காரணம்பற்றியே உருவகக் கதைகளில் வரும் அழகான பொய்கள் சிறுவர்களைப்போலவே அம்மண மானவை; உண்மையைப்போல் எளிமையானவை; புதிதாகப் பீறிட்டெழும் ஊறலைப்போல் தெள்ளியவை. இக் காலத்துச் சாதுரியம் நிரம்பிய கதைகளோ முகமூடியணிந்த பொய்யே. எங்கேயாவது சிறிது ரந்திரம் இருந்தாலும் உடனேயே உள்ளே இருக்கும் வண்டவாளமெல்லாம் வெளிப்பட்டுப் போகும். வாசகன் முகத்தைத் திருப்பிக்கொள்வான். எழுத்தாளன் தப்பி யோடுவதற்கு வழி இராது.

குழந்தைப் பருவத்தில் நாம் உண்மையாகவே ரசிகர்களாய் இருந்தோம். இதனுலேயே கதை கேட்க உட்கார்ந்தபோது, அறிவைத் திரட்ட நாம் எள்ளளவும் ஆவல் கொள்வதில்லை. கதையில் அசல் விஷயம் எது, சுவாரசியமானது எது என்பதை நம்முடைய சரளமான இதயம் புரிந்துகொள்ளும் இன்றே, சொல் லைத் திணித்து விஷயங்கள் விளக்கப்படுகின்றன! ஆனுல், கடைசி யில் விஷயம் சுற்றிவளைத்து 'ஒரே ஒரு ராஜா இருந்தான்' என்ப திலேயே வந்து நிற்கிறது.

நன்றுக நினைவு இருக்கிறது: அன்று மாலைநேரம் காற்றுமழை அடித்துக்கொண் டிருந்தது. கல்கத்தா நகரே வெள்ளக்காடா கியது. சந்துகளில் முழங்கால்மட்டும் நீர். ஒரு பெரிய ஆறுதல்: பாடம் புகட்ட ட்யூஷன் வாத்தியார் வரமாட்டார், இந்த மழை யில். ஆனுல், அவர் வரும் வேளைவரை சற்றுத் திகிலாகவே இருக்கும். தெருவைப் பார்த்தபடி வராந்தாவில் வீற்றிருப்பேன். மழை சற்று வலுத்தால் உள்ளூற வேண்டிக்கொள்வேன்:

'கடவுளே! இப்படியே மாலை ஏழரைமணி வரைக்கும் இருக்கக் கூடாதா?' அப்போது எனக்குத் தோன்றும்: 'அதற்கப்புறம் அந்த மழைக்கு அவசியமில்லை ; மாலைநேரம் நகரின் ஒரு கோடியில் வேதனைப்படும் ஒரு பாலகன் ட்யூஷன் வாத்தியாரிடமிருந்து தப்புமட்டும் அது பெய்தால் போதுமே.' பழைய யுகத்தில் நாடு கடத்தப்பட்ட ஒரு யக்ஷன்கூட இதேபோல் எண்ணமிட்டான். 'ஆடிமாத மேகத்திற்கு ஒரு வேலையுமில்லை. அதனால் ராமகிரியின் சிகரத்தில் விரகத்தால் வாடும் காதலன் அனுப்பும் செய்தியை ஏற்று அலகாபுரியின் வெண்சுதை மாடத்தின் சாலேக வாயிலருகே கவுள்மிசைக் கையூன்றி நிற்கும் பேதையிடம் எடுத்துச்செல்வது சிரமமான காரியமன்று. அது போகுமிடமெல்லாம் கவினுர் இயற்கையின் பசுமைக் காட்சிகளே. ஆனால் யக்ஷனின் இதயவேதனையோ சொல்லத்தரமன்று. ஒரு சிறுவனின் வேண்டுதல்போல் இராது. அது இராமல் போகலாம். புகை, ஒளி, நீர், காற்று (தூம- ஜ்யோதி-ஸலில- மருத்) இவற்றின் விசேஷத் தன்மையால் மழையைப் பொழியவில்லை. ஆனால் வாத்தியாரோ விட்டால்தானே! தெருக்கோடியில் உரிய சமயத்தில் பழக்கமான அந்தக் குடை தெரிந்தது. எனது எண்ணக் குவையெல்லாம் வெறும் ஆவியாக மாறி என் இதயத்துள் மறைந்தேபோயிற்று. பிறரைப் பீடிக்கும் பாபத்திற்கு ஏற்ற ஒரு தண்டனை இருக்குமேயானால் நிச்சயம் நான் மறுபிறப்பில் வாத்தியாராக வருவேன். மாஸ்டர் மஷாய் என்னுடைய மாணவனுகப் பிறத்தல் வேண்டும். அவருக்கு எதிராக எனக்கு ஓர் ஆட்சேபமே. என்னுடைய வாத்தியாருக்கு நான் வாத்தியாராகப் போவேனுனல் அகாலத்திலேயே இவ்வுலகத்திலிருந்து நான் விடை பெற்றுக்கொள்ள நேரிடும். அதனுலேயே நான் உளமார மன்னித்து விடுகிறேன்.

குடையைக் கண்டதுமே ஓடி உட்புறத்தில் அடைக்கலம் புகுந்தேன். அச்சமயம் அம்மாவும் பாட்டியும் எதிரும் புதிருமாய் அமர்ந்து குத்துவிளக்கு வெளிச்சத்தில் 'விந்தி'[1] ஆடிக்கொண்டிருந்தனர். கப்பென்று அவர்களிடம் வந்து பதுங்கிக்கொண்டேன். அம்மா என்னைப் பார்த்து, ''ஏண்டா?'' என்ருள். நான் முகத்தைச் சட்டியைப்போல் தொங்கப்போட்டு, ''எனக்கு உடம்பு என்னவோபோல் இருக்கிறதம்மா. வாத்தியாரிடம் படிக்கப் போகமாட்டேன்'' என்றேன்.

வயதாகாதவர் என் எழுத்தைப் படிக்கமாட்டார்கள். பள்ளிக்கூடத்துத் தேர்வுப் பரீட்சையில் இதிலிருந்து எந்தக் கேள்வியும் கேட்கமாட்டார்களென நம்புகிறேன். ஏனெனில், நான் செய்துள்ள காரியம் முறைகேடானது; அதற்காக எந்தத்

1Vint - ஒரு ரஷிய அல்லது பிரெஞ்சு நாட்டுச் சீட்டாட்டம். இருவர், ஐந்து எண்ணுடைய சீட்டைத் துருப்பாக (trump) மறைத்து ஆடுவது.

தண்டனையும் பெறவில்லை. அதனால் என்னுடைய கொள்கை வலுவாகிவிட்டது. அம்மா, வேலைக்காரனிடம் சொல்லியனுப்பினாள்: ''இன்றைக்கு அவனுக்குப் பாடம் சொல்லித் தரவேண்டாம். வாத்தியாரை அனுப்பிவிடு.''

ஆனால் அவள் சிறிதும் கவலைகொள்ளாமல் விந்தி ஆடுவதைப் பார்த்தால்... அம்மா மகனின் உடல் நலக்கத்தைக் குறித்துத் தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டாள் போலும்—நான் குஷியாகித் தலையணையில் முகத்தைப் புதைத்துச் சிரித்தேன். எங்கள் இருவரிடையே எந்தவிதமான ஒளிப்பாட்டமுமே இல்லை.

ஆனால் எல்லோருக்கும் தெரியும்: இதுபோன்ற உடல் நலக்கம் அதிக நேரம் நீடிப்பதில்லை. சில நிமிடங்களுக்கெல்லாம் பாட்டியைத் தொந்தரை செய்து, ''பாட்டீ, பாட்டீ, ஒரு கதை சொல்லேன்'' என்று கேட்டேன். ஆனால், நாலு தரம் கேட்டும் பதிலே வராதுபோகவே, அம்மா என்னைத் தடுத்து, ''இருடா கண்ணு, ஆட்டம் முடியட்டும்'' என்றாள்.

அதற்கு நான், ''இல்லை அம்மா, நாளைக்கு முடித்துக்கொள்ளேன், ஆட்டத்தை. இன்னிக்குப் பாட்டியைக் கதை சொல்ல விடேன்'' என்றேன்.

அம்மா ஆட்டத்தைக் கலைத்து, ''போதும் அம்மா, இவன் தொணதொணப்புச் சகிக்கவில்லை'' என்றாள்.

நான் பாட்டியின் கையைப்பற்றி இழுத்துப்போய்ப் படுக்கையில் கொசு வலைக்குள் புகுந்துகொண்டேன். முதலில், உள்ளே தலையணையை எடுத்து வைத்துக் கால்களை உதைத்து ஒரே குஷியாகி, ''உம்...கதை சொல்லு'' என்றேன்.

அச்சமயம் ஜல ஜலவென மழை பெய்துகொண் டிருந்தது. பாட்டி மெதுவான குரலில் ஆரம்பித்தாள்: ''ஒரே ஒரு ராஜா இருந்தானாம்...''

அவனுக்கு ஒரு ராணியாம். ஆ! நான் எண்ணியதுபோலவே, [1]ஸுயோ, துயோ என்ற இரு ராணிகள் இருந்தனரென்றதும் என் இதயம் துள்ளிக் குதித்தது.

பாவம் அந்தத் துர்ப்பாக்கியம் பிடித்த ராணி என்ன கஷ்டமெல்லாம் அநுபவிக்கப்போகிறாளோ, இதைக் கேட்க நான் உள்ளங்கையைத் தேய்த்துச் செவியைத் தீட்டிவைத்துக்கொண்டேன். உடலெங்கும் ஓர் ஊறல் சென்றது.

ஆனால் பாட்டி சொன்னதில் அப்படி நான் வேதனைப்பட எதுவும் இல்லை. ராஜாவுக்கு ஒரு மகன் பிறக்காததால் அவன் கவலைக்குள்ளாகி, தெய்வத்தின் வரத்தைப் பெற்று வருவதற்குக் கடுந் தவம் புரிய வனத்தை நோக்கிச் சென்றானெனக் கேட்ட

---

[1]ஸுயோ-பாக்கியவதி; துயோ-நிர்ப்பாக்கியவதி.

பிறகுதான் நான் நிம்மதியாக மூச்செறிந்தேன். ஒரு மகன் பிறக்காதுபோனால் துயர்படக் காரணமென்ன என்பதெல்லாம் எனக்குப் புரியாத விஷயம். யாராவது காட்டை நோக்கிச் செல்வதற்குக் காரணம் ஒன்று இருப்பின், இந்த வாத்தியாரிடம் விடுதலை பெறத்தான் அப்படிச் செய்வான் என்று நான் சொல்லுவேன்.

ராணியையும், மகளான ஒரு சிறுமியையும் வீட்டில் நிறுத்திவிட்டு ராஜா தவம்செய்யப் போய்விட்டான். ஒரு வருஷம், இரண்டு வருஷம், இப்படிப் படிப்படியாக பன்னிரண்டாண்டுகள் சென்றும் ராஜாவைக் காணவே இல்லை.

இந்தப் பக்கம் அரசிளங்குமாரி பெதும்பைப் பருவம் எட்டிவிட்டாள். மணப்பருவமாகியும் ராஜா திரும்பவே இல்லை. இன்னும் பெண்ணின் முகத்தையே நோக்கி ராணி விசாரப்பட்டாள். அவளுக்குச் சாப்பிடவே பிடிக்கவில்லை. ''ஐயோ! தங்கச் சிலை போன்ற என் பெண்ணுக்கு வயது ஏறுகிறதே...நான் என்ன பாவத்தைப் பண்ணினேனோ?'' என்று வேதனையுற்றாள்.

கடைசியில் ராணி, ராஜாவை எப்படியோ வேண்டி கெஞ்சி வீட்டுக்கு அழைத்தாள்; ''எனக்கு எதுவும் வேண்டியதில்லை. நீங்கள் வந்து ஒரு நாளாவது வீட்டில் சாப்பிட்டால் அதுவே எனக்குப் போதும்'' என்று சொன்னாள்.

ராஜா இதற்கு, ''சரி; வருகிறேன்'' என்றான்.

ராணி, ராஜா வந்ததுமே பதினெட்டுக் கறிவகையும், பஞ்ச பட்ச பரமான்னமும் தன் கையாலேயே சமைத்துத் தங்கத் தட்டில் பரிமாறி, வெள்ளிக்குவளைகளைப் பக்கத்துக்கு வைத்து, கணவன் அமரச் சந்தன பீடத்தையும் போட்டாள்.

அரசிளங்குமரி சாமரத்தைக் கையில் கொண்டு அருகில் நின்றாள்.

ராஜா பன்னிரண்டாண்டுகளுக்குப் பிறகு அந்தப்புரத்திற்கு வந்து சாப்பிட அமர்ந்தான். இளவரசி அழகெல்லாம் ஒருங்கே திரண்டுவந்தாற்போல் பக்கத்தில் நின்று சாமரை வீசுகிறாள்.

மகளின் முகத்தையே நோக்குகிறான் ராஜா. உணவைத் தொடவில்லை. கடைசியாக ராணியை நோக்கி, ''அருமை ராணியே, இவள் யார் இந்தப் பெண், தங்கப்பதுமைபோல், சீதேவிமாதிரி நிற்கிறாளே - யாருடைய பெண் இவள்?'' என்று கேட்டான்.

ராணி, தலையில் அறைந்துகொண்டாள். ''என் தலையெழுத்து! இவளைத் தெரியவில்லையா உங்களுக்கு? சாக்ஷாத் உங்கள் திருமகள் இவள்!'' என்றாள்.

ராஜாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. ''இவ்வளவுண்டாக இருந்த அந்தக் குட்டிப்பாப்பாவா இவ்வளவு பெரியவளாக வளர்ந்துவிட்டாள்?'' என்றான்.

ராணி பெருமூச்சுவிட்டு, ''ஏன் வளரமாட்டாள்? நீங்கள் போய்ப் பன்னிரண்டு வருஷங்கள் ஆகவில்லையா?'' என்றாள்.

ராஜா கேட்டான்; ''இவளுக்கு மணமாகிவிட்டதா?''

ராணி சொன்னாள்: ''எப்படி ஆகும்? நீங்கள்தான் வீட்டில் இல்லையே...அவளுக்கு வரன்தேட நானா வெளியே போவேன்?''

இதைக் கேட்டதும் ராஜா பரபரப்படைந்து,''இரு; நாளைக்கே நான் காலையில் எழுந்தவுடன் என் கண்முன் எவன் முதல்முதலாகத் தென்படுகிறானோ அவனுக்கு இவளை மணம் செய்து கொடுத்துவிடுகிறேன்'' என்றான்.

அரசிளங்குமரி ராஜாவுக்குச் சாமரம் வீசிக்கொண் டிருந்தாள். அவள் கை அசையும்போதெல்லாம் சீரார் வளையல்கள் குலுங்கி ஒலித்தன. ராஜா சாப்பாட்டை முடித்துக்கொண்டான்;

மறுநாள் தூங்கி எழுந்ததும் ராஜா முதலில் பார்த்தவன் ஒரு பிராம்மணப் பையன். அரசமாளிகைக்கு வெளியே மரங்களின்கீழ் விழுந்திருக்கும் சுள்ளிகளைப் பொறுக்கிக்கொண் டிருந்தான். அவனுக்கு வயது பன்னிரண்டிருக்கும்.

ராஜா சொன்னான்: ''இவனுக்கு என் மகளை மணம் செய்து வைப்பேன்.'' ராஜாவின் கட்டளையாயிற்றே; அதை யாரால் மீற முடியும்? அந்தப் பிராம்மணப் பையனை அழைத்து வந்து அரச குமாரிக்கு மாலையிடச் சொன்னான்.

இந்தக் கட்டத்தில் நான் பாட்டிக்கு அருகில் அவள் உடல் ஒட்ட ஆவல் குமிழ்க்க நகர்ந்து வந்து, ''அப்புறம்?'' என்றேன். பன்னிரண்டு வயதான அந்த அதிர்ஷ்டக்காரப் பிராம்மணச் சிறுவனுக்குப் பதிலாக நான் அங்கே இருந்திருக்கக்கூடாதா என எனக்கு ஒரு விருப்பம் உள்ளூற எழவில்லையா என்று கேட்காதீர்கள். அன்றிரவு ஜல் ஜல்லென மழை பெய்தபடி இருந்தது; குத்துவிளக்கின் திரியிலிருந்து பொற் சுடர் வீசியது. பாட்டியும், கொசுவலைக்குள் என்னுடன் சாய்ந்துகொண்டு கதையை முணு முணுவென்று சொல்லிக்கொண்டு வந்தாள். எந்தப் பாலகனுடைய உள்ளந்தான் இந்தமாதிரி ஒரு சமயத்தில் தனக்குள் ஆசை மிகுதியால் துள்ளிக்குதிக்காது? ஏன் அவன் கற்பனை செய்து கொள்ள மாட்டான்? - தானும் அந்தப் பிராம்மணச் சிறுவனைப் போல் ஒரு ராஜாவின் மாளிகை எதிரே சுள்ளி பொறுக்கிக்கொண் டிருப்பான்; சட்டென அவன்மேல் ராஜாவுக்குப் பிரீதி ஏற்பட்டு, தங்கப்பதுமைபோன்ற அரசகுமாரியை அவன் கழுத்தில் மாலை போடவைப்பான். அவள் கூந்தல் முகப்பில் உச்சிப்பூ; காதுகளில் ஜிமுக்கி, கழுத்தில் வயிரகண்டி, கைகளில் பொலந்தொடி, இடையிலே சந்திரஹாரம், பஞ்சியூட்டிய செஞ்சீரடிகளில் நூபுரம் கலீர்கலீரென ஏங்கியொலிக்க அவள் அசைந்து செல்வாள். ஆனால் இந்தப் பாட்டி ஓர் எழுத்தாளனாக மாறி எல்லாம் அறிந்த

வர்களான இக்கால வாசகர்களுக்கு இக் கதையைச் சொல்லுவா ளாயின், இத்தனை நாழிகை எத்தனை கேள்விகள் பிறந்திருக்கும் தெரியுமா? ராஜா பன்னிரண்டு வருஷம் காட்டில் இருந்தானே, அது வரைக்கும் இந்த அரசகுமாரிக்குக் கலியாணம் பண்ணுமல், எங்கேயாவது இருப்பார்களா? இதுதான் போகட்டும்; இரண்டா வது, ஒரு பிராம்மணச் சிறுவனுக்கும் க்ஷத்திரியப் பெண்ணுக்கும் முடிபோட்டால் கதாசிரியன் சமூகத்துக்கு விரோதமான ஒரு பிரச்னையை எழுப்பிவிடுகிறுன். அவனைப்போல் மகனே, பேரப் பிள்ளையோ கதை கேட்பவருக்கு இராமல் போகலாம். ஆனுல் அவர்கள் பத்திரிகைகளில் இப்போக்கைக் குறித்து ஒரு விமரிசனம் அல்லவோ வரைந்துவிடுவார்கள்! அதனல், இந்தப் பாட்டி பாட்டியாகவே இருக்கவேண்டும். அவளும் பேரப்பிள்ளையைப் போல ஒரு கதாசிரியையாக மாறக்கூடாதென்று பிரார்த்தனை செய்துகொள்கிறேன்.

நான் ஒரே குதுகுதுப்புடன், ''அப்புறம்?'' என்றேன். பாட்டி கூறத் தொடங்கினுள்:

''அப்புறம் அரசகுமாரி மனவேதனையுடன் தனக்குக் கணவனுக வாய்த்த பிராம்மணச் சிறுவனை அழைத்துச் சென்றுள். நிரம்பத் தூரமான தேசத்துக்குப் போய் ஒரு பெரிய மச்சு வீட்டைக் கட்டிக்கொண்டு அந்தப் பிராம்மணப் பையனை - அவளுடைய குட்டிக் கொழுநனை - ஆதரவுடனும் அன்புடனும் வளர்த்து வந்தாள்.''

நான் இப்படியும் அப்படியும் உடலை எதனுலோ மக்கச் சக்கரம் செய்துகொண்டு பக்கத்திலுள்ள தலையணையைக் கெட்டி யாக அணைத்துக்கொண்டு, ''அப்புறம்?'' என்றேன்.

பாட்டி சொன்னுள்: ''அப்புறம் என்ன, அந்தப் பையன் கையில் புத்தகத்தை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் பாட சாலைக்குச் சென்று வந்தான்.''

''இப்படி உபாத்தியாயரிடம் வித்தையெல்லாம் கற்றுப் பெரியவனுகி வந்தான். அவனுடன் படிக்கும் மாணவர்கள் அவனைக் கேட்டார்கள்: 'அந்த மச்சு வீட்டிலே இருக்கிருளே அந்தப் பெண் உனக்கு என்ன முறை உறவாகவேண்டும்?'

''அந்த பிராம்மணப் பையனுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. அந்தப் பெண் தனக்கு எந்த வழியில் உறவு என்பது அவனுக்குத் தெரியாது. பழைய ஞாபகம் அவனுக்கு வந்தது: 'ராஜா வீட்டெதிரே மரத்தின்கீழ்ச் சுள்ளி பொறுக்கிக்கொண் டிருந்தோமே! அன்று என்னவோ நடந்தது. இந்தச் சுள்ளி பொறுக்கும் வேலையும் போய்விட்டது...' இது எத்தனையோ நாள் கதை. இதெல்லாம் அப்படியே மனத்தில் இருக்குமா எங்கேயா வது? அதெல்லாம் நடந்து ஐந்து வருஷத்துக்கு மேல் ஆயிற்றே!

''கூடப் படிக்கும் பையன்கள் ஒவ்வொரு நாளும் அவனை, 'சரிதான்; அந்த மச்சு வீட்டிலே இருக்கிறளே அந்தக் கண்ணழகி உனக்கு என்ன உறவடா?' என்று நச்சரித்தனர்.

''ஒருநாள் பிராம்மணச் சிறுவன் பாடசாலையிலிருந்து முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு வந்து அரசகுமாரி யிடம், 'எங்கள் பள்ளியில் என்னுடன் படிக்கும் பிள்ளைகள் ஒவ்வொரு நாளும் நச்சரித்து, அந்த மச்சு வீட்டிலிருக்கும் அழகிய பெண் உனக்கு என்ன உறவு என்கின்றனர். எனக்குப் பதிலே சொல்லத் தெரியவில்லை. நீ எனக்கு என்ன உறவு? சொல்லு' என்றான்.

''ராஜாமகள் சொன்னாள்: 'இன்று வேண்டாம், இன்னொரு நாள் நான் உனக்கு யாராகவேண்டுமென்பதைச் சொல்லுகிறேன்.'

''பிராம்மணச் சிறுவன் ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடத்தி லிருந்து திரும்பியதுமே, 'எனக்கு நீ எம் முறையாக வேண்டும்?' என்பான்.

''ஒவ்வொரு நாளும் ராஜகுமாரி, 'இன்று வேண்டாம்; இன்னொரு நாள் சொல்கிறேன்' என்று இப்படியே தட்டிக் கழித்து வந்தாள்.

''ஐந்தாண்டுகள் இவ்வாறு கழிந்தன. கடைசியில், ஒருநாள் பிராம்மணச் சிறுவன் கடுங்கோபமுற்று, 'இன்று எனக்கு நீ எம்முறை உறவினள் என்று சொல்லாதுபோனால், இந்த ஏழடுக்கு மச்சு வீட்டைத் துறந்து போய்விடுவேன்' என்றான்.

''அப்போது அரசகுமாரி சொன்னாள்: 'சரி நாளைக்குக் கட்டாயம் சொல்லிவிடுகிறேன்.'

''மறுநாள் பையன் பள்ளியிலிருந்து திரும்பியவுடன், 'இன்று சொல்வதாகச் சொன்னாயே, சொல்லு' என்றான்.

''ராஜகுமாரி அதற்கு, 'இன்று இராத்திரி நீ படுக்க வரும் போது சொல்லுகிறேன்' என்றாள்.

''பிராம்மணச் சிறுவன், சரி என்றதும் எப்போது சூரியன் அஸ்தமித்து இராத்திரி வரப்போகிறதென்று காத்திருந்தான்.

''இந்தப் பக்கம் இளவரசி தங்கக் கட்டிலைச் சிங்காரித்து, மெத்தைமீது வெளேரென்ற பூந்துகிலை விரித்தாள். அறையில் பொன் குத்துவிளக்கில் வாசனைத் தைலமிட்டுச் திரியிட்டுச் சுடர் ஏற்றினாள். கூந்தலை வாரி, அழகுற முடிந்து விண்ணீல மேலார்ப்பு அணிந்து இரவை எதிர்நோக்கியிருந்தாள்.

''இரவு வந்தது. அவளுடைய குட்டிக் கணவன் ஆகாரத்தை முடித்துக்கொண்டு பள்ளியறைக்கு வந்து தங்கக் கட்டிலிலே விரித்த பூஞ்சேக்கைமீது படுத்தான். நினைத்துக்கொண்டான்: 'இன்று இந்த ஏழடுக்கு மச்சு வீட்டிலிருக்கும் இவ்வழகி எனக்கு எம்முறை உறவினள் என்பது தெரிந்துவிடும்.'

''அரசகுமாரி தன் கணவன் உண்ட மிச்சத்தைப் புசித்துவிட்டு அசைந்து வந்து அறையினுள் புகுந்தாள். 'இத்தனை நாளுக்குப் பிறகு இன்று நான் உனக்கு எம் முறை உறவு என்பதை வெளிப் படுத்தும் சமயம் நெருங்கிவிட்டது' என்றாள்.

''இப்படிச் சொல்லிக்கொண்டே கட்டிலில் படுத்திருக்கும் கணவனைப் பார்த்தாள். அந்தப் பூம்படுக்கையில் ஒரு பாம்பு எங்கோ சுருட்டிக் கிடந்தது. அது அந்தப் பிராம்மணப் பையனைக் கடித்துவிடவே, அவனுடைய மெல்லிய உடல் அந்தத் தங்கக் கட்டிலிலே மெத்தென்ற பஞ்சணைமீது பிணமாகக் கிடந்தது.''

இதைக் கேட்டதும் என்னுடைய இதயமே அடித்துக் கொள்ளாமல் நின்றுவிட்டது. தொண்டையில் என்னவோ வந்து அடைக்க, ''அப்புறம் என்ன ஆயிற்று?'' என்றேன்.

பாட்டி சொல்லத் தொடங்கினாள்: ''அப்புறம், அதைச் சொல்லி என்ன பிரயோஜனம்? இதுபோல் நிகழுமா? கதையின் பிரதான நாயகன் பாம்பு தீண்டி மரணமுற்றான். அத்துடன் முடிந்தது கதை.'' ''அப்புறம் என்ன?'' என்ற கேள்விக்குப் பாட்டியினாலும் சரி, அவளுடைய கொள்ளுப் பாட்டியினாலும் சரி விடையே தரமுடியாதே! விடாப்பிடியான நம்பிக்கையால் சாவித்திரி யமன் பின்னால் சென்றாள். இளஞ் சிறுருக்கும் அழுத்தமான நம்பிக்கை உண்டு. அதனாலேயே மரணத்தின் கச்சத்தைப் பிடித்துக்கொண்டு திரிகின்றனர். வாத்தியாரிடம் ட்யூஷன் படிக்காத ஒரு மழையிருட்டான இராப்பொழுது பாட்டி சொன்ன கதையில் ஒரு பிராம்மணச் சிறுவன் பாம்பு கடித்து இறந்து போகிறான்; அவ்வளவே. ஆனால் அவர்களுக்குக் கதை அத்துடன் முடிந்து விடவில்லையே. அதனால் அந்தப் பெரும் பிறிதின் மருமமிகு லோகத்திலிருந்து கதையை மீண்டும் பாட்டி கொண்டு வருவதற்காக ஏங்கியுள்ளனர். ஆனால், அது அவ்வளவு எளிதாக முடிகிறதா? அது என்ன மந்திரம் ஓதி, இலைத் தொன்னையில் விளக்கேற்றி ஆற்றில் மிதக்கவிட்டுச் சென்ற உயிரை மீண்டும் இழுத்துவரும் கதையா? மழைபெய்யும் இரவில், குத்துவிளக்கொளியில் ஒரு பாலகனுடைய நெஞ்சை இந்த மரணத்துயர் நெக்காடச் செய்திருக்கலாம். நன்றாகப் படுக் கையில் தூங்கிவிட்டால் மறுநாள் இத்துயரின் வடுவே அவன் மனத்தில் இருக்காதே!

கதை முற்றுப் பெறுவதற்கும் என் கண்ணிமைகள் அழுத்திக் கொள்வதற்கும் சரியாக இருந்தது. குழந்தை மனம் திரைபடாத ஒரு செழுங்கடலிலே இன்துயிலெனும் ஓடத்தில் இரவெல்லாம் மிதந்து காலைப்பொழுது ஒரு மந்திரத்தின் மகிமையால் விழிப் புறுகிறது.

நம்பிக்கை அற்றவர்கள் கோழைகள். இதுபோன்ற ஓர் அழகுணர்வைப் பெற அசம்பாவிதமானதையும் கடந்து நோக்குவோருக்கு, 'அப்புறம் என்ன?' என்ற பிரச்னையே இல்லை. சட்டென எல்லாமே அசமயத்தில், முடிவுபெறாமலே ஒரு முடிவுக்கு வந்துவிடும். சிறு பிராயத்தில் எழுகடலையும் கடந்து, மரணத்தையும் தாண்டிக் கதை எங்குச் சென்று நின்றதோ, அங்கு அன்பின் இனிமை சொட்டும் குரல் மெல்லப் பாடியதைக் கேட்டேன்:

என் கதையும் முடிந்தது
கீரைத் தண்டும் ஒடிந்தது.

இப்போது எனக்கு வயதாகிவிட்டது. கதைக்கிடையே குறுக்கிட்டு, கடினக் குரலெடுத்து இவ்வாறு கேட்கத் தோன்றுகிறது:

என் கதையும் முடியவில்லை
கீரைத் தண்டு ஏன் ஒடியவில்லை?
உன் பசு வந்து...

இது எப்படியாவது போகட்டும். அந்தச் சாதுவான பிராணியின் பெயரை இழுத்துப் பயன் என்ன? யார் எப்படி வேண்டுமானால் கதையைக் கற்பனை செய்துகொள்ளலாம்.

முற்றும்

ரவீந்திரர் கதைத் திரட்டு

''பூரண நோக்குடன் இவைபோன்று நான் படைத்த இலக்கியங்கள் மிகச் சிலவே. வங்க மண்ணிற்கும், நீருக்கும் வானத்திற்கும் தனிப் பட்ட மகிமை ஒன்று உண்டு. எனக்கு முன்னே எழுத்தாளர் எவருமே இக் கண்கொண்டு வாழ்வினை நோக்கவில்லை . . . வங்க மக்களின் சுகதுக்கத்தைப்பற்றி என்னைப்போல் முன்பு எவருமே வருணிக்கவில்லையெனத் திடமாகக் கூறுவேன். வங்கத்தின் இதயத்திலிருந்தே நான் எனக்கு வேண்டியதைத் திரட்டிக் கொண்டேன். உண்மைக்கும் மேலானதைப் பெற்று மகிழ்ச்சியுற்றேன்.''

கவியரசரும் கதையரசருமான ரவீந்திரர் இயற்றிய 15 கதைகள். த. நா. குமாரஸ்வாமி அவர்களின் இனிய தமிழாக்கம்.

ரூ. 20